வரு.75 இல. 10 ★

www.vaaramanjari.lk

/Thinakaran.lk /ThinakaranLK

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

தினகரன் வாரமஞ்சரி

24 பக்கங்கள் 100/-

2023 மார்ச் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

March 05 Sunday, 2023

ஜேவிபியினுள் சர்வாதிகாரம் மட்டுமே எஞ்சியுள்ளது

03

கடந்த வருடம் சந்தித்த நெருக்கடிகளை மறக்கலாகாது

05

பா.ஜ.கவின் வளர்ச்சியும் காங்கிரஸின் வீழ்ச்சியும்!

08

இலங்கை கிரிக்கெட்டை மாற்றும் யாப்பு மாற்றம்

24

இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்களுக்கு

இழுவை வலை தொழிலுக்கு ஒருபோதும் அனுமதி இல்லை

எக்காரணம் கொண்டும் அனுமதி கிடையாது

படம்: கயான் புஷ்பிக்க

கச்சதீவில் தன்னைச் சந்தித்த இந்திய மீனவர்களுடன் கலந்துரையாடிய போது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கண்டிப்பாக தெரிவிப்பு

யாழ்.விசேட நிருபர்

இலங்கை கடற்பரப்பில் இழுவை வலை தொழில் மேற்கொள்ளப்படுவதை எக்காரணம் கொண்டும் அனுமதிக்க முடியாது என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு தெளிவுபடுத்தினார்.

அத்துமீறிய எல்லை தாண்டிய சட்ட விரோத தொழில் முறைகளை பயன்படுத்துவதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு விளக்கப்படுத்தினார்.

இலங்கையின் வட மாகாண கடற்றொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் இந்திய கடற்றொழிலாளர்

06

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா

படம்: கயான் புஷ்பிக்க

கச்சதீவிலிருந்து கே. அசோக்குமார், ஸாதிக் ஷிஹான்

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வு நேற்று 04ஆம் திகதி வெகுவிமர்சையாக இடம்பெற்றது. இலங்கை மற்றும் இந்தியாவிலிருந்து சுமார் 5,500 பக்தர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கச்சதீவுக்கு இம்முறை இந்தியாலிருந்து 70 படகுகள்,வள்ளங்களில் 2400 பேரும் இலங்கையிலிருந்து 2900 பேரும் கச்சதீவுக்கு வருகை தந்திருந்தனர். அத்துடன் இரு நாடுகளையும் சேர்ந்த சுமார் 80ற்கும் மேற்பட்ட மதகுருமார்களும் அருட்சகோதரிகளும் கலந்து கொண்டமை விஷேட அம்சமாகும்.

கடந்த ஆண்டு கொவிட் காரணமாக சுமார் 300 பக்தர்கள் மாத்திரம் கலந்து கொண்டனர். இதனால் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இம்முறை கூடுதலான இலங்கை மற்றும் இந்திய பக்தர்கள் கலந்து கொண்டதை காண முடிந்தது. கடந்த வெள்ளிக்கிழமை 03ஆம் திகதி கொடியேற்றத்துடன்

06

EPF உள்ளிட்ட கொடுப்பனவுகளை வழங்காதுள்ள 24,357 நிறுவனங்கள்

வழக்கு தொடர்ந்துள்ளதாக தொழில் ஆணையாளர் திணைக்களம் தெரிவிப்பு

ஊழியர் சேமலாப நிதியம் Employees' Provident Fund

லோரன்ஸ் செல்வநாயகம்

ஊழியர் சேமலாப நிதி மற்றும் நுகர்வோர் கொடுப்பனவு உள்ளிட்ட ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய கொடுப்பனவுகளை வழங்கத் தவறியுள்ள 24,357 நிறுவனங்களுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள்ளதாக தொழில் ஆணையாளர் நாயகம் சட்டத்தரணி பிரபாத் சந்திர கீர்த்தி தெரிவித்துள்ளார்.

அதே வேளை, இந்த நிறுவனங்களில் ஊழியர் சேமலாப நிதியை வழங்கத் தவறியுள்ள 15, 844 நிறுவனங்கள் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் கடந்த 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 3,335 நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பம் வரையில்

06

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் மாசிமகத் தேர்த் திருவிழா

மாத்தளை சுழற்சி நிருபர்

வரலாற்று சிறப்புமிக்க மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த மாசிமக மஹோற்சவ பஞ்சரத பவனி நாளை நடைபெறவுள்ளது.

மாசிமகத் திருவிழா விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து இன்று 5 ஆம் திகதி மகேஸ்வர பூஜையும், நாளை 6 ஆம் திகதி பஞ்சரத பவனியும், 8 ஆம் திகதி தீர்த்தோற்சவமும், 9 ஆம் திகதி பூங்காவனத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. வருடாந்த தேர்த்திருவிழாவை

06

IMF தலைவருடன் ஜனாதிபதி பேச்சு

'சூம்' வழியாக கலந்துரையாடல்

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜிவா மற்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் இடையில் (02) இரவு, Zoom தொழிநுட்பத்தின் ஊடாக விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கை எதிர்பார்க்கும் சர்வதேச நாணய நிதியத்தின் நிதி வசதிகள் மற்றும் கடன் மறுசீரமைப்பு தொடர்பில் இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

தற்போது, இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதி வசதி தொடர்பில், அனைத்து தரப்பினரினாலும் சாதகமான மற்றும் நம்பிக்கையான பின்னணி

06

இலங்கையில் தயாரிக்கப்பட்ட முதலாவது கார் மற்றும் முச்சக்கர வண்டி

நாட்டின் போக்குவரத்து வரலாற்றில் புதிய திருப்பமாக உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முதலாவது மின்சாரக் கார் மற்றும் முதலாவது முச்சக்கர வண்டி ஆகியன மோட்டார் போக்குவரத்து பதிவு திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட இந்த வாகனங்களுக்கு

06

குரோதங்களை புறந்தள்ளி தமிழ், சிங்கள மக்களை மீண்டும் ஒன்றிணைக்கும் முயற்சியில் IMTC

இலங்கை வந்துள்ள துரை கணேசலிங்கம் தலைவர்களுடன் தொடர் சந்திப்பு

இலங்கையில் தமிழ், சிங்கள மக்களிடையே கலாசார மற்றும் ஆன்மீக துறைகளூடாக இன நல்லிணக்கத்தையும், ஒற்றுமையையும் மீளவும் கட்டி எழுப்ப உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் (IMTC) முன்வந்துள்ளதாக அதன் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் தெரிவித்தார். 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கனடாவில் தலைமையகத்தைக் கொண்டு உலகின் 42 நாடுகளில் தனது கிளைகளுடன் இயங்கி வரும் உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின்

06

இலங்கைக்கு 150 கோடி டொலரை வழங்க உலக வங்கி இணக்கம்

சாகல ரத்நாயக்கவுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் சாதக நிலை

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்வரும் இரண்டு வருட காலங்களுக்காக 150 கோடி அமெரிக்கன் டொலர் நிதியை இலங்கைக்கு வழங்குவதற்கு உலக வங்கி இணக்கப்பாட்டைத் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆளணி பிரதானியும் முன்னாள் அமைச்சருமான சாகல

06

ஜனாதிபதி செயலகத்தின் மலையக கல்வி, தொழிற்சங்கத்திற்கு பொறுப்பாளர்கள்

கணபதி கனகராஜ், துரை மதியுகராஜா நியமனம்

ஜனாதிபதி செயலகத்தின் மலையக கல்விப் பிரிவின் மேற்பார்வை பொறுப்பாளராக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதி தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கணபதி கனகராஜ் நியமிக்கப்பட்டுள்ளதுடன், தொழிற்சங்க பிரிவின் பொறுப்பாளராக மத்திய மாகாண சபையின் முன்னாள் தலைவர் மதியுகராஜாவும் நியமிக்கப்பட்டுள்ளார். மலையக பாடசாலைகளின் கல்வி

06

எங்கள் கருத்து

ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக மாற்றுவதற்கு இடமளிக்கலாகாது!

ஆசியாவில் இலங்கை, இந்தியா ஆகிய நாடுகள் ஜனநாயகப் பாரம்பரியத்தை வழுவாமல் கடைப்பிடித்து வருகின்ற நாடுகளாகும். ஆயுதபலத்தாலோ அன்றி அராஜகப் போராட்டங்களாலோ ஜனநாயக ஆட்சிமுறையை அழித்தொழிப்பதற்கு இவ்விரு நாடுகளும் ஒருபோதுமே இடமளித்தது கிடையாது. அரசியலமைப்பு விதிமுறைகளுக்கு உட்பட்டதாக ஜனநாயக ரீதியிலேயே மக்களால் ஆட்சியாளர்கள் தீர்மானிக்கப்படுகின்றனர்.

பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் எமது நாடு 130 வருடகாலத்துக்கு மேலாக ஆட்சி செய்யப்பட்ட போதிலும் கூட, ஆங்கிலேயர்கள் எமக்கு ஜனநாயக ஆட்சிமுறையைக் கற்பித்து விட்டுத்தான் சென்றுள்ளனர். அவர்கள் கற்பித்த ஜனநாயக ஆட்சிமுறையானது இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் மாத்திரமன்றி பிரித்தானிய காலனித்துவத்தின் கீழ் ஆட்சி செய்யப்பட்ட வேறு பல நாடுகளிலும் சீராகப் பேணப்பட்டு வருகின்றது.

'ஜனநாயகம்' என்பதன் பொருள் 'மக்கள் ஆட்சி' என்பதாகும். அதாவது மக்கள் தமக்குரிய ஆட்சியை தாங்களாகவே தெரிவு செய்கின்றார்கள். மக்கள் பலாத்காரத்தினாலன்றி, தேர்தலில் தங்களது வாக்குப்பலத்தின் மூலம் அமைதியான முறையில் ஆட்சியைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

06

INTERNATIONAL DRIVING LICENCE

Obtain Your International Driving Licence to Drive Overseas.

AA CEYLON

Contact :
Automobile Association of Ceylon
40, Sir Mohamed Macan Markar Mawatha,
Colombo 03
Tel: 011 2421528 - Ext 200/201
WEB : www.aaceylon.lk

IMF உதவி கிடைத்தவுடன்

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் மேலும் குறைப்பு

நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றவுடன் அத்தியாவசிய பொருட்களின் விலை மற்றும் சேவை கட்டணங்களை குறைக்க தீர்மானித்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிதி நிலைமை மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு குறித்து கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை

06

IMF இன் நிதிவசதி ஏற்பாட்டுக்கு ஏதுவாக

வட்டி வீதங்களை உயர்த்திய இலங்கை மத்திய வங்கி

சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி ஏற்பாட்டை இறுதி செய்ய உதவுவதற்காக, இலங்கை மத்திய வங்கி நேற்று எதிர்பாராத நடவடிக்கையில் வட்டி விகிதங்களை உயர்த்தியுள்ளதாக தெரிய வருகிறது.

மத்திய வங்கி அதன் நிலையான வைப்பு வசதி விகிதம்

06

பேராதனைப் பல்கலை மாணவர்களுக்கு பாகிஸ்தானில் கற்க புலமைப்பரிசில்

மாவத்தகம தினகரன் நிருபர்

பேராத னைப் பல்கலைக்கழக மாணவர் கள் பாகிஸ்தான் பல்கலைக்கழகங்களில் கலாநிதி, பட்டப்பின் படிப்பு, தத்துவமாணிப் பட்டங்களை முழுமையான புலமைப் பரிசில் மூல ம் பெற்றுக் கொள்வதற்கான வழிகாட் டல் செயலமர்வு பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞான பீட பட்டப்பின்படிப்பு கற்கை நிலையத்திலுள்ள கேட்போர் கூடத்தில் உப வேந்தர் பேராசிரியர் லமாவன்ச தலைமை யில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாகிஸ்தான் நாட்டு அரசாங்க உயர் கல்வி ஆணையகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் ஜஹன்ஸப் கான் தலைமையில் இலங்கை விஜயம் செய்துள்ள பாகிஸ்தான் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் குழுவினர் கள் அங்கு நடைபெற்ற விசேட செயலமர்வுக ளில் கலந்து கொண்டனர்.

இதன் போது பாகிஸ்தான் நாட்டின் இலங் கைக்கான வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக் கார் , விஞ்ஞானப் பட்டப்பின் கற்கை நிலை யத்தின் பணிப்பாளர் பேராசிரியர் எச். எம். டி. ஜி. ஏ. பிட்டவெல, பேராதனைப் பல்கலைக் கழக விரிவுரையாளர்களான பேராசிரியர் பி. எம். ஜமாஹிர், கலாநிதி சர்ஜுன், கலாநிதி நௌபீல் உள்ளிட்ட பலர் கலந்து கொண்ட னர்.

இந்நிகழ்வில் பாகிஸ்தானில் பட்டப்பின் படிப்பை மேற்கொள்வதற்கான விசேட தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக பேராதனை பல்கலைக்கழக விஞ்ஞானப் பட்டப்பின் படிப்பு நிலையத்தில் பிரத்தியே கமான ஒரு நிலையமும் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

இலங்கை வங்கி

விலைமதிப்புள்ள சொத்துக்களின் விற்பனை

சொத்து இலக்கம்	நகரம்	சொத்து காணப்படும் இடம்	சொத்தின் வகை	அளவு
484	பியகம	முன்பு பீ.என். எஸ். அலுமினியம் இல: 98/2, பமுனுவில வீதி, கோனவல, பியகமவில் அமைந்துள்ள "மூனமல்கஹவத்தை".	தரிசுக் காணி	பேர் - 25.3
485	மாத்தளை	மாத்தளை, தொடந்தெனிய, இல: 44/5 இல் அமைந்துள்ள "ஹுலன்கமுவ தோட்டம்"	காணியும், வீடும்	பேர் - 27.2
500	ஆனமடுவ	முன்னைய கௌஷல்யா தூய எண்ணெய் ஆலை புத்தளம், ஆனமடுவ தென்னகுரியாவ கிராமத்தில் அமைந்துள்ள "தென்னகுரியாவகெலே மற்றும் தென்னகுரியாவஹேன" காணி	காணியும் கட்டடமும்	பேர் - 40.0
502	கனேமுல்ல	இல: 179/01, நாகம வீதி, கடவத்தை, கீழ் கரகஹமுன கிராமத்தில் அமைந்துள்ள "நந்துன்கஹவத்த மற்றும் அலுபோகஹவத்த"	காணியும், இரு மாடிகளைக் கொண்ட வீடும்	பேர் - 37.7

மேற்குறிப்பிட்ட சொத்துக்கள் தொடர்பாக விலைகூறல்களை முன்வைக்க (பிரதான தரப்பினருக்கு மட்டும்) அழைப்பு விடுக்கின்றோம்.

விண்ணப்பங்கள் 2023.03.13 ஆம் திகதி வரை மட்டுமே விநியோகிக்கப்படும். அத்தோடு மீளளிக்கப்படாத 2,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் மீளளிக்கப்படும் 50,000.00 ரூபாவுக்கான வைப்பொன்றையும் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் வைப்பிலிடலாம்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை, குறித்த சொத்துக்கள் தொடர்பான இலக்கத்தோடு (PROP/02/2023) எனப் பெயரிட்டு சீல் வைக்கப்பட்ட உறையிலிட்டு 2023.03.14 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். விண்ணப்பதாரிகள் விலைக்கூறல்கள் திறக்கப்படும் 2023.03.14 ஆம் திகதியில் இங்கு சமூகமளிக்குமாறும் அழைப்பு விடுக்கின்றோம்.

மேலதிக விபரங்களை வேலை நாட்களில் பின்வரும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைத்து பெற்றுக் கொள்ளலாம்.
இலங்கை வங்கி, கையகப்படுத்தப்பட்ட சொத்துப் பிரிவு,
3 ஆம் மாடி, தலைமையகம், "இலங்கை வங்கிச் சதுக்கம்"
இலக்கம் 01, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

தொலைபேசி: உதவிப் பொது முகாமையாளர்,
நிறுவன அறவீட்டுப் பிரிவு - 0112 386 080 / 0112 203 410
முதுநிலை முகாமையாளர் - 0112 321 170/0112 203 429/0769 627 068
உதவி முகாமையாளர் - 0112 203 470/0718 418 898
மின்னஞ்சல் முகவரி: mgrforeclosed@boc.lk
தயவுசெய்து www.boc.lk என்ற இணையதளத்தில் பிரவேசித்து Special Notices இற்கு கீழுள்ள Foreclosed Properties for sale என்பதைப் பார்வையிடவும்.

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (Ika) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

GCE A/L - 2024

English Medium School
Commerce Stream
(Accts, B/Studies & Econ)
Batch commenced on 01.03.23
School admission is in progress
Contact:
AIMS INTERNATIONAL SCHOOL AKKARAIPATTU (AMPARA)
067-2278342 / 077-5159802
www.aims.lk
https://www.facebook.com/AIMSWeTeach/

ஒருகொடவத்த பெறுமதியான வர்த்தக காணி

418 பேர்ச் காணி,
லோ லெவல் வீதியின் முன்பாக

தொடர்பு:
+94 773 972991 / 763 555640 / 742 797689
rent.sales888@gmail.com

'இந்தியாவில் கல்விக் கண்காட்சி' 'Study in India Expo' நேற்று கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. நிகழ்வில் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பால்கே, சன்நீப் கோயால் Study in India பொது முகாமையாளர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகாரசபை
முன்மொழிவுகளுக்கான அழைப்பு (RFP)

நாராஹென்பிட்ட, கிரிமண்டல மாவத்தையில் சுகாதாரம் தொடர்பான செயற்பாடுகள் அபிவிருத்தித் திட்டம்

பரப்பு : 0A - 1R - 36.25P (0.1929 Ha.)
குத்தகைக் காலம் : 50 ஆண்டுகள்
அடிப்படை பெறுமதி : ரூபா 361,608,000/-
பிணைமுறி : ரூபா 3,600,000

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்று பத்தரமுல்லை, கட்டம் 1, "செத்சிறிபாய", 9ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர்கூடத்தில் **2023 மே 04ஆம் திகதி மு.ப. 11.00க்கு** இடம்பெறும். **2023 ஜூன் 09ஆம் திகதி பி.ப. 02.00க்கு** கேள்விமனுக்கள் ஏற்பது நிறைவடையும்.

ராஜகிரிய, புத்கமுவ குறுக்கு வீதி, நிறுவன அடிப்படையிலான கலப்பு அபிவிருத்தித் திட்டம்

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்று பத்தரமுல்லை, கட்டம் 1, "செத்சிறிபாய", 9ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர்கூடத்தில் **2023 மே 03ஆம் திகதி மு.ப. 11.00க்கு** இடம்பெறும். **2023 ஜூன் 07ஆம் திகதி பி.ப. 02.00க்கு** கேள்விமனுக்கள் ஏற்பது நிறைவடையும்.

பரப்பு : 1A - 1R – 27.6P (0.5757 Ha)
குத்தகைக் காலம் : 99 ஆண்டுகள்
அடிப்படை பெறுமதி : ரூபா 1,053,800,000/-
பிணைமுறி : ரூபா 11,000,000/-

அங்கொடவில் கலப்பு அபிவிருத்தித் திட்டம்

பரப்பு : 0A-2R-31.54P(0.2821 Ha.)
குத்தகைக் காலம் : 99 ஆண்டுகள்
அடிப்படை பெறுமதி : ரூபா 175,570,000/-
பிணைமுறி : ரூபா 1,800,000/-

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு ஒன்று பத்தரமுல்லை, கட்டம் 1, "செத்சிறிபாய", 9ஆவது மாடி, நகர அபிவிருத்தி அதிகாரசபை கேட்போர்கூடத்தில் **2023 மே 04ஆம் திகதி பி.ப. 02.00க்கு** இடம்பெறும். **2023 ஜூன் 08ஆம் திகதி பி.ப. 02.00க்கு** கேள்விமனுக்கள் ஏற்பது நிறைவடையும்.

ஆவணம் வழங்கல் வரிகள் உட்பட 100,000 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை பத்தரமுல்லை, கட்டம் 1, செத்சிறிபாய, 6ஆவது மாடியில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி 2023 மார்ச் 08ஆம் திகதி தொடக்கம் 2023 மே 11ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பத்தரமுல்லை, கட்டம் 1, செத்சிறிபாய, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி, மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவில் இருந்து பெறலாம்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 18ஆவது மாடி, "சுஹுருபாய", சுபுத்திபுர வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் பணிப்பாளர் நாயகத்தின் (தொழில்நுட்பம்) அலுவலகத்தில் மேல் குறிப்பிடப்பட்டவாறு RFP மூடப்பட்ட பின் தொழில்நுட்ப முன்மொழிவுகள் உடன் திறக்கப்படும்.

தலைவர், நிலையான அமைச்சரவை நியமித்த பேச்சுவார்த்தைக் குழு, 17 மற்றும் 18ஆவது மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, "சுஹுருபாய" பத்தரமுல்லை.

கலப்பு அபிவிருத்தித் திட்டங்களுக்கான கேள்வி அழைப்பு

செல்லக்கதிர்காமத்தில்

பரப்பு : 0A - 3R - 20.8P (0.3562Ha)
குத்தகைக் காலம் : 30 ஆண்டுகள்
அடிப்படை பெறுமதி : ரூபா 17,215,000/-
பிணைமுறி : ரூபா 300,000/-

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு **2023 மே 02ஆம் திகதி மு.ப. 11.00க்கு** இடம்பெறும். **2023 ஜூன் 09ஆம் திகதி மு.ப. 11.00க்கு** கேள்விமனுக்கள் ஏற்பது நிறைவடையும்.

தம்புள்ளையில்

பரப்பு : 0A - 0R – 31.10P (0.0786 Ha)
குத்தகைக் காலம் : 30 ஆண்டுகள்
அடிப்படை பெறுமதி : ரூபா 26,700,000/-
பிணைமுறி : ரூபா 500,000/-

விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு 2023 மே 02ஆம் திகதி பி.ப. 02.00க்கு இடம்பெறும். 2023 ஜூன் 09ஆம் திகதி பி.ப. 02.00க்கு கேள்விமனுக்கள் ஏற்பது நிறைவடையும்.

ஆவணம் வழங்கல் வரிகள் உட்பட 25,000 இலங்கை ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தை பத்தரமுல்லை, கட்டம் 1, செத்சிறிபாய, 6ஆவது மாடியில் உள்ள நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிதிப் பிரிவுக்கு செலுத்தி 2023 மார்ச் 08ஆம் திகதி தொடக்கம் 2023 மே 11ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 2.30 வரை பத்தரமுல்லை, கட்டம் 1, செத்சிறிபாய, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி, மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவில் இருந்து பெறலாம்.

நிதிப் பிரிவு, நகர அபிவிருத்தி அதிகாரசபை, 6அவது மாடி, "செத்சிறிபாய – கட்டம் 1", பத்தரமுல்லை என்ற முகவரியில் மேல் குறிப்பிடப்பட்ட மூடப்படும் நேரத்திற்கு பின் கேள்விமனுக்கள் உடன் திறக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
பணிப்பாளர் (மெய் ஆதன அபிவிருத்தி),
மெய் ஆதன முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திப் பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகாரசபை, 8ஆவது மாடி,
செத்சிறிபாய, கட்டம் 1, பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம்: 011 2875921 அல்லது 011-2875916-20
071-177-50-76, 070-298-86-25, 071-088-67-43
தொலைநகல்: 011-2875900.
மின்னஞ்சல்: directorred@gov.uda.lk
இணையதளம்: www.uda.gov.lk

தலைவர், வருவாய் கேள்விக் குழு (கனிஷ்ட), நகர அபிவிருத்தி அதிகாரசபை, 6ஆவது மாடி, "செத்சிறிபாய", கட்டம் 1, பத்தரமுல்லை.

RFP அழைப்புக்காக ஏற்கனவே வெளியிடப்பட்ட முதலீட்டு வாய்ப்புகள்

கொழும்பு 11, ஓல்கொட் மாவத்தையில் Chalmers Granaries Land இற்காக உயர் மாடி கலப்பு அபிவிருத்தித் திட்டம்

காணி பரப்பு	09A- 02R- 31.75P
குத்தகைக் காலம்	99 ஆண்டுகள் குத்தகை அடிப்படை
அடிப்படை பெறுமதி (ரூபா)	25,143,280,000/-
பிணைமுறி (ரூபா)	250,000,000/-
ஆவணம் வழங்கல்	2023.01.12 தொடக்கம் 2023.03.10 வரை
விலைமனு நிறைவு	2023.04.03 அன்று பி.ப. 2.30

நுவரெலியா, கிரகரி ஏரி, தீம் பார்க் அபிவிருத்தித் திட்டம்

காணி பரப்பு	10A- 3R- 28P
குத்தகைக் காலம்	30 ஆண்டுகள் வருடாந்த குத்தகை அடிப்படை
அடிப்படை வருடாந்த குத்தகை வாடகை (ரூபா)	17,500,000/-
பிணைமுறி (ரூபா)	10,000,000/-
ஆவணம் வழங்கல்	2023.01.12 தொடக்கம் 2023.03.10 வரை
விலைமனு நிறைவு	2023.03.27 அன்று பி.ப. 2.30

தெபானம, பன்னிப்பிட்டியவில் குடியிருப்பு அபிவிருத்தித் திட்டம்

காணி பரப்பு	2A- 2R- 23.25P
குத்தகைக் காலம்	99 ஆண்டுகள் குத்தகை அடிப்படை
அடிப்படை பெறுமதி (ரூபா)	784,000,000/-
பிணைமுறி (ரூபா)	10,000,000/-
ஆவணம் வழங்கல்	2023.01.12 தொடக்கம் 2023.03.10 வரை
விலைமனு நிறைவு	2023.03.29 அன்று பி.ப. 2.30

ஜாஎல, ஏக்கலவில் அமைந்துள்ள UDA காணிக்காக ஏற்பாட்டியல் வசதிகள் மற்றும் இணை அபிவிருத்தித் திட்டம்

காணி பரப்பு	12A- 00R- 00P
குத்தகைக் காலம்	50 ஆண்டுகள் குத்தகை அடிப்படை
அடிப்படை பெறுமதி (ரூபா)	1,214,200,000/-
பிணைமுறி (ரூபா)	18,000,000/-
ஆவணம் வழங்கல்	2023.01.12 தொடக்கம் 2023.03.10 வரை
விலைமனு நிறைவு	2023.03.30 அன்று பி.ப. 2.30

தெமடகொடவில் உயர் மாடி கலப்பு அபிவிருத்தி

	Lot A in Plan No.4392A	Lot A1 in Plan No.5661	Lot A2 in Plan No.5661
காணி பரப்பு	3A-2R24.59 P	1A -3R7.59P	1A-3R-17P
குத்தகைக் காலம்	99 ஆண்டுகள் குத்தகை அடிப்படை		
அடிப்படை பெறுமதி (ரூபா)	3,086 மில்.	1,411 மில்.	1,581 மில்.
பிணைமுறி (ரூபா)	31 மில்.	15 மில்.	16 மில்.
ஆவணம் வழங்கல்	2023.01.12 தொடக்கம் 2023.03.10 வரை		
விலைமனு நிறைவு	2023.03.28 அன்று பி.ப. 2.30		

ஜேவிபியினுள் சர்வாதிகாரம் மட்டுமே எஞ்சியுள்ளது

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்

பிரேமசிறி மானகே

நீங்கள் 1987 இல் ஜே.வி.பியில் இணைந்தீர்கள். அதன் பின்னர் 1988/1989 ஆண்டுகளில் இருந்த ஆட்சியில் ஜே.வி.பி பாரிய வீழ்ச்சியைச் சந்தித்தது. அதன் பின்னர், ஜே.வி.பியை மீளக் கட்டியெழுப்பும் பாரிய பணிகளில் உங்கள் பங்களிப்பு எவ்வாறானது?

நான் 1987ல் ஜே.வி.பி.யில் இணைந்தேன். அதற்கு அதன் பின்னர் சிலகாலங்களில் ஜே.வி.பி வீழ்ச்சியடைந்தது. அப்போது கட்சியைக் கட்டியெழுப்புவதில் நானும் தீவிரமாக ஈடுபட்டு வந்தேன்.

அதன் பின்னர் 1997ம் ஆண்டில் நான் பிரதேச சபை உறுப்பினராக இருந்தேன். மீண்டும் தென் மாகாண சபை தேர்தலில் போட்டியிட்டதோடு 2004ம் ஆண்டில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று 2011ம் ஆண்டு வரை பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன். ஜே.வி.பியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் ஒருவராக நான் அதுவரை செயல்பட்டேன். எனினும் 2011ம் ஆண்டில் ஜே.விபி.யை விட்டு வெளியேறி வேறு அரசியல் முகாமில் இணைந்து கொண்டேன்.

நீங்கள் அன்று ஜே.வி.பியை விட்டு வெளியேறிச் சென்றதற்கான காரணம் என்ன?

நான் 1987ம் ஆண்டில் ஜே.வி.பியுடன் இணையும் போது இந்தக் கட்சி நாட்டுக்காகச் செயல்படும் ஒரு கட்சியாக இருக்கும் என்ற பாரிய நம்பிக்கை எனக்குள் இருந்தது. பாராளுமன்ற உறுப்பினராக நான் தெரிவானதன் பின்னர் அதன் செயற்பாடுகள் தொடர்பில் தொடர்ச்சியாக எனக்குள் விமர்சனங்கள் இருந்தன. கொள்கை ரீதியாக எடுக்கப்பட்ட தவறான தீர்மானங்களால் நாம் மிகவும் ஏமாற்றம் அடைந்தோம். நாட்டு மக்களிடம் ஜே.வி.பி ஜனநாயகம் பற்றி பெரிதாகப் பேசுகிறது. ஆனால் கட்சியில் மார்க்சியமோ, லெனினிசமோ, ஜனநாயகமோ கூட இல்லை. ஜேவிபியினுள் தூய்மையான ஜனநாயகம் இருப்பதாக சாதாரண பொது மக்கள் நினைக்கிறார்கள். எனினும் அது பொய். உண்மையில் அதனுள் இருப்பது ஜனநாயகம் அல்ல. ஜே.வி.பியினுள் இருப்பது சர்வாதிகாரமாகும். இப்போதும் மக்களுக்கு இதைப் பற்றி தெரியாது. 2004ம் ஆண்டில் நாம் அமைச்சுகளை பொறுப்பேற்றுச் செயல்பட்டோம். ஜே.வி.பி அதன் பின்னர் அரசிலிருந்து வெளியேறியது. மாவட்டங்களில் நாட்டு மக்கள் அதிக விருப்பு வாக்குகளை வழங்கினார்கள். அப்படி என்றால் மக்களுக்கு நம்பிக்கை இருந்தது. அன்று எடுத்தது தவறான அரசியல் முடிவாகும். அரசியலிருந்து நாம் வெளியேறியதும் ஒரு காரணமாக அமைந்தது. அதன் பின்னர் ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்டபோது மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளித்தோம். அரசாங்கத்தில் இணையுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதும் ஜே.வி.பி அந்த நேரத்தில் அரசாங்கத்தில் இணையாமை கட்சி எடுத்த தவறான முடிவாகும். அன்று ஒரு நல்ல முடிவை எடுத்திருக்க வேண்டும். இது போன்ற முட்டாள்தனமான முடிவுகளின் விளைவு நல்லதல்ல என்று நாம் கூறினோம்.

இடதுசாரி அரசியல் இயக்கத்தினுள் நீங்கள் கூறும் சர்வாதிகாரம் இருக்க முடியுமா?

ஜே.வி.பி சோசலிசம் பற்றி பேசினால் கட்சிக்குள் ஜனநாயகம் இருக்க வேண்டும். மற்றவர்கள் முன்வைக்கும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். அத்தகைய யோசனைகளை நாம் முன்வைத்தாலும், அவை கவனத்தில் எடுக்கப்படுவதில்லை. அவை தொடர்பில் கவனம் செலுத்தப்படாமைக்கு அன்று ஒரு கண்ணுக்குத் தெரியாத குழு இருந்தது. அந்த கண்ணுக்குத் தெரியாத குழுவினால் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் கட்சியினுள் பலமானதாக இருந்தது. அதனால் நாம் ஜனநாயக ரீதியாக முன்வைக்கும் விடயங்கள் கணக்கில் எடுக்கப்படுவதில்லை. அன்று கட்சியினுள் இருந்த கண்ணுக்குத் தெரியாத குழுவினுள் இருந்தவர்கள் குமார் குணரத்னம் போன்ற தரப்பினராகும். மக்கள் இயக்கமாக தங்களைக் காட்டிக் கொள்ளாதவர்கள் கட்சியில் இருந்தார்கள். அவர்கள் வலிமையானவர்கள்.

சமூகத்திற்கு தம்மைக் காட்டிக்கொள்ளாத ஒரு சக்தி கட்சியினுள் இயங்குவது இடதுசாரி சோசலிசத்தை மதிக்கும் இயக்கத்திற்கு நல்லதா?

ஒருபோதுமில்லை. உதாரணமாக, தேர்தலின் போது நாம் கட்சியின் சார்பில் தோழர் சோமவங்ச அமரசிங்கவை முன்னிறுத்துமாறு கோரினோம். அந்தச் சந்தர்ப்பத்தில் கட்சியில் சிலர் அதனைச் செய்யவில்லை. நாம் கட்சியின் இணக்கத்துடன் செயற்பட்டோம். ஜனாதிபதி தேர்தலில் சரத் பொன்சேகா போட்டியிட்ட போது நாம் அதனை எதிர்த்தோம். அந்நேரத்தில் எமது கருத்தை மதிக்கவில்லை. பாராளுமன்றத்திற்கு எமது கட்சியிலிருந்து தெரிவாகிய பாராளுமன்ற உறுப்பினர்களாக இருந்த கற்ற அறிவாளிகள் சுமார் முப்பது பேரளவில் வெளியேறினார்கள். அன்று எடுத்த தவறான முடிவினாலேயே அவ்வாறு நடந்தது. ஜே.வி.பிக்கு 2004ம் ஆண்டில் 42 பாராளுமன்ற பிரதிநிதித்துவம் கிடைத்தது. அச்சந்தர்ப்பத்தில் அதில் இரண்டு மீள ஒப்படைக்கப்பட்டது. அது அரசியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட தவறான முடிவு. அவ்வாறான முட்டாள்தனமான தீர்மானங்களால்தான் கட்சியை நேசித்தவர்கள் அன்று கட்சியிலிருந்து வெளியேறுவதற்குத் தீர்மானித்தார்கள்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜே.வி.பி வெற்றி பெறும் என்றும், அது தேசிய ரீதியான அரசியல் மாற்றத்தின் ஆரம்பமாக இருக்கும் என்றும் அவர்கள் கூறுகின்றார்கள். இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?

அவர்கள் ஓரளவுக்கு அதிகப்படியான வாக்குகளைப் பெறுவார்கள் என நான் நினைக்கிறேன். எனினும் மக்களின் பக்கத்தில் இருந்து யோசித்தால் அது நல்ல ஒரு விடயமல்ல. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பாடம் புகட்டுவதற்கும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் வாக்களிக்காமல் இருந்தால் நல்லது என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்படுவார்கள். 1988 /1989 காலப்பகுதியில் தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் அழிக்கப்பட்டது.

அதன் பின்னர் ஜே.ஆர். ஜயவர்தன இந்து லங்கா ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தினார். இதனைக் கருத்தில் கொண்டுதான் தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் செயற்பட்டது. அதன் ஊடாகச் செயற்பட்டு, பிறகு அது சரியான திசையில் பயணிக்கவில்லை. அது தவறான பாதையிலேயே பயணித்தது. அதில் இணைந்து கொண்டு கூடாதவர்கள் அதனை அழித்தார்கள். பெரும் அழிவு ஏற்படுத்தப்பட்டது.

இன்று தேசிய மக்கள் சக்தியின் ஊடாக இணைந்திருப்பது அவ்வாறானவர்களே. மாற்றுவழியாகத் தெரிவு செய்வதற்கு முயற்சிப்பவர்கள் தொடர்பில் மக்கள் பின்னர் அறிந்து கொள்வார்கள். தேசிய மக்கள் சக்தியாக புத்திஜீவிகள் இணைந்திருக்கின்றார்கள் என அவர்கள் எமக்குக் காட்டுகின்றார்கள்.

இந்நாட்டில் இன்றைய அழிவுக்குப் பொறுப்புக் கூற வேண்டிய பல தரப்பினர் உள்ளனர். எல். ரீ.ரீ. ஈ, தமிழ் டயஸ்போரா, ஜே.வி.பி, தேசப்பற்றுள்ள மக்கள் இயக்கம் மற்றும் 75 வருடங்களாக இந்நாட்டை ஆட்சி செய்த கட்சிகளின் அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும். இதன் காரணமாகவே நாடு இன்று இந்நிலைக்கு உள்ளாகியிருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தாலும் நாடு இந்நிலையிலிருந்து முன்னோக்கிச் செல்லும் என நான் நினைக்கவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் மாற்று வழியாக ஜே.வி.பியைத் தெரிவு செய்வார்கள் என நீங்கள் நினைக்கிறீர்களா?

தற்போது மக்களுக்கு வேறு மாற்று வழிகள் இல்லை என்பது போல் நினைத்துக் கொண்டிருக்கின்றார்கள். நாமும் ஜே.வி.பியில் இருந்தவர்கள் என்பதால் ஜே.வி.பிக்கு அழகிய சிந்தனைகள் மட்டுமின்றி, அழகிய கதைகளையும் கூற முடியும் என்பது எமக்குத் தெரியும். மக்கள் இதுவரைக்கும் அழகிய, கவர்ச்சிமிக்க கதைகளைக் கேட்ட போதிலும் தேர்தல் வாக்கெடுப்பில் 3வீத வாக்குகள் மாத்திரமே கிடைத்துள்ளன. எனினும் இம்முறை ஒரு குறிப்பிட்டளவு வாக்கு அவர்களுக்கு அதிகமாகக் கிடைக்கும். நாட்டை ஆட்சி செய்தவர்கள் தொடர்பில் மக்களுக்கு விரக்தி ஏற்பட்டுள்ளதால் மக்கள் மாற்று வழிகளைத் தேடுகின்றார்கள்.

ஏகாதிபத்திய நாடுகளால் புதிய தாராளவாத முதலாளித்துவ சமூக அமைப்பு பரப்பப்பட்டு வரும் சூழலில் இடதுசாரி அரசியல் முகாமில் மக்கள் நம்பிக்கை வைப்பார்களா?

தேர்தல் நேரத்தில் முதலில் களத்தில் இறங்கிச் செயற்படுவது ஜே.வி.பியாகும். இந்த தேர்தலில் இன்னமும் மற்றைய கட்சிகள் வெளியில் இறங்கவில்லை. ஜே.வி.பி எப்போதும் களத்தில் இறங்குவதற்கு முன்னணியில் இருக்கின்றது. நாடு தொடர்பான பிரச்சினையின் போது இன்றுள்ள ஜே.வி.பி தலைவர்கள் கட்சியைக் காப்பாற்றும் இடத்திலேயே இருந்தார்கள். இப்போதும் அவ்வாறான தலைவர்கள் நாட்டைக் காப்பாற்றுவார்கள் என நம்ப முடியாது. நாட்டின் மீது பற்று இருந்திருந்தால் அன்று 2005ம் ஆண்டு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் இணைந்திருக்க வேண்டும். சுனாமி நிவாரண சபையைக் காரணம் காட்டி பொய்யாக அரசிலிருந்து வெளியேறாமல் இருந்திருக்க வேண்டும். அன்று அரசாங்கத்தினுள் இருந்து கொண்டு இவ்விடயங்களைச் செய்திருக்க வேண்டும். அரசாங்கத்துடன் இணைந்து பணியாற்ற முடியாவிட்டால் மக்களுக்காகச் செயற்பட முன்வந்திருக்க வேண்டும்.

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அதற்கு முகங்கொடுக்கக் கூடிய தேசிய கொள்கை ஜே.வி.பியிடம் உள்ளதா?

உலகம் முழுவதும் செயற்படும் அரசியல் சித்தாந்தங்களின்படி, முழுமையான மார்க்சியக் கொள்கைகளில் நின்று செயல்பட முடியாது. நாட்டு மக்களும், மக்கள் நலனும் தான் மிக முக்கியம்.

நாம் எந்த அரசியல் இயக்கத்தில் இருந்தாலும் அது நாட்டு மக்களின் நலன் மற்றும் சிறந்த வாழ்க்கைத் தரத்துடன் உலகில் பெருமைமிக்க நாடாக ஆக்குவதற்கே முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். இதன் போது கட்சி என்ற ரீதியில் சில சில மாற்றங்களைச் செய்யத்தான் வேண்டும். எனினும் முற்றாகவே கொள்கைகளை இல்லாமலாக்கிக் கொண்டு இந்தப் பயணத்தை முன்னெடுக்க முடியாது.

எவ்வாறாயினும், தற்போதைய நிலை வேறுவிதமாக இருந்தாலும், இன்று மக்களுக்கு நம்பிக்கை இருந்தால், அந்த நம்பிக்கை ஒரு நாள் மாறிப் போகும். தற்போது மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்திருக்கின்றது.

மேடைகளில் அழகிய கதைகளைக் கேட்டு பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என நான் நினைக்கவில்லை. அமைச்சுப் பொறுப்புக்களைப் பெற்ற நேரத்திலும், பிரதேச சபையின் அதிகாரத்தைப் பெற்ற சந்தர்ப்பத்திலும் ஒன்றுமே செய்யவில்லை. எந்த ஒரு அமைச்சுப் பொறுப்பையும் வெற்றிகரமாகச் செய்து காட்டவில்லை. இப்போது ஜே.வி.பியில் திறமையானவர்கள் இல்லை. திஸ்ஸமகாராம பிரதேச சபையின் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட போதும் சபையின் எந்த ஒரு விடயத்தையும் வெற்றிகரமாகச் செய்யவில்லை.

ஜே.வி.பிக்கு எதிராக இருக்கும் மிகப்பெரிய குற்றச்சாட்டுகளில் ஒன்று, நாட்டை முன்னேற்றும் அளவுக்கு ஆற்றல் அவர்களிடத்தில் இல்லை என்பதும், அவர்களுக்கு சர்வதேச உறவுகள் இல்லை என்ற விடயங்களே. இந்த நிலையை நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?

ஜே.வி.பிக்கு பெரியளவில் சர்வதேச உறவுகள் இல்லை. சோசலிச இயக்கங்களை வழிநடத்திய ரஷ்யாவிலும் சீனாவிலும் இன்று சோசலிசம் இல்லை. மற்றைய நாடுகள் கம்யூனிசத்தைப் பரப்ப முயற்சிக்கவில்லை. 88, 89ம் ஆண்டுகளிலும் கூட அவர்களிடமிருந்து ஒத்துழைப்புக் கிடைக்கவில்லை. கியூபாவிடமிருந்தும் எங்களுக்கு உதவி கிடைக்கவில்லை. இன்றைய நிலையில் ஜே.வி.பிக்கு எங்கிருந்தும் உதவிகள் இல்லை.

திருடர்களைப் பிடிப்போம் என்ற விடயம் தேர்தல் மேடைகளில் பொதுவான பிரபலமானதொரு விடயமாக இருந்தாலும், அதிகாரத்திற்கு வந்ததன் பின்னர் எந்த ஒரு கட்சியாலும் அதனைச் செய்ய முடியாது. ஜே.வி.பிக்கும் சந்தர்ப்பம் கிடைத்த போது இவ்விடயத்தை அவர்களும் பயன்படுத்திக் கொள்ள மாட்டார்கள்தானே?

திருடர்களைப் பிடிப்பதற்கு சில முயற்சிகளை மேற்கொள்வார்கள் என நான் நினைக்கிறேன். எனினும் அது இலகுவான விடயமல்ல, அதனைச் செய்ய முடியாது. திருடர்களும், தவறு செய்தவர்களும் ஜே.வி.பிக்குள்ளும் இருந்தார்கள். சஹ்ரானின் பிரச்சினை நேரத்தில் ஜே.வி.பியினுள் அவ்வாறானவர்கள் இருந்தார்கள்.

சுபத்ரா தேசப்பிரிய
தமிழில்
எம்.எஸ்.முஸப்பிர்

பாராளுமன்றத்தின் அதிகாரத்தை குறைத்து மதிப்பிட எவருக்கும் உரிமை இல்லை

தேர்தலை நடத்துமாறு கோரி நாடு முழுவதிலும் ஆர்ப்பாட்டங்களை நடாத்துவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி கடந்த வாரம் தீர்மானித்தது.

இதனடிப்படையில் தேர்தல் நடாத்தப்படும் வரைக்கும் தொடர்ந்து போராடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்தது.

இதனிடையே கடந்த வாராம் தேசிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சிலர் காயங்களுக்கு உள்ளாகிய விடயம் சஜித்துக்குத் தெரிய வந்தது. இது தொடர்பில் ஆராய்ந்து பார்த்த அவர், உடனடியாக தனது டுவிட்டர் பக்கத்தில் செய்தி ஒன்றை வெளியிட்டார்.

இந்தத் தாக்குதல் தொடர்பில் கண்டனம் தெரிவித்து விசேட அறிக்கை ஒன்றை வெளியிடுமாறு அவர் தனது ஊடகப் பிரிவினருக்கு ஆலோசனை வழங்கினார்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் படுகாயமடைந்த நபர் ஒருவர் அதற்கு மறுநாள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்த செய்தி சஜித்தின் காதுக்கு எட்டிய போது அவர் நளின் பண்டார ஏற்பாடு செய்திருந்த கூட்டம் ஒன்றில் உரையாற்றிக் கொண்டிருந்தார்.

"முதலிலேயே மிகவும் கவலையான செய்தியை கூற வேண்டியிருக்கின்றது. நேற்று தேசிய மக்கள் சக்தியின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களின்போது காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபர் ஒருவர் இப்போது மரணித்திருக்கின்றார். அவர் நிமல் அமரசிறி எனும் நிவித்திகலை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். எமது ஆழ்ந்த கவலைகளை அவரது குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். எம்மிடம் அரசியல் ரீதியில் பல்வேறு நிலைப்பாடுகள் இருக்க முடியும். நாம் வெவ்வேறு முகாம்களில் அரசியல் செய்பவர்களாக இருக்கவும் முடியும்.

கோழைத்தனமாக, இரத்தம் மற்றும் கண்ணீரின் மீது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முயற்சித்தால், அதற்கு எதிராக நாம் நிபந்தனையின்றி முன்னோக்கிப் பயணிப்போம்" என்று சஜித் தனது உரையை ஆரம்பித்தார்.

இதேவேளை, விசேடமான மூன்று விடயங்களுக்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையிலான எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் குழு கடந்த செவ்வாய்க்கிழமை காலை பாராளுமன்ற சபாநாயகர் அலுவலகத்தில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைச் சந்தித்தது.

இதன் போது, 2023ம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடாத்துவதற்கு வழங்குமாறு கோரும் பிரேரணையினை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு சஜித் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார். இதற்கு சபாநாயகர் தனது இணக்கத்தைத் தெரிவித்தார்.

"தேர்தலை நடாத்துவதற்கான நிதியை வழங்காமை தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளரை அழைத்து விசாரியுங்கள். அப்போதுதான் இந்தச் சதியின் பின்னால் யார் இருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும். தற்போதைய மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. சில தினங்களுக்கு முன்னர் தேர்தலை நடாத்துமாறு கோரி இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் ஒருவர் உயிரிழந்திருக்கின்றார். உடனடியாக பாராளுமன்றத்தை கூட்டுங்கள்" என சபாநாயகரிடம் விடயத்தைத் தெளிவுபடுத்தினார் சஜித்.

"பாராளுமன்றத்தின் அதிகாரத்தின் பிரகாரம் நிறைவேற்றப்பட்ட நிதி அதிகாரத்தை நிறைவேற்று அதிகார பலத்தினால் அடக்கினால் பாராளுமன்றம் எதற்கு?" என கேள்வி எழுப்பிய சஜித், தேர்தல் ஆணைக்குழுவின் ஐந்து உறுப்பினர்களின் இணக்கத்துடனேயே தேர்தல் அறிவிக்கப்பட்டதாகவும், தேர்தல் நடாத்தப்படும் தினமும் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டதாகவும் கூறினார்.

"பாராளுமன்றத்தின் அதிகாரத்தை குறைத்து மதிப்பிட எவருக்கும் உரிமை இல்லை. இந்த நிலையை மாற்றும் அதிகாரம் கொண்ட பிரதிநிதியே சபாநாயகர்" என பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் இதன் போது குறிப்பிட்டார்.

"இந்த நிலைகளைக் கவனத்திற் கொண்டு நாளை கட்சித் தலைவர்கள் கூட்டம் இடம் பெறவுள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் இதன் போது தீர்மானித்துக் கொள்ள முடியும்" என சபாநாயகர் பதிலளித்தார்.

"இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நிதி அமைச்சின் செயலாளரையும் அழையுங்கள்" சஜித் கோரிக்கை விடுத்தார்.

ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மாத்திரமே அந்தத் தீர்மானத்தை மேற்கொள்ள முடியும் என சபாநாயகர் கூறினார். எனினும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட நிதி ஒதுக்கீடு மீறப்படுமாயின் அது தொடர்பில் பேசுவதற்காக அழைப்பதற்கு சபாநாயகருக்கு அதிகாரம் உள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார். இதேவேளை தொடர்ந்தும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் சஜித் கலந்து கொள்கிறார்.

இந்தப் பிரசாரக் கூட்டங்கள் அனைத்திலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்து கொள்வதன் மூலம் மக்கள் தேர்தல் ஒன்றை விரும்புகிறார்கள் என்பதையே காண முடிகின்றது.

எம்.எஸ்.முஸப்பிர்

இலங்கை போக்குவரத்துத் துறை வரலாற்றில் ஒரு மைல்கல்

எரிபொருளுக்கு விடை கொடுக்கும் தருணம் ஆரம்பம்!

எரிபொருள் இறக்குமதிக்காக மிகப் பெருமளவு நிதியை வருடாந்தம் செலவு செய்யும் இலங்கையைப் போன்ற நாட்டுக்குப் பொருத்தமான வாகன வகையாக இருப்பது மின்சாரத்தில் இயங்கும் அல்லது, சார்ஜ் செய்யப்பட்ட பட்டரியில் இயங்கும் வாகனங்களேயாகும். உலகில் பல நாடுகளில் இவ்வாறான வாகனங்கள் பாவனையில் இருந்தாலும் இலங்கையில் அது அண்மைய காலம் வரைக்கும் ஒரு எண்ணக்கருவாக மாத்திரமே இருந்து வந்தது.

எனினும் அந்த எண்ணக்கருவினை தற்போது நடைமுறையில் சாத்தியமான ஒன்றாக ஆக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிள், கார்கள் மாத்திரமின்றி, பொதுப் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படும் பஸ்களையும் மின்சாரத்தில் இயங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இதற்குத் தேவையான அமைச்சரவைப் பத்திரத்திற்கு கடந்த மாதம் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஊடகத் துறை, போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, சர்வதேச எரிசக்தி நெருக்கடிக்கு மத்தியில், படிம எரிபொருட்களை இறக்குமதி செய்வதற்கான செலவைக் குறைக்கும் நடவடிக்கையாக, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரமான சூரிய சக்தியைப் பயன்படுத்தி இயக்கக்கூடிய பேருந்துகள் திட்டம் அறிமுகப்படுத்த உள்ளதாகக் கூறினார். மேல்மாகாணத்தில் கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளை உள்ளடக்கியதாக இந்த முன்னோடித் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மின்சாரத்தில் இயங்கும் வாகனங்களை உருவாக்கி 'சிஸ்டம் சேஞ்ச்' ஏற்படுத்துவதே இதன் நோக்கம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இதன் மற்றுமொரு நடவடிக்கையாக அடுத்த ஐந்து வருடங்களுக்குள் இந்நாட்டில் பசுமை எரிசக்திப் பொருளாதாரத்தின் மூலமாக இலங்கையின் பொருளாதாரத்தை சர்வதேச மட்டத்திற்கு உயர்த்துவதற்கான யோசனையொன்றை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார். கடந்த 2ம் திகதி மின்னேரிய வோல்டா ஒட்டோடெக் பொறியியல் நிறுவன திறப்பு விழாவில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். எரிபொருள் நெருக்கடிக்கான தீர்வாக மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகள் தேவைப்படுகின்ற இவ்வாறான காலகட்டத்தில் இந்த நாட்டில் பொருத்தப்பட்ட டிராக்டர்கள், மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளை வாங்குவதற்குத் தேவையான வசதிகளை வோல்டா ஒட்டோடெக் இன்ஜீனியரிங் நிறுவனம் செய்துள்ளது. இந்நிறுவனத்தின் தொழிற்சாலையினைப் பார்வையிட்ட ஜனாதிபதி, துவிச்சக்கர வண்டிகள், மின்சார மோட்டார் சைக்கிள்கள் மற்றும் முச்சக்கர வண்டிகளைப் பொருத்தும் செயற்பாட்டிற்குத் தேவையான ஒத்துழைப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்தார். விசேடமாக பசுமை எரிசக்தி பொருளாதாரத்தை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையினைப் பாராட்டுவதாகவும், இவ்வாறான திட்டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை பசுமை எரிசக்தி பொருளாதாரத்தோடு இணைப்பதற்கும் அனைவரும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும், உலகில் ஏனைய நாடுகள் பசுமை எரிசக்தி பொருளாதாரத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதால் இலங்கையும் அந்தப் பயணத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும் ஜனாதிபதி இதன் போது சுட்டிக் காட்டினார்.

(18 ஆம் பக்கம் பார்க்க)

தாரக விக்ரமசேகர
தமிழில்
எம்.எஸ்.முஸப்பிர்

மாத்தளை முத்துமாரி அன்னையின் அழகுரதம்

நாற்புறமும் மலைகளால் சூழப்பட்ட மாத்தளை நகரில் நடு நாயகமாக வீற்றிருந்து அருள்பாலிப்பவள் அன்னை முத்துமாரி. அன்னையை மாசி மக நன்னாளில் அலங்கார பூஷிதையாக சித்திர தேரிலேற்றி விநாயகர், சிவனம்பாள், முருகன், சண்டேஸ்வரி ரதங்கள் புடைசூழ மாத்தளை வாழ் சைவர்கள் ஊர் வலமாக அழைத்து செல்லும் காட்சி காண்பவர் மனதில் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும்.

தேரோட்டம் என்பது சைவர்களின் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும். காலம் காலமாக இறைவனையோ, இறை வியையோ தேரில் எழுந்தருளச் செய்து வழிபடுவது முக்கிய சைவசமய வழிபாட்டு பண்பாடாகும். 'கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பதற்கு அமைய இந்துக்கள் வாழும் இடங்களில் எல்லாம் ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அன்றைய அரசர்கள் தொடங்கி இன்று இந்துக்கள் வாழும் அனைத்து இடங்களிலும் ஆலயங்கள் அமைக்கப்படுகின்றன. ஆலயங்கள் ஆகம ரீதியாக அமைக்கப்பட்டு அவ்வாலயங்களில் இரதோற்சவமும் சிறப்பாக நடைபெறுகின்றது.

கொடியேற்றம் முதல் தீர்த்தத் திருவிழா வரை கோயில்களில் ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படும் திருவிழாக்கள் இறைவனின் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்னும் ஐந்து தொழில்களை குறிக்கின்றன. தேர்த்திருவிழா என்பது அழித்தல் என்பதையே குறித்து நிற்கின்றது. ஒரு தேரை ஆறு வடிவங்களாகக் கொண்டு அமைப்பார்கள் அதாவது கலை, தத்துவம், வண்ணம், புவனம், பதம், மந்திரம் என ஆறு வகைகளால் திருத்தேரை ஒரு சரீரமாகவே வடிவமைப்பார்கள். தேரை ஆக்குபவர் ஸ்தபதி. தேரின் சில்லில் இருந்து இறைவன் எழுந்தருளும் இடம் வரையான பகுதி மூன்று பிரிவாகவோ ஐந்து பிரிவாகவோ வகுக்கப்பட்டு சிற்பங்கள் அமைக்கப்பட்டிருக்கும்.

தேரின் சைவ சித்தாந்த விளக்கமாவது மந்திர கேசரி மலைகள் அச்சு, சூரிய சந்திரர் சில்லுகள், ஷட்ருதுக்கள் சந்திகள், பதினான்கு உலகங்கள் தட்டுக்கள், ஆகாசம், ஆசனம், நதிகள் கொடிகள், மோட்ச உலகம் மேல் விரிவு, யாகங்கள் சட்டம், நாள், திதி நட்சத்திரம் போன்றன குறுக்கு மரங்கள், பருவதங்கள் தூண்கள், அஷ்ட திக் கஜங்கள் தாங்கும் ஆதாரங்கள், ஏழு கடல்கள் திரைச்சீலைகள், உப வேதங்கள் மணிகள், வாயுக்கள் படிகள், நால் வேதங்கள் குதிரைகள், உச்சிக்குடை பிரம்ம ரந்திரம், கலசம் ஷோடஷாந்தானம். ஆக தேரானது சிவரூபம் என்பதே சைவ சித்தாந்திகளின் கருத்தாகும்.

இன்று பஞ்சரத பவனி என்ற பெயருக்கே மகுடம் சூட்டுவது போல் மாத்தளை முத்துமாரியம்மன் கோயில் பஞ்சரத பவனி அமைந்துள்ளது. 1934 ஆம் ஆண்டளவில் விநாயகர், சிவனம்பாள், முருகன் என மூன்று கட்டுத்தேர்களே காணப்பட்டன. 1965 ஆம் ஆண்டே பஞ்சரதபவனி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரை பிறப்பிடமாகக் கொண்ட தம்பிதுரை ஸ்தபதியாரால் உருவாக்கப்பட்ட எழில்மிகு சித்திரத் தேர் 1977ஆம் ஆண்டு வெள்ளோட்டம் விடப்பட்டது. அச் சித்திர தேரில் ஐந்து வருடங்கள் முத்துமாரியம்மன் அடியார்களுக்கு அருள் பாலித்தார். 1983ஆம் ஆண்டு இனக் கலவரத்தின் போது ஐந்து தேர்களும் எரிக்கப்பட்டன. அன்று அழிக்கப்பட்ட ஐந்து தேர்களும் 1992ஆம் ஆண்டு மீண்டும் உருவாக்கப்பட்டு அன்னையின் அருட்கடாட்சத்துடன் சைவ பெருமக்களின் ஆதரவுடன் 1993 ஆம் ஆண்டு மீண்டும் வெள்ளோட்டம் விடப்பட்டன. தேர்த்திருவிழாவை ஈழத்தின் புகழ் பூத்த பேராசிரியர் கைலாசநாத குருக்கள் "இறைவனுக்கு செய்யப் பெறும் ராஜோபசாரங்களில் தலைசிறந்தது தேர்த் திருவிழா. பிரமோற்சவத்தில் நிகழ்த்த பெறும் விழாக்களில் இது முதன்மையானது" என்று குறிப்பிடுகின்றார்.

அவ்வாறான தேர்த்திருவிழாவான மாத்தளை அன்னை முத்துமாரியின் பஞ்சரத பவனியில் ஊர் கூடி தேரிழுத்து அன்னையின் கடைக்கண் பார்வையைப் பெற்று உய்வோமாக.

சித்திரத் தேரில் ஆடி அசைந்து வரும் முத்துமாரியே மெய் சிலிர்த்து விதிர்விதித்து கைகூப்பும் அடியேனின் துயரையே கதிரவனின் ஒளிபட்டு கரையும் பனிப்போல் துடைப்பாய் முத்துமாரியே உன் தாள் பணிகின்றேன் காத்தருள்வாய் முத்துமாரியே

ராஜகனி வயலட்

கிருலப்பனை பொது நூலகக் கிளை பொதுமக்கள் சேவைத் திட்டத்தின் கீழ் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் 49வது வார்ட்டுக்கு நூல்களை கையளித்து அங்கு நூலகம் ஒன்றை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளது. நூல்கள் கையளிப்பின்போது பிடிக்கப்பட்ட படங்கள்.
(படம்: நந்தனி நிக்ஸன் கிருலப்பனை பொது நூலகக் கிளை)

பாரம்பரியம் நிகழ்ச்சியில் அதிதிகளாக சுலைமா சமி, மஸீதா அன்ஸார்

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 7ஆம் திகதி (07.03.2023) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் பாரம்பரியம் நிகழ்ச்சியில் முஸ்லிம் சேவைக்கு பங்களிப்பு நல்கி புகழ்சேர்த்தோர் வரிசையில் சிரேஷ்ட பெண் எழுத்தாளர்களான கலாபூஷணம் சுலைமா சமி இக்பால், கலாபூஷணம் மஸீதா அன்ஸார் ஆகியோர் அதிதிகளாக கலந்து கொள்கிறார்கள். இவ்விரு பெண் ஆளுமைகளும், அந்நாட்களில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பான மாதர் மஜ்லிஸ் நிகழ்சிக்கு தம் எழுத்துக்களாலும், குரல் வளத்தாலும் அதிக பங்களிப்புகள் வழங்கியதோடு, இதர நிகழ்ச்சிகள் பலவற்றுக்கும் பங்களிப்புகள் வழங்கியிருக்கிறார்கள். தர்கா நகரை பிறப்பிடமாக கொண்ட கலாபூஷணம் சுலைமா சமி இக்பால், நூற்றுக்கணக்கான சிறுகதைகள் எழுதியுள்ளார். ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அகில இலங்கை ரீதியில் நடாத்திய சிறுகதைப் போட்டியில் இவரது "திசைமாறிய தீர்மானங்கள்" எனும் சிறுகதைக்கு முதல் பரிசாக தங்கப்பதக்கம் கிடைத்திருக்கிறது. சன்மார்க்க போதகர், எழுத்தாளர் மர்ஹூம் மௌலவி ஏ.ஸீ.எம்.இக்பால் இவரது கணவராவார்.

அடுத்த அதிதி, மக்கொனையை பிறப்பிடமாக கொண்ட கலாபூஷணம் மசீதா அன்ஸார். முஸ்லிம் சேவையின் மாதர் மஜ்லிஸ், கவியரங்கு போன்ற இன்னோரன்ன நிகழ்ச்சிகளில் அதிகமாக பங்கேற்றுள்ளார். இவர், ஹொரம்பாவ அல் மின்னாத் முஸ்லிம் வித்தியாலயம், தொடவத்தை அல் பஹ்ரியா மத்திய கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியையாவார். எழுத்துத்துறையில் இவரது பங்களிப்பு அளப்பரியது. 'வலம்புரி

கவிதா வட்டத்தின் கவிஞரான கலாபூஷணம் மஸீதா அன்ஸார் கவிதைகள் படைப்பதில் புகழ்பூத்த ஒரு பெண் கவிஞராக திகழ்கிறார். இவ்விரு பெண் ஆளுமைகளின் அனுபவ பகிர்வுகளை சுமந்து வரும் பாரம்பரியம் நிகழ்ச்சியை எம்.எஸ்.எம்.ஜின்னா தொகுத்தளிக்க முஸ்லிம் சேவை பணிப்பாளர் எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

நீர் கொழும்பு கட்டானயில் அமைந்துள்ள ஓமான் நாட்டின் முன்னணி ஆடை நிறுவனமான அல் உபைதானில் சுதந்திர தினத்தை முன்னிட்டு பல நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்நிகழ்வுகள் பணிப்பாளர் சபை உறுப்பினர் யாஸிர் லஹீர் தலைமையில் இடம்பெற்றது. நிகழ்வில் தேசிய தெங்குப் பயிர்ச்செய்கை சபை முகாமையாளர் வேறகொட தேசிய கொடியை ஏற்றிவைப்பதையும் இலங்கை விமானப்படையின் ஓய்வு பெற்ற வின் கமாண்டோ எம்.எச்.எம்.ஷிபா தென்னங் கன்றினை கையளிப்பதையும் படத்தில் காணலாம். 2015 முதல் இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் இயங்கி வரும் இந் நிறுவனம் நூற்றுக்கணக்கான இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கிவருகிறது. எதிர்காலத்தில் மேலும் பல முதலீடுகளை மேற்கொள்ளவும் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த வருடம் சந்தித்த நெருக்கடிகளை நாம் ஒருபோதுமே மறந்து விடலாகாது!

அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவுடன் சந்திப்பு

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியி–லிருந்து மீண்டு வருவதற்கே தற்பொழுது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார். நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து அமைச்சர் எம்முடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

கே: உள்ளூராட்சி தேர்தலை நடத்தக் கோரி, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்றத்தில் கோஷம் எழுப்பி–யிருந்தது. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: உள்ளூராட்சித் தேர்தலை நடத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாமும் இருக்கின்றோம். எவ்வாறாயினும், கடந்த ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் சந்தையில் எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு நிலவி மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருந்தது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. மேலும், மக்கள் தங்களின் அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துகளைப் போதியளவு பெற்றுக்கொள்ள முடியாத நெருக்கடி நிலையை எதிர்கொண்டிருந்தனர்.

இவ்வாறான பின்னணியில் நாம் ஐக்கிய மக்கள் சக்தியின் உதவியை நாட வேண்டியிருந்தது. தற்போது சர்வதேச நாணய நிதியம் முன்வைத்துள்ள சில நிபந்தனைகளினால் மக்கள் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. எனினும், நாடு பொருளாதார ரீதியாக ஓரளவு முன்னேற்றமடைந்துள்ளதுடன், மக்கள் தமது வாழ்வாதாரத்தை எப்படியாவது தொடரலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது. கடந்த ஆண்டு சந்தையில் ஏற்பட்ட எரிபொருள் மற்றும் எரிவாயுவின் கடுமையான பற்றாக்குறையை இன்று மக்கள் மறந்துவிட்டனர். அந்த நாட்களில், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் வரிச்சலுகைகள் வழங்கப்பட்டதாக சில பிரிவினர் குற்றஞ்சாட்டினர். இப்போது அதே மக்கள் வரி அதிகரிப்பின் சதவீதம் அதிகமாக இருப்பதாக கூறுகிறார்கள். இந்தக் காட்சிகளை எல்லாம் ஆராய்ந்து பார்த்துவிட்டு, நாம் நிலைமையை நிர்வகிக்க வேண்டும். இருந்தபோதும், எங்கள் பாராளுமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு அடிமட்டத்தில் தயாராகி வருகின்றனர்.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வருவதற்கே தற்பொழுது முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்!

கே: பொதுஜன பெரமுன மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் நிராகரித்திருப்பதாகவும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியவற்றுக்கு இடை–யிலேயே தற்பொழுது போட்டி இரு–ப்பதாகவும் கருத்துக்கள் கூறப்படுகி–ன்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: எவராக இருந்தாலும் எங்களுக்கு அது பிரச்சினையல்ல. வழமையாக உள்ளூராட்சி மன்றங்களின் பெரும்பான்மையான அதிகாரம் அரசாங்கத்தையும் மாகாண சபைகளையும் கட்டுப்படுத்தும் கட்சியினால் கைப்பற்றப்படும். உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. உள்ளூராட்சி அமைப்புகள் அடிமட்ட மட்டத்தில் உள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றவர்களால் மட்டுமே அது முடியும். 2015 இல் இதேபோன்றதொரு சூழ்நிலையை நாமும் எதிர்கொண்டோம். 2015 இல் நடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் சுமார் இரண்டரை ஆண்டுகளாக எங்களால் எந்த வேலையையும் செய்ய முடியவில்லை. கொவிட் தொற்று போன்ற காரணிகளால் திட்டமிட்ட வேலைகளைச் செய்ய முடியாமல் போனது. இன்று மக்கள் புத்திசாலிகள். உள்ளூராட்சி நிறுவனங்களின் ஊடாக சில வேலைகளை செய்ய வேண்டுமாயின் ஜனாதிபதி தலைமையிலான கட்சிக்கு தமது ஆதரவை வழங்க வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

கே: நாட்டின் பொருளாதா–ரத்தை மேம்படுத்த தாம் உழைத்து வருவதால், மக்கள் எதிர்நோக்கும் தற்போதைய பொருளாதார நெருக்கடிக–ள் இந்த வருட இறுதிக்குள் குறையும் என ஜனாதிப–தி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் தெரிவித்தார். இது குறித்து கருத்து தெரிவிக்க விரும்புகிறீர்களா?

பதில்: பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட முயற்சிகளை அமைச்சரவை உறுப்பினர்கள் என்ற வகையில் நாம் அறிவோம். உண்மையில், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பயங்கரவாதத்திற்கு எதிரான 30 ஆண்டுகால யுத்தத்தை எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வந்தார் என்பது போன்றதே இதுவாகும். 1971 மற்றும் 1988_1989 காலப்பகுதியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களாலும், இயற்கை அனர்த்தங்களாலும் பாரிய பின்னடைவைச் சந்தித்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி தற்போது தன்னால் இயன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். ஜனாதிபதி தனது முயற்சியில் வெற்றி பெற்றால் அது பயங்கரவாதத்திற்கு எதிரான 30 வருட யுத்தத்தில் வெற்றி பெற்றதற்கு சமம்.

கே: அதிகரித்த வரிவிதிப்பி–ன் காரணமாக ஆபத்தான எண்ணிக்கையிலான தொழில் வல்லுநர்கள் நாட்டை விட்டு வெளி–யேறுகிறார்கள் என்று தேசிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?

பதில்: அப்படிப்பட்ட போக்கை நான் காணவில்லை. தொழில் வல்லுநர்கள் புத்திசாலிகள் மற்றும் அவர்கள் நிலைமையை உணர்ந்து அதற்கேற்ப செயல்படுகிறார்கள். நிலைமையை சமாளிக்க அவர்களும் தங்கள் ஆதரவை வழங்கியுள்ளனர். சுயநலவாதிகள், அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு ஏற்ப செயல்படுவதன் மூலம் தங்களைப் பற்றி மட்டுமே சிந்திக்கும் சில தொழில் வல்லுநர்களால் இவ்வாறான கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன.

கே: 13 ஆவது திருத்தத்தை முழு–மையாக அமுல்படுத்துவதாக ஜனாதிபதி அண்மையில் உறுதி–யளித்துள்ளார். 13 ஆவது திருத்தம் தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பார்வை என்ன?

பதில்: 13 ஆவது திருத்தம் தொடர்பான எமது நிலைப்பாடு பின்னர் அறிவிக்கப்படும். 13 ஆவது திருத்தச் சட்டம் ஏற்கனவே அமுல்படுத்தப்பட்டுள்ளது என முன்னாள் முதலமைச்சர் என்ற வகையில் நான் கூற விரும்புகின்றேன். மேல்மாகாண சபையின் முதலமைச்சராக நான் செயற்பட்ட போது, நிர்வாக அதிகாரம் பரவலாக்கப்பட வேண்டும் என்று நான் எப்போதும் நம்பினேன். பொலிஸ் அதிகாரங்களில் தேவையான திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும் மற்றும் அவை தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும். வரலாற்றில் பார்த்தால் நில அதிகாரங்கள் அரசர்கள் மற்றும் அரச தலைவர்களின் மேற்பார்வையில் இருந்தன. அந்த அதிகாரங்கள் அதே முறையில் செயல்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் அனைவருக்கும் இந்த அதிகாரங்கள் நியாயமான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

கே: தற்போது வடக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளுக்குள் பல்வேறு பிளவுகள் ஏற்பட்டுள்ளன. அனைத்து அரசியல் கட்சிகளின் ஒருமித்த கருத்துடன் தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண முயற்சி–கள் மேற்கொள்ளப்படும் போது இது எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும்?

பதில்: வடக்கில் நிலவும் நிலைமையை மக்கள் புரிந்து கொள்வார்கள் என நம்புகிறேன். கடந்த பல ஆண்டுகளாக தங்கள் குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்ப முடியவில்லை. அவர்கள் வாழ்வாதாரத்தைத் தொடர கடும் சிரமங்களை எதிர்கொண்டனர். யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் வடக்கில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளது. பாடசாலைகள் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன, இளைஞர்கள் தங்கள் விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர் மற்றும் மருத்துவமனைகள் செயல்படுகின்றன. மக்களுக்கு ஏதேனும் அநீதி இழைக்கப்பட்டால், இந்தப் பிரிவினை மேலும் மோசமாகி வடக்கில் உள்ள தலைவர்கள் மீது மக்கள் நம்பிக்கை இழக்க நேரிடும்.

தற்போது வடக்கு, கிழக்கில் உள்ள பெரும்பாலான தமிழ் அரசியல் தலைவர்கள் புலம்பெயர் தமிழர்களுடன் பேசுகின்றனர். எவ்வாறாயினும், வடக்கு, கிழக்கு மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள அப்பாவி மக்கள் தமது வாழ்வாதாரத்தை வெற்றிகரமாக தொடர்வதற்கான சூழலை உருவாக்க விரும்புகின்றனர். மக்கள் தங்கள் தலைவர்கள் மீது நம்பிக்கை இழந்தால், கடுமையான விளைவுகளை சந்திக்க வேண்டியிருக்கும்.

நாடு பொருளாதார ரீதியாக இப்போது ஓரளவு முன்னேற்றமடைந்துள்ள–துடன், மக்கள் தமது வாழ்–வாதாரத்தை எப்படியாவது தொடரலாம் என்ற நிலைமை உருவாகியுள்ளது



முதுமைக் காலத்தில் வருமானத்துக்காக ஏங்க வேண்டிய அவசியம் கிடையாது!

எதிர்காலத்தில் சொகுசாக வாழ வேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும். முதுமை அடைந்த பின்னர் அடுத்தவர்களை நம்பிவாழாமல் தங்களின் சம்பாத்தியத்தில் வாழக்கூடிய பாதுகாப்பான சூழலை அனைவரும் எதிர்பார்க்கின்றார்கள். சமூகத்தில் உயர்மட்ட பிரிவினருக்கு வரப்பிரசாதங்கள் உள்ளன. பணக்காரர்கள் தங்களின் சொத்துகளில் ஒரு பகுதியை எதிர்காலத்துக்காக சேமித்துக் கொள்கிறார்கள்.

ஆனால் மிகவும் குறைந்தளவு வருமானத்தைப் பெறுபவர்கள் முகம்கொடுக்கும் நிலைமை என்ன? சில நாடுகளில் அரசாங்கம் பொதுமக்கள் நிவாரண யோசனை திட்டங்களை அறிமுகம் செய்துள்ளது. இலங்கையில் வசதியற்ற முதியோருக்கு மாதாந்த கொடுப்பனவுகளை வழங்கும் திட்டமுள்ளது. வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து இந்தப் பணம் செலுத்தப்படுவதோடு, பல வழிகளிலும் அறவிடப்படும் வரிகளில் ஒரு பகுதியும் பொதுமக்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது என்பதை குறிப்பிட்டாக வேண்டும்.

அரசாங்க வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் பணத்தை ஒதுக்குவதற்குப் பதிலாக முதியோர் சமூகநலத் திட்டத்துக்காக வேறான நிதியம் ஒன்றை ஆரம்பிப்பது குறித்து கவனம் செலுத்துவது வேறுபட்ட பிரிவாகும். குறைந்த வருமானம் பெறுபவர்களை அறிந்து கொண்டு அவர்களின் பங்களிப்புடனான மூலோபாயத்தை இந்தியா பின்பற்றுகிறது. 'அடல் ஓய்வூதியத் திட்டம்' என அதனைக் குறிப்பிடுகின்றார்கள். 2015_16 வரவுசெலவுத் திட்ட யோசனைக்கு 18 வயதிற்கு மேற்பட்ட, நிரந்தர வருமானம் இல்லாத எந்த ஒரு இந்தியப் பிரஜையும் தங்களுக்கு அண்மையில் உள்ள வங்கிக்குச் சென்று தங்களுக்கான ஓய்வூதியம் பெறும் திட்டத்திற்குள் நுழையலாம்.

இந்திய அரசாங்கம் குறைந்த வருமானம் உடையவர்களுக்காக மாத்திரம் செயற்படுத்தும் இந்த அடல் பென்ஷன் முறையின் கீழ் பல மட்டங்களில் வருமானத்தை பெற்றுக்கொள்ள முடிவதோடு, அங்கத்தவர் பங்களிப்புச் செய்யும் பணத்துக்கு ஏற்ப இறுதியில் கிடைக்கும் ஓய்வூதியம் தீர்மானிக்கப்படுகிறது. மாதாந்தம் குறைந்தபட்சம் 42 ரூபா செலுத்த வேண்டும். நிரந்தர வருமானம் இல்லாதவர்களுக்கு கையில் கிடைக்கும் பணத்துக்கு ஏற்ப ஆறு மாதத்திற்கு அல்லது ஒரு வருடத்துக்குரிய பங்களிப்பை ஒரே தடவையில் செலுத்த முடியும்.

20 வருட காலத்திற்கு தொடர்ந்து செலுத்த வேண்டி நேரிடும். இடையில் விலகும் சந்தர்ப்பமும் உள்ளது. பங்களிப்புக்கான பணத்தை பெற்றுக் கொண்டு அதிலிருந்து விலகுவது அந்நபரின் உரிமையாகும். வருடத்துக்கு செலுத்தும் பணத்திற்கு அரசாங்கம் நூற்றுக்கு 50% ஐ வழங்குகிறது. 40 வருடங்கள் பூர்த்தியானதன் பின்னர் 20 வருடங்கள் தொடர்ந்து மாதாந்த ஓய்வூதியம் கிடைக்கும். ஓய்வூதிய உரிமையாளர் திடீர் மரணம் அடைந்தால் அதன் பின்னர் அவரில் தங்கி இருப்பவர்களால் குறிப்பிட்ட காலம் நிறைவடையும் வரை கொடுப்பனவைக் கோர முடியும். தொழில் இல்லாத, நிரந்தர வருமானம் இல்லாத பிரஜைகள் எதிர்காலத்தில் ஏற்படும் சிரமங்களில் இருந்து விடுபடுவதற்கு இது சிறந்த முதலீடாகும். தற்போது அனுமதிக்கப்படும் முறையின் கீழ் இந்திய ரூபா ஆயிரத்தில் இருந்து 50 ஆயிரம் வரை மாதாந்த வருமானத்தை பெற்றுக்கொள்ள கூடிய வகையில் முதலீடுகள் திட்டமிடப்பட்டுள்ளன.

இன்னொருவரில் தங்கியிருக்காது தங்களுடைய ஓய்வுகாலத்தை கழிப்பதற்கு திட்டமிடும் அனைத்து இந்தியர்களும் இந்த முறைக்கு பங்களிப்பை அளித்து வருகின்றார்கள். 362 இலட்சம் இந்தியர்கள் கடந்த வருடம் முடிவில் இந்தத் திட்டத்தில் இணைந்துள்ளதாக அந்நாட்டின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்தியா தேசிய ஓய்வூதிய நிதியம் ஒன்றை நடத்தி வருவதோடு இந்த குறைந்த வருமானமுடைய ஓய்வூதியம் அதில் உள்ளடக்கப்படாதவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளமையை இதன் விசேட தன்மையாக கருத முடியும். அரச சேவையில், திணைக்களங்கள் மற்றும் பிராந்திய அரசாங்கங்களில் பணிபுரியும் 15.7 மில்லியன் நபர்களுக்காக தேசிய ஓய்வூதியம் செயல்படுத்தப்படுவதோடு, அதில் பெண்களின் பிரதிநிதித்துவம் நூற்றுக்கு 42 வீதத்தை கடந்துள்ளது.

ஏழை மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள இந்தத் திட்டத்தை விமர்சிப்பவர்கள் குறிப்பிடும் விடயத்தையும் இங்கு கருத்தில் கொள்ள வேண்டும். 20 வருடங்கள் அங்கத்தவர் சேமிப்பின் பின் கிடைக்கும் பணம் எதிர்காலத்தில் பெறுமதியற்றதாக காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஆனால் ஏழை மக்களின் கருத்து மாறுபட்டதாக உள்ளது தங்களிடம் பணம் இல்லாத காலத்தில் கையில் கிடைக்கும் கொடுப்பனவு மிகவும் பிரயோசனமானது எனவும் துயரமான வாழ்க்கையை நடத்துவதை விட நிம்மதியானது எனவும் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

இலங்கையின் மக்கள் தொகை அறிக்கையை ஆராயுமிடத்து இவ்வாறான நன்மை பயக்கும் நிலைமைகள் இல்லை. மக்கள் தொகை பிரிவுக்கு அமைய தொழிலாளர்கள் குறைவாக உள்ளதாக ஆய்வறிக்கைகள் குறிப்பிடுகின்றன. சிறுவர்களையும் மற்றும் முதியோர்களையும் இளைஞர்கள் பாதுகாக்க வேண்டியுள்ளது. இளைஞர்கள் தற்போது வேலை செய்யும் திறனையும் கடந்து சிரமத்துடன் வருமானத்தை பெறுவதற்கு எதிர்காலத்தில் உழைக்க நேரிடும். தற்போது வருமானமற்ற ஏழை முதியோர்களுக்கான உதவிகள் வழங்கும் முறைகள் ஒழுங்கமைக்கப்படவில்லை. வரி வருமானத்தில் ஒரு பகுதி முதியோர் கொடுப்பனவுக்காக ஒதுக்கப்படுகின்றது. முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் பின்னணியில் வருடம்தோறும் வரவு செலவுத் திட்டத்தில் முதியோர்களுக்கான கொடுப்பனவுக்காக ஒதுக்கப்படும் தொகை அதிகரிக்கும். சமூக ஆய்வாளர்கள் பொருளாதார நிபுணர்கள் இணைந்து எதிர்காலத்தில் ஏற்படும் பிரச்சினைக்கு முன்னதாகவே தீர்வினை காண்பது சிறப்பாகும்.

முதியோர்களுக்கு வழங்கப்படும் கொடுப்பவுகள் மாத்திரமல்ல அரசு ஓய்வூதியத்தைக் கூட புதிதாக கட்டமைக்க வேண்டியுள்ளது. அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்திற்காக தேசிய வருமானத்தில் நூற்றுக்கு எண்பது வீதம் வரை செலவிட வேண்டியுள்ளது. தேசிய வருமானத்தில் எஞ்சும் நூற்றுக்கு 20 வீதமானது கடன் வழங்குதல், அரச நிறுவனங்களை பராமரித்தல் மற்றும் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து உள்ளிட்ட சேவைகளுக்கு போதுமானதல்ல. இந்தியா மற்றும் உலகின் ஏனைய நாடுகளுடன் இணைந்ததாக ஓய்வூதிய நிதியத்தை வேறாக உருவாக்க வேண்டியதோடு, அதனை வலுவான முதலீட்டு முறைகளுடன் செயற்படுத்துவது நல்ல நன்மையை பெற்றுத் தரும்.

பழைய காலாவதியான மாதிரிகள் தொடர்ந்தும் பொருந்தாது. உலகில் ஏற்படும் மாற்றங்களில் இருந்து அனுபவங்களை பெற்றுக் கொள்ள வேண்டும். இளைஞர் சமூகத்தின் எண்ணங்களை அறிந்து கொள்ள வேண்டியதோடு, அவர்களுக்கு முதியோர்கள் சுமையாக இருப்பதை தவிர்க்க வேண்டியது எமது பொறுப்பாகும். இலங்கை சமூக கலாசார தொடர்புகளுக்கு அமைய பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகளை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு முக்கிய இடத்தை பெற்றுள்ளது.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்**

இந்திய கல்வி கண்காட்சி கொழும்பில் நேற்று ஆரம்பம்

இந்தியாவில் கல்வி கற்போம் கண்காட்சி 'Study in India Expo' நேற்று கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இக் கண்காட்சி இரு நாட்கள் நடைபெறவுள்ளன.கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிகழ்வில் இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பால்கே,சன்நீப் கோயால் Study in India பொது முகாமையாளர் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

NAAC அங்கீகாரம் பெற்ற மற்றும் NIRF மற்றும் QS ஆல் தரவரிசைப் படுத்தப்பட்ட 30 க்கும் மேற்பட்ட முன்னணி பல்கலைக்கழகங்கள், IIT போன்ற சில அரசு நிறுவனங்கள் உட்பட, இக்கண்காட்சியில் பங்கேற்றுள்ளன. இந்தியாவில் கற்பது இலங்கை மாணவர்களுக்கு இந்தியாவில் உள்ள புதிய கால கற்கைகளை ஆராய்வதற்கான இணையற்ற வாய்ப்பை நிச்சயமாக வழங்கும். துணைவேந்தர்கள், மூத்த கல்வியாளர்கள் மற்றும் சர்வதேச சேர்க்கை இயக்குநர்களுடன் நேருக்கு நேர் உரையாடுவது கண்காட்சிக்கு வருபவர்களுக்கு நன்மையாகும்.

உலக அங்கீகாரம் பெற்ற பட்டம், உயர் கல்வி, சிறந்த பீடங்கள், அருகாமை, சர்வதேச கலாசார வளாக வாழ்க்கை, பாதுகாப்பான, நட்பு மற்றும் வெளிநாட்டு மாணவர்களை வரவேற்கும் சூழல் ஆகியவற்றில் இந்தியா முன்னிலை கொண்டுள்ளது. இவை அனைத்தும் நம்பமுடியாத அளவிற்கு குறைந்த கட்டணத்தில கிடைக்கின்றன.

பாகிஸ்தானில் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபை, கொழும்பு மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் மற்றும் கண்டி மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனம் ஆகியன இணைந்து சேகரித்த ஒரு கோடி 6 இலட்சத்து 29 ஆயிரத்துக்கு மேற்பட்ட நிதியை வழங்கும் நிகழ்வு வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்தில் அமைச்சர் அலி சப்ரி தலைமையில் இடம்பெற்றது. இதன் போது பாகிஸ்தான் உயர் ஸ்தானிகர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்க்கி, அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா சபைத் தலைவர் முப்தி எம்.ஐ.எம். ரிஸ்வி, இலங்கைக்கான பாகிஸ்தான் நாட்டு வதிவிடப் பிரதிநிதி கவுன்சிலர் அப்சல் மரைக்கார் மற்றும் பல பிரமுகர்கள் கலந்து கொண்டனர். படம்: இக்பால் அலி

உள்ளூராட்சி தேர்தல் தினம் குறித்து ஆராய

தேர்தல்கள் ஆணைக்குழு செவ்வாயன்று கூடுகிறது

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் தினம் குறித்து தீர்மானிப்பதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மீண்டும் கூடவுள்ளது.

அன்றைய தினம் ஆணைக்குழுவுக்கு வருகை தருமாறு நிதியமைச்சின் செயலாளர், அரச அச்சக மாஅதிபர், பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்ட தரப்பினருக்கு அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

இது தொடர்பில், இன்றைய தினம் அவர்களுக்கு கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்படும் தினம் தொடர்பில் அடுத்த வாரம் மீண்டும் கூடி தீர்மானிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டத்தில் இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான நிதி, வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் மற்றும் தேர்தல் நடத்தப்படும் தினம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் இதன்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

எனினும் நேற்றைய தினம் இறுதி தீர்மானம் மேற்கொள்ளப்படாத நிலையில், அடுத்த வாரம் மீண்டும் கூடி தீர்மானம் எட்டப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, நிதியமைச்சு உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் கலந்தாலோசனை செய்து எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன்னர் குறித்த தீர்மானம் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெருக்கடி மிக்க காலத்தில் இந்திய உதவி மகத்தானது

அமைச்சர் அலி சப்ரி மீண்டும் நன்றி தெரிவிப்பு

இலங்கை பொருளாதார நெருக்கடியில் தவித்தபோது இந்தியா உதவியதற்கு இலங்கை வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி மீண்டும் நன்றி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இடம்பெறும் ரைசினா உரையாடலின் எட்டாவது பதிப்பில் கலந்து கொண்ட இலங்கை வெளிவிவகார அமைச்சர், இலங்கையின் மீட்பு மற்றும் நிலைப்படுத்துதலின் மிகப் பெரிய பங்காளியாக இந்தியா உள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, இலங்கைக்கு செய்த உதவிகளை ஏனைய எல்லா நாடுகளும் ஒன்றிணைந்துகூட செய்யவில்லை என தாம் நினைப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இந்தியா 3.9 பில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள கடன் வரியை இலங்கைக்கு வழங்கியது.

எனவே இலங்கை, இந்தியாவிற்கு மிகவும் நன்றியுள்ள நாடாக இருக்கின்றது என சப்ரி தெரிவித்துள்ளார்.

இதன்போது நாடு இந்த மாத இறுதிக்குள் சர்வதேச நாணய நிதிய உதவித் திட்டத்தை எதிர்பார்க்கின்றது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி செயலகத்தின் மலையக...

அபிவிருத்தி தொடர்பாகவும் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் நடைமுறை பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண்பதற்காகவும், தொழிற்சங்க ரீதியாக பெருந்தோட்ட தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் இந்நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வட்டி வீதங்களை உயர்த்திய...

மற்றும் நிலையான கடன் வசதி விகிதம் என்பனவற்றை முறையே 15.50 மற்றும் 16.50 வீதமாக உயர்த்தியுள்ளது.

இந்த நிலையில் நாடு, சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் நிதியுதவியை விரைவில் எதிர்பார்ப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தியாவசிய பொருட்களின்...

பெற்றுக்கொள்வதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள இருதரப்பு மற்றும் பல்தரப்பு பேச்சுவார்த்தைகள் சாதகமாக உள்ளதாகவும் இந்தியா,சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்பை முழுமையாக வரவேற்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தினால் பொருளாதார பாதிப்பு தீவிரமடையுமே தவிர குறைவடையாது எனவும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதால் அரச கட்டமைப்பில் எவ்வித மாற்றமும் ஏற்படாது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

IMF தலைவருடன்...

உருவாக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் சீனப் பிரதமருடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜனாதிபதியுடன் இந்தக் கலந்துரையாடலை நடாத்தியுள்ளமை ஒரு மிக விசேடமான நிலைமையாகும்.

அதேபோன்று, கடனில் சிக்கியுள்ள நாடுகளுக்கு அர்த்தமுள்ள வகையில் பங்களிப்பதற்காக, பலதரப்பு முயற்சிகளில் பங்கேற்க சீனா தயாராக உள்ளதாக சீனப் பிரதமர் லீ க சியாங் சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளரிடம் தெரிவித்துள்ளதாக அண்மையில், "ப்ளூம்பேர்க்" செய்திச் சேவை, செய்தி வெளியிட்டிருந்தது. இலங்கை, பாகிஸ்தான் போன்று, கடனில் சிக்கியுள்ள நாடுகளுக்கு ஒன்றிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான பணிகளை மேற்கொள்வதாக அதன் போது மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்...

முன்னிட்டு மாத்தளை இந்து கலாசார பேரவையின் ஏற்பாட்டில் 40 வது வருடமாக இடம்பெறவுள்ள பறவை காவடி இன்று நடைபெறும். பறவை காவடி ஊர்வலம் காலை 7.30 மணிக்கு கழுதாவல அருள்மிகு ஸ்ரீ ஏழு முக்காளி அம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டு மாத்தளை பிரதான வீதியினூடாக சென்று மீண்டும் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தை சென்றடையும்.பறவை காவடி, வேப்பிலை கரக தீச்சட்டி ஏந்தி நூற்றுக்கணக்கான அடியார்கள் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெறுவதோடு காலை 11 மணியளவில் தீமிதிப்பு வைபவமும் இடம்பெறும்.

இழுவை வலை தொழிலுக்கு...

பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கச்சதீவில் இடம்பெற்ற நல்லெண்ண கலந்துரையாடலின் ஒருங்கிணைப்பாளராக கலந்து கொண்டதன் பின்னர் அங்கு இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன் இரண்டு தரப்பு கடற்தொழிலாளர்களின் கருத்துக்களை அமைச்சரவையில் பிரஸ்தாபிக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை சேர்ந்த கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டிருந்தனர்.

அதேபோன்று, காரைக்கால், நாகப்பட்டினம், புதுகோட்டை போன்ற பிரதேச கடற்றொழிலாளர் பிரதிநிதிகளும் இச்சந்திப்பில் கலந்து கொண்டு தங்களின் எதிர்பார்ப்புக்களையும் ஆதங்கத்தினையும் வெளிப்படுத்தினர்.

இச்சந்திப்பின்போது, பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில கடற்றொழிலாளர்களுக்கான தலைவர் எம். சி. முணுச்சாமி, பாரதிய ஜனதா கட்சியின் நாகபட்டினம் மாவட்ட தலைவர் அருணாசலம், திராவிட முன்னேற்ற கட்சியின் நாகபட்டினம் மாவட்ட பதில் தலைவர் ஜி. மனோகரன் ஆகியோரும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை தெரிவித்ததுடன், இலங்கையின் வட பகுதி கடற்றொழிலாளர்களின் ஆதங்கங்களை புரிந்து கொள்வதாகவும், சட்ட விரோத தொழில் முறைகளை கட்டுப்படுத்துவதற்கு முடிந்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்தனர்.

குரோதங்களை புறந்தள்ளி...

செயலாளர் நாயகம் கடந்த வாரம் இலங்கை வந்திருந்த போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர் வே. ராதாகிருஷ்ணன் உட்பட பல அரசியல் பிரமுகர்களையும், மதத் தலைவர்களையும் சந்தித்து இவ்விடயம் தொடர்பில் கலந்துரையாடினார். இச்சந்திப்புகளில் சர்வதேச இந்து மத குருப்பீடாதிபதி சிவஸ்ரீ பாபு சர்மா ராமச்சந்திர குருகளும் கலந்து கொண்டார்.

இந்த வருட இறுதியில் இலங்கையில் மாபெரும் இன நல்லிணக்க மற்றும் ஒற்றுமை மாநாடு ஒன்றினை அனைத்து இன, மத தலைவர்களையும் ஒன்றிணைத்து மிக பிரமாண்டமாக நடத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது. கடந்த காலங்களில் இனங்களுக்கு இடையே ஏற்பட்ட மனக்கசப்புகள் மற்றும் யுத்தம் காரணமாக இடம் பெற்ற மனக் குரோதங்கள் அனைத்தையும் புறந்தள்ளி இல்லாதொழித்து எதிர்கால சமூக முன்னேற்றம் கருதி ஒற்றுமையாக செயல்பட அனைத்து சமூகத் தினரையும் ஒரு குடையின் கீழ் கொண்டு வருவது தற்போதைய தமது இலக்காக உள்ளது என உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பொதுச் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் அங்கு தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளில் உள்ள பெரும்பாலான புலம்பெயர் தமிழ் அமைப்புகள், இலங்கையில் மீண்டும் தமிழ், சிங்கள மக்கள் நல்லுறவுடன் முன்னர் போன்று வாழவேண்டும் என்பதையே விரும்புகிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

அடுத்த வருடம் தனது பொன் விழாவை கொண்டாடவுள்ள உலகத் தமிழ் பண்பாட்டடு இயக்கம் அதன் முன்னோடி நிகழ்வாக இந்த வருட இறுதியில் இந்த மாபெரும் இன நல்லுறவு மாநாட்டினை நடத்த திட்டமிட்டுள்ளது. யுத்தம் காரணமாக பிளவு பட்டுள்ள தமிழ், சிங்கள சமூகங்களை தொடர்ந்து அந்நிலையில் வைத்திருக்காது அவர்களை மீளவும் ஒன்றிணைப்பதே தமது நோக்கம் எனவும் துரை கணேசலிங்கம் தெரிவித்தார்.

எங்கள் கருத்து

ஜனநாயகத்தை கேலிக்கூத்தாக மாற்றுவதற்கு இடமளிக்கலாகாது!

தாங்கள் விரும்பியவர்களை ஆட்சிபீடமேற்றவும், விருப்பமற்றோரை நிராகரிக்கவும் மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் விரும்பியவர்களை பலாத்கார வழிமுறையில் ஆட்சிபீடமேற்றவோ, விரும்பாதவர்களை பலாத்காரத்தின் மூலம் ஆட்சியிலிருந்து அகற்றவோ எவருக்குமே உரிமை கிடையாது. அவ்வாறு செயற்பட முற்படுவது பெருங்குற்றமாகவே கருதப்படும்.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களை ஜனநாயக விதிமுறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இந்த ஆர்ப்பாட்டக்காரர்களின் வலியுறுத்தல்களும், செயற்பாடுகளும் ஜனநாயக வரம்புகளுக்கு உட்பட்டதாகத் தெரியவில்லை.

மிகவும் அதிகாரம் குறைந்த நிர்வாக கட்டமைப்பான உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலை நடத்துமாறு எதிரணியினால் முன்னெடுக்கப்படுகின்ற ஆர்ப்பாட்டங்களில் வன்முறைகளும் நிறைந்திருக்கின்றன. அதேசமயம் அரசாங்கம் பதவி விலக வேண்டுமென்றும் அவர்கள் கோஷமிடுகின்றார்கள். ஆக்ரோஷமும், பலவந்தமும் அப்போராட்டங்களில் தென்படுகின்றன. பொதுச்சொத்துகளும் சேதமடைகின்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் நடந்து கொள்கின்ற விதம் ஜனநாயகப் பாரம்பரியங்களுக்கு உட்பட்டதாகத் தெரியவில்லை. ஜனநாயக ரீதியில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமொன்றுக்கு வன்முறைரீதியில் மிரட்டல் விடுக்கும் பாணியிலேயே அவர்களது ஆக்ரோஷப் பேச்சுக்கள் அமைந்துள்ளன.

ஆட்சியை மாற்றுவதோ அல்லது எந்தவொரு தேர்தலையும் நடத்துவதோ பலவந்தமான முறையில் சாத்தியமாகக் கூடியதொன்றல்ல என்பதை முதலில் புரிந்து கொள்ள வேண்டும். இவையெல்லாம் ஜனநாயக விதிமுறைகளுக்கு உட்பட்ட விதத்திலேயே மேற்கொள்ளப்பட வேண்டியவையாகும்.

மக்களை ஒன்றுதிரட்டி ஆட்சியாளர்களுக்கு மிரட்டல் விடுக்கும்படியாக எதிரணி செயற்படுமானால், ஜனநாயகம் என்பதே கேலிக்கூத்தாகி விடலாம். அராஜக பாணியில் ஆட்சியைத் தீர்மானிக்கும் போக்கு கொண்ட சில நாடுகளில் இன்று இடம்பெறுகின்ற அவலங்களை மக்கள் ஒருதடவை நினைத்துப் பார்ப்பது இவ்விடத்தில் அவசியம்.

தவக்கால சிந்தனை

கிறிஸ்துவின் குரலுக்கு செவிசாய்ப்போம்

மத்தேயு 17: 1 – 9

தவக்காலத்தின் இரண்டாம் வாரப் பயணமானது இயேசுவின் தோற்றமாற்ற நற்செய்திப் பகுதியுடன் விரிகின்றது.

இயேசு தமக்கு நெருக்கமான மூன்று திருத்தூதர்களாகிய பேதுரு, யாக்கோபு, யோவான், ஆகியோரை அழைத்துக்கொண்டு ஓர் உயர்ந்த மலைக்கு ஏறிச்செல்கிறார். அங்கே அவர் அவர்கள் முன்பாக தோற்றம் மாறி காட்சியளித்தார்.

அக்காட்சியில் இயேசு கூடவே திருச்சட்டத்தையும், இறைவாக்குகளையும் பிரதிபலிக்கும் வண்ணம் மோசேயும், எலியாவும் கூடவே இருந்தனர். இங்கே இயேசுவின் மாட்சிமையை கண்ணுற்ற பேதுரு அங்கேயே இருக்க விரும்புவதுடன் அவர்களுக்கு கூடாரங்கள் அமைப்பதற்கும் தயாராகின்றார்.

ஆயினும் இயேசு தாம் அடைய வேண்டிய மாட்சிமை இதுவென்றால் அம்மாட்சிமை பாடுகள், மரணத்தின் வாயிலாகவே வந்தடையும் என்கிற உன்னத சிலுவை இறையியலை அவர்களுக்கு எடுத்தியம்புகின்றார்.

அக்காட்சியின்போது வானத்திலிருந்து ஒலித்த குரலானது: "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன். இவருக்கு செவிசாயுங்கள்"என்று கூறியது.

கிறிஸ்தவ நம்பிக்கையாளர்கள் தங்களது கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தினை கிறிஸ்துவுக்கு ஏற்புடையதாக மாற்றிக்கொள்ள வேண்டுமாயின் அவரது குரலுக்கு செவிசாய்க்க வேண்டும். இதனையே திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களும் தமது தவக்காலச் செய்தியில் இயேசுவின் குரலுக்கு செவிமடுங்கள் என்று அழைப்பு விடுக்கின்றார்.

இன்று உலக வாழ்வில் அற்றுப் போகின்ற மனித விழுமியங்களுள் ஒன்று 'செவிமடுத்தல்'ஆகும். வீடுகளில் பெற்றோரின் குரலை உதறித்தள்ளுகின்ற பிள்ளைகள். கணவனின் குரலை, மனைவியின் குரலை கேட்க மறுக்கின்ற கணவன் மனைவி. வயதுமுதிர்ந்த பெற்றோரின் குரலைக் கேட்க மறுக்கின்ற பிள்ளைகள். இவ்வாறான இந்நிலை தொடர்ந்த வண்ணமேயுள்ளது. இந்நிலை மாற வேண்டுமாயின் வெவ்வேறு வடிவங்களில் வெளிவருகின்ற கடவுளின் குரலுக்கு நம்பிக்கையாளர்கள் செவிமடுக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

இறைவனின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டுமாயின் திறந்த மனநிலையில் தவக்காலத்தை எதிர்கொள்ளக் கற்றுக்கொள்வோம்.

அருட்தந்தை நவாஜி...

வன விலங்குகளை பார்வையிட சிறந்த இடமாக இலங்கை

'Forbes' சஞ்சிகை தரப்படுத்தலில் சிறந்த இடம்

ஆபிரிக்காவிற்கு வெளியில் வன விலங்குகளை பார்வையிட சிறந்த இடமாக இலங்கையை Forbes சஞ்சிகை தரப்படுத்தியுள்ளது.

உலக நாடுகளில் சிறுத்தைகளின் அடர்த்தியான பரம்பலைக் கொண்ட இடமாகவும் ஆபிரிக்காவின் பெரும்பாலான பகுதிகளை விடவும் மிகச்சிறந்த பூனை இனங்களைக் கொண்ட இடமாகவும் இலங்கை அமைந்துள்ளதாக Forbes குறிப்பிட்டுள்ளது.

ஆசிய யானைகள், மயில்கள், நீர் எருமைகள், குரங்குகள் மற்றும் தேன் உண்ணி கரடிகளை அதிகம் கொண்ட தேசமாகவும் இலங்கை அமைந்துள்ளதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Cape Codஇல் இருந்து டொமினிக்கன் குடியரசு வரை திமிங்கலங்களை பார்க்கக்கூடியதாக இருந்தாலும், இலங்கையில் மாத்திரமே எளிதில் நீலத் திமிங்கலங்களை காண முடியும் எனவும் Forbes தெளிவுபடுத்தியுள்ளது. இவ்வாண்டின் ஆரம்பம் முதலே இலங்கை தனது தனித்துவமான சுற்றுலா சலுகைகள் மற்றும் இயற்கை அழகு காரணமாக தொடர்ந்து பலரதும் கவனத்தை ஈர்த்து வருகிறது.

முன்னதாக, Big 7 Travel சமூக ஊடகத் தரவுகளின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டில் இன்ஸ்டாகிராம் பதிவுகளை செய்யக்கூடிய 50 இடங்களின் பட்டியலில் இலங்கை ஒன்பதாவது இடத்தில் இருந்தது.

அத்துடன், Travel Triangle வெளியிட்ட, 2023 ஆம் ஆண்டில் உலகில் பயணம் செய்ய சிறந்த நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடத்தைப் பிடித்தது.

இலங்கையில் தயாரிக்கப்பட்ட...

இலக்கத்தகடுகளை போக்குவரத்து மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரணவும் வழங்கி வைத்தனர். அதன் போது வேகா இனோவேஷன் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி கலாநிதி ஹர்ஷ சுபசிங்கவிடம் அந்த காருக்கான இலக்கத்தகடு கையளிக்கப்பட்டது. இந் நிகழ்வில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த உள்ளிட்ட வர்களும் காணப்படுகின்றனர்.

இலங்கைக்கு 150 கோடி டொலரை...

ரத்னநாயக்க மற்றும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கிடையில் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றுள்ள பேச்சுவார்த்தையின் போதே மேற்படி இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்திற்கு பொறுப்பாக உள்ள உப தலைவர் மார்டின் ரேயர் உள்ளிட்ட பிரதிநிதிகள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். அதனையடுத்து அவர்கள் சாகல ரத்நாயக்கவுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே மேற்படி இணக்கப்பாடு காணப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த வகையில் சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதி கிடைத்தவுடன் எதிர்வரும் இரண்டு வருடங்களுக்காக இந்த நிதியை ஒதுக்கவுள்ளதாகவும் முதற்கட்டமாகவே இதனை பெற்றுக் கொடுக்க உள்ளதாகவும் உலக வங்கியின் பிரதிநிதிகள் இதன் போது உறுதியளித்துள்ளனர்.

EPF உள்ளிட்ட கொடுப்பனவுகளை...

அவ்வாறு ஊழியர்களுக்கு கொடுப்பனவை வழங்க வேண்டிய நிறுவனங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய நிதி 8 பில்லியனாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதில் ஊழியர் சேமலாப நிதியாக வழங்க வேண்டிய பணம் 5 பில்லியன் ரூபாவாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் கடந்த வருடத்தில் ஊழியர் சேமலாப நிதி வழங்காத 1690 வழக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் அதன் மூலம் 575 மில்லியன் ரூபா அறவிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, நிறுவனம் ஒன்று ஊழியர்களின் ஊழியர் சேமலாப நிதியை ஆறு மாதங்களுக்கு மேல் வழங்கத் தவறியிருந்தால் வழங்க வேண்டிய நிதியை விட மேலும் 50 வீதத்தை அறவிட நேரும். என்றும் தொழில் ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய...

திருவிழா ஆரம்பமாகியதுடன் மாலை சிலுவைப்பாதையும் இடம்பெற்றது. அத்துடன் நேற்று சனிக்கிழமை 04ஆம் திகதி காலை சிறப்பு திருப்பலி பூஜைகளுடன் ஆராதணைகள் ஒப்புக் கொடுக்கப்பட்டது . அத்துடன் கொடி இறக்கமும் இடம்பெற்றது. கடற்படையின் அதிவேக படகுகள் மூலம் காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் என்டன் ரஞ்சித் பிள்ளைநாயகம், யாழ். மறைமாவட்ட ஆயர் ஜஸ்டின் ஞானப்பிரகாசம் சார்பாக யாழ். மறைக்கப்பட்ட குரு முதல்வர் அருட் தந்தை ஜெபரடனம் அடிகளார் உட்பட விஷேட பிரமுகர்கள் அழைத்துவரப்பட்டனர். முக்கிய பிரமுகர்களின் வருகையைத் தொடர்ந்து திருப்பலி பூஜை இடம்பெற்றது.

இலங்கை சார்பில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் என்டன் ரஞ்சித் பிள்ளைநாயகம் தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட் தந்தை ப. யோ. ஜெபரடனம் அடிகளார் உள்ளிட்ட இலங்கை இந்திய அருட்தந்தைகள் ஒப்புக் கொடுத்தனர்.

திராவிடரின் தலைவிதியில் வங்கக்கடலும் வடகடலும்...!

பாக்கு நீர் பரப்பு இந்திய, இலங்கை அரசியலில் பிரித்துப் பார்க்க முடியாத ஒரு வரலாறு. இவ்விரு நாடுகளின் நட்புக்கு வரலாற்றுக் காரணங்களும் இந்த நீரிணையுடன்தான் நீடிக்கிறது. நட்புக்கு இந்நீரிணை பிரதானம் வகிப்பது போலவே முரண்பாட்டுக்கும் முக்கியத்துவம் வகிக்கிறது. இலங்கையின் உள்நாட்டுப் போரில் ஆயுத அமைப்புக்களுக்கு இதனூடான போக்குவரத்தே பலம் சேர்த்தது. ஆயுதம், நிதி, அனுதாபம் மற்றும் அனுசரணைகளை எல்லாம் இந்த அமைப்புக்கள் அள்ளிக்கொண்டதும் இந்த நீரிணைப் பாதையூடாகத்தான். அரை மணி நேரப்பயணத்தில் ஈழத் தமிழர்கள் தொப்புள்கொடி உறவின் தொட்டிலடிக்கே சென்றுவிடுவர். திராவிடரின் இந்த அரை மணிநேரப் பயணம்தான் இலங்கையின் ஆரிய இனத்துக்கு ஆபத்தென வரப்போகும் அத்தனை ஆட்சியாளர்களுக்கும் ஜே.ஆர்.ஜெயவர்தன எச்சரித்தார். இந்த எச்சரிப்பின் எச்சங்கள் தென்னிலங்கையில் இன்னுமுள்ளன.

ஆனால், திரவியம் தேடுவதில் திராவிடத் தொப்புள்கொடி உறவுகள் உடையும் நிலைக்கு வந்துள்ளதுதான் கவலை. ஏனெனில், வயிற்றுப் பிரச்சினை திராவிடரின் தேசியத்தைப் பலமிழக்கச் செய்யும் நிலைக்கு வந்துவிடுமே! இவ்வாறு வரவிடாமல் பாதுகாப்பதில் தமிழக அரசியல்தான் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், அத்துமீறும் தமிழக படகுகளில் அதிகமானவை அரசியல்வாதிகளுடையதாக இருப்பதால்தான். வயிற்றுப் பிழைப்புக்களுக்காக இப்படகுகள் வருவதாகவும் இல்லை. இந்தியாவின் உள்ளூர்ச் சந்தைகள் பலவற்றைக் கையகப்படுத்தும் மிகப்பெரிய வியாபாரம் இதிலிருக்கிறது. மும்பை, டில்லி, லக்னோ, கோவா, கொல்கத்தா மற்றும் குஜராத் சந்தைகளில் கொட்டி விற்குமளவு இந்த அரசியல் பிரபலங்களுக்கு மீன்கள் தேவைப்படுகின்றன.

மேற்சொன்ன வட இந்திய நகரங்களிலுள்ள மீனவர்களால் இவ்வளவு தொகையான மீன்களைப் பிடிக்க முடியாது. பாகிஸ்தான் போன்ற அயல் நாடுகளின் கடல் எல்லைகளுக்குள் செல்வதிலுள்ள பாதுகாப்பு எச்சரிக்கைகளும் இதிலுள்ள காரணங்களில் ஒன்று. தமிழக மீனவர்களுக்கும் இதில் சிரமங்கள் இருப்பதால்தான் இலங்கையின் வடகடலை நோக்கி வருகின்றனர். பாகிஸ்தான் படையினரிடம் மாட்டினால் வாழ்வின்

அரைவாசியை அல்லது ஆயுள் முழுவதையும் அங்கேயே கழிக்க நேரிடுமே! இலங்கையில் இந்நிலைமைகள் இல்லை. அகப்பட்ட அடுத்த கணமே அழுத்தம் வந்து விடுதலையாகலாம். இப்பலவீனங்கள்தான் தொப்புள்கொடியினரின் உட்புகலை இங்கு அதிகரிக்கிறது. இந்தியா முழுவதற்கும் தேவைப்படும் கடலுணவை வட இந்தியர்களால் தர முடியாதென்பது மத்திய அரசுக்குத் தெரியாததா?

வட இந்திய மீனவர்கள் பாகிஸ்தான் எல்லையில் கைதாவதால் ஏற்படும் உள்ளூர் கொந்தளிப்பும் பாரதூரமானது. இன்னும் முருகைக் கற்கள் மற்றும் பவளப்பாறைகள் என்பன வட இந்தியக்கடலில் அள்ளிக்கொள்ளும் அளவு வாய்ப்பாகவும் இல்லை. எனவே, தமிழக மீனவர்களிடமிருந்தே இந்தியாவுக்குத் தேவையான மீன்களைப் பெறலாமென மத்திய அரசு கருதுகிறது. இதனால்தான், இலங்கையை எச்சரிக்கிறது இந்தியா. இந்த எச்சரிப்புக்கள் தவிர்க்க முடியாதவை என்பதைப் புலப்படுத்தத்தான் பல சன்மானங்களும் வழங்கப்படுகின்றன.

மன்னாரில் காற்றாலை மின்சார உற்பத்தி, இலங்கையின் வடகடலில் இந்திய மீனவர்களுக்கு அனுமதி, பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு என பரஸ்பர பரிமாறல்கள் இடம்பெறுகின்றன. ஒன்றுமட்டும் உண்மை. தென்னிலங்கையின் அரசியலுக்கு கடிவாளமிடும் அழுத்தத்தை இந்திய தொப்புள்கொடி உறவுகளால் மட்டுமே மத்திய அரசுக்கு செலுத்த முடியும். இதைச் சிந்தையில் வைத்து திராவிடர்கள் செயற்பட வேண்டும்.

சுஜப்.எம்.காசிம்...✍

புதிய வரிக்கொள்கைகளை ஏற்கமறுக்கும் மக்கள் !

AGS. சுவாமிநாதன் சர்மா
பட்டயக்கணக்காளர், வரி & முகாமைத்துவ ஆலோசகர்

தற்போது இலங்கை பாரிய கடன் சுமையை தாங்கி மீள முடியாத ஒரு நிலையில் இருப்பதனாலும் நாட்டில் போதிய வருமானம் இல்லாத காரணத்தினாலும், அரசாங்கம் வேறு மார்க்கமின்றி சடுதியாக "இறுக்கமான வரிக்கொள்கை" முறைமையினை அமுல்படுத்தியுள்ளது. அரசாங்கத்திற்கு வருமானம் ஈட்டிக் கொடுக்கின்ற பெரும் துறைகளான தேயிலை, தெங்கு, இறப்பர் மற்றும் இதர ஏற்றுமதி வருமானம், வெளிநாட்டிலிருந்து தொழில் செய்பவர்கள் இலங்கைக்கு அனுப்பக்கூடிய வெளிநாட்டு அந்நிய செலாவணி வருமானம், சுற்றுலாத்துறை, உள்நாட்டு உற்பத்தி போன்ற அனைத்துமே கடந்த சில வருடங்களாக பாரிய அளவில் பாதிப்படைந்துள்ளன. அரசாங்கத்திற்கு என்றுமே இல்லாத வகையில் அந்நிய செலாவணி கையிருப்பு பாரிய அளவில் குறைவடைந்து இன்று இலங்கை நாடானது வங்குரோத்து நிலைமையை அடைந்துள்ளது. அதாவது நாட்டு மக்களுக்கு தேவையான பொருட்கள் மற்றும் சேவைகளை வெளிநாட்டிலிருந்து பெற்றுக் கொள்ள தேவையான அந்நிய செலாவணி கையிருப்பு இல்லாது ஒரு இருள் யுகத்தை இலங்கை அடைந்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் (IMF) மற்றும் ஏனைய கடன் வழங்கும் நாடுகளிடம் இலங்கை அரசாங்கம் அணுகியபோதிலும் அந்த கோரிக்கைகள் பெரிதாக கவனம் எடுத்துக் கொள்ளப்படவில்லை. இந்தியா, சீனா, ஜப்பான் போன்ற நேச நாடுகள் இலங்கைக்கு பல்வகை அவசர உதவிகளைச் செய்திருந்தாலும் இலங்கையின் தேவையோ பன்மடங்காக இருக்கின்றது. சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) இலங்கை கடன் பெறுவதுதான் நீண்ட காலத்திற்கு நன்மை விளைவிக்குமென பொருளியல் வல்லுனர்களும் நிபுணர்களும் கருதுகின்றனர். இதனால் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து (IMF) தேவையான கடனை பெற்றுக் கொள்ள சிறந்த அணுகுமுறையை முன்வைத்தது. இலங்கை கடந்த காலங்களில் 17 தடவைக்கு மேலதிகமாக இந்த உதவியை பெற்றிருந்தாலும் இம்முறை பல நிபந்தனைகளை முன்வைத்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அந்த நிபந்தனைகளை ஏற்று கரிசனையுடன் திட்டமிட்டு செயல்படுத்த ஆரம்பித்ததின் ஒரு அம்சமாகத்தான் இந்த வரி அதிகரிப்பினை காணக்கூடியதாக இருக்கின்றது.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தினால் மக்களை சிறந்த முறையில் வழிநடாத்தி ஒளிமயமான நிகழ்கால வாழ்க்கையையும், அதேநேரத்தில் தரம் வாய்ந்த எதிர்காலத்தையும் உருவாக்கும் நோக்கோடு செல்வந்தர்கள் மற்றும் அதிக வருமானம் பெறுபவர்களிடம் ஒழுங்கு முறைப்படி பணத்தினை அறவிட்டு, சாதாரண மக்களுக்கு அந்த பணத்தின் மூலம் சிறந்த ஒரு சேவையை செய்வதற்கான ஒரு பொறிமுறையே வரி அறவீடாக இருந்துவந்தது.

அபிவிருத்தி அடைந்த நாடுகள் சிறந்த கொள்கைகள் வாயிலாக மக்களிடமிருந்து மிக நுட்பமாக வரியினை அறவிட்டு வருவதனை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, ஜப்பான் போன்ற நாடுகளை குறிப்பிடலாம். அந்த நாடுகளில் சிறந்த தேசிய கொள்கை இருப்பதன் வாயிலாக ஆட்சிக்கு வருகின்ற எந்தக் கட்சியாக இருந்தாலும் பாரிய முறையில் கொள்கைகளை மாற்றி அமைக்க முடியாத தன்மையை கொண்டிருப்பதனால், தொடர் தேர்ச்சியாக காலத்திற்கேற்ப சிறந்த பொறிமுறையின் வாயிலாக, தமக்கு தேவையான போதிய வரி வருமானத்தினை பெற்றுக் கொள்ளக்கூடிய தன்மையை காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இலங்கையை பொறுத்தவரையில் தேசியக் கொள்கை இல்லாத காரணத்தினால் காலத்திற்குக் காலம் இலங்கையின் கொள்கைகளில் பாரியளவு மாற்றங்களை ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் தமக்கேற்ற விதத்தில் மாற்றி அமைக்கப் பழகிவிட்டனர். நிலையான தேசிய கொள்கை இல்லாத காரணத்தினால் அரசாங்கத்தினால் இலங்கையில் நிலையான ஒரு வரி கொள்கையே அமைக்க முடியாதது மிகவும் ஒரு துர்பாக்கிய நிலையாகவே நான் கருதுகின்றேன். இதன் விளைவு, இலங்கை தொடர்ச்சியான பொருளாதார வளர்ச்சியினை ஈட்ட முடியாத தன்மையை கொண்டிருக்கின்றது. அதாவது ஒரு அரசாங்கம் நாட்டின் நலன் கருதி சிறந்த கொள்கைகளை கொண்டுவந்து அதனை அமுல்படுத்தும் தறுவாயில், அடுத்துவரும் அரசாங்கமானது மக்களுக்குப் பல வரிச்சலுகைகளை தருவதாகக் கூறி, நடைமுறைச் சாத்தியமற்ற பொய் வாக்குறுதிகளை அளித்து ஆட்சியை கைப்பற்றுகின்றன. இதன் வாயிலாக அரசாங்கத்தினை கொண்டு நடத்தத் தேவையான போதிய வருமானத்தினை ஈட்டிக் கொள்ள முடியாத தன்மை ஏற்பட்டு வருகின்றது. எனவே நாட்டு மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்க வேண்டிய அத்தியாவசிய சேவைகள் மற்றும் கடமைகளை செய்ய முடியாத நிலைமைக்கு இலங்கை படிப்படியாக தள்ளப்பட்டு வருவதனை காணக்கூடியதாக இருந்தது. இதனால் அரசின் மொத்த தேசிய உற்பத்தி மற்றும் மொத்த தேசிய வருமானமானது அரச செலவினத்திற்கு போதியதாக அமையாதமையை பல தசாப்தங்களாக அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதன் காரணமாக ஒவ்வொரு வருடமும் வரவு செலவு பற்றாக்குறை நிலவிவருவதை மத்திய வங்கி அறிக்கை காட்டுகின்றது. இதனை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கம் வேறுவழியின்றி பாரியளவில் உள்நாட்டிலும் வெளிநாடுகளிடமும் கடன் பெற வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டு வந்தமையை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்திருக்கிறோம்.

அரசாங்கத்தை பொறுத்தளவில், தற்போதைய வரி அதிகரிப்பின் வாயிலாகவே ஈட்டவேண்டிய வருமான இலக்கை (Revenue Target) அடையமுடியும் என்ற நிலைக்கு வந்துள்ளது. இதன் காரணமாக மக்களிடமிருந்து சகல வழிகளிலும் பலவிதமான வரிகளை அறவிட வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளும், அதன் பின் வந்த அறிக்கைகளிலும் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது.

மக்கள் தமது வருமானத்திற்கு ஏற்ற வகையில் வாழ்க்கை முறைமையை அமைத்து அதன் வழி தமது அன்றாட வாழ்க்கையினை கொண்டு நடத்துகின்ற சமயத்தில், இந்த பாரிய வரிச்சுமையானது அவர்களுடைய கையில் கிடைக்கின்ற பணத்தின் அளவை குறைக்கின்றது. இதன் காரணமாக மக்கள் தங்களுடைய அத்தியாவசிய செலவைக்கூட செய்ய முடியாத ஒரு நிலைக்கு தள்ளப்படுகின்றனர். இதனால் மனஉளைச்சல், உடல் ஆரோக்கிய குறைபாடு, குடும்பத்தைக் கொண்டு நடத்த முடியாமை, ஆரோக்கிய உணவு பெற்றுக் கொள்ள முடியாமை, தேவையான கல்வியைப் பெறமுடியாமை, அத்தியாவசிய மருந்து செலவைக் கூட சமாளிக்க முடியாத நிலை போன்றவற்றை மக்கள் எதிர்நோக்குகின்றனர். இது ஒரு "இரண்டுங்கெட்டான் நிலை" என்றே கூறவேண்டும். அதாவது அரசாங்கத்திற்கு வருமானத்தை ஈட்டிக் கொடுக்கின்ற ஒரே மார்க்கமாக வரி அதிகரிப்பும், அதே நேரம் மக்கள் அந்த வரியினை செலுத்த முடியாத நிலையிலிருப்பதும் பாரிய பிரச்சினையாக இன்று இலங்கை மக்கள் முகம் கொடுத்துவருகின்றனர்.

மக்களின் கருத்து என்னவென்றால், ஆட்சியை ஏற்கின்ற அரசாங்கத்தின் தவறு காரணமாக நாடு இந்த அதலபாதாள நிலையை அடைந்துள்ளது. அத்துடன் பாரிய ஊழல், லஞ்சம், சட்டம் பின்பற்றப்படாமை, தகுந்த திட்டமிடல் இன்மையால் தேவையற்ற அபிவிருத்தி செலவினங்களை செய்தமை, இலகு வட்டியில் கடனை பெறாது அதிக வட்டியை தாங்கும் கடனை சீனாவிடம் பெற்றமை, மேற்கொண்ட பாரிய பொருளாதார திட்டங்கள் உண்மையான செலவுத் தொகைக்கு அதிகமாக போலி கணக்குகளை தயாரித்து அதன் வாயிலாக பொதுமக்களின் வரிப்பணத்தை வீணாக்கியமை போன்ற காரணங்களை மக்கள் முன்வைக்கின்றனர். இதன் ஒரு கோரிக்கையாக தற்பொழுது நாடு எதிர்நோக்குகின்ற பிரச்சினையானது கடந்தகால ஆட்சியினரின் தவறு காரணமாக ஏற்பட்டுள்ளதாகவும், காலதாமதமின்றி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து வீண் விரயமாக செலவழித்த பணத்தினையும் உண்மையான செலவுக்கு அதிகமாக எடுக்கப்பட்ட பணத்தினையும் மீண்டும் இலங்கைக்கு கொண்டுவரச்செய்ய வேண்டுமென்று விடாப்பிடியாக மக்கள் இருக்கின்றனர். இதன்காரணமாகத்தான் அரசாங்கத்தினால் தற்பொழுது முன்வைக்கப்பட்ட வரி அதிகரிப்புத்திட்டத்தினை மக்கள் எதிர்க்கின்றனர்.

எது எவ்வாறாயினும் நாம் ஜனநாயக நாட்டில் இருப்பதனால், ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கம் முன்வைக்கின்ற வரி உள்ளடங்கலாக அனைத்து சட்டதிட்டங்களையும் மக்கள் கட்டாயமாக பின்பற்றவேண்டியது அவசியமாகின்றது. எனவே சட்டத்தை தெரிந்து அதன்படி நடக்க வேண்டுமென்பது அனைவருடைய கடமையாகும். அந்த வகையில் தனி நபருக்கான வரி சம்பந்தமான மாற்றங்களை பின்வருமாறு நாம் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒரு வருடத்திற்கான வரி நிவாரண அளவு ரூபா.3,000,000/= இலிருந்து ரூபா.1,200,000/= ஆக குறைக்கப்பட்டுள்ளது. *(Personal Reliefs reduced from Rs. 3Mn to Rs. 1.2Mn per annum)*

செலவின நிவாரணம் *(Expenditure Relief)* அதாவது மேலும் அதிகமாக மாதம் ஒரு லட்சம் அல்லது வருடம் 12 லட்சத்துக்கு செய்கின்ற ஐந்து வகையான செலவினங்களுக்கான வரிச்சலுகை அகற்றப்படுள்ளது.

தனிநபர் *(Proprietorship)* மற்றும் பங்குடமை *(Partnership)* வாயிலாக செய்கின்ற வியாபார வருமானத்திற்கு அறவிடப்பட்டு வந்த 14% மற்றும் 28% வருமானவரியானது 30% விகிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

வியாபார வருமானத்திற்கான வரிவிலக்களிப்பு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது *(Removal of Tax Exemptions)*. உதாரணமாக இரத்தினக்கல் ஏற்றுமதி *(Gem Export)*, மென்பொருள் துறை *(Software Industry)*, விவசாயம் *(Agriculture)*, மீன்பிடி *(Fishery)* போன்றன.

இதன் காரணமாக தற்பொழுது பாரிய சமூக பிரச்சினை தலை தூக்கி உள்ளது. ஒரு பக்கத்தில் வாழ்க்கைச் செலவு அதிகரித்து காணப்படுகின்றது, அதேநேரம் அந்த அதிகரித்த செலவினங்களை ஈடு செய்யக்கூடிய வருமானம் இன்மை, அவ்வாறு வருமானம் பெற்றாலும் அதற்கு பாரிய வரியை செலுத்துகின்றோம் என்ற மனக்கவலையும் மக்களை வாட்டி வருகின்றது.

தற்பொழுது மக்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் சிலவற்றை நாம் பார்ப்போம்.

கல்வி கற்ற ஒரு வர்க்கத்தினர் நாட்டை விட்டு நிரந்தரமாக செல்கின்றமை.

அண்மைய காலங்களில் வைத்தியர்கள் உட்பட ஏனைய தொழில் சார் வல்லுநர்கள் அரசாங்கத்தின் வரி விதிப்பால் நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறுவதால் எதிர்காலத்தில் பாரிய சிக்கல் உருவாகும்.

மக்களின் சேமிப்பு பாரிய அளவில் குறைந்து போகின்றமை.

வாழ்க்கைக்கு தேவையான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலைமை.

நலிந்த எதிர்கால சமூகம் உருவாகப்போகின்றது.

லஞ்சம் மற்றும் ஊழல் போன்ற ஏனைய பிரச்சினைகள் அதிகரிக்கக் கூடிய வாய்ப்பு.

எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரப்போகின்ற அரசாங்கம், தற்போது அமுலிலுள்ள வரிக்கொள்கையினை "நீக்குவது அல்லது பாரிய அளவில் சலுகைகள் வழங்குவோம்", போன்ற பொய் வாக்குறுதிகளை மக்களுக்கு முன்வைத்து நாட்டினை மேலும் சிக்கலுக்குள் தள்ளக்கூடிய தன்மை.

நீண்ட கால திட்டங்களை இலங்கை அடைய முடியாத சாத்தியக்கூறுகள்.

நாடு சுதந்திரம் அடைந்த காலத்திலிருந்து பல பிரச்சினைகளை சந்தித்திருந்தாலும் தற்சமயம் மக்கள் அனைவரும் எதிர்நோக்குகின்ற பிரச்சினையானது அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதாக நான் கருதுகின்றேன்.

குறிப்பாக இளம் சமுதாயத்தினர், முறையான மாற்றம், நேர்த்தியான கட்டமைப்பு மாற்றம் *(System Change)* தேவையென தொடர்ச்சியாக கூறி வருகின்றனர். சிங்கப்பூர், ஜப்பான், அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து போன்ற வளர்ச்சியடைந்த நாடுகளில் காணப்படும் சிறந்த ஒரு முறைமையை *(System)* இலங்கையிலும் கட்டாயமாக அமுல்படுத்த வேண்டும் என மக்கள் பிடிவாதமாக கேட்கின்றனர்.

ஆகவே, அரசாங்கம் மக்களின் இந்தப்பிரச்சினையை செவிமடுத்து அதனை உள்வாங்கி, அதற்கேற்ப மாற்றங்களை செய்து, சிறந்தவொரு பொறிமுறையில் வரியினை அறவிடுவதன் மூலம் நாட்டினையும் மற்றும் நாட்டு மக்களையும் மீண்டும் ஒரு சிறந்த நிலைக்கு கொண்டு செல்லக்கூடியதாக இருக்கும்.

முன்னர் இருந்த வருமான வரி				புதிய வருமான வரி			
மாதாந்த வருமானம்	Tax	EPF	கையில் கிடைக்கும் பணம்	மாதாந்த வருமானம்	Tax	EPF	கையில் கிடைக்கும் பணம்
150,000	-	12,000	138,000	150,000	3,500	12,000	134,500
350,000	6,000	28,000	316,000	350,000	52,500	28,000	269,500
500,000	15,000	40,000	445,000	500,000	106,500	40,000	353,500
700,000	39,000	56,000	605,000	700,000	178,500	56,000	465,500
1,000,000	90,000	80,000	830,000	1,000,000	286,500	80,000	633,500

மக்களை மேலும் நெருக்கடிக்குள் வீழ்த்துவதற்கு முயற்சிக்கும் எதிரணி!

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெக்கடியிலிருந்து மீண்டெழுந்து வருவதற்கு வரி வருமானம் உள்ளிட்ட அரசாங்கத்தின் வருமானங்கள் அதிகரிக்கப்பட வேண்டிய தவிர்க்க முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதற்கான முயற்சிகளை அரசாங்கம் முன்னெடுத்திருக்கும் சூழ்நிலையில், வரி அதிகரிப்பை எதிர்த்து தொழிற்சங்கங்கள் போர்க்கொடி தூக்கியுள்ளன.

இதன் ஒரு அங்கமாக கடந்த புதன் கிழமை பல்வேறு தொழிற்சங்கங்கள் ஒருநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தன. ஜனாதிபதி என்ற ரீதியில் ரணில் விக்கிரமசிங்க தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்துக்கு அமைய துறைமுகம், சுகாதாரம், கல்வி, போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி வர்த்தமானி அறிவித்தலை பிரசுரித்திருந்த நிலையிலும், தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டிருந்தன.

இந்த வேலைநிறுத்தத்தினால் போக்குவரத்து மற்றும் கல்வி போன்ற துறைகளில் பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்காதபோதும் சுகாதாரம், வங்கி உள்ளிட்ட துறைகளில் மக்கள் அசௌகரியங்களைச் சந்திக்க நேர்ந்திருந்தது.

தொழிற்சங்கங்கள் முன்னெடுத்த இந்த வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றியளிக்கவில்லையென்றும், தொழிற்சங்கங்களுக்கிடையில் ஒற்றுமை இல்லையென்றும் ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார். பெரும்பாலான துறைகள் எவ்வித இடையூறும் இன்றி தொழிற்பட்டதாகவும் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தார்.

முன்னெடுப்பதற்கான சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பன காணப்பட வேண்டியது அவசியமானதாகும். இது மக்களின் அடிப்படை உரிமை என்பதால் அதனை மறுக்கும் உரிமை யாருக்கும் கிடையாது. இருந்தபோதும் தொழிற்சங்கப் போராட்டங்களை முன்னெடுப்பதற்கு இது உசிதமான நேரமா என்பது பற்றிச் சிந்திக்கத் தவறியிருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் வரிகளை கணிசமானளவு குறைத்தமையும் நாடு மோசமான நிலைக்குச் செல்லக் காரணமாக அமைந்தது. இதற்கு எதிராகக் குரல் கொடுத்த அரசியல்வாதிகளும், தொழிற்சங்கவாதிகளும் தற்பொழுது நாட்டை சரியான பாதைக்குக் கொண்டு செல்லும் தற்போதைய அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கியிருப்பது எந்தளவுக்கு நியாயமானதாகும் என்கிறார்கள் பொருளாதார விவகாரம் தெரிந்தவர்கள்.

போராட்டங்கள் தொடருமாயின் சர்வதேச நிதியுதவிகள் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. நாடு பாரதூரமான நிலைமைக்குள் தள்ளப்படும் ஆபத்து!

உண்மையில் எடுத்துக்கொண்டால் தொழிற்சங்கப் போராட்டம் வெற்றி பெற்றதா தோல்வி அடைந்ததா என்பதற்கு அப்பால் இறுதியில் மக்களே அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர் என்பதே உண்மை. சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்த கதையாக பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்பொழுது தொழிற்சங்கவாதிகளின் செயற்பாடுகளாலும் பாதிக்கப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை துரதிர்ஷ்டமானதாகும்.

ஜனநாயக நாட்டில் கருத்துச் சுதந்திரம், தொழிற்சங்க நடவடிக்கைகளை இந்தக் கடன் உதவியைப் பெற்றுக் கொள்வதற்கு உள்நாட்டில் செய்ய வேண்டிய பல சீர்திருத்தங்கள் அதாவது பொருளாதார ரீதியிலும், அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் மேற்கொள்ள வேண்டிய பல மாற்றங்கள் அவசியம்.

இதன் ஒரு அங்கமாக வரி அறவீட்டில் அரசாங்கம் மாற்றம் கொண்டு வந்தது. வருமான வரியின் அளவு அதிகரிக்கப்பட்டது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே பல்வேறு துறையினர் போராட்டங்களை முடுக்கி விட்டுள்ளனர். மறுபக்கத்தில் இதுபோன்ற போராட்டங்கள் இலங்கைக்கு சர்வதேச ரீதியில் கிடைக்கக் கூடிய உதவிகள் தாமதமாவதற்கும் காரணமாக அமைந்து விடலாம்.

விசேடமாக போராட்டங்கள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களால் நாட்டில் ஸ்திரமற்ற தன்மை நீடிக்கிறது என சர்வதேசம் கருதும் பட்சத்தில் உதவிகளை வழங்குவதில் அவர்களுக்குத் தயக்கம் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. எனவே இவை குறித்தும் கவனத்தில் கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

மறுபக்கத்தில், அரசாங்கத்தின் வரிக்கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதாயின் அதற்கான மாற்று யோசனைகளை எதிர்க்கட்சிகள் எதுவும் இதுவரை முன்வைக்கவில்லை. குறிப்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் இதுபற்றிக் கதைத்தாலும், நடைமுறைச்சாத்தியமான முறையில் யோசனைகளை முன்வைக்கவில்லையென்றே அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இலங்கையில் கடுமையான பொருளாதார நெருக்கடியை மக்கள் உணரத் தொடங்கி ஏறத்தாழ ஒருவருடமாகிறது. கடந்த வருடம் மார்ச் மாதம் முதல் எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயுத் தட்டுப்பாடு போன்ற நெருக்கடிகளை மக்கள் எதிர்கொண்டிருந்தனர். இவற்றைப் பெறுவதற்காக நீண்ட நாட்கள் வரிசைகளில் காத்திருக்கும் நிலைமையும் காணப்பட்டது. இருந்தபோதும், கடந்த ஜூலை மாதத்தின் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவியேற்றதைத் தொடர்ந்து நிலைமைகள் படிப்படியாக மாறத் தொடங்கின.

வரிசையில் நிற்கும் நிலை மாறி மக்களின் சுமுகமான வாழ்க்கைச் சூழல் ஏற்படத் தொடங்கியது. நாட்டின் தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதி எடுத்த அழுத்தமான நடவடிக்கைகள் மற்றும் அவருக்குக் காணப்பட்ட சர்வதேச தொடர்புகள் என்பனவே

நாடு பொருளாதார வீழ்ச்சியிலிருந்து படிப்படியாக மீண்டெழுந்து வருகையில், சர்வதேச உதவிகளுக்கு முட்டுக்கட்டை போடும் நோக்கில் திட்டமிடப்படும் ஆர்ப்பாட்டங்கள்!

இந்நிலைமைய மாற்றுவதற்கு உறுதுணையாக இருந்தன.

இருந்தபோதும், நாடு இன்னமும் நெருக்கடியிலிருந்து முழுமையாக மீட்சிபெறவில்லையென்றும், நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்வதற்கு பிரபல்யமல்லாத தீர்மானங்களை எடுப்பதற்கு தாம் தயங்கப் போவதில்லையென்றும் ஜனாதிபதி அண்மையில் பாராளுமன்றத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டிருந்தார். இந்த பிரபல்யமற்ற தீர்மானங்களில் ஒன்றே அரசாங்கத்தின் இந்த வரிமறுசீரமைப்புக் கொள்கையாகும்.

இதேவேளை, வரி அறவீடுகள் அதிகரிக்கப்பட்டாலும் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை காணப்பட வேண்டும் என்பதுடன், ஊழல் ஒழிக்கப்பட வேண்டும் எனப் பொதுமக்கள் பரவலான கருத்துகளைக் கூறுகின்றனர். அதாவது வரியாக வழங்கப்படும் பணம் ஊழல்வாதிகளால் சூறையாடப்படாமல் வெளிப்படையான முறையில் மக்களின் நலன்களுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையே எதிர்பார்ப்பதாக வரி செலுத்துனர்கள் பலரும் கூறுகின்றனர்.

இது விடயத்தில் அரசாங்கம் கவனம் செலுத்துவதும் அவசியமானது என அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். வெளிநாடுகளைப் பொறுத்தவரையில் வரி விதிப்பு அதிகமாக இருந்தாலும் வரி செலுத்துனர்களான மக்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் அதிகமாக இருக்கும். இவ்வாறானதொரு நிலைமை இலங்கையிலும் ஏற்படுத்தப்படுமாயின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஓரளவு தீர்வை உடனடியாகக் காணக் கூடியதாகவிருக்கும்.

பி.ஹர்ஷன்...✍

பா.ஜ.கவின் வேகமான வளர்ச்சியும் காங்கிரஸின் படிப்படியான வீழ்ச்சியும்!

இந்தியாவின் மூன்று மாநிலங்களின் தேர்தல் கணிப்புகளால் ஆளும் பா.ஜ.க உற்சாகமாக உள்ளது. 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்ற தேர்தலில் பா.ஜ.கவுக்கு பெரிய சவாலை காங்கிரஸ் தராமல் போகும் நிலைமை உருவாகலாம் என்கிறார்கள் அரசியல் நிபுணர்கள். காங்கிரஸ் கட்சி சவாலான இந்தக் காலகட்டத்தில் அனைத்து எதிர்க்கட்சிகளையும் அரவணைத்து 2024 தேர்தலை சந்தித்தால் மட்டுமே பா.ஜ.கவுக்கு சவாலான ஒரு அணி உருவாகும் என்றும் அதற்கு வாய்ப்பே இல்லையென்றும் அரசியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

அடுத்த வருட நாடாளுமன்றத் தேர்தலிலும் நரேந்திர மோடி தலைமையிலான அரசே ஆட்சியைக் கைப்பற்றுமென்பது கருத்துக் கணிப்புகள் மூலம் உறுதி!

அண்மையில் வடகிழக்கு மாநிலங்களான திரிபுரா, மேகாலயா, நாகலாந்து ஆகிய மூன்று மாநிலங்களின் சட்டப்பேரவை தேர்தல் நடந்தது. இத்தேர்தலுக்கு பிந்திய கணிப்புகளில் எதிர்காலத்திலும் ஆட்சியை பிடிக்கப் போவது பா.ஜ.க என்று சொல்லப்பட்டதால் அந்தக் கட்சி உற்சாகமடைந்துள்ளது. எனவே 2023 ஆம் ஆண்டிலும் காங்கிரஸுக்கு பின்னடைவாகவே பார்க்கப்படுகிறது.

பிரதமர் நரேந்திர மோடியின் வினைத்திறன் மிகுந்த தலைமைத்துவம் காரணமாக இந்திய மக்களில் பெரும்பாலானவர்கள் பா. ஜ. க ஆட்சியையே மீண்டும் விரும்புவதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன. 2014 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை நரேந்திர மோடியை தலைமையாகக் கொண்டு பா.ஜ.க தேர்தலை எதிர்க்கொண்டது. இந்த் தேர்தலில் மிகப்பெரிய வெற்றி பெற்ற பா.ஜ.க தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்தது.

ஐந்து ஆண்டுகள் ஆட்சிக்குப்

பா.ஜ.கவின் முற்போக்குத் திட்டங்களுக்கு மக்கள் மத்தியில் தொடர்ந்தும் வரவேற்பு

பின்னர் 2019 ஆம் ஆண்டு தேர்தலையும் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலேயே பா.ஜ.க எதிர்கொண்டது. அப்போதும் பா.ஜ.கவே வெற்றி பெற்றது. 2014 இல் பெற்ற எம்.பி.க்கள் எண்ணிக்கையை விட 2019 இல் மிக அதிக எண்ணிக்கையில் எம்.பிக்களை பெற்று சாதனை நிகழ்த்தியது பாஜக.

கடந்த 9 ஆண்டுகளில் பல்வேறு மாநிலங்களில் பா.ஜ.கவே ஆட்சிக்கு வந்துவிட்டது. நாட்டின் பெரும்பாலான மாநிலங்களில் பா.ஜ.க சட்டசபைத் தேர்தல்களில் வென்று ஆட்சி செய்து வருகிறது.

இந்நிலையில் ஒன்பது ஆண்டுகளில் எதிர்க்கட்சிகள் பல்வேறு புகார்களை தெரிவித்து வருகின்றன. அடுத்த ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பா.ஜ.கவினால் மீண்டும் ஆட்சி அமைக்க முடியாது என எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன.

இந்நிலையில் திரிபுரா, நாகாலாந்து மற்றும் மேகாலயா மாநிலங்களுக்கான சட்டப்பேரவை தேர்தல் அண்மையில் முடிந்துள்ளது. இதன் முடிவுகள் மீதான கணிப்புகள் பா.ஜ.கவை உற்சாகப்படுத்தி உள்ளன. கடந்த மாதம் 27 ஆம் திகதி தேர்தல் நடந்தவுடன், தேர்தலுக்குப் பிந்திய கருத்துக்கணிப்புகள் வெளியாகியிருந்தன. இந்தக் கணிப்புகள் எல்லாமே பா.ஜ.கவிற்கு சாதகமாகவே அமைந்திருந்தன.

இந்திய அரசியலில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பா.ஜ.க ஆட்சியின் மீது மக்கள் செல்வாக்கு படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வருவதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். வறிய மக்களுக்கான நலன் திட்டங்களில் நரேந்திர மோடியின் அரசாங்கம் கூடுதல் கவனம் செலுத்தி வருவதாக அவர்கள் கூறுகின்றனர். அதே சமயம் நரேந்திர மோடியின் பொருளாதாரத் திட்டங்கள் தொடர்பாக பலதரப்பிலும் பாராட்டுத் தெரிவிக்கப்படுகின்றது. உலகளவில் இந்தியாவை பொருளாதாரப் பலம் மிக்க நாடாக உயர்த்தும் குறிக்கோளுடன் நரேந்திர மோடியின் அரசாங்கம் பாடுபட்டு வருவதாக அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர்.

அதேசமயம் இந்திய அரசியலில் காங்கிரஸ் கட்சி பின்தங்கி இருப்பதற்கான காரணங்களும் தெரிவிக்கப்பட்டுள்ளன. காங்கிரஸ் கடைப்பிடிக்கும் பொருளாதாரத் திட்டங்கள் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். காங்கிரஸில் தற்போது ஆளுமைமிக்க தலைவர்கள் இல்லை. காங்கிரஸை வெற்றியுடன் வழிநடத்தக் கூடிய தலைவர்கள் அக்கட்சியில் கிடையாது.

இந்திய மக்களை ஒன்றுதிரட்டும் வகையில் காங்கிரஸ் இதுவரை நடத்திய யாத்திரைகள் கூட அக்கட்சிக்கு எதிர்பார்த்த பயனைத் தரவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. காங்கிரஸ் படிப்படியாக மக்களிடமிருந்து அந்நியப்பட்டுக் கொண்டு வருவதையே காண முடிவதாக மாநில சட்டசபைத் தேர்தல்கள் முடிவுகளே புலப்படுத்துகின்றன என்கிறார்கள் அரசியல் ஆய்வாளர்கள்.

அடுத்த வருடத்தில் நடைபெறவிருக்கும் இந்திய நாடாளுமன்றத் தேர்தலானது காங்கிரஸ் கட்சிக்கு மிக மோசமான பின்னடைவை ஏற்படுத்தும் அறிகுறிகளை தெளிவாகவே காண முடிவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். பிரதமர் நரேந்திர மோடி மீதான நம்பிக்கை அதிகரித்துக் கொண்டு செல்கின்றதே தவிர சற்றேனும் குறையவில்லையென்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

"பிரதமர் நரேந்திர மோடி தனது ஆட்சியில் ஒரு தந்தை போல், சகோதரர் போல், நண்பர் போல் ஒவ்வொரு வீட்டிற்கும் என்னவெல்லாம் செய்ய முடியுமோ அதெல்லாம் செய்கிறார். கடந்த 7 ஆண்டுகளில் தமிழக மக்களுக்கு மட்டும் சுமார் ரூபா 6 இலட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நரேந்திர மோடி ஆட்சியில், மக்கள் நலன் சார்ந்த திட்டங்கள் அனைத்தும் மக்களின் வீடு தேடி வருகின்றன. குடிநீர் வழங்கும் ஜல்தன் யோஜனா திட்டம், வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்க ஆயுஸ்மா திட்டம் உள்பட பல திட்டங்கள் அவ்வாறு வழங்கப்படுகின்றன" என்று அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

எஸ்.சாரங்கன்...✍

உள்ளூராட்சிசபைத் தேர்தல் விவகாரத்தில் அரசியல் களத்தில் அதிகரிக்கும் பரபரப்பு!

உள்ளூராட்சி மன்றங்களுக்கு நடத்தப்பட வேண்டிய தேர்தல் குறித்த விவகாரம் தொடர்ந்தும் சூடுபிடித்துள்ளது. தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லையென அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில், மார்ச் 09ஆம் திகதி நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த தேர்தல் திகதி பின்போடப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் எதிர்வரும் வியாழன், வெள்ளி தினங்களில் பாராளுமன்றத்தில் இருநாள் விவாதம். 'மக்களின் சர்வஜன வாக்குரிமை' என்ற தலைப்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி சபை ஒத்திவைப்புப் பிரேரணை!

இந்த நிலையில் தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை திறைசேரியின் செயலாளர் வழங்காதிருப்பதைத் தடுக்கும் வகையிலான உத்தரவொன்றை உயர்நீதிமன்றம் வழங்கியுள்ளது. இதுவரை தேர்தல் நடக்குமா நடக்காதா என்ற குழப்பத்துக்கு உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவு ஒரு தெளிவை வழங்கியிருப்பதாகத் தெரிகிறது.

இருந்தபோதும் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி சூழ்நிலையில் தேர்தலை நடத்துவது நடைமுறையில் எந்தளவுக்கு சாதகமாக இருக்கும் என்பதும் பார்க்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் மற்றும் நடத்தப்படக் கூடாது எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற வழக்கு விசாரிக்கப்பட்டு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு அமைய தேர்தல் நடத்தப்படலாம் என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

இருந்தபோதும் தேர்தல் நடத்தப்படக் கூடாது என்ற வழக்கு மே 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்தது. இவ்வாறான பின்னணியில் தேர்தலுக்கு நிதி வழங்கக் கோரி, ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அடிப்படை மனிதஉரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் தீர்மானித்துள்ள உச்சநீதிமன்றம், தேர்தலுக்கான நிதியை தடையின்றி திறைசேரியின் செயலாளர் வழங்க வேண்டும் என்ற உத்தரவைப் பிறப்பித்துள்ளது. உச்சநீதிமன்ற நீதியரசர்களான பீ. பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா, பிரியந்த ஜயவர்தன ஆகியோர் இந்த உத்தரவை வழங்கியிருந்தனர்.

அது மாத்திரமன்றி, வாக்குச் சீட்டு அச்சடிக்க அரச அச்சகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் தடுக்கும் மற்றொரு இடைக்கால உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவுகளையடுத்து தேர்தல் குறித்த கருத்தாடல்கள் மேலும் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

தேர்தலுக்கான புதிய திகதி மார்ச் 03 ஆம் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு முன்னர் அறிவித்திருந்தது. இந்த நிலையில் உச்சநீதிமன்றத்தின் உத்தரவும் அன்றையதினம் பிறப்பிக்கப்பட்டிருப்பதால் அடுத்த வார முற்பகுதியில் திகதி அறிவிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள உத்தரவை அடிப்படையாகக் கொண்டு நிதிஅமைச்சு, அரசாங்க அச்சகத் திணைக்களம் ஆகியவற்றுடன் கலந்துரையாடி புதிய தேர்தல் திகதி அறிவிக்கப்படும் என்றும், மார்ச் 9 ஆம் திகதிக்கு முன்னர் புதிய திகதிக்கான அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் தேர்தல்கள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி தேர்தல் விவகாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் காரணமாக அரசியல் கட்சிகளும் பிரசாரங்கள் குறித்து கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளன.

அதேநேரம், ஆட்சிமாற்றமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமாயின் அது பாராளுமன்றத் தேர்தலின் ஊடாகவே மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், வீதிகளில் அதற்கான தீர்வுகள் இல்லையென்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திருகோணமலையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போது கூறியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த வலியுறுத்தி எதிர்க்கட்சி கள் வீதிக்கு இறங்கிப் போராட்டங்களை நடத்தியிருக்கும் பின்னணியிலேயே ஜனாதிபதி இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார். இது இவ்விதமிருக்க உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதத்தை நடத்துமாறும் எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இவ்வாரம் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இதற்கமைய எதிர்வரும் வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய நாட்களில் இரு முழு நாள் விவாதம் நடைபெறவுள்ளது. 'மக்களின் சர்வஜன வாக்குரிமை' என்ற தலைப்பில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இந்த சபை ஒத்திவைப்புப் பிரேரணையை முன்வைக்கிறது. தேர்தல்கள் பிற்போடப்படுவதில் தமக்கு எந்தவிதமான உடன்பாடும் இல்லையென்றும், தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்பதையே தமது கட்சியும் விரும்புவதாக இக்கூட்டத்தில் நிதியை வழங்க முடியாதிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

விவகாரம் தொடர்பில் எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாரம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவைச் சந்தித்திருந்தனர். அதாவது தேர்தலை நடத்துவதற்கான நிதியை வழங்கும் விடயத்தில் தலையீடு செய்யுமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழு சபாநாயகரிடம் எழுத்துமூல கோரிக்கையொன்றை முன்வைத்திருந்தது.

இது தொடர்பில் சபாநாயகரின் நிலைப்பாட்டை அறிவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில், எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் பெரும்பாலான கட்சியின் உறுப்பினர்கள் சபாநாயகரைச் சந்தித்தனர். நிதியை வழங்காதிருக்கும் திறைசேரியின் செயலாளரை பாராளுமன்றத்திற்கு அழைக்குமாறும், அவரிடம் உரிய தெளிவுபடுத்தல்களைப் பெறவேண்டியிருப்பதாகவும் எதிர்க்கட்சியினர் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டின் நிதி குறித்த தீர்மானத்தை எடுக்கும் பொறுப்பு பாராளுமன்றத்திடமே இருப்பதால் வரவுசெலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்குவதில் பிரச்சினை இல்லையென்றும் எதிர்க்கட்சியினர் பிரஸ்தாபித்துள்ளனர். இந்தச் சந்திப்புத் தொடர்பிலும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றிருந்தது.

இதுபோன்ற பின்னணியில் தேர்தல் திகதி அடுத்தவாரம் அறிவிக்கப்படுமாயின் மீண்டும் அரசியல் கட்சிகள் தேர்தலில் தீவிரம் காட்டத் தொடங்கிவிடும். இதுவரையான காலப்பகுதியில் எதிர்க்கட்சியினர் தேர்தல் பிரசாரங்களுக்கு அதிகமான நிதியைச் செலவு செய்திருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தளவு பணம் அவர்களுக்கு எங்கேயிருந்து வருகிறது என்ற கேள்விகளும் பெருமளவில் முன்வைக்கப்படுகின்றன. இருந்தபோதும் இதற்கான தெளிவுபடுத்தல்கள் இன்னமும் வழங்கப்படவில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்ட தீர்க்கமான நடவடிக்கைகள் காரணமாக நாடு பொருளாதார ரீதியில் ஸ்திரத்தன்மையை நோக்கிச் செல்வதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி வளர்ச்சியடைந்து வருகிறது. அத்துடன், வெளிநாட்டுக் கையிருப்பிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தான கடன் உதவியை மிக விரைவில் பெற்றுவிட முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை

நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை முற்றாக மறந்த நிலையில், மக்களைத் திரட்டி எதிரணியினர் நடத்தும் ஆர்ப்பாட்டங்களால் மேலும் அதிகரிக்கும் நெருக்கடி!

மறுபக்கத்தில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்க்கமான நடவடிக்கைகள் காரணமாக நாடு பொருளாதார ரீதியில் ஸ்திரத்தன்மையை நோக்கிச் செல்வதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியுள்ளன. கடந்த சில நாட்களாக அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதி வளர்ச்சியடைந்து வருகிறது. அத்துடன், வெளிநாட்டுக் கையிருப்பிலும் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தான கடன் உதவியை மிக விரைவில் பெற்றுவிட முடியும் என மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். பெரும்பாலான விடயங்களில் இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதால் இறுதியான உறுதிப்படுத்தல் வழங்கியதும் கடனுதவி கிடைத்துவிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது ஜனாதிபதியும் அவர் தலைமையிலான அரசாங்கமும் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்வது தெளிவாகப் புரிகிறது. அது மாத்திரமன்றி அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ள வரிச் சீர்திருத்தம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியம் கருத்துத் தெரிவித்துள்ளது.

கடன் வசதியைப் பெறுவதற்கான நிபந்தனைகளுக்கு அமைய வருமான வரி விடயத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் காலத்துக்குத் தேவையானது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதுபோன்றதொரு நிலையில் பெருந்தொகை நிதியைச் செலவுசெய்து குட்டித் தேர்தல் நடத்துவது நாட்டுக்குப் பொருளாதார ரீதியில் எந்தளவு நன்மையை ஏற்படுத்தும் என்பது கேள்விக்குறியே.

கலந்து கொண்டிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

எனவே, தேர்தலை ஒத்திவைக்க யாரும் முயற்சிக்கவில்லையென்றும், நாட்டின் பொருளாதார நிலைமை காரணமாகவே உரிய

தப்பிச் சென்ற பாதாள உலக குற்றவாளி பூருமூனா

பாதாள உலகக்குற்றவாளிகளால் ஒப்பந்த அடிப்படையில் மேற்கு மற்றும் தென் மாகாணங்களில் மேற் கொள்ளப்பட்ட பல கொலைச் சம்பவங்களின் காரண கர்த்தாவாக காமினி ரவிதுவர்ண சங்க டி சில்வா இனங்காணப் பட்டுள்ளார். பூருமூனா என அழைக்கப்படும் இந்தநபர் சுமார் 15க்கும் மேற்பட்ட கொலைகளை இதுவரை புரிந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது. பல குற்றச்செயல்களை புரிந்த படுபாதகனை அண்மையில் கட்டு நாயக்க விமானநிலைய பொலிஸ் அதிகாரிகள் தப்பிச் செல்ல இடமளித்தனர். பாதுக்க பிரதேசத்தைச் சேர்ந்த கே.கே. ரவி துவர்ண சங்க என்ற பெயரில் 'N1C119203 என்ற போலி கடவுச்சீட்டுடன் துபாய் நோக்கி செல்ல முற்படுகையிலேயே குடிவரவு குடியகழ்வு அதிகாரிகளின் பிடியில் பூருமூனா சிக்கிக் கொள்கின்றான்.

கடந்த வருடம் டிசம்பர் 18ஆம் திகதி ஹங்வெல்ல பிரதேசத்தில் உணவக உரிமையாளரான மொஹமட் பர்ஷான் என்ற தொழிலதிபரின் கொலை வழக்குடன் பூருமூனா தொடர்புபட்டிருந்தமையால் மேல்மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகளால் அவிசாவளை நீதவான் நீதிமன்றத்தில் பூருமூனாவுக்கு வெளிநாட்டு பயணத்தடை உத்தரவு பிறப்பட்டிருந்தது. அதற்கமையவே பூருமூனா குடிவரவு குடியகல்வு அதிகாரிகளின் பிடியில் கடந்த மாதம் 24ஆம் திகதி சிக்கினான்.

அதாவது "M/U/B 9026/2022" என்ற இலக்கத்தின் கீழ் வெளிநாட்டு கடவுச்சீட்டை வைத்திருக்கும் நபருக்கு வெளி நாட்டு பயணத்தடையை விதித்து பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் இக்கைது இடம்பெற்றது.

கடந்த வருடம் டிசம்பர் 18, 2022 ஹங்வெல்ல குறுக்கு வீதியில் அமைந்துள்ள முஸ்லிம் ஹோட்டல் உரிமையாளர் மொஹமட் பர்ஷான், ஹோட்டலை மூடவிருந்த வேளையில் பூருமூனா, சிகரெட் வாங்குவதை போல் வந்து மொஹமட் ஃபர்ஷானை துப்பாக்கியால் சுட்டு கொலைசெய்தார். இச்சம்பவம் ஹோட்டலிலிருந்த பாதுகாப்பு கேமராவிலும் பதிவாகியிருந்தது.

இதனையடுத்து மேல்மாகாண தெற்கு மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு அதிகாரிகள் இதுதொடர்பில் விசாரணைகளை பல்வேறு கோணங்களில் முன்னெடுத்தனர். அதன்படி தொழிலாதிபர் பர்ஷானை சுட்டுக் கொன்றவர் ரவிதுவர்ண சங்க டி சில்வா அல்லது பூருமூனாதான் எனக் கண்டுபிடித்தனர். அது மட்டுமின்றி பாதாள உலகில் பலமாகச் செயற்படும் லலித் கன்னங்கரவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் படி தொழிலாதிபர் பர்ஷானை கொல்லும் பணி பூருமூனாவுக்கு வழங்கப்பட்டிருந்தமையும் தெரியவந்தது. இதனுடைய பின்னணியில் போதைப்பொருள் வர்த்தகத்தை பலப்படுத்தி கையகப்படுத்தும் திட்டமொன்றும் இருந்துள்ளது.

லலித் கன்னங்கர துபாயில் அவருடன் தங்கியிருக்கும் ஹன்வெல்ல சாமியாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தம் தொடர்பாக தொழிலாதிபர் பர்ஷானின் சகோதரனுடன் ஏற்பட்ட தகராறே இக்கொலைச் சம்பவத்துக்கு காரணமாகவிருந்துள்ளது. அந்த ஒப்பந்தம் என்ன என்பது இன்று வரை மர்மமாகவே உள்ளது. அதனடிப்படையில், லலித் தனது சகாக்களைப் பயன்படுத்தி பர்ஷானின் சகோதரனை பல சந்தர்ப்பங்களில் கொல்லத் திட்டமிட்டார். எனினும் அந்த முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிந்தன. இறுதியில், பர்ஷானின் சகோதரர் லலித்தின் சகாக்களை தாக்கினார். இதனால் லலித்தின் சகாக்கள் பலரும் காயமடைந்தனர். தொழிலாதிபர் பர்ஷான் ஹங்வெல்ல பொலிஸ் சிவில் பாதுகாப்புக் குழுவின் உறுப்பினராக இருந்தமையால் பொலிஸில் அவருக்கு ஓரளவு செல்வாக்கு இருந்தது.

அதனால் தான் பர்ஷானின் சகோதரனை பழிவாங்குவதற்கு பூருமூனாவை பயன்படுத்த திட்டம் தீட்டினர். அதன்படியே பூருமூனா அவரை கொலைசெய்ததாக கூறப்படுகின்றது. லலித்தின் நண்பரான பலத்த அரசியல் தொடர்புகளைக் கொண்ட பாதாள உலக போதைப்பொருள் அதிபராகக் கருதப்படும் ரத்கம விதுர பூருமூனாவை பயன்படுத்தி பல கொலைகளை திட்டமிட்டு செய்துள்ளதாக கூறப்படுகின்றது. எனவே பாதாள உலக குற்றவாளியாக பூருமூனா வலம் வருகிறார். எனவே செல்லும் இடமெல்லாம் அவனுக்கு பொலிஸ் கெடுபிடி இருந்தது. இதனையடுத்தே பூருமூனா நாட்டை விட்டு தப்பிச் செல்ல முயற்சிகளை மேற்கொண்டான்.

பூருமூனா என்ற பெயர் பாடசாலையிலேயே அவனுக்கு வைக்கப்பட்டுள்ளது. பாடசாலைக்காலத்திலிருந்தே வன்முறையில் ஈடுபடுபவனாகவே பூருமூனா இருந்துள்ளான். அட்டூழியங்களின் பிறப்பிடம் அவன். அவனது நீண்ட முகம் மற்றும் காது மடல்களின் வடிவம் என்பனவற்றைக் கொண்டு அவனை பாடசாலை நண்பர்கள் பூருமூனா என அழைத்தனர். ஒருமுறை அவனுடன் படித்த சக நண்பனொருவன் கழுதை முகம் என்று அழைத்துள்ளான். அவனைக் கால்களைப் பிடித்து அடுக்கு மாடிக் கட்டடத்தின் மேலிருந்து கீழே தொங்கவிட்ட சம்பவம் இன்றும் அவனது பள்ளி நண்பர்களால் நினைவு கூரப்படுகின்றது. பூருமூனா பாடசாலைக் காலத்தில் பெரிதாக கல்வியில் நாட்டம் காட்டவில்லை. அதனால் 10ம் வகுப்பிலேயே பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளான்.

பூருமூனாவின் குடும்பத்தில் பெரிதாக வசதிவாய்ப்புகள் இருக்கவில்லை. தந்தை மரங்களை வெட்டி பிழைப்பு நடத்தினார். அவருக்கு ஒரு தம்பியும் ஒரு சகோதரியும் மட்டுமே இருந்தனர். காலப்போக்கில் சகோதரியையும் அநுராதபுரத்தில் திருமணம் செய்துவைக்கின்றனர். எனினும் பூருமூனாவின் தாய்க்கு இதில் விருப்பமிருக்கவில்லை. இதனால் தந்தைக்கும் தாயுக்கும் இடையில் விரிசல் ஏற்பட்டு பிரிந்து வேறுவேறாக வசிக்கின்றனர். இறுதியில்

பூருமூனா சகோதரியின் திருமணமும் நீண்டகாலம் நீடிக்கவில்லை. இதற்கிடையில், 2013ஆம் ஆண்டு பூருமூனா கடற்படையின் சிறப்பு படைப்பிரிவில் இணைகின்றான். அப்போது அவனுக்கு 19 வயது. இந்த இளைஞன் சிறுவயதிலிருந்தே அசாதாரணமான உடல்நிலையால் அவதிப்பட்டான். இதன் போதே பூருமூனா சிறுவயது முதலே ஒருவகையான நோயால் பாதிக்கப்பட்டிருப்பது தெரியவருகின்றது.

05 வருடங்களாக கடற்படையில் எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கையிலும் சிக்காமல் தனது கடமையைச் சரியாகச் செய்து வந்த பூருமூனா, 2018ஆம் ஆண்டு விடுமுறையில் வீடு திரும்பியதையடுத்து அவனது வாழ்க்கையே தலைகீழாக மாறியது. தந்தையின் சுக துக்கங்களை அறிந்து கொள்வதற்காக காலியிலிருந்து ரத்கம கம்மெத்தேகொட வீட்டிற்கு தனது தாய் மற்றும் சகோதரருடன் செல்வது வழக்கம். இதன்போதே கிராம மக்களுடன் ஏற்பட்ட தகராறில் குழுவொன்று தந்தையை தாக்கியுள்ளது. 15 பேர் தன் தந்தையைச் சூழ்ந்து கொண்டு அவரைத் தரையில் போட்டு அடிப்பதை பூருமூனாவால் பார்த்துக்கொண்டு இருக்கமுடியவில்லை. அதனால் தந்தை மரங்களை வெட்டப் பயன்படுத்தும் இயந்திரத்தை கொண்டு அவர்களை தாக்கினான். இச்சம்பவம் தான் பூருமூனாவின் பெயர் பொலிஸ் புத்தகங்களில் இடம்பெற்ற முதல் சம்பவமாகும். இச்சம்பவத்தையடுத்து பூருமூனா சிறைக்கு சென்றான். இங்கே பல பாதாள உலக குற்றவாளிகளை சந்தித்து நட்பை வளர்க்கும் வாய்ப்பு அவனுக்கு கிடைத்தது. எனவே பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர் மீண்டும் கடற்படை சேவைக்கு செல்லவில்லை. அவன் பெண்ணொருவரை காதலித்து திருமணம் செய்து குழந்தையொன்றும் இருப்பதாக கூறப்படுகிறது.

திருமணத்திற்கு பிறகு நிரந்தர வேலையொன்று இல்லாமையால் பாதாள உலகத்தில் ஐக்கியமாகினான். இது தவிர பூருமூனாவின் பெயர் பல மர்மக் கொலைகள், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களிலும் அடிபட்டது. துபாயிலுள்ள பாதாள உலகக் குற்றவாளிகள் பூருமூனாவை வைத்து நிறைய வேலைகளை செய்துமுடித்திருந்தனர். அதன்படி துபாய்க்கு அழைத்து வர இவர்கள் தயாராகியிருந்தனர். கடந்த 24ஆம் திகதி துபாய் செல்ல தயாராகி விமான நிலையம் வருகின்றான. இதன் போதே

குடிவரவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்ட பூருமூனா விமான நிலைய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டான். அப்போது மாலை சுமார் 6.30 மணியிருக்கும். இதனையடுத்து விமான நிலைய வளாகத்திலுள்ள காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று, அவனை சிறையில் அடைத்து, மேல் மாகாண, தென் மாவட்ட குற்றப்பிரிவுக்குத் தகவல் கொடுத்தனர். எனினும் அன்று விமான நிலையப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய அதிகாரி விநோதமாக நடந்து கொண்டார்.

இதன்போது பொலிஸ் அதிகாரி பூருமூனாவுடன் சிகரெட்டுகளை புகைத்துள்ளார். இதற்கிடையில் பூருமூனா பொலிஸ் காவலில் இருப்பதாக துபாய்க்கு செய்தியை கூட அனுப்பினார். செய்தியின்படி, லலித் அந்த நேரத்தில் துபாயிலிருந்து பூருமூனாவை மீட்கும் வேலையை தொடங்கினான்.

இதுதொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் பொத்தேவெல இந்திரசார என்ற பிக்குவுக்கும் லலித்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதாக தெரியவந்துள்ளது. 25 ஆண்டுகளுக்கும் மேலாக இருவருக்கும் இடையில் நட்பிருந்துள்ளது. இருவரும் ஹொரணையில் கல்வி கற்றவர்கள். பிரிவெனாவில் பிக்குகளின் சகவாசத்தில் கல்வி கற்றவர் தான் லலித் கன்னங்கர என தெரியவருகின்றது. லலித்தின் தொலைபேசி அழைப்பின்படி துறவியும் அவரது குழுவினரும் ஹெட்டிபொலவில் இருந்து இரவு 9.30 மணியளவில் விமான நிலைய பொலிஸ்நிலையத்துக்கு வந்தனர். இதனையடுத்தே பூருமூனா தப்பிச் செல்வதற்குத் தேவையான பின்னணியைத் தயாரித்தனர். அதனைதொடர்ந்தே பொலிஸாரிடமிருந்து பூருமூனா தப்பிச் சென்றுள்ளதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறுதியில், தலைமைப் பரிசோதகர் ஜானக சேனாதிரத், விமான நிலையப் பொலிஸ் நிலையத் தளபதி, சார்ஜன்ட் டபிள்யூ. ஆர். சேனாரத்ன மற்றும் கான்ஸ்டபிள்களான ரத்நாயக்க மற்றும் பிரசாத் குமார் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இதுதொடர்பான விசாரணைகள் குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் மேற்கொண்டுவருகின்றனர்.

வசந்தா அருள்ரட்ணம்

இரத்மலானை
பிரதான குடியிருப்பு காணிகள்
விற்பனைக்கு
10 பேர்ச் தொகுதிகள்
பிரதான வீதிக்கு 500 மீட்டர்
மின்சாரம், நீர் உட்பட
40 அடி அகலமான பாதை அனுகல்
தொடர்பு:
+94 773 972991 / 763 555640 / 742 797689
rent.sales888@gmail.com

இரத்மலானை
பெறுமதிமிக்க வர்த்தக காணி
விற்பனைக்கு
முதலீட்டுக்கான ஓர் சிறந்த வாய்ப்பு
40 அடி பாதை முன்பாக, 80,000 ச.அடி
கட்டிடங்களை கொண்ட 520 பேர்ச் காணி
பிரதான வீதிக்கு 500 மீட்டர்
தொடர்பு:
+94 773 972991 / 763 555640 / 742 797689
rent.sales888@gmail.com

தினகரன் வாரமஞ்சரி BUDGET ADZ போட்டோ குறும் விளம்பரம்

TOYOTA REGISTERED

Land cruiser prado 120 2006 brand new imported fully loaded with sunroof beige interior 07 seater with tesla setup. 0777 775 022 / 0760 163 322 TKNV-01

Toyota Carina Siesel GE - xxxx YOM-97 YOR-2000 Mileage 157,000 km Mint Condition 0779 109 614 TKNV-02

Unregistered Toyota Coaster 33 seater. Rs. 85/- 0760 163 322 TKNV-03

TOYOTA REGISTERED

Prodo 97 Brand New 65-xxxx Manual, A/C P/S P/M New tyres Negombo. 0717 771 332 TKNV-04

Lexus 300G fully loaded with sunroof 0777 775 022 Rs.69/- 0777 775 022, 0760 163 322 TKNV - 05

Toyota Hilux 2007 Manufactured 2500cc 2kd engine manual transmission. 0760 163 322 TKNV-06

TOYOTA REGISTERED

Toyota KDH TRH 200v 2017 Engine capacity 1990 cc petrol Efi Alto Triptonic transmission Silver colour 12 air bages, Mileage 47790 km Price - Rs. 19,500,000/- Negotiable Contact No. 075 3 944 872 TKNV 07

MITSUBISHI REGISTERED

Mitsubishi Montero 3200cc 4M40 diesel turbo engine automatic transmission 95/- 0760 163 322 TKNV-08

Mercedes-Benz REGISTERED

Mercedes Benz CLA 200 2014 Brand new imported fully loaded. With lease... 0777 775 022 / 0760 163 322 TKNV-09

Mercedes Benz SLC Roadster 2018 manufactured 2021 registered. Done only 25,000 km. Immaculate condition. 0777 775 022 TKNV-10

Brand new, Multifunction Benz E 200 car- 2003 with power Curtain, Telephone, Cool box, accessories. 0760 812 496 RPT 01

LAND ROVER REGISTERED

Land rover discovery 4 HSE luxury fully loaded with sunroof moon roof rotary gears. 0777 775 022 /0760 163 322 TKNV-11

Land Rover Range Sport HSE 2018 ued SUV/ 4x4, Engine Capacity 2000cc , country of origin UK, Grey - Wrapped with white colour - leather Electric memory seats - triptronic Diesel Mileage 93000km Price Rs. 65, 000, 000/- Negotiable 0753 944 872 TKNV 12

BMW REGISTERED

BMW i3 electric car. 2013 brand new imported fully loaded. 0777 775 022 / 0760 163 322 TKNV-13

BMW 520D year 2012 used triptronic Diesel, Engine Capacity, 1995 cc, mileage 251000 km, AC, PS, Cruise control, Beige Leather interior Price - Rs 14,500,000/- Negotiable. Contact 0753 944 872 TKNV 14

BMW REGISTERED

BMW X5 Diesel automatic transmission 2002 manufactured 2016 Registered fully loaded jeep. Exchange possible. 0777 775 022 / 0760 163 322 TKNV-15

OTHERS REGISTERED

Audi A8 Petrol Hybrid long wheel base highest edition car. 0777 775 022 TKNV-16

OTHERS REGISTERED

Kia Sorento 2011 Manufactured 2012 registered 2200cc diesel turbo engine automatic transmission Moon roof multifunctional steering wheel beige interior 07 seater. 0777 775 022, 0760 163 322 TKNV-17

Rexton 2008 power up diesel turbo engine automatic transmission sunroof. 0777 775 022, 0760 163 322 TKNV-18

DON'T TXT & DRIVE
A MESSAGE FROM

BUDGET

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

BANDARAGAMA GAMMANPILA

On 11 perch land beautiful tiled house with 3 rooms, (02 with A/C), Hall, 3 Bathrooms with hotwater (01 Servant bathroom), 2 Kitchens, Pantry cupboards, Roller gates, CCTV camera and approved plan



EASY ACCESS TO MAIN TOWNS
3 MINUTES TO BANDARAGANA TOWN, EXPRESSWAY
INQUIRIES - 0778 201 286

A PRIME LAND IN THE HEART OF KURUNEGALA FOR SALE

IDEAL FOR HOSPITAL, DOCTORS APARTMENT OR ANY OTHER COMMERCIAL INVESTMENT

Property Features;
- 80.77 perches
- Access to 40 - foot containers
- 5 minutes from Meerigama Highway exit
- Facing Kurunegala Teaching hospital

CLEAR TITLES

PRICE EXPECTATION 13 MILLION PER PERCH, NEGOTIABLE
0775 333 771

APARTMENT FOR SALE KALUBOWILA

HOSPITAL ROAD FACING
14.5 PERCH
FOR STOREY WITH SIX APARTMENTS BUILDING AND 9.5 PERCH BARE LAND
FOR SALE
CALL AND GET MORE DETAILS
0774 271 404

வாரமஞ்சரி சிறு விளம்பரங்கள்

சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்

முதல் 15 சொற்களுக்கு 250/- ரூபா
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

Daham Home Builders (PVT)LTD

ලක්ෂ 65යි තුට්ටු දෙකයි

- සාලය
- නිදන කාමර 03
- නාන කාමර 02
- කුස්සිය

ඔබගේ ඉඩමට අපගෙන් නිවසක්
Hotline - 0114 37 1200
071 112 31 96 077 6200 196
077 6250 196

VACANCIES FOR PROJECT MANAGERS/ WORK SUPERVISORS WITH LOCAL & FOREIGN QUALIFICATIONS AND EXPERIENCE

EXIST AT THE CLEANING SERVICES SECTION OF A LEADING ENVIRONMENTAL SERVICES COMPANY.

- Planning and Continuation of Factory/ Office Cleaning Services
- Recruitment of required employees and training them
- Maintaining cordial Customer relations
- Knowledge of handling and maintenance of cleaning machinery and equipment

EnCare SISILI HANARO ENCARE (PVT) LTD
No 05, Ryland Place, Colombo 03.
011 2 575 175, 077 4 025 899 hr@sisiliprojects.com

KADUWELA AT VIHARA MAWATHA

34.8 perch land very close to Katunayake Express way with water, Electricity, Telephone facilities for IMMEDIATE SALE

VERY CLOSE TO SLIIT AND CINEC UNIVERSITIES
Call : 0777 300 688

நிசான் லீவ் எலக்ரிக்

சார்ஜ் செய்த பின்னர் 300 கி.மீ. பயணம் செய்யலாம்.

40kwh புதிய பட்டரி இணைக்கப்பட்டுள்ளது
(8 வருடங்களுக்கு பாவிக்கலாம்)
அதிஉயர்ந்த தரமுள்ள கார்
மிகச்சிறந்த நிலையில்
66,800 கி.மீ.
உண்மையான மைல்கள்
89 இலட்சம் ரூபாவிலா
(பேசித் தீர்க்கலாம்)

074 255 44 94
என்ற இலக்கத்தை அழைக்கவும்.

Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

House for sale @ Koralaima

Four bedroom brand new two storied house with a roof top and 20perch land, near kahathuduwa highway entrance - koralaima for immediate sale.
Rs.26.0Mn only (price negotiable)

10 perch land and house can also be purchased separately
House - LKR 21 Mn / Land - LKR 6 Mn

077 57 94 394

ஹக்கல - நுவரெலியா காணி விற்பனைக்கு

ஒவ்வொன்றும் 10 பேர்ச் விஸ்தீரணமுள்ள குடிமனைகளுக்கேற்ற 03 காணித் தொகுதிகள் வன ஒதுக்கீட்டினால் சுற்றியுள்ளதும் மலைத்தொடர்களையும் விவசாய காணிகளையும் பள்ளத்தாக்கு மேடு பள்ளத்தாக்குடனான ரம்மியமான இயற்கைக் காட்சி சொகுசு பங்களாக்கள் அருகிலுள்ள காணிகளின் கபானாக்கள் ஆகியனவற்றையும் கொண்டுள்ளது.

நுவரெலியா-பதுளை பிரதான வீதிக்கு முகப்பாக ரந்தபொல-அம்பேவல வீதி, பால் பண்ணை ஒரு பக்கத்திலும் அமைதியான சூழல், குடிமனைக்கு அல்லது பொழுதுபோக்கு நோக்கங்களுக்காக மிகச்சிறந்தது.

பேர்ச்சொன்றின் இறுதியான விலை 980 000 ரூபா
(பேசித் தீர்க்கலாம்)
தொடர்பெண்
0774 435 843, 0714 205 992

Advertise Here

5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT

Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

வாரமஞ்சரி திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 / பியுமி - 011 2 429 383 /
ரமணி - 011 2 129 347 / கயனி - 011 2 429 342

Sri Lanka's Largest Pipeline Company

Rs. 150/- Upwards

ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD
301 OLD MOOR STREET, COLOMBO 12
Tel: 011- 739 7777 alliedint@eureka.lk www.allied.lk
SINCE 1930
ISO 9001:2015

பொருளாதார அரசியல்

கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

டொலரின் பெறுமதி வீழ்ச்சி

பொருளாதாரம் வழமை நிலைக்கு திரும்புவதற்கான ஒரு சமிக்ஞையா?

இலங்கையில் நீண்ட நாட்களுக்குப்பின் கடந்த மார்ச் மாதம் முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாந் திகதிகளில் உள்நாட்டு அந்நியச் செலாவணிச் சந்தையில் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரித்துச் சென்றமையை அவதானிக்க முடிந்தது. டொலரின் கொள்வனவு வீதங்கள் முறையே 351.72, 343.97, 334.50 ஆகவும் விற்பனை வீதங்கள் 362.95, 356.73, 348.03 ஆகவும் காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறு 362.95 ரூபாவிலிருந்து 348.03 ரூபாவாக டொலரின் விலையில் ஏற்பட்ட சடுதியான வீழ்ச்சி பார்வையா–ளர்களை ஆவென வாய்விளந்து பார்க்க வைத்தது. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் டொலரைப் பதுக்கி வைத்திருப்பவர்களின் வயிற்றில் புளி லீற்றர் கணக்கில் கரைக்கப்பட்டது.

ஆகா நம்மைப் பிடித்த சனியன் நீங்கி விட்டது இனியெல்லாம் சுபமே என்று சிலர் சுபவாதம் பேசி சிலிர்ப்பூட்டினார்கள். அரசாங்கத்தினதும் மத்திய வங்கியினதும் பேரினப்பொருளாதாரக் கொள்கைகள் பலன் தர ஆரம்பித்து விட்டதாக புகழாரம் சூட்டவும் பலர் தவறவில்லை. இனிவரும் நாட்களில் இதுபற்றிய விவாதங்கள் சூடுபிடிக்கத் தொடங்கும் என்பதில் சந்தேகமில்லை. உண்மையிலேயே இலங்கைக்கு சனிமாற்றம் நிகழ்ந்து விட்டதா பீடைகள் ஒழியத் தொடங்கி விட்டதா? நமக்கெல்லாம் நல்ல காலம் பிறந்து விட்டதா? என்ற கேள்விகள் நம் மத்தியிலே எழுவது தவிர்க்க முடியாதது தான். 84 பில்லியன் டொலர்களாகக் காணப்பட்ட இலங்கையின் பொருளாதாரம் 73 பில்லியன் டொலர்களாக வீழ்ச்சியடைந்து தொடர்ந்து சுருங்கிக் கொண்டு செல்கிறது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துகிறோம் பேர்வழி என்று கடுமையான கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்தி வரிகளையும் ஏனைய கட்டணங்களையும் பாரிய அளவில் அதிகரித்து பொருளாதார வீழ்ச்சியின் மத்தியிலும் பொதுமக்களின் உழைப்பில் பெரும்பகுதியை உருவிக் கொண்டு அவர்களின் இடுப்புப்பட்டியை இடுப்பெலும்பு முறியும் அளவுக்கு இறுக்கி வைத்துக்கொண்டு டொலரின் பெறுமதியைக் குறைத்துவிட்டோம் என்று கூறி விட முடியாது. நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் வீழ்ச்சியடைந்து பொருளாதாரப் பின்னடைவைச் சந்தித்துள்ளதால் உருவாகிய கேள்விக் குறைப்பினாலும் தற்காலிகமாக ஏற்பட்டுள்ள நிரம்பல் அதிகரிப்பினாலும் டொலரின் விலை வீழ்ச்சியடைந்துள்ளதே யன்றி பொருளாதாரம் வழமைநிலைக்கு திரும்புவதற்கான ஒரு சமிக்ஞையல்ல.

கடுமையான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நடைமுறையில் உள்ளன. ஏற்றுமதி வருவாய்களை உடனடியாக இலங்கை ரூபாவுக்கு மாற்றவேண்டும் என்ற விதி அமுலில் உள்ளது. இந்நிலையில் டொலருக்கான கேள்வி உள்நாட்டுச் சந்தையில் வீழ்ச்சியடைந்திருந்தது. வங்கிகளுக்கிடையிலான நாளாந்த சராசரி டொலர் கொடுக்கல் வாங்கல்கள் கடந்த வருடம் மே ஜூன் மாதங்களில் 8 தொடக்கம் 10 மில்லியன்களாக வீழ்ச்சியடைந்திருந்தது. இது இப்போது 42 மில்லியன் வரையில் அதிகரித்துள்ளது. ஏற்றுமதி வருவாய்களை நாட்டுக்குள் கொண்டுவருவதில் ஏற்பட்ட அதிகரிப்பு உல்லாசப் பயணிகளின் உள்வருகையில் அண்மையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு வெளிநாடுகளில் இலங்கையர்கள் உழைத்தனுப்பும் பணஅனுப்பல்களில் ஏற்பட்டுள்ள ஒரு அதிகரிப்பு மற்றும் இலங்கையின் பங்குச் சந்தை மற்றும் சர்வதேசப் பிணைமுறிச்சந்தை என்பவற்றில் வெளிநாட்டு முதலீடுகளின் உள்வருகை அதிகரித்தமை என்பவற்றுடன் கடந்த வாரம் உலக வங்கியின் IFC எனப்படும் நிறுவனத்தின் ஊடாக இலங்கையில் உள்ள மூன்று வங்கிகளுக்கு அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்ய உதவும் நோக்கில் 400 மில்லியன் டொலர்கள் வழங்கப்படவுள்ளதாக வெளியான அறிவிப்பு அத்துடன் IMFஇன் நிபந்தனைகள் பதினைந்தையும் பூர்த்தி செய்து விட்டோம் இனி அவர்கள் பணம் தரவேண்டியதுதான் பாக்கி என்று வெளியான அறிவிப்பு இலங்கைக்கு IMF உதவி கிடைப்பதில் மதில் மேல் பூனையாக நின்ற சீனா ஆக்கபூர்வமாக உதவத் தயார் என்று அறிவித்துள்ளமை போன்ற காரணங்களால் ஊக நடவடிக்கைகள் இலங்கை ரூபா வலுப்பெறும் என்ற எதிர்பார்க்கையை உருவாக்கியிருக்கின்றது. இதனால் டொலரை ஒரு முதலீட்டுச் சாதனமாகக் கருதிப் பதுக்கி வைத்திருப்பவர்கள் அவற்றை விற்பனை செய்யத் தலைப்படுவதால் உள்நாட்டுச் சந்தையில் டொலரின் நிரம்பல் மேலும் அதிகரிக்க இடமுண்டு. ஒரு பொருளின் கேள்வி சுருங்கியுள்ள நிலையில் அதன் நிரம்பல் அதிகரிக்குமானால் அதன் விலை வீழ்ச்சியடைவது தவிர்க்க முடியாதது. ஆகவே எதிர்வரும் நாட்களில் இது மேலும் குறைவடைய இடமுண்டு. ஆனால் டொலரின் இந்த நிரம்பல் அதிகரிப்பு நிரந்தரமாகச் செல்லக் கூடியதல்ல என்பதை கவனத்திற்கொள்ள வேண்டியது முக்கியம். தற்காலிகமாக ஏற்பட்டுள்ள இந்த நிரம்பல் அதிகரிப்பு குறுகிய காலத்தில் நின்று போய்விடும். டொலர் வருகைகள் தொடர்ச்சியாக அதிகரிக்க வேண்டுமாயின் பொருளாதார நடவடிக்கைகளில் விரிவாக்கம் ஏற்படவேண்டும் நாட்டின் ஏற்றுமதிகள் அதிகரிக்க வேண்டும். நாட்டின் ரூபா வடிவிலான ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் அதிகரித்துள்ளதாகக் காட்டினாலும் உள்நாட்டில் ஏற்பட்டுள்ள பாரிய விலை அதிகரிப்புகள் காரணமாக ஏற்றுமதிச் சம்பாத்தியங்களில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதைப் போன்றதொரு மாயத் தோற்றத்தை ஏற்றுமதிப் புள்ளிவிபரங்களில் காணமுடியும். நாட்டின் பொருளாதார நிலைமைகள் வழமைக்குத் திரும்பி முதலீடுகள் அதிகரித்து உற்பத்தி நடவடிக்கைகள் விரிவாக்கமடைந்து ஏற்றுமதிச் சம்பாத்தியங்கள் அதிகரிப்பதால் மாத்திரமே இலங்கை ரூபாவின் பெறுமதி நிலை பேறுடைய விதத்தில் பேணப்பட முடியும். மாறாக IMF உலக வங்கி போன்றவற்றின் கடன்கள் கிடைக்கிறதாலோ ஊகவணிக நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் தற்காலிக டொலர் உட்பாய்ச்சல்களால் இலங்கை ரூபாவின் பெறுமதியை நிலை பேறுடைய விதத்தில் அதிகரிக்க முடியாது. ஆகவே இப்போது ஏற்பட்டுள்ள இந்த நிலைமை மிகவும் தற்காலிகமானது. ஆகவே அதனை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார நடவடிக்கைகளை உடனடியாக மாற்றியமைத்து பொருளாதார மீட்சியை அடைவது சாத்தியமாகாது.

ஆகவே இப்போது ஏற்பட்டுள்ள டொலரின் வீழ்ச்சியை மிகக் கவனமாகக் கையாள வேண்டியிருக்கும். டொலரின் பெறுமதியில் திடீரென ஏற்படும் மாற்றங்கள் பொருளாதாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தலாம். அந்த அதிர்ச்சி பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மையை அதிகரித்து ஊகவணிக நடவடிக்கைகளை அதிகரிக்கலாம். எனவே இதுவிடயத்தில் மத்தியவங்கி மிகக் கவனமாகச் செயற்படவேண்டியது அவசியம். இன்றைய நிலையில் இன்னுமொரு பொருளாதார அதிர்ச்சியை தாங்கும் நிலையில் நாடு இல்லை என்பதை கவனத்திற் கொண்டு செயற்படுவது நன்று.

பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

ட்ரோன்களால் ஆக்கிரமிக்கப்படும் ரஷ்ய – உக்ரைன் போர்க்களம்

அரசறிவியலில் சில கோட்பாடுகள் நிலையான வடிவத்தை தருபவை–யாக அமைந்துவிடுகின்றன. அந்த வகையில் யதார்த்தவாதம் கி.மு.4 ஆம் நூற்றாண்டு முதல் இன்றுவரை அர–சறிவியலோடும் அதன் மறுவடிவமான அதிகாரத்தோடும் பின்னிப் பிணை–க்கப்பட்டதாக உள்ளது. இத்தகைய பலக்கோட்பாடு அல்லது இராணுவ–வாதக் கோட்பாடு ஆயுத தளபாடங்களது திறனாலும் அதன் கட்டமைப்புக்களாலும் உருவாக்கப்படுகிறது. உலகப் போர்க–ளில் மட்டுமல்லாது போர்களை தடுப்ப–தும், உலக அமைதியைப் பேணுவதும் உலகளாவிய அதிகாரச் சமநிலையை கட்டமைப்பதும் யதார்த்தவாதக் கோட்பா–ட்டுக்கே உரித்துடையதென அக்கோ–ப்பாட்டைக் கட்டமைத்தவர்கள் குறிப்பி–டுகின்றனர். அந்த வரிசையில் ரஷ்ய–, உக்ரைன் போர் யதார்த்தவாதத்தின் பிந்திய வளர்ச்சியைக் கொண்ட போராக காணப்படுகிறது. இக்கட்டுரையும் ரஷ்ய–, உக்ரைன் போரில் தொழில்நுட்ப ரீதியில் போரைத் தீர்மானிக்கும் ட்ரோன்கள் பற்றிய தேடலாக அமையவுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போர்களங்களில் அறிமுகமான ட்ரோன்கள் தற்போது போர்களை தீர்மானிக்கும் பலம் பொருந்திய ஆயுதமாக மாறிவருகிறது. ஜேனதன் மார்க்கஸ் எனும் போரியல் வல்லுனர் குறிப்பிடுவது போல் போர்களில் மிகப்பிந்திய வருகையை கொண்ட ஆனால் இராணுவ வல்லாதிக்கத்தை தீர்மானிக்கும் ஆற்றலை உடையதாக ட்ரோன்கள் எனப்படும் ஆளில்லாத விமானங்கள் கொண்டுள்ளன என்கிறார். முழு இராணுவ வரலாற்றிலும் ஒரு தனியான ஆயுதம் போரியல் முறைமையை தோற்றுவித்துள்ளது. இரண்டாம் உலகப் போரில் போர்களை டாங்கிகளே தீர்மான சக்தியாக அமைந்திருந்தன. ஆனால் ஆப்கானிஸ்தான், ஈராக் போர்களில் Unmanned Arial Vehicle (UAV) புதிய வடிவத்தை ஏற்படுத்தியது. உலகளாவிய தொழில் நுட்பத்தில் அறிமுகமாகி தற்போது 100க்கும் மேற்பட்ட நாடுகளாலும், ஆயுதக் குழுக்களாலும், தீவிரவாத அமைப்புக்களாலும் ட்ரோன் எனும் போரியல் ஆயுதம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. தனிமனிதர்களை இலக்கு வைப்பதற்கும் பயங்கரவாத அமைப்புகளை அழிப்பதற்கும் அதிகமாக பயன்படுத்தப்பட்டுவரும் ட்ரோன்கள் சிரியா, துருக்கி, இஸ்ரேல் மற்றும் ரஷ்ய, உக்ரைன் போரியல் களங்களில் நேரடியான விளைவுகளை ஏற்படுத்துவது போல் அதற்கு வெளியேயும் அதிக தாக்கங்களை ஏற்படுத்தி வருகிறது. சாமுவல் வென்டிற் குறிப்பிடுவது போல் ஒரு போரின் புலனாய்வுத் தகவல்களை மையப்படுத்திய தாக்குதல்களது திட்டமிடலும் நகர்வுகளும் ட்ரோன்களால் தீர்மானிக்கப்படும் இலத்திரனியல் போர்களாக தற்போதைய போர்க்களங்கள் மாற்றியுள்ளன என்கிறார். உலகளாவிய ரீதியில் உயர்ரகத்தைக் கொண்ட 10 ட்ரோன்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இதில் Predator மிகத் தரம்வாய்ந்ததாக இனங்காணப்பட்டுள்ளது. உலகளாவிய தரம்வாய்ந்த ட்ரோன்களை அமெரிக்க புலனாய்வுத் துறையும் அதன் இராணுவமும் கொண்டுள்ளதாக தெரியவருகிறது. Rq170 Sentinel ட்ரோன்களாகும்.

ஓராண்டை பூர்த்தி செய்துள்ள ரஷ்ய, உக்ரைன் போர் துருக்கிய மற்றும் ஈரானிய தயாரிப்பு ட்ரோன்களின் தாக்குதலால் உக்ரைன் அதிக அழிவுகளை எதிர்கொண்டிருந்தது. ரஷ்யாவின் ட்ரோன் தாக்குதலை எதிர்கொள்ள முடியாது திணறிய உக்ரைன் அத்தகைய தாக்குதலை முறியடிக்கும் உத்தியோடு ட்ரோன்களை பயன்படுத்த ஆரம்பித்துள்ளது. தற்போது ட்ரோன்களே உக்ரைன் போர்களங்களை மட்டுமல்ல அதற்கு வெளியேயான தாக்குதலாகவும் மாறியுள்ளது. அதாவது ரஷ்யாவின் நகரப்பகுதிகளையும் பிரதேசங்களையும் ட்ரோன்கள் ஆக்கிரமிக்க தொடங்கியுள்ளன. இவை அனைத்தும் போரை தீவிரப்படுத்துவது மட்டுமல்லாது பாரிய போராகவும் இரு நாட்டுக்குமான போர் பிராந்திய அளவில் மாறக் கூடியதாகவும் காணப்படுகிறது. ட்ரோன்களது பிரயோகம் தனிமனித சக்திகளை அழிக்கும் திறன்கொண்டதென்பது ஈரானிய இராணுவ தளபதி சுலைமானியின் படுகொலையில் கண்டுகொள்ள முடிந்தது. அத்தகைய நகர்வுகள் ரஷ்ய, உக்ரைனிய தலைமைகள் மீதும் இராணுவ தளபதிகள் மீதும் சாத்தியப்படுத்த வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது.

ரஷ்யாவின் தலைநகரமான மொஸ்கோவிலிருந்து 100 கி.மீ. அப்பால் அமைந்துள்ள குபஸ்ரோபா என்ற பகுதியில் உள்ள மிகப்பெரும் எண்ணை நிறுவனமாகிய காஸ்ப்ரோம் கம்பனியின் எரிபொருள் மையத்திற்கு அருகில் உக்ரைன் தயாரிப்பு ட்ரோன் வீழ்ந்து நொருங்கியுள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. யு.ஜே.22 எயார்போண் ரகத்தைச் சேர்ந்த ட்ரோன்கள் எனவும் உக்ரைனின் யு.கோ. ஆர்.ஜெட் நிறுவனத்தின் தயாரிப்பெனவும் குற்றம் சாட்டியுள்ளது ரஷ்யா. இதே நேரம் ரஷ்யாவின் தென்பகுதியில் இருவேறு இடங்களில் உக்ரையினது ட்ரோன்கள் பறந்துள்ளதாகவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது. இதனைவிட கடந்த 28.02.2023 அன்று ரஷ்யாவின் தெற்குப் பிராந்தியமான பெல்கிரேட் பகுதிக்குள் இரவு வேளை புகுந்த உக்ரைனின் மூன்று ட்ரோன்கள் தாக்குதல் நடத்தியதாகவும் இதில் வாகனங்கள் கட்டடங்கள் சேதமடைந்ததாகவும் பிராந்திய ஆளுநர் தெரிவித்துள்ளார். அதனை அடுத்து 01.03.2023 அன்று மேற்குப் பிராந்தியமான பிரியான்ஸ் பகுதிக்குள் நுழைந்த உக்ரைன் ட்ரோனை பாதுகாப்பு தரப்பு சுட்டுவீழ்த்தியுள்ளதாக பிராந்திய ஆளுநர் அலெக்சாண்டர் போகோமாஸ் தெரிவித்துள்ளார். அதே போல் அடிகியா, கிரஸ்னொடார் பகுதியில் பறந்த ட்ரோன்கள் சுட்டுவீழ்த்தப்பட்டதாக தெரியவருகிறது.

இதே நேரம் ரஷ்யாவின் நெருக்கமான நட்பு நாடான பெலாரஸில் ரஷ்யாவுக்கு சொந்தமான ஏ50 ரக உளவு கண்காணிப்பு விமானம் ஒன்று தாக்கி அழிக்கப்பட்டதாக பெலாரஸ் ஆட்சிக்கு எதிரான போராட்ட அமைப்பான பைபோல் அறிவித்துள்ளது. அதனை நாடுகடந்த பெலாரஸ் எதிர்க்கட்சியும் உறுதிப்படுத்தியுள்ளது. இது பற்றிய செய்திகள் எதுவும் அரச தரப்பால் உறுதிப்படுத்தவில்லை. ஆனால் தாக்குதலை நடத்திய பைபோல் அமைப்பு ட்ரோன் மூலமே தாக்குதல் நிகழ்த்தியதாகவும் தெரிவித்துள்ளது. பெலாரஸ் தலைநகரான மின்ஸ்கில் பகுதியிருந்து 12 கி.மீ. அருகில் அமைந்துள்ள மச்சுலிச்சி வான்படைத் தளத்திலேயே இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளதாக தெரியவருகிறது. இது உக்ரைன் போரில் அதிக முக்கியத்துவம் வாய்ந்த கண்காணிப்பை மேற்கொண்ட விமானம் எனவும் அதன் ராடார் சாதனங்கள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் பெலாரஸ் எதிர்க்கட்சியினர் அறிவித்துள்ளனர். எனவே இத்தகைய ட்ரோன் நகர்வுகள் ரஷ்ய, உக்ரைன் போரை வேறு வடிவத்துக்குள் உட்படுத்தப் போகிறதா என்பதே தற்போதைய பிரதான கேள்வியாகும்.

முதலாவது, உக்ரைன் - ரஷ்யப் போரின் புதிய பரிமாணம் தொடங்கியுள்ளதாகவே தெரிகிறது. ரஷ்ய, உக்ரைன் எல்லைகளை நோக்கி அமைந்த போர் எவ்வாறு உக்ரைன் தலைநகரையும் அதன் வளங்களையும் இலக்கு வைத்ததோ அவ்வாறே ரஷ்யாவின் தலைநகரையும் அதன் வளங்களையும் நோக்கி நகரத் தொடங்கியுள்ளது. அது போரை உக்ரைனிலிருந்து ரஷ்யாவுக்குள் மாற்றுவதாகவே அமைய வாய்ப்புள்ளது. இது ரஷ்ய தலைமை உட்பட இராணுவ ஆளுமைகளை இலக்கு வைக்க வாய்ப்புள்ளதாகவே தெரிகிறது.

இரண்டாவது, உக்ரைன் ட்ரோன்களின் தாக்குதல் இலக்கு தவறியிருந்தாலும் தாக்குதல் ரஷ்யாவின் பொருளாதாரமான எரிவாயு மற்றும் பெற்றோலியம் மீதுதான் என்பது தெளிவாகவே புலப்படுகிறது. அதாவது ரஷ்யாவின் எரிபொருள் மற்றும் பெற்றோலிய ஏற்றுமதி தடையும் ஐரோப்பிய நாடுகளதும் அமெரிக்காவினதும் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதார தடைக்குப் பின்னரும் ரஷ்யாவின் பலம் பெற்றோலியப் பொருட்களாகவே உள்ளது. அதனால் அதனை அழிப்பது என்பது மேற்குலகத்திற்கு அவசியமானதாக தெரிகிறது. அதனை நோக்கியே உக்ரைனது ட்ரோன்கள் தொழில்பட ஆரம்பித்துள்ளன.

மூன்றாவது, உக்ரைனது ட்ரோன் தாக்குதல்கள் ரஷ்யாவை அதிக பாதுகாப்பு அச்சுறுத்தலுக்குள் உள்ளாக்கியுள்ளது. இதற்கான பதில் நகர்வுகள் ரஷ்யாவின் பாதுகாப்பினை பலப்படுத்துவதுடன் உக்ரைன் மீதான தாக்குதல் ஆபத்தானதாக மாறவும் வாய்ப்புள்ளது. அதாவது அணுவாயுதங்களின் குறைந்த பட்ச பாவனைக்கான வாய்ப்புக்கள் அதிகரிக்க கூடியதாக தெரிகிறது. அதற்கான எச்சரிக்கைகள் ரஷ்யாவால் முன்வைக்கப்பட்டு வருகிறது. மறுபக்கத்தில் ரஷ்ய ஜனாதிபதி புடின் உக்ரைனுடனான எல்லைப் பாதுகாப்பினை பலப்படுத்துமாறும் கண்காணிப்பினை அதிகரிக்குமாறும் பாதுகாப்பு அதிகாரிகளை பணித்துள்ளார். அது மட்டுமன்றி ரஷ்யாவின் இன்னோர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நகரமான சென் பீட்டர்பேக்கின் வான் பரப்பு 27.02.2023 அன்று சில மணிநேரம் மூடப்பட்டது. காரணம் வான்பரப்பில் மர்ம பொருள் ஒன்றினை பாதுகாப்புத் தரப்பு அவதானித்தது தான் என்று ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. அதனுடன் ரஷ்யப் படைகள் வான்பாதுகாப்பு ஒத்திகையையும் மேற்கொண்டுள்ளன.

எனவே தொழில்நுட்ப ரீதியில் உக்ரைன், ரஷ்யப் போர் புதிய திசையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது. இத்தகைய இலத்திரனியல் போர் மாதிரியானது அதிக விளைவைத் தரக்கூடியதாக அமைய வாய்ப்புள்ளது. தற்போது எழுந்துள்ள ட்ரோன் போர் அனைத்து நாடுகளாலும் கவனத்திற்குரியதாக மாறவுள்ளது. ஏற்கெனவே அமெரிக்க, ரஷ்ய, துருக்கிய, ஈரானிய ட்ரோன்கள் அதிக திறன் கொண்டவையாக கணிக்கப்பட்டாலும் சீனாவினது ட்ரோன் பற்றிய உரையாடல் அதிக முக்கியத்துவம் கொண்டதாக அமைய வாய்ப்புள்ளதாக தெரியவருகிறது. அதனை ரஷ்யா பயன்படுத்த முனையும் எனவும் ரஷ்யாவின் காலநிலைக்குரிய தயாரிப்புக்கள் எதிர்த்தரப்புக்கு அவசியம் எனவும் தெரியவருகிறது. ஏற்கனவே ஈரான், துருக்கியிடம் ரஷ்யா ட்ரோன்களை கொள்வனது செய்ததுடன் சீனாவிடமும் தற்போது ஆயுத தளபாடங்களை கொள்வனவு செய்ய தயாராகியுள்ளது என்ற நிலையில் போர்க்களம் ட்ரோன்களால் களமாடப்படப் போகிறது. உலகம் அணுவாயுதங்களை காவிச் செல்லும் ட்ரோன்களை விரைவில் தயாரிக்கும் என்ற எதிர்பார்க்கையே அதிகம் வளர்ந்துள்ளது. ஏற்கெனவே ஏவுகணைகளை காவும் ட்ரோன்களை ரஷ்யா கொண்டுள்ளதாக செய்திகள் உண்டு. அமெரிக்காவும் அதனைக் கொண்டுள்ளதாகவும் சுலைமானியின் படுகொலைக்கு பின்னால் அத்தகைய தொழிநுட்பமே பயன்படுத்தப்பட்டதாகவும் அது இஸ்ரேலியத் தயாரிப்பு எனவும் தகவல் உண்டு. எதுவாயினும் ட்ரோன்களால் உலகப் போர்க்களங்கள் ஆக்கிரமிக்கப்படப் போகிறதென்பதே தற்போதைய போரியல் வளர்ச்சியாகவுள்ளது.

வானியல் அறிவியலின் வெற்றிகள்

வானியல் என்பது வரலாற்றில் மிகவும் பழமை வாய்ந்த அறிவியல் துறைகளில் ஒன்றாகும். எகிப்திய நாகரீகங்கள் அக்கால மக்களின் வானியல் ரீதியான அறிவினை பறை சாற்றுகின்றன. வானியல் அறிவியலானது தொடர்ந்தும் வளர்ந்து வருகின்றது. அதன் வளர்ச்சியில் தொலைநோக்கியின் பங்கு இன்றியமையாதது. தொலைநோக்கியைக் கண்டுபிடித்த விஞ்ஞானி கலிலியோ கலிலி என்பவர் ஆவார். இவரே வானியலின் தந்தை எனவும் அழைக்கப்படுகின்றார். இவர் நவீன அறிவியலின் தந்தை எனவும் அழைக்கப்படுகின்றார்.

இவர் ஓர் இத்தாலிய கணிதவியலாளர், வல்லுநர், பொருளியலாளர் மற்றும் இவர் ஒரு மெய்யியலாளரும் ஆவார்.

பதினேழாம் நூற்றாண்டின் அறிவியல் புரட்சியில் பெரும் பங்கினை ஆற்றியுள்ளார். இவரின் முயற்சியால் கண்டுபிடித்த தொலைநோக்கியின் மூலம் பூமியினை தவிர ஏனைய கோள்கள் மற்றும் உடுக்கள் ஆகியவற்றினை அவதானித்துள்ளார். அவதானித்தது மாத்திரமின்றி கண்டுபிடித்துமுள்ளார். 1610ஆம் ஆண்டு தேய்பிறை நாளன்று கலிலியோ கலிலி வியாழனுக்கு அருகில் மூன்று நட்சத்திரங்களை கண்டுள்ளார். அதற்கடுத்த இரவுகளில் இந்த "நட்சத்திரங்கள்" நகர்வதை அவதானித்தார். தான் அவதானித்த இந்த நட்சத்திரங்கள் நிலையானவை இல்லை என கண்டறிந்தார். ஜனவரி 10ஆம் திகதியன்று அவற்றில் ஒன்று மறைந்து விட்டதாக கண்டறிந்தார். திடீரென்று அந்த நட்சத்திரங்கள் வியாழன் என்ற கோளின் பின் மறைந்து கெண்டதை அவர் அவதானித்தார். பின்பு கலிலியோ கலிலி அந்த மூன்று நட்சத்திரங்களும் வியாழன் கோளின் நிலாக்களாக இருக்க வேண்டுமென்பதை அவர் உணர்ந்தார். பின்பு வந்த வானியலாளர்கள் வியாழன் கோளின் நிலாக்களுக்கு கலிலியின் நிலாக்கள் என அவரின் பெருமையினை பறைசாற்றும். வகையில் பெயரிட்டனர்.

வானியல் துறையில் நிக்கலஸ் கொப்பனிகஸ் என்ற வானியலாளரைப் பற்றி பார்ப்போமானால் அவர் போலந்து நாட்டினை சேர்ந்த ஒரு வானியலாளர். அது மட்டுமன்றி இவர் ஒரு கணிதவியலாளரும், பொருளியலாளரும் ஆவார். கதிரவனை மையமாகக் கொண்ட புரட்சிகரமான கொள்கைளை வகுத்து வானியலில் புதிய ஒரு புரட்சியினை கொண்டு வந்து வானியலில் புதிய ஒரு வளர்ச்சிக்கு வித்திட்டவர். 15ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் நிலவியிருந்த பூமியினை மையமாகக் கொண்டே பிற கோள்கள் இயங்குகின்றன என்ற கொள்கையினை மாற்றி கதிரவனை மையமாக கொண்டே கோள்கள் இயங்குகின்றன என காட்டியவர் நிக்கலஸ் கொப்பனிகஸ் எனும் போலந்து நாட்டினை சேர்ந்த வானியலாளர் ஆவார்.

வானியல் என்பது ஒரு வரலாற்று பூர்வமான பல உட்பிரிவுகளையும், துறைகளையும் கொண்டவை. வான்பொருளியக்க அளவியல், அவதானிப்பு வானியல் மற்றும் நாட்காட்டி தயாரித்தல் போன்றவை வானியலுடன் பெரிதும் தொடர்புபட்டவை. 20ம் நூற்றாண்டில், வானியல் அவதானிப்பு மற்றும் கருத்தியல், வானியல் என்று இரு துறைகளாகப் பிரிந்தது விண் பொருட்களினை அவதானித்து தரவுகள் சேகரித்து, அவற்றை இயற்பியல் முறைகளால் பகுத்தாய்வது அவதானிப்பு வானியல் ஆகும். விண்பொருட்கள் மற்றும் நிகழ்வுகளை, கணினி மற்றும், கணக்கீட்டு மாதிரிகள் கொண்டு விளக்க முற்படுவது கருத்தியல் வானியல் ஆகும். இவ்விரு துறைகளும் ஒன்றையொன்று சார்ந்தே இருக்கின்றன. கருத்தியல் கோட்பாடுகளை விளக்க அவதானிப்புகளும், அவதானிப்பு நிகழ்வுகளை விளக்க கருத்தியல் கோட்பாடுகளும் பயன்படுத்தப்படுகின்றன.

விழைஞர்கள் என்பது இன்னும் முக்கிய பங்கு வகிக்கின்ற சில அறிவுத்துறைகளிலே வானியலும் ஒன்றாகும். விசேடமாக மாறுகின்ற தோற்றப்பாடுகளைக் கண்டுபிடிப்பதிலும், அவற்றைக் கவனித்து வருவதிலும் அவர்கள் முக்கிய பங்காற்றுக்கின்றனர். இதை சோதிடத்துடன் குழப்பிக் கொள்ளக்கூடாது. சோதிடம் என்பது கோள்களின் பெயர்ச்சிகளை கண்டறிவதன் மூலம், மனிதர்களின் எதிர்காலத்தினை பற்றி கூற முற்படும் ஒன்றாகும் அறிவியலில் தொடர்புபட்டது ஒன்றல்ல.

இப்பொழுது வானிலைகளின் வகைகளை பற்றி பார்ப்போமானால் கோள்சார் வானியல், சூரிய வானியல் ஒளிசார் வானியல், புற ஊதா வானியல், அகச்சிவப்பு வானியல், ரேடியோ வானியல் என்பனவாக அவை உள்ளன.

கோள்சார் வானியல் எனப்படுவது கோள்கள் பற்றியும் அவற்றின் நிலவுகள் பற்றியும் கற்பதே. பொதுவாக இது சூரியக் குடும்பத்தின் கோள்களையே குறித்தாலும் கூட இதில் ஏனைய கிரகங்களும் அடங்கும்.

சூரிய வானியல் என்பது சூரியனை பற்றிக் கற்பது ஆகும். சூரியன் நாம் வாழும் புவிக்கு மிக அண்மையில் உள்ள விண்மீன் ஆகும். சூரிய வானிலையினை கற்பதால் சூரியனைப் போலவே ஏனைய விண்மீன்களின் தொழிற்பாடுகள் பற்றியும் எம்மால் அறிந்து கொள்ள முடியும்.

தொடர் 17ஆம் பக்கம்...

லி.சிவகஜன்...

அட்டாளைச்சேனையில் தலைமைத்துவப் பயிற்சியும் தொழில் வழிகாட்டல் செயலமர்வும்

சாய்ந்தமருது விசேட நிருபர்

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அட்டாளைச்சேனைப் பிரதேச இளைஞர் கழக சம்மேளனம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகம், எக்ஸ்டோ ஸ்ரீலங்கா, அவரோன் செரிடி சமூக சேவைகள் அமைப்பு போன்றவற்றுடன் இணைந்து லேக் ஹவுஸ் தினகரன் பத்திரிகை மற்றும் வாரமஞ்சரி இணைந்து நடாத்தும் தலைமைத்துவப் பயிற்சி மற்றும் தொழில் வழிகாட்டல் செயலமர்வு எதிர்வரும் திங்கட்கிழமை (06) காலை 08.30 மணிக்கு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் கூட்ட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் அவரோன் செரிட்டி நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் நஸாத் சம்சுதீன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவிப் பிரதேச செயலாளர் பாத்திமா நஹிஜா முசாபீர் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட உதவி பணிப்பாளர் கங்கா சாதுரிக்கா மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் கிழக்கு மாகாண காரியாலயத்தின் உதவிப் பணிப்பாளர் யூ.ஏல்.அப்துல் மஜீத் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் தினகரன் பத்திரிகை மற்றும் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தெ. செந்தில் வேலவர் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஏ.முபாரக் அலி மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம். நளீல் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் தேசிய இளைஞர் கழக சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவர், சட்டக் கல்லூரி மாணவர் விரிவுரையாளர், இணைப்பாளர் கலைமாணி கற்கை நெறி (அரசியல்) திறந்த பல்கலைக்கழகம் ஏ.ஆர். அஸ்ஸாம், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் இளைஞர் சேவை உத்தியோகத்தர் பீ.எம்.றியாத் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் ஷர்ஃபான் ஆகியோர் அழைப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மட்டக்களப்பு சைவ மங்கையர் கழகத்தினரால் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் 125ஆவது ஆண்டை நினைவு கூரும் விழாவும், சாதனையாளர் பாராட்டும், சைவமங்கையர் கழகத்தின் தலைவியும், ஓய்வு நிலை அதிபருமாகிய திலகவதி ஹரிதாஸின் தலைமையில் கல்லடி உப்போடையில் உள்ள துளசி மண்டபத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வின் போது நாவலடி தொடக்கம் மஞ்சந்தொடுவாய் வரையுள்ள பாடசாலை மாணவர்களிடையே சுவாமி விவேகானந்தர் பற்றி நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டி, வினாடிவினாப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு வெற்றிக் கிண்ணங்களும்,பரிசில் புத்தகங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், சாதனையாளர் பாராட்டு விழாவில் 2021ம் ஆண்டு க.பொ.த (உ.த) விஞ்ஞான பிரிவில் அகில இலங்கையில் 1ம் இடத்தைப் பெற்ற புனித மிக்கல் கல்லூரியில் கல்வி பயின்ற மாணவன் செல்வன். தமிழ்வாணன் துவாரகேசிற்கு விசேடமாக நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது. (படங்கள்: வெல்லாவெளி தினகரன் நிருபர்)

அபிநயக் ஷேத்ரா நடனப் பள்ளி இயக்குநர் காலசூரி திவ்யா சுஜேனின் மாணவி நிரஷ்ராயா கஜனின் பரதநாட்டிய அரங்கேற்றம் கடந்த 25 திகதி சனிக்கிழமை மாலை புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் கொள்ளுப்பேரன் டாக்டர் ராஜ்குமார் பாரதி இந்நிகழ்விற்கு இசை வழங்கியதோடு மட்டுமின்றி முதன்மை விருந்தினராகவும் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக பேராசிரியர் சி. மௌனகுரு கலந்து கொண்டார். நிகழ்வில் ஆசிரியர் கலாசூரி திவ்யா சுஜேன் மற்றும் அதிதிகளை மாணவி நிரஷ்ராயா கஜனின் பெற்றோர்கள் கௌரவிப்பதையும், அரங்கேற்ற நடனத் தோற்றத்தையும் காணலாம்.

சுகததாச விளையாட்டரங்கில் அதிபர் வீ. சாந்தினி தலைமையில் நடைபெற்ற கொழும்பு கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தின் 2023 வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்ட விளையாட்டுப் பணிப்பாளார் விக்ரமரட்ண வரவேற்கப்படுவதையும் விளையாட்டு வீராங்கனைகள் ஒலிம்பிக் தீபத்தை ஏற்றுவதையும் அப்பர் இல்ல மாணவிக்கு ஸ்ரீகிருஷ்ணா கோப்பரேஷன் சார்பாக கலந்து கொண்ட ஜோன், ராஜசேகர் வெற்றிக்கேடயம் வழங்குவதையும் மாணவிகளின் விநோத உடை அலங்காரத்தையும் காணலாம்.

தேற்றாதும் அஃது தோற்கத் தூண்டாதீர்

ஆற்றில் ஓடும்
மீனும் நீந்தும்
ஆற்றை எதிர்த்து
விருப்பின் பெயரில்

காற்றில் பறக்கும்
பருந்தும் பறக்கும்
காற்றை எதிர்த்து
விருப்பின் பெயரில்

மண்ணில் விழுந்த
விதையும் முளைக்கும்
மண்ணை பிளந்து
அதன் துகளை பிரித்து

இறந்த உடலைக் கூட
பிரித்து அழித்து
உக்கச் செய்யும்
அந்த நுண்ணங்கி

எல்லாமே இங்கே
எண்ணிப் பாரும்
எதிர்த்து தான்
நடக்கிறது புரிகிறதா?

என் விருப்பில் நான்
ஒரு சொல் சொன்னால்
முறையல்ல என்று
ஏசிப் போதல் சரியோ?

நெல்லை மண்ணில்
போட்டு வருதல்
விதைத்தல் என்றால்
என் செயலும் ஆகாதோ?

முனையும் முன்னே
என்னை தடுத்து
விண்ணைத் தாண்ட
சொல்வது வேடிக்கை

நானும் இயற்கை
அதுவும் புரியாதோ?
என்னையும் என் போக்கில்
விட்டுத் தான் பாருங்கள்

நாளை வரலாம்
நல்ல மாற்றம் பல
நானும் உதவலாம்
உமக்கும் அப்போது

தேற்ற வேண்டாம் எனை
தோற்கும் படி தூண்டி
பழ சுமத்தி தான் நீர்
தடுக்காதீர் அது போதும்

அன்புடன் நதுநசி

காதல் கவிதை

தீராக்காதல்
தீவிரக்காதல்
தினசரிக்காதல்
தேன்தமிழிலே...

என் அமுதே ஆச்சரியமே
கம்பனுக்கு கவிதையானாய்
பாரதிக்கு பார்வையானாயே...

முக்கனியே பேரமுதே
ஆன்றோருக்கு சான்றானாயே
அனைவரினதும் கவசமானாயே

தாமரையே தாரகையே
மொழிகளின் தாயவளே
கவிஞனுக்கு மனையானாய்
கலைஞனுக்கு துணையானாயே

வல்லினமும் மெல்லினமும்
மங்கா செம்மொழியே
பேதமில்லை தமிழ் பேசும் இனத்துள்ளே...
சங்ககால பொக்கிஷமே

சங்கமருவியகால பொற்குடமே
நவீனத்திலும் உன்னழகு நீங்கவில்லையே...

உன் இலக்கியமும் இலக்கணமும்
இன்னிசையாய்வேற்று மொழியினரையும்
காந்தமாய்க் கவருதே...

சிதையா சிற்பமே
இரட்டைக்கிழவியும்
எதுகை மோனையும்
உன் வித்தையா?...

பச்சை பசுமையே
பாஷையின் பாசறையே
உதிரம் சிந்தி உருவான வீரத்தமிழே
ஓர்சொல்லில் ஓராயிரம்
கருத்து உன்னுள்ளே

கோவைப் பழமே
கொடி மல்லிகையே
வார்த்தையைக் கோர்க்க
வாசத்தை வீசுகின்றாயே

கடலோரம் காற்றோடும்
கார்முகிலோடும் கலந்துவிட்ட
முழுநிலவின் அருசுவை நீ எனக்கு

தேன் மொழியே
திகட்டா தேன்வதையே
என்றும் நீங்காக் காதலே நீ எனக்கு

சபானா ஆதம்லெப்பை
ஓட்டமாவடி

சுந்தர வாழ்வு

மாடமாளிகைகள் எமக்கு வேண்டாம்
கார் பங்களாவும்தேவையில்லை
அன்பான அன்னை பாசம் மிக்க தந்தை
உதவிக்கரம் நீட்டும்சகோதரர்கள்
உண்மை அன்புகாட்டும் சகோதரிகள்
இனிமையாகப் பேசி விட்டுக்கொடுத்து
இணைந்து வாழும் கணவன் (மனைவி)
முதுமையில் அரவணைக்கும் பிள்ளைகள்
இத்தனையும் கிடைத்தால் அதுதான்
எமக்கு மகிழ்ச்சி மிக்க சுந்தர வாழ்வு
சுந்தர வாழ்வுபெற நாமெல்லோரும்
வளர்ப்போம் இப்பண்புகளை உணர்வுடன்

குப்பிளான் குமரன்

உழைப்பாளி

சூரியக் கதிர்கள்
சுட்டெரித்த போதினிலும்
சட்டையேதும் செய்திடாது
சலிக்காது உழைப்பினிலே
முழுநாளும் ஓயாமல்
மும்முரமாய் முயற்சித்து
வாணாளைக் கழித்திடுவான்
வியர்வையால் குளித்திடுவான்

கூழுக்கும் கஞ்சிக்கும்
கெஞ்சாது அடுத்தவரை
அஞ்சாத நெஞ்சனாய்
அயராது பாடுபட்டு
முதலாளி உயர்ந்திட

முதலாளாய் முயன்றிடுவான்
முன்னேற்றம் தன்வாழ்வில்
இல்லாமல் கழித்திடுவான்
இரவு பகல் பாராது
இயந்திரமாய்ச் சுழன்றடித்து
இயன்றவரை உழைத்து
இதயங்களை வென்று நிதம்
இன்பங்கள் காணாமலே
இல்வாழ்வைக் கழித்திடவே
இல்லாமை மட்டும் அவனில்லத்திலே
இருப்பிடமாய்க் கண்டிடுவான்

ஹாஜறா கலீலுர் ரஹ்மான்
காத்தான்குடி.

ஒரு பூங்கா மூடப்பட்டதும்..

ஓய்வாக
உட்கார்ந்திருந்தவர்கள்
எல்லாம் சென்றதும்
ஓய்வெடுத்துக் கொள்கின்றன
பெஞ்சுகள்

சிற்றுண்டிக்காரர்கள்
விட்டுச்சென்ற பண்டங்களை
வரிசையில் வந்து
இழுத்துச் செல்கின்றன
எறும்புகள்

குழந்தைகள் விளையாடி
எடுக்க மறந்துபோன
பந்துகள் ஓரிரண்டு
விட்டுப்போனக் குழந்தைகளை
எண்ணி வெம்பக்கூடும்

பராமரிப்புக்காரர்களின்
பழைய ஈர்க்கில் துடைப்பம்
துப்புரவு என்ற பெயரில்
தொந்தரவாய் மாறும்
துன்பத்தில் உழலும் வீதிகள்

மறுநாள் வரவிருக்கும்
புதிய பார்வையாளர்களுக்காக
செடிகள் புதிய பூவாடை
அணியத்தொடங்கிவிடும்,

மாலையில் வந்துசென்ற
காதலர்களிடம் கண்ட
கன்றாவிகளை கிளைகளில்
நின்று கண்காணித்த
பறவைகள் இரவில்
அரங்கேற்றிக் கொள்ளும்

அந்த இரவில் மூடிக்கிடக்கும்
பூங்காவின் பெட்டிகடைகளில்
விற்பனை செய்வதற்காக
குத்தகைக்கு எடுத்தவன்
நகரத்தின் ஏதோ ஓரிடத்தில்
முதல்நாள் சிற்றுண்டித் தயாரிக்கப்
பயன்படுத்திய அதே எண்ணெய்யில்
வடை சுட்டுக் கொண்டிருக்கவும் கூடும்,

மெய்யன் நடராஜ்

பெண்ணெனப் பெருமைகொள்!

பெண்மை எனும் பேதமையை
வேரோடு பிடுங்கிவிடு
மென்மை எனும் குணமதனால்
மேதினியில் உயர்ந்துவிடு

மயக்கத்தில் கிடந்திடாதே
மகுடத்தை இழந்திடாதே
தயக்கங்கள் ஏதுமின்றி
தாய்மைக்கு பெருமை சேர்

கொள்கையில் உறுதிகொள்
கொடியவனின் கதைமுடி
கோவலனை வெல்லும் நல்ல
கோபுரமாய் உயர்ந்துவிடு

விண்ணில் வரும் வெண்ணிலவாய்
விந்தைகள் புரிந்து விடு
மண்ணில் விழும் மழைத்துளியாய்
மங்கையே நீ மலர்ந்திடு

இறகுகளை விரித்துவிடு உன்
இலக்கை நீ அடைந்துவிடு
இலக்கணமாய் நீயிருந்து
இலக்கியத்தில் இடம்பிடி

சிந்தையிலே தேங்கி நிற்கும்
கந்தைகளை களைந்துவிடு
சிரசாக நீ உழைத்தே நாளும்
சீக்கிரமாய் சிகரம் தொடு

கானலாய் உன் கனவு
கலைந்திடவே வேண்டாமே
நாணலாய் நீ மாற
நானிலமும் பெருமைகொள்ளுமே

வேங்கையென பொங்கி எங்கும்
மங்கையரின் மகிமை பேசு
சங்கத் தமிழ்ப் பெண்ணாய் உந்தன்
சங்கடங்கள் தீர்த்து விடு

கற்பு நிலை என்ற கண்ணகியாய்
அற்ப மனிதரை அடியோடு சாய்திடு
அன்பெனும் ஆயுதம் கையிலேந்தி
அகிலத்தில் அன்னையாய் பிறப்பெடு

அச்சமே மிச்சம் என்ற பெரும்
அழுகையை புறந்தள்ளி நீயுமோ
துச்சனைக் கண்டால் கூட வீரத்
துணிவோடு இங்கே எதிர்த்து நில்

ஆணுக்குப் பெண் சமன் என்று
விண்ணகமெங்கும் ஒலிக்கட்டும் இனி
அடிமையாய் ஒடியும் பெண்ணவளின்
அநீதி ஒழிந்தே தொலையட்டும்

அஜி அஜந்தன்
வவுனியா

விலைபேசும் விடியல்கள்

மானிடராய்ப் பிறந்ததற்கு மாதவம் செய்திடல்
மாந்தர் எமக்கு மகத்தான கடன்
மூத்தோர் சொன்ன வார்த்தை இங்கு
முத்தாய் இருக்க வில்லை எனக்கு
சத்தியமும் சகலதும் மறந்து வாழும்
பிறவியால் அத்தனையும் இழந்து போச்சு

மானிடன் என்றாலே மனது கனக்கின்றது
மறக்க முடியவில்லை அவனது ஈனச்செயல்
முத்தான வார்த்தை மொத்தமாய் தந்து
மோசமாய் என்னை கொள்ளை கொண்டான்
அத்தனையும் அன்பென்று நம்பி நின்றேன்
அப்பாவி நான் தோற்று விட்டேன்

ஊறறிய மாலையிட்டு இல்லாளாய் ஆனபின்
அத்தனையும் அள்ளிக்கொடுத்தல் நீதி
பசப்பு வார்த்தைக்கு மயங்கி அந்த
ஆசைக்கு துணையானேன் மோசம் போனேன்
தேவை முடிந்ததால் அவனுக்கு இன்று
தேவையில்லாப் பொருளானேன்
குற்றவாளி நானானேன்

கனத்த நெஞ்சு கண்மூட மறுக்கிறது
இரவின் எல்லை நெடுந்தூரத்தே நிற்கின்றது
கவலைகள் கங்கையாய்ப் பெருக்கெடுத்து நிற்க
காலங்கள் எங்கே உருண்டு போகும்
விடியாத இரவோடு விலைபேசும் விடியல்கள்
வாழ்க்கைத் தத்துவமாய் வந்து போகின்றது

ஏ.ஸீ.ஏ.ரம்ஸீன்

அணுவையும் பிளந்திட்ட...

அறிவியல் உலகில் அறிவது அறமே
அடியொற்றிப் புதினங்கள் படைத்திடல் வளமே
ஆய்ந்திடும் போதிலே புதுமைகள் பிறக்குமே
ஆழமாய்க் கற்றிட அறியாமை அகலுமே

ஆற்றலை வளர்த்திட அறிவே துணையாம்
புதுக்கற்கைகள் நிகழ்த்திடப் புத்தகங்கள் வழியாம்
மற்ற உயிர்களோடொப்பிட இங்கே
மானிடனே அறிவிலுயர்ந்து சிறந்தான்

வையம் சுருங்கி கரங்களில் குவியும்
ஐயமின்றி நாளும் அருந்திடல் பேறே
அலைக்கற்றை மீதேறி ஞானமும் வழிந்திடும்
அருகிலே சென்றிடக் கடலாய் விரிந்திடும்

அன்று முதல் இன்று வரை
வளர்ந்து வரும் மனிதனின் திறமை
ஆக்குந் திறனில் அசுர வளர்ச்சி
அசர வைக்கும் மனித முயற்சி

உடலழிந்திடினும் நிலையாய் நீடிக்கும் புலமை
எண்ணிப்பார்க்க முடியாத வலிமை
அறிவே அணையா அகலாத் தீபம்
அணுவையும் பிளந்திட்ட நல் பெருமை

Dr ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

ஏக்கம்

மண்ணிலே விதை விதைச்சி
விண்ணை நான் பார்த்திருந்தேன்
துளி கூட மழையில்லை
துவண்டது விதையோடு மனமும்

செலவோடு செலவாக
செயற்கையாய் நீர் பாய்ச்சி
பராமரித்து வந்ததால்
பயிர்களும் முளைத்தது

புற்களும் எழும்பியது
புளுக்களும் தாக்கியது
கட்டுக்குள் கொண்டுந்தேன்
கடன்பட்டு எண்ணைகளால்

பச்சைப்பசேலென
பூத்துக் காய்த்து பழுத்தது
ஆவலுடன் நானும்
அறுவடைக்கு நாள் குறித்தேன்

கருமேகம் மூடியது
கடுங்காற்றும் வீசியது
ஓயாத மழைபெய்ய
உயர்ந்தது வெள்ளநீரும்

அறுவடை செய்யவில்லை
அழிந்தது எல்லாமே
கண்ணில் நீர் கசிய
கணக்கை புரட்டுகிறேன்

குருமண்வெளிரவி.

பெண் தொழில்முனைவோரை வலுவூட்டும் தீவா

பெண்கள் தங்கள் குடும்பம், சமூகம், நாட்டிற்கு ஆற்றும் மகத்தான பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையில், இலங்கையின் பெருமைக்குரிய வர்த்தக நாமமான தீவா, பெண்கள் தமது வீட்டில் உற்பத்தி செய்யும் பொருட்கள் மற்றும் வழங்கும் சேவைகளை சந்தைப்படுத்துவதற்கு உதவுவதற்காக, தொழில் முனைவோர் மற்றும் திறன் மேம்பாடு தொடர்பான பயிற்சி அமர்வுகளை நடத்தும் பொருட்டு, Women in Management (WIM) அமைப்புடன் கூட்டு சேர்ந்துள்ளது. அதற்கமைய, 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தங்கொட்டுவவில் ஆரம்பிக்கப்பட்ட 'Diva Dathata Diriya' ('தீவா தேத்தட்ட திரிய' தீவா கைகளுக்கு வலு) திட்டத்தின் முதலாவது முயற்சியானது, தேசிய அளவில் ஏனைய இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படவுள்ளது. இங்கு இடம்பெற்ற 9 நாள் பயிற்சியின் நிறைவில், பங்கேற்பாளர்களின் பயணத்தை கொண்டாடுவதற்கும் அவர்களுக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்காகவும் Hemas Consumer Brands நிறுவனத்தால் தயாரித்து விற்பனை செய்யப்படும் தீவாவினால் விருது வழங்கும் விழாவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இத்திட்டத்தின் மூலம் பங்கேற்பாளர்களுடன் தொடர்ச்சியாக இணைந்து, அவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து, இறுதியில், முதலிடத்தை பெறும் 3 பெண் தொழில்முனைவோர், தமது தொழில் முனைவு பயணத்தை துரிதப்படுத்துவதற்கு அவசியமான மூலதன நிதியை பெறுவார்கள். பெண்களை ஆதரிப்பதிலும், அவர்களை வலுவூட்டுவதிலும், அவர்களுக்கு அதிகாரம் அளிப்பதிலும் தீவா தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளது.

Dialog Star Points மூலம் 'Little Hearts' திட்டத்திற்கு ரூ. 27 மில்லியன் நன்கொடை

2016 ஆம் ஆண்டு தொடக்கம் 'Little Hearts' திட்டத்திற்கு Star Points மூலம் இதுவரை ரூ.122 மில்லியன் நன்கொடை வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையிலுள்ள குழந்தைகளின் வாழ்க்கையில் நீடித்த நல் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில், 450,000க்கும் அதிகளவான டயலொக் வாடிக்கையாளர்கள் ஒன்றிணைந்து கடந்த 2022 ஆம் ஆண்டில் மாத்திரம் 'Little Hearts' (லிட்டில் ஹார்ட்ஸ்) முன்முயற்சிக்கு Star Points (ஸ்டார் பொயின்ட்ஸ்) மூலம் ரூ.27 மில்லியன் நன்கொடையை வழங்கியுள்ளனர். இத்திட்டத்திற்கமைய 2016 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை Star Points மூலம் இந்த முயற்சிக்கு ஒட்டுமொத்தமாக ரூ.122 மில்லியன் நன்கொடை அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

'Little Hearts' முன்முயற்சியானது இலங்கை குழந்தை நல மருத்துவர்கள் கல்லூரியால் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற ஒரு திட்டமாகும். இதயநோய்கள் மற்றும் தீவிர நோய்களின் தாக்கங்களுக்கு உள்ளாகியுள்ள சிறுவர்களின் நலனை மேற்கொண்டு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் நான்கு இருதய சிகிச்சை கூடங்களை கொண்டதான 12 அடுக்கு மாடி வளாக அமைப்பை முன்னெடுத்து மேம்படுத்தும் நோக்கிலேயே இந்த நிதியுதவி அளிக்கப்படுகின்றது. ஒரு வடிகுழாய் ஆய்வகம், 100 க்கும் மேற்பட்ட இதய கோளாறுகள் மற்றும் புதிதாக பிறந்த குழந்தைகளுக்கான தீவிர சிகிச்சை படுக்கைகள், எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை அலகு, மற்றும் மேம்படுத்தப்பட்ட இதய ஆய்வு மற்றும் பயிற்சி வசதிகள் ஆகியனவற்றை உள்ளடக்கியதாக இந்த அடுக்கு மாடி அமைந்திருக்கும்.

கோ–கார்ட்டிங்கை வடக்கு கிழக்குக்கு எடுத்துச் செல்லும் டேவிட் பீரிஸ் குழுமம்

சமூகத்தில் உள்ளவர்கள் குறிப்பாக இளையோர் மோட்டார் விளையாட்டைப் பார்வையிடுவதற்கும், அனுபவத்தைப் பெறுவதற்கும் சந்தர்ப்பத்தை வழங்கும் நோக்கில் டேவிட் பீரிஸ் குழுமம் அண்மையில் வடக்கு, கிழக்கில் கோகார்ட்டிங் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது. இந்த இரண்டு பிராந்தியங்களிலும் சுற்றுலாத் தொழிலை ஊக்குவிப்பது இந்த நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கான மற்றுமொரு நோக்கமாக அமைந்தது.

டேவிட் பீரிஸ் ரேசிங் ரூலெஷர் (பிரைவட்) லிமிடெட் நிறுவனத்தினால் காத்தான்குடி கடற்கரை சதுக்கத்திலும், யாழ்ப்பாணம் பண்ணை வீதியிலும் சிறிய கோகார்ட் பாதைகள் அமைக்கப்பட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த இரு நிகழ்வுகளும் செயல்விளக்க பந்தயங்கள், வழிப்படுத்தும் வீடியோக்கள் மற்றும் செலுத்துனர்கள் தமது அனுபவங்களை பகிர்வதற்கான சந்தர்ப்பங்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன. காத்தான்குடி மற்றும் யாழ்ப்பாண நிகழ்வுகளில் 400ற்கும் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர்.

"DPG கிழக்கு மாகாண கிரிக்கெட் திருவிழா" என்ற தொனிப்பொருளில் DPG அணிக்கும் காத்தான்குடி சமூகத்துக்கும் இடையில் கல்லடி சிவானந்தா மைதானத்தில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது.

கோகார்ட்டிங் பந்தயத்துக்கு சமாந்தரமாக இந்தப் போட்டி நடைபெற்றது. வெற்றிபெற்ற அணி, போட்டியின் நாயகன், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த துடுப்பாட்டக்காரர் போன்ற விருதுகளும் இங்கு வழங்கப்பட்டன. டேவிட் பீரிஸ் குழுமத்தின் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பங்களிப்புடன் குழுப்பணி மற்றும் சமூக ஈடுபாடு என்பவற்றின் வெளிப்பாடாக இந்த கிரிகெட் சுற்றுப்போட்டி அமைந்தது.

2022 நிதியாண்டில் எழுதப்பட்ட மொத்த கட்டுப்பண வருவாயாக

23 பில்லியனை அடையும் Softloic Life

சவால்கள் நிறைந்த பொருளாதார பின்னணியில் சிறந்த வருடாந்தர நிதி முடிவுகளை வெளியிட்டு, Softlogic Life ஆனது 31 டிசம்பர் 2022 இல் முடிவடைந்த ஆண்டில் 23,083 மில்லியன் எழுதப்பட்ட மொத்த கட்டுப்பண வருமானத்தை (GWP) பதிவு செய்ய முடிந்தது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடும்போது 15% வளர்ச்சியாகும். கடுமையான பொருளாதார நிலைமைகளுக்கு முகங்கொடுக்கும் போதும், Softlogic Life நிறுவனம் தனது ஆயுள் காப்புறுதி பத்திரதாரர்களுக்கு 8,264 மில்லியன் ரூபாய் உரிமைகோரலைத் தீர்ப்பதன் மூலம் துறையில் வலுவாக உள்ளது.

டிசம்பர் 31, 2021 இல் இருந்த 16.08% உடன் ஒப்பிடும்போது Softlogic Life இன் சந்தைப் பங்கு (Market Share) 16.87% ஆக அதிகரித்துள்ளது. சந்தைப் பங்கின் தொடர்ச்சியான வளர்ச்சியுடன், Softlogic Life இப்போது ஆயுள் காப்புறுதி சந்தையில் இரண்டாவது பாரிய நிறுவனமாகத் தரப்படுத்தப்பட்டுள்ளது, பல தசாப்தங்களாக தொழில்துறையில் உள்ள மற்றைய காப்புறுதி நிறுவனங்களை விட வலுவான வளர்ச்சி செயல்திறனை வெளிப்படுத்துகிறது. Softlogic Life ஆனது 2022 இல் 15% GWP வளர்ச்சியைப் பதிவு செய்ய முடிந்துள்ளது, இது காப்புறுதித் துறையின் மதிப்பிடப்பட்ட வருடாந்திர வளர்ச்சியான 9.6% ஆகும்.

இவை அனைத்தையும் கொண்டு, காப்புறுதித் துறையின் 10 வருட GWP கூட்டு வளர்ச்சி விகிதமான (10 Year Compound Annual Growth Rate) 14% உடன் ஒப்பிடும்போது Softlogic Life GWP கூட்டு வளர்ச்சி விகிதத்தை 28% பதிவு செய்துள்ளது.

எதிர்காலத் தலைவர்களை உருவாக்கும் முயற்சிக்கு பவர் முன்னுரிமை

நாட்டில் பரந்தளவு வியாபாரப் பிரிவுகளில் பன்முகப்படுத்தப்பட்ட ஈடுபாட்டைக் கொண்டுள்ள, பவர் என அறியப்படும் ஏ. பவர் அன்ட் கம்பனி (பிரைவட்) லிமிடெட் நிறுவனம், தனது ஊழியர்களை மையப்படுத்தி, புதிய பணியிடச் சூழல் மற்றும் புதிய சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையில் அவர்களின் ஆற்றல்களைக் கட்டியெழுப்பும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

பவர் நிறுவனத்தில் சகல ஊழியர் அனுபவ செயற்பாடுகளையும் முன்னெடுப்பதில், சாதாரண வியாபாரச் செயற்பாடுகள் மற்றும் ஊழியர்களின் நிபுணத்துவ செயற்பாடுகள் போன்றன அடங்கியிருப்பதுடன், அவற்றை மேற்கொள்வதில் நிறுவனத்தின் மனித வளங்கள், நிர்வாகம், கொள்முதல் மற்றும் நிலைபேறாண்மை போன்ற செயற்பாடுகளுக்கான பிரதி பொது முகாமையாளர் கென் விஜயகுமார் ஈடுபட்டுள்ளார். இவர், நாட்டில் மனித வளங்கள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்கான முன்னணி நிபுணத்துவ அமைப்பான, இலங்கை பட்டைய நபர்கள் முகாமைத்துவ நிறுவகத்தின் (CIPM) தற்போதைய தலைவராக திகழ்கின்றார். இலங்கை CEO சஞ்சிகையினால், 2022 ஆம் ஆண்டுக்கான சிறந்த மனித வளங்கள் வியாபாரத் தலைவராக கென் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

பவர் அண்மையில், இலங்கையில் சிறுவர் ஆதரவு அனுகூலத்தை முதன் முதலில் அறிமுகம் செய்திருந்தது. அதிகரித்துச் செல்லும் பொருளாதாரச் சவால்களுக்கு மத்தியில், ஊழியர்களுக்கு பெருமளவில் அனுகூலமளிக்கும் வகையில் இது அமைந்திருக்கும். நிறுவனம் தொடர்ந்தும் அதன் ஊழியர்களில் கவனம் செலுத்தி வருவதுடன், தொற்றுப் பரவல் காலப்பகுதியில், அவர்களின் தொழில் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையிலான நடவடிக்கைகள் முதல், பல்வேறு நன்கொடைகள் மற்றும் உளவியல் நலன்பேணும் திட்டங்களையும் முன்னெடுத்திருந்தது.

வெற்றிகர தொழில் முயற்சியாளராக 30 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் அமாமி ஸ்தாபகர் ரணில் டி சில்வா

சுற்றுலா ஹோட்டல்கள் சார்ந்த சேவைகளுக்கான சுத்தப்படுத்தி மற்றும் மணமூட்டி தொகுதிகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் பணியை முதல் தடவையாக ஆரம்பித்த ரணில் டி சில்வா அமாமி வர்த்தகநாமத்தின் உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தைக்கு வழங்கத் தொடங்கி மூன்று தசாப்தங்கள் பூர்த்தியாவதை முன்னிட்டு அவருடைய வெற்றிகரமான தொழில் வாழ்க்கையை கொண்டாடும் வகையில் அண்மையில் அமாமி தொழிற்சாலை வளாகத்தில் வைபவம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

80 களில் ஒபரோய் ஹோட்டலுக்கு எயார் பிரெஷ்னர் வாசனைக் கட்டிகளுடன் கூடிய முதலாவது உற்பத்திகளை விற்பனை செய்ததன் மூலம் தொடங்கப்பட்ட அமாமி நிறுவனமானது, தற்பொழுது எயார் பிரெஷ்னர், ஷெம்பூ, ஷவர் ஜெல், டூத்பேஸ்ட், கிளிசரின் சவர்க்காரக் கட்டிகள், அனைத்து வகை சலவைத் தூள்கள், ஆயுர்வேத மற்றும் இயற்கை மூலிகைச் சார்ந்த உற்பத்திகள் பலவற்றை உற்பத்தி செய்து விநியோகிக்கின்றது.

தொழில் முயற்சியாளராக கடினமான பயணத்தை அடுத்து இன்று வெற்றிகளை அனுபவிக்கும் இவருடைய அமாமி உற்பத்திகளுக்கு சுற்றுலாப் பயணிகள் மத்தியிலும் அமோக வரவேற்பு உள்ளது. மேற்படி உற்பத்திகள் ஜெட்விங், ரமாடா, கோல்பேஸ் போன்ற இலங்கையின் முன்னணி ஹோட்டல்கள் பலவற்றுக்கு விநியோகிக்கப்படுகின்றன.



நெஸ்லே லங்கா பிஎல்சியின் முகாமைத்துவ பணிப்பாளராக பேர்ன்ஹார்ட் ஸ்டெஃபான்

நெஸ்லே லங்கா பிஎல்சி நிறுவனம் தனது முகாமைத்துவப் பணிப்பாளராக பேர்ன்ஹார்ட் ஸ்டெஃபானை மார்ச் 1, 2023 முதல் அமுலுக்கு வரும் வகையில் நியமித்துள்ளது.

ஜேசன் அவன்சென்யா வின் பதவிக்காலம் பெப்ரவரி 28, 2023 இல் முடிவடைகின்ற நிலையில், இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

ஜேசன் தனது பதவிக்காலத்தில் முன்னெப்போதும் இல்லாத வகையிலான சவால்களை எதிர்கொண்டு இலங்கை மற்றும் மாலைதீவில் நெஸ்லே நிறுவனத்தின் செயல்பாடுகளை வெற்றிகரமாக வழிநடத்தியுள்ளதுடன், மார்ச் 1, 2023 முதல் நெஸ்லே பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானின் முகாமைத்துவப் பணிப்பாளராகப் புதிய பொறுப்பை ஏற்கின்றார்.

22 வருடங்களுக்கும் மேலான அனுபவத்துடன் நெஸ்லே லங்கா நிறுவனத்தில் இணைந்துகொள்கின்ற பேர்ன்ஹார்ட் ஸ்டெஃபான், பிரான்சில் உள்ள நெஸ்லே வோட்டர்ஸ் நிறுவனத்துடன் கூட்டிணைப்பு முயற்சிகள் மற்றும் பிற வணிக கையகப்படுத்துதல் துறையில் தனது தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். அடுத்தடுத்த ஆண்டுகளில், அவர் ஐக்கிய இராச்சியம், ஜேர்மனி மற்றும் சுவிட்சலாந்தில் உள்ள நெஸ்லே வோட்டர்ஸில் கூடுதல் பணிப்பொறுப்புடன் பல்வேறு பாத்திரங்களை ஏற்றுக் கொண்டார்.

CNCI உயர் விருதை வென்ற சித்தாரா லிமிடெட் நிறுவனம்

முன்னணி அச்சிடும் மை உற்பத்தியாளர்களான சித்தாரா லிமிடெட், இலங்கை தேசிய கைத்தொழில் சபை ஏற்பாடு செய்த தொழிற்துறை உயர் விருது விழாவில் தேசிய மட்டத்தின், பாரியளவிலான பிரிவின் உற்பத்திப் பிரிவில் உயர் திறன் விருதை வென்றுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் வெகு விமரிசையாக நடைபெற்ற மேற்படி விருது விழாவில் நிறுவனத்தின் பணிப்பாளர் சயங்க விக்கிரமசிங்க தமக்கான விருதை பெற்றுக்கொண்டார். கைத்தொழில்துறையில் திறம்பட செயற்படுகின்ற சிறந்த கைத்தொழிலாளர்களை இனங்கண்டு அவர்களை கௌரவிப்பதன் மூலம் நாட்டின் கைத்தொழில்துறையை மேம்படுத்தும் நோக்கத்தில் மேற்படி CNCI தொழில்துறை விருது விழா நடாத்தப்படுகிறது.

"CNCI ஐ விருது விழாவில் கிடைத்த இந்த வெற்றியையிட்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகிறோம்.

மேம்பட்ட தரத்துக்காக நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பு தேசிய மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளமையே இதன் மூலம் வெளிப்படுகிறது. சர்வதேச தர நியமங்களுக்கமைய அச்சிடும் மை உற்பத்திக்கு நவீன தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களை பயன்படுத்தும் நாம் பன்னாட்டு கம்பனிகள் பலவற்றுக்கு சேவை வழங்குகின்றோம். எமது வாடிக்கையாளர்களும் பணியாளர்களுமே எமது வெற்றியின் அடிப்படை உந்துசக்தியாகும்" என விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மஞ்சரி சிறுகதை

கடவுள் வாழும் இல்லம்

அருளம்பலம் நீண்ட நேரமாக படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தபடியே கிடந்தார். நள்ளிரவு தாண்டியிருந்தும் உறக்கம் வர மறுத்தது. எப்போதாவது ஒருநாள் இடையிடையே இவ்வாறுதான் விடியவிடிய உறக்கமே இல்லாத இரவாகிப் போகின்றது.

தனது வாழ்க்கைப் பருவத்தில் அவ்வப்போது நடந்த சம்பவங்களின் நினைவுகள் அவரது மனதில் ஒவ்வொன்றாக வந்து செல்வதுண்டு. அந்த நினைவுகள் அவரது உறக்கத்தை முற்றாகவே விரட்டியடித்து விடுகின்றன. இன்றும் அவ்வாறுதான் நினைவுகள் வந்து வந்து செல்கின்றன.

தொலைவிலுள்ள கடல் இரைகின்ற இரவுச்சத்தம் அவர் காதுகளில் வந்து துல்லியமாக ஒலித்தது. பேத்தாழை கிராமத்திலுள்ள அவரது வீட்டுக்கும் கடலுக்கும் இடையிலான தூரம் இரண்டு கிலோ மீற்றருக்கும் அதிகம்.

அருகிலுள்ள வீதியில் கனரக வாகனமொன்று சுமைதாங்க இயலாமல் இரைந்தபடி செல்கின்றது. அயல்வீட்டு அபிராமியின் சேவல், இறக்கைகளை அடித்து நான்கு தடவை உரத்தசத்தத்தில் கூவிற்று. முற்றத்து மாமரத்தில் வௌவால் வந்து அமர்வதும், மாங்காய்கள் ஒன்றிரண்டு கீழே வீழ்வதும் அவருக்குக் கேட்டது.

கதவடியில் படுத்துக் கிடந்த நாய் ஒரு தரம் உறுமிவிட்டு மீண்டும் உறங்கியது.

அந்த நீண்ட இரவில், அக்கிராமத்தில் தான் ஒருவன் மாத்திரமே உறக்கமின்றி விடியவிடிய கொட்டக் கொட்ட விழித்திருப்பதாக உணர்ந்தார் அருளம்பலம்.

அயல் வீட்டு அபிராமி, அவரது மூத்த சகோதரியின் மகள். தந்தையும் தாயும் மறைந்த பின்னர் கணவனுடனும் இரு பெண்பிள்ளைகளுடனும் வாழ்ந்தாள் அபிராமி. சில காலத்தின் பின்னர் அவளது கணவனை யுத்தம் பறித்துச் சென்று விட்டது. அபிராமி ஆதரவற்றுப் போனாள். ஆனாலும் அவள் நிலைகுலைந்து போகவில்லை. அவளது சிறிய உழைப்பில் பிள்ளைகளின் ஆதரவுடன் அக்குடும்பம் நகர்கின்றது.

அபிராமி தினமும் வந்து அவருக்கு உணவு சமைத்துத் தருவதற்குத் தயாராக இருந்தாள். ஆனால் அருளம்பலமோ எந்த உதவியையும் எவரிடமிருந்தும் ஏற்கத் தயாராக இல்லை. மனைவி பாக்கியம் மறைந்த பிறகு தனக்குரிய அன்றாட உணவை அவராகவே சமைப்பதற்குப் பழகிக் கொண்டார்.

வீட்டுக்கு வெளியே கிடுகுகளால் வேயப்பட்ட சிறிய சமையலறை. காலையில் எதையாவது கொறித்துக் கொள்வார். நண்பகலளவில் மதிய உணவு சமைக்கத் தொடங்கினாரென்றால், அந்த உணவு இரவுக்கும் அவருக்குப் போதும்.

அவர் தனக்குரிய அன்றாட செலவினங்களை பட்ஜட் இட்டு வாழ்வதற்கு பழக்கப்படுத்திக் கொண்டார். மற்றவரிடம் கையேந்தாத வாழ்க்கை முறைதான் கௌரவமானது என்ற கொள்கையில் அருளம்பலம் விடாப்பிடியாக இருந்தார்.

அபிராமி வீட்டுச் சேவல் ஓயாமல் சிறகடித்துக் கூவிக் கொண்டேயிருந்தது.

அதற்குள் விடிந்து விடப் போகின்றதா? இன்று உறக்கமே முற்றாக இல்லைப் போலும். அதிகாலைப் பனி வேளையிலும் உடலெங்கும் வியர்ப்பது போல உணர்ந்தார் அருளம்பலம். முதுமைக் காலத்தில் தனிமை வாழ்க்கையை பழக்கப்படுத்திக் கொள்வதென்பதே பெரும் போராட்டமாகத்தான் இருக்கின்றது. இன்னும் சில வருடங்கள் வாழ்ந்து விட்டுப் போனால் அதுவே போதும். அதற்கிடையில் மகன் சயந்தனையும், இரு பேரப்பிள்ளைகளையும் ஒரேயொரு தடவையாவது நேரில் பார்த்துவிட வேண்டும்.

சயந்தன் அவரை விட்டுப் பிரிந்து கனடாவுக்குப் போய் பதினாறு வருடங்களாகின்றன. இடையில் ஒரேயொரு தடவைதான் அவன் இங்கு வந்து போனான். அப்போது அவனுக்குத் திருமணம் ஆகவில்லை.

மனைவியுடனும் பிள்ளைகளுடனும் அடுத்த வருடம் இலங்கைக்கு வரப் போவதாக சயந்தன் கடந்த வாரம் பேசும் போது கூறியிருந்தான்.

இந்த வீட்டில் வந்து அவர்களால் ஒருநாள் கூட தங்கியிருக்க முடியாது. இரண்டு அறைகளும் மண்டபமும் கொண்ட அக்காலப் பழைய வீடு. அடைமழை பெய்யும் போது கூரையோடுகளின் இடைவெளிகளால் தண்ணீர் உள்ளே தெறிப்பது அருளம்பலத்துக்குப் பழகிப் போன விடயம். கனடாவில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் இதனையெல்லாம் சமாளித்துக் கொள்ளப் போவதில்லை.

மட்டக்களப்பு நகரில் உள்ள ஹோட்டலொன்றில் அறை எடுத்து குடும்பத்துடன் தங்கியிருக்கப் போவதாக சயந்தன் கூறியதாக ஞாபகம். மகனையும் பிள்ளைகளையும் பார்க்க வேண்டுமென்ற ஏக்கம் இவ்வாறான உறக்கம் இழந்த இரவுகளில்தான் அவருக்குப் பெரும்பாலும் தோன்றுவதுண்டு.

சயந்தனையும், அவனது மனைவி பிள்ளைகளையும் புகைப்படத்தில்தான் அவ்வப்போது பார்த்துக் கொள்வார் அருளம்பலம். அவனுக்கு இரு பிள்ளைகள். மூத்தவன் பாக்கியத்தின் அக்காலத் தோற்றம். அவன் சிரிக்கும் போது பாக்கியத்தைப் போல கன்னத்தில் சிறிதான குழி விழுவதை புகைப்படத்தில் அவதானித்தார். புன்னகைக்கும் போது சற்றே சரிந்த உதடுகள்.

சயந்தனின் நினைவு வாட்டும் போதெல்லாம் அந்தப் புகைப்படத்தை ஒரு தடவை எடுத்துப் பார்த்துக் கொள்வார்.

"ஸ்மார்ட் போன் ஒன்று அனுப்பி விடுறன் அப்பா. நாம் வீடியோவில் பேசலாம். நேரில் பேசுவது போல இருக்கும்" என்று சயந்தன் சொன்ன போது உடனேயே மறுத்து விட்டார்.

"உனக்கு வீண் செலவு" என்று சமாளித்து விட்டார்.

"இந்த சின்ன ஃபோன் தாராளமாகப் போதும். எனக்கு எதுக்கு அதெல்லாம் மகன்?"

இன்றைய நவீன காலத்துக்கு ஒவ்வாத சுபாவம் கொண்டவர் அப்பா என்பது சயந்தனுக்குத் தெரிந்திருந்தது. அம்மா வாழ்ந்த அந்த வீடுதான் அவரது ஆலயம். அவள்தான் அவரது தெய்வம். அந்த வீட்டில் அவளது நினைவுகளைச் சுமந்து கொண்டு வாழ்வதைத் தவிர வேறெந்த உலகத்துக்குள்ளும் அவர் பிரவேசிக்கப் போவதில்லையென்பது சயந்தனுக்கு நன்றாகவே புரிந்திருந்தது.

மகனிடமிருந்து பணம் வருவதையும் அவர் விரும்பவில்லை. ஒரேயொரு தடவை அவன் அனுப்பிய ஐம்பதாயிரம் ரூபாவைப் பெற்றுக் கொண்டார். இனிமேல் பணம் அனுப்ப வேண்டாமென்று மகனிடம் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

"உங்கட செலவுகளுக்கு மாதாமாதம் காசு அனுப்புறனப்பா..." என்று சயந்தன் சொன்ன போது அவர் மறுத்து விட்டார்.

"எனக்கு பென்ஷன் வருது. முப்பத்து மூவாயிரம் ரூபா. அது போதும் மகன்."

சயந்தன் தனக்குள் சிரித்தான். அவனது ஒருநாளின் உழைப்பு அதனை விட அதிகம். அதன் பிறகு அவன் பணம் அனுப்பவில்லை. தந்தையின் பிடிவாத சுபாவம் அவனுக்குத் தெரிந்திருந்தது.

இன்றைக்கென்று அபிராமியின் சேவல் ஓயாமல் கூவிக் கொண்டேயிருக்கின்றது.

இன்று இனிமேல் உறக்கம் வரப் போவதில்லையென்பது புரிந்தது. படுக்கையை விட்டெழுந்து, கட்டிலின் தலைமாட்டில் இருந்த டோர்ச் லைற்றைத் தேடியெடுத்தார். வீடெங்கும் கும்மிருட்டில் மூழ்கிக் கிடந்தது. சுவரில் வெளிச்சம் பாய்ச்சி, கடிகாரத்தில் நேரம் பார்த்தார். நள்ளிரவையும் தாண்டி 3.30 மணியாகியிருந்தது. பொழுது விடிவதற்கு இன்னும் இரண்டரை மணி நேரம் இருக்கின்றது.

இருபது வருடங்களுக்கு முன்னர் அரசசேவையிலிருந்து அவர் ஓய்வு பெற்ற வேளையில், சகஊழியர்கள் அன்பளிப்பாகத் தந்த சுவர்க்கடிகாரம் அது. புகையிரதத் திணைக்களத்தில் எழுதுவினைஞராகக் கடமையாற்றியவர் அருளம்பலம். பற்றறியில் இயங்கும் கடிகாரம் தனக்கு வேண்டாமென்று உறுதியாகச் சொல்லி விட்டார் அவர்!

நவீனங்களில் அவருக்கு நம்பிக்கையில்லை. நவீன சாதனங்களைப் போன்று நவீன வாழ்க்கைக் கோலமும் போலியானதென்று அருளம்பலம் நம்பினார். அவரது வற்புறுத்தல் காரணமாக விசை கொடுத்து இயக்கும் பழங்கால கடிகாரமொன்றைத் தேடி அவரது அலுவலக ஊழியர்கள் அலைய வேண்டிய தாயிற்று.

காலையில் எழுந்ததும் சுவர்க்கடிகாரத்துக்கு விசை கொடுப்பது அவரது நாளாந்த கடமைகளில் ஒன்றாக இருந்தது. பாக்கியம் உயிரிழந்து போன தினத்தன்று காலையில் மாத்திரம் கடிகாரத்துக்கு விசை கொடுக்கவில்லை. அது அன்று பின்னேரம் நின்று போயிற்று.

மின்விளக்கை ஒளிரச் செய்து, மேசையில் இருந்த கூஜா தண்ணீரை டம்ளரில் ஊற்றிக் குடித்தார். பனிக்காலம் என்பதால் தண்ணீர் சில்லென்றிருந்தது. ஆனாலும் வழமைக்கு மாறாக இன்று ஒருவிதமான புழுக்கத்தை உணர்ந்தார். மழை பெய்யப் போகின்றதோ என்று தனக்குள்ளே சொல்லிக் கொண்டவராக கதவைத் திறந்து வானத்தைப் பார்த்தார்.

வாசற்படியில் படுத்துக் கிடந்த நாய் கதவுச்சத்தம் கேட்டு உறுமியது. "டைகர்...பேசாமல் படு" என்றதும் அது மீண்டும் சுருட்டிக் கொண்டது. வானம் நிர்மலமாக இருந்தது. எங்கும் தாரகைகள் தூவப்பட்டிருந்தன, பனிக்காற்று வந்து முகத்தைத் தாக்கியது. கதவை மூடிக் கொண்டு, விளக்கை அணைத்து மீண்டும் படுக்கையில் சரிந்தார். உறக்கம் இப்போது முற்றாகவே அவரை விட்டுப் போயிருந்தது.

சுவரில் 'இச் இச்' என்று பல்லி சத்தமிட்டது. அது மீண்டும் மீண்டும் ஒலியெழுப்பியது. அது ஓய்ந்து விடுமென்று எதிர்பார்த்தார். பல்லி ஓயவில்லை.

பல்லி ஒலியெழுப்புகின்ற வேளைகளிலெல்லாம் பாக்கியத்தின் நினைவு வந்து அவரைச் சூழ்ந்து கொள்வதுண்டு. அவள் இரவில் மோட்சத்தில் இருந்து கீழிறங்கி அங்கே வந்து, படுக்கையில் கிடக்கும் தன்னைப் பார்த்து விட்டுச் செல்வதாக அவருக்கு பிரமை தோன்றுவதுண்டு. இப்போதும் பாக்கியம்தான் வந்து விட்டாளா என்று நினைத்தார். ஆனாலும் தனது அசட்டுத்தனம் அவருக்குப் புரியாமலில்லை.

டோர்ச் லைற்றை எடுத்து சுவரில் தொங்கிய பாக்கியத்தின் உருவப்படத்தின் மீது ஒளியைப் பாய்ச்சினார். மாலையிட்ட படத்தில் இருந்த அவளது முகத்தில் என்றும் மாறாத அதே புன்னகை. சற்றே சரிந்தவாறு புன்னகைக்கும் உதடுகள். கன்னத்தில் தோன்றும் இதே குழிதான், பேரனின் கன்னத்திலும் உள்ளது. உதடுகளும் அவ்வாறேதான்.

"ஏனடி என்னைத் தனியாக விட்டிற்றுப் போனாய்?"

தனக்குள் இலேசாக முணுமுணுத்தார் அருளம்பலம்.

டோர்ச்சை அணைத்து, கட்டிலின் தலைமாட்டில் வைத்து விட்டு மல்லாந்து படுத்தார்.

"அப்பா உங்களுக்கு பிடிவாதம் அதிகம். அதைத் தவிர வேறு எதையுமே என்னால் சொல்ல முடியவில்லை" என்று கனடாவிலிருந்து மகன் சயந்தன் கடந்த வாரம் கூறியது இப்போதும் அருளம்பலத்தின் காதுகளில் கேட்பது போல இருந்தது.

"அம்மாவும் இல்லை. நாங்களும் பிள்ளை குட்டிகளுடன் கனடாவில்... அங்கே நீங்கள் தனியே இருந்து இனிமேல் என்ன செய்யப் போறீங்க? உங்களுக்கும் சிரமம். எனக்கும் எப்பவும் உங்களை நினைச்சுக் கவலை. அதைப் புரிஞ்சு கொள்ளுங்களன் அப்பா."

சயந்தனின் குரலில் கடந்த வாரம் கடுமை தொனித்தது.

அருளம்பலம் மகனுக்குப் பதில் கூறவில்லை. தனது இன்றைய மானசீக உலகம் பற்றி அவர் விபரித்துக் கூறினால், அவன் அதனைப் புரிந்து கொள்ளப் போவதில்லையென்பது அவருக்குத் தெரியும்.

பாக்கியம் மறைந்து போய் இருபது வருடங்கள் கடந்து விட்டன. அதன் பின்னர் ஓரிரு வருடங்கள்தான் ஒரேயொரு மகனான அவனுடன் துயரங்களைப் பகிர்ந்து கொண்டு வாழக் கிடைத்தது. சயந்தன் கனடா போன பின்னர் தனிமையே அவருக்கு நிரந்தரமாகிப் போனது.

அருளம்பலத்தையும் கனடாவுக்கு வந்து சேர்ந்து விடும்படி கடந்த ஐந்தாறு வருடங்களாக ஓயாமல் அழைத்துக் கொண்டேயிருக்கின்றான் சயந்தன். அவருக்கு மனம் ஒப்பவில்லை.

பாக்கியம் இப்போதும் இங்குதான் வாழ்கிறாள். அவளது ஆத்மா அவரைச் சுற்றியே உலவிக் கொண்டிருக்கின்றது என்றுதான் அவர் நம்புகின்றார். இந்த நம்பிக்கையைத் துறந்து எங்கும் கண் காணாத தேசத்துக்குச் சென்றுவிட மனம் சம்மதிக்கவில்லை.

பாக்கியத்துடன் இல்லறத்தைத் தொடங்கிய வீடு இது. அவளுடன் இருபது வருடங்கள் வாழ்ந்த இல்லம். சயந்தன் படிக்கும் காலத்தில் ஒருநாள், தனது கண் முன்னே அவளைப் பறிகொடுத்ததும் இங்குதான்.

அன்றைய நாளின் அதிகாலைத் துயரம் மனக்கண்ணிலிருந்து இன்னும் தான் மறைய மறுக்கின்றது. தினமும் ஒரு தடவையாவது அது நினைவில் வந்து போகின்றது.

தினமும் அதிகாலை ஐந்து மணிக்கு நித்திரை விட்டெழுந்து இயங்கத் தொடங்கி விடுவாள் பாக்கியம். அதிகாலை இருட்டு வேளையில் முற்றத்துப் பூமரத்தில் அவள் செவ்வரத்தம்பூ பறிக்கச் செல்வது அருளம்பலத்துக்கு விருப்பமில்லை.

தெருவில் எந்த வேளையில் என்ன நடக்குமென்பதைக் கூற முடியாது. அவர் பலதடவை எச்சரித்திருக்கிறார். ஆனாலும் அவள் அதனைப் பொருட்படுத்திய தில்லை. அவர் அச்சப்பட்ட மாதிரியே அன்று நடந்தது.

பாக்கியம் கதவைத் திறந்து பூப்பறிக்க முற்றத்துக்குச் சென்ற அடுத்த நிமிடத்தில், எதிரும்புதிருமாக வேட்டுச்சத்தங்கள் அதிரத் தொடங்கியதும் அருளம்பலம் அச்சத்தில் உறைந்து போனார். சயந்தன் தரையில் பாய் விரித்து ஆழ்ந்த உறக்கத்தில் சுருண்டு படுத்துக் கிடந்தான்.

அருளம்பலம் படுக்கையை விட்டெழுந்து வெளியே முற்றத்தை நோக்கி விரைவதற்கிடையில் வேட்டுச் சத்தங்கள் படிப்படியாகத் தணிந்து போய் வேறெங்கோ தொலைவில் கேட்டன.

பூமரங்களை நோக்கி டோர்ச் லைற்றை அடித்தவாறு அவர் பாக்கியத்தைத் தேடினார்.

அவள் பூமரத்தின் அடியில் நிலத்தில் வீழ்ந்து கிடந்தாள். தரையில் சிந்தியிருந்த இரத்தம், டோர்ச் லைற் வெளிச்சத்தில் அவரை அச்சுறுத்தியது. அவளது உடையும் இரத்தத்தால் தோய்ந்திருந்தது. தரையில் வீழ்ந்து கிடந்த அவளை வீட்டுக்குள் இழுத்துக் கொண்டு வந்து சேர்ப்பது பெரும்பாடாகிப் போனது.

அவள் சன்னமான குரலில் முனகினாள். அவளது சூடான குருதி அருளம்பலத்தின் உடலை நனைத்திருந்தது. அருளம்பலம் அச்சமும் பதற்றமும் கொண்டார். சயந்தனையும் எழுப்பிக் கொண்டு, விடிந்தும் விடியாததுமான அதிகாலை வேளையில் பாக்கியத்தை வாழைச்சேனை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று சேர்த்த போது, அவளது முனகல் சத்தம் நின்றிருந்தது.

அருளம்பலத்தைத் தவிக்க விட்டுப் போயிருந்தாள் பாக்கியம். அவர் நிலைகுலைந்து போனார். அதன் பின்னர் வாழ்க்கை சூனியமாகிப் போனது. அவர் வாய்விட்டு அழவில்லை. மனதுக்குள் எப்போதும் மனைவிக்காக அழுதார். சயந்தனின் படிப்பும் ஒழுங்கின்றியே போய்க் கொண்டிருந்தது. மட்டக்களப்பிலுள்ள பாடசாலைக்கு தினமும் சென்று வருவதென்பதே அந்நாளில் மரணபயம் நிறைந்ததாகிப் போனது. அவன் உயர்தர இறுதிப்பரீட்சை வரை பாடசாலையைத் தொடர்வதே இயலாத காரியமாகிப் போனது.

வாரத்தில் ஓரிரு தினங்கள் மாத்திரம் பாடசாலைக்குச் சென்று வந்த சயந்தன், இறுதியில் முற்றாகவே கல்வியைத் தலைமுழுகி விட்டான். அக்காலத்தில் ஊரில் வீட்டில் நிம்மதியாக வாழ்வதிலும் எந்நேரமும் ஆபத்துகள்...

"அப்பா இனிமேல் இங்கு சரிவராது. நான் கனடா போகப் போறன்" என்றான் ஒருநாள். அருளம்பலம் திகைத்தபடி பார்த்தார். "நடக்கிற காரியத்தைக் கதை மகன்" என்றார்.

"அது நடக்கிற காரியம் அப்பா. காசுதான் பிரச்சினை" என்றான் அவன்.

அதன் பிறகு அவனது கனடா பயணம் தொடர்பான விவாதங்கள் தந்தைக்கும் மகனுக்கும் இடையில் சில மாதங்களாகத் தொடர்ந்தன. தனது ஒரேயொரு மகன் உயிரைத் தப்பவைத்து, கண்காணாத தேசத்திற்காவது சென்று வாழட்டும் என்ற முடிவுக்கு அருளம்பலம் வருவதற்கு ஓரிரு மாதங்கள் சென்றன.

ஊரின் எல்லையில் அவருக்கிருந்த ஒரு ஏக்கர் காணியையும், தொலைதூரத்தில் இருந்த ஐந்து ஏக்கர் வயற்காணியையும் மிகுந்த மனத்துயரத்துடன் விற்றுப் பணமாக்கி சயந்தனிடம் ஒப்படைத்தார்.

கனடாவுக்கு எவ்வாறு போய்ச் சேரப் போகின்றேனென்ற விளக்கங்களை தந்தையிடம் சயந்தன் சொல்லவில்லை. அந்த ஆபத்து நிறைந்த துன்பங்களை அவர் தாங்கிக் கொள்ளப் போவதில்லை.

ஆனால் வீட்டில் இருந்து கொழும்புக்குப் புறப்பட்ட ஒரு மாத காலத்தில் எவ்வாறோ கனடா போய்ச் சேர்ந்து விட்டான் சயந்தன்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

கிண்ணையடி
எஸ். பாண்டியன்

மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 60



திரு/திருமதி.செல்வி .....
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி .....
.....
.....
....
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 60
த.பெ.இல.834. கொழும்பு

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 60

இடமிருந்து வலம்

1. சமுதாயத்துக்குக் கிடைக்கும் பயன் அல்லது நன்மை
4. வீடு அல்லது காணியின் எல்லைப் பாதுகாப்புக்கு அமைக்கப் படுவது
6. பலம்
7. மேலுடை
8. அடிப்பதற்குப் பயன்படுத்துவது (குழம்பியுள்ளது)
10. தகுதி (திரும்பியுள்ளது)
11. தீப்பெட்டிக்குள் இருந்தாலும் தீயைப் பரப்பும்
13. கோடை(திரும்பியுள்ளது)
16. திறப்பு
18. எரியூட்டல்
21. ஒரு கருமத்தை நடத்தாமல் செய்தல்
23. சுலபமற்ற நிலை(குழம்பியுள்ளது)
24. வெளிப்படையாக அல்லது தெளிவாகத் தெரிவது (குழம்பியுள்ளது)

மேலிருந்து கீழ்

1. புத்துணர்வு, புதுமலர்ச்சி
2. துப்பாக்கி
3. உடலில் தோலில் ஏற்படும் அரிப்புத் தன்மை(குழம்பியுள்ளது)
4. புலி
5. கடிதம்
7. நிசப்தம்
9. சமையல் அறை
12. ஒழுக்கத்துக்கான நெறிமுறைகள்
14. சம்பளம்
15. உள்ளம்
17. விதை
19. இதுவும் ஒருவகை விளையாட்டு (குழம்பியுள்ளது)
20. நீர்வேட்கை (தலைகீழ்)
22. கிணற்றிலிருந்து நிர் எடுக்கப் பயன்படுவது. தற்போது இதன் பாவனை குறைந்து விட்டது.

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 59

விடைகள்

இடமிருந்துவலம்

1. வழிகாட்டி
4. மாது
6. கபடம்
8. திடம்
9. வரம்பு
11. அந்தாதி
14. சகி
16. பயம்
17. கண்
18. மாதர்
19. பாடசாலை
21. துன்பம்
22. குடில்

மேலிருந்து கீழ்

1. வசதி
2. கானம்
3.கரடி
4.மேளம்
5. தும்பு
7. பவனி
10. ஊதா
11. அம்மான்
12. பந்தம்
13. சாரதி
14. சகபாடி
15. கிண்டல்
16. துயர்
20. குலை

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 59

பரிசு பெறுவோர் விபரம்

முதல் பரிசு (ரூ 500/)
ஆர். ஞானச்சந்திரன்
இல 40, முதலியார் வீதி, மட்டக்களப்பு

இரண்டாம் பரிசு (ரூ 350/)
ரி. தக்கியா நூரி
174/1 அல்_ முனவ்வரா வீதி, அக்கறைப்பற்று 04

மூன்றாம் பரிசு (ரூ 150/)
எஸ். கனகரட்ணம்
975, அன்புவழிபுரம், திருகோணமலை

பாராட்டு பெறுவோர்

1. **கே.எப்.மில்ஹானி** ஏறாவூர்
2. **பிரனூகா பிரசாத்** மட்டக்களப்பு
3. **ஏ.எம்.காசிம்,** உக்குவளை
4. **எஸ்.சஞ்சனா** வந்தாறுமூலை
5. **கே. ராஜகோபால்** வட்டுக்கோட்டை
6. **பி.நடேசன்** மட்டக்களப்பு
7. **ஷிபானா ஷாபி** மாத்தறை
8. **ஏ.என். எம்.நியாஸ்** மாவனல்ல
9. **கனகா கந்தசாமி** புசல்லாவை
10. **எம். சீ.எம். ரஹீம்** இறக்காமம்

கடவுள் வாழும் இல்லம்...

(16 ஆம் பக்கத் தொடர்)

கனடாவுக்குப் போய்ச் சேர்ந்த மகனுடன் தொலைபேசியில் பேசுவதற்காக அவர் அக்காலத்தில் இரண்டு தடவை மட்டக்களப்பு நகரிலுள்ள தொலைபேசி நிலையமொன்றுக்குச் செல்ல வேண்டியிருந்தது.

பல வருடங்களின் பின்னர் அச்சங்கள் ஓய்ந்து விட்ட நிலையில், ஒரேயொரு தடவை அவன் இங்கு வந்து போனான். அடுத்த வருடம் மீண்டும் இங்கே வரப் போகின்றான் சயந்தன். அந்த நாளுக்காக அவர் பரபரப்பு மிகுந்த ஆவலில் காத்திருந்தார். பேரப்பிள்ளைகளை வாரியணைக்க ஆசை கொண்டார். அவர்களைக் காண்பதற்கு பாக்கியம் இல்லையென்பதை நினைக்க மனம் துயரம் கொண்டது.

அதிகாலை வரை ஆட்கொண்ட இவ்வாறான நினைவுகளெல்லாம் மெது மெதுவாக அகன்று, உறக்கம் அவரைத் தழுவிக் கொண்டது. என்றும் இல்லாத ஆழ்ந்த உறக்கம் அது. காலை ஏழு மணியாகியும் கூட கலைந்து விடாத நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார் அருளம்பலம்.

மருமகள் அபிராமி அதிகாலை ஐந்து மணிக்கெல்லாம் நித்திரை விட்டெழுந்து விடுவாள். ஐந்து கடைகளுக்கு இடியப்பம் அவித்து, விடிவதற்கிடையில் அக்கடைகளுக்கு அனுப்பி வைத்துவிட வேண்டும். அதே தொழில் பின்னேரமும் அவளுக்கு உள்ளது. அக்குடும்பம் மூன்று வேளை உணவுடன் நகர்கின்றதென்றால் அதற்குக் காரணம் இதுதான்.

காலை ஆறு மணிக்கெல்லாம் அருளம்பலத்தின் சத்தம் அவளுக்குக் கேட்பதுண்டு. உரத்த தொனியில் நாய்க்குக் கட்டளை பிறப்பிப்பார். ஆறேழு கோழிகளை கூட்டை விட்டுத் திறந்து விடுவார். அதன் பிறகு வீட்டைச் சுற்றியுள்ள வளவு முழுவதையும் கூட்டிப்பெருக்குவார். கிணற்றிலிருந்து துலாவில் தண்ணீர் அள்ளும் சத்தம் அட்டகாசமாக அவளுக்குக் கேட்கும்.

இன்று மாமாவின் வீடு அமைதியாக இருந்தது. நாயும் கோழிகளும் சத்தமிடவில்லை. கிணற்றுத்துலாவும் நிசப்தமாகியிருந்தது.என்ன நடந்தது இன்று மாமாவுக்கு?

அபிராமிக்கு விசித்திரமாக இருந்தது. மாமா இன்று நேரகாலத்துடன் எங்காவது புறப்பட்டுப் போய் விட்டாரா? அன்றாடம் அதிகாலையில் அவள் தனது வீட்டைச் சுற்றியுள்ள வளவை கூட்டிப்பெருக்கும் வேளையில், வேலியோரம் நின்று மாமாவுடன் இரு வார்த்தைகள் உரையாடுவாள். அது அவளது நாளாந்த கருமங்களிலொன்றாக இருந்தது.

அபிராமிக்கு இன்று மனம் கேட்கவில்லை. அவள் எப்போதுமே அருளம்பலத்தின் வீட்டுக்கு முன்பக்கப் படலை ஊடாகச் செல்வது வழக்கமில்லை.

இருவளவுகளுக்கும் இடையேயுள்ள வேலிக்கம்பி ஊடாக பெரிய இடைவெளியொன்றை ஏற்படுத்தி வைத்திருந்தாள். அந்த இடைவெளியூடாக குனிந்தவாறு மாமாவின் வளவுக்குள் பிரவேசித்தாள்.

வளவு எங்கும் பலாமரத்தினதும் மாமரத்தினதும் சருகுகள் நிறைந்து கிடந்தன. இன்னுமே மாமா அவற்றை கூட்டிப்பெருக்கவில்லை. கூட்டுக்குள் அடைக்கப்பட்டிருந்த கோழிகள், திறந்து விடப்படாததால் சத்தமிட்டுக் கொக்கரித்தன. மாமாவின் வீட்டின் முன்கதவு சிறிதாகத் திறந்தபடியிருக்க, 'டைகர்' சுற்றுமுற்றும் அலைந்து திரிந்தது. அதன் நடவடிக்கையில் சற்றுப் பதற்றம் தென்பட்டது.

அபிராமியைக் கண்டதும் 'டைகர்' சத்தமாகக் குரைத்து விட்டு, பின்னர் வாலை ஆட்டியது.

"மாமா...மாமா..."

உள்ளேயிருந்து எந்தப் பதிலும் இல்லை.

அபிராமியின் மனதில் சற்று கவலைப் பிரட்டல் உண்டானது.

"மாமா, மாமா" என்று சத்தமாகக் குரலிட்டவாறு கதவைப் படபடவென்று தட்டினாள்.

உள்ளே எந்தவித ஆளரவமும் கிடையாது.

கதவைத் திறந்தவளாக உள்ளே நுழைந்தாள் அபிராமி.

மாமா இன்னுமே நித்திரை விட்டெழவில்லை.

அருளம்பலம் கட்டிலில் குப்புறப் படுத்தபடி கிடந்தார். கால்கள் இரண்டும் அகலமாக விரிந்தபடி கிடந்தன. முகம் இடப்பக்கவாட்டில் திரும்பியிருக்க, கண்கள் அரைவாசி திறந்தபடி இருந்தன. இடதுகையை நெஞ்சுக்குக் கீழாக வைத்திருந்தார்.

மாமா இவ்வாறு உறங்கியதை அபிராமி ஒருபோதுமே கண்டதில்லை. அவள் பதற்றமடைந்தாள்.

"மாமா... மாமா..." என்று மீண்டும் உரத்த தொனியில் சத்தமிட்டாள்.

அருளம்பலத்திடமிருந்து எந்த அசைவும் இல்லை.

காய்ச்சலாக இருக்குமோ என் றெண்ணி கழுத்துப் பின்பகுதியில் புறங்கையை வைத்துப் பார்த்தாள். உடல் சில்லென்றிருந்தது.

"மாமா....ஐயோ மாமா...ஆராவது ஓடி வாருங்கோ..." என்று அலறியபடி அவள் அயல்வீடுகளெங்கும் ஓடி ஓடி தகவல் கொடுத்ததும், அருளம்பலத்தின் வீட்டின் முன்பாக பெரும் கூட்டமே கூடி விட்டது.

அருளம்பலம் நீண்ட நேரத்துக்கு முன்னரே பாக்கியத்திடம் போய்ச் சேர்ந்திருந்தார்.

மூத்த கலை இலக்கியவாதி அந்தனி ஜீவாவுக்கான கௌரவிப்பு விழா

இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து நடத்தும் மூத்த கலை இலக்கியவாதி அந்தனி ஜீவாவுக்கான கௌரவிப்பு விழா கொழும்புத் தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் வவுனியூர் இரா. உதயணன் (நிறுவனர் இலங்கை, இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகம்) தலைமையில் நாளை திங்கட்கிழமை மாலை 4.00 மணி (போயா தினம்) நடைபெறவுள்ளது. மூத்த கலை இலக்கியவாதி அந்தனி ஜீவாவைப் பற்றிய உரைகளை வைத்திய கலாநிதி தி. ஞானசேகரன், ஆழ்வாப்பிள்ளை கந்தசாமி, கவிஞர் சு.முரளிதரன், தே.செந்தில்வேலவர், தே.மதுசூதனன், கவிஞர் மேமன்கவி. ஆகியோர் நிகழ்த்துவார்கள்.

நன்றியுரையை ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரை நிகழ்த்த, ஏற்புரை அந்தனி ஜீவா நிகழ்த்துவார். **தகவல் கே.பொன்னுத்துரை**

வானியல் அறிவியலின்...

13ஆம் பக்க தொடர்...

ஒளிசார் வானியல் என்பது கண்ணுக்குப் புலப்படுகின்றவையும் அண்ணளவாக சற்று வெளியே உள்ளதுமான அலை நீளங்களுடன் கூடிய ஒளியைக் கண்டறியவும், பகுப்பாய்வு செய்யவும் பயன்படும் தொழிநுட்பங்களுடன் தொடர்புபட்டதாக அமைகின்றது.

புறஊதா வானியல் எனப்படுவது அண்ணளவாக 100 – 3200 a(10320mm) அலைநீளம் கொண்ட கதிர்களைக் கண்டறிந்து கூர்ந்தாய்வது பற்றியது. இத்தகைய அலை நீளங்களில் அமைந்த கதிர்களை வளிமண்டலம் உறிஞ்சி விடுவதனால் இவற்றுக்கான நோக்கங்கள் மேல் வளிமண்டலத்தில் அல்லது விண்வெளியிலேயே இருக்க வேண்டும்.

அகச்சிவப்பு வானியல் என்பது சிவப்பு ஒளியிலும் கூடிய அலைநீளம் கொண்ட அகச்சிவப்புக் கதிர்களைக் கண்டறிவது தொடர்பானது.

முதன்முதலில் 1961ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி யூரிககாரின் தான் முதன் முதலில் விண்வெளிக்கு சென்ற ஒரே மனிதனாக இன்றும் பேசப்படுகின்றார். இதன் போது விண்வெளித்துறையில் போட்டி நிலவி வந்தது. அந்த காலகட்டங்களில் யூரிககாரின் என்ற விண்வெளி வீரர் விண்வெளியில் இருந்து வெற்றிகரமாக பூமிக்குத் திரும்பினார். இவர் அன்று சோவியத் ஒன்றியத்தின் வசுத்தோஞ் 1 விண்கலத்தில் பயணித்து சுமார் 108 நிமிடங்கள் விண்ணில் சஞ்சரித்தார். இவர் முன்பு விமானியாகவும் செயற்பட்டுள்ளார். நிலவின் நிரந்தர நிழல் ஆழ் குழிகளில் கணிசமான அளவு நீர் இருப்பதை சமீபத்தில் நாசா ஏவிய லகிராஸ் விண்ணுளவி முதன் முதலில் உறுதிப்படுத்தியது. இந்த குழியானது சூரிய வெளிச்சம் படாத ஒரு பள்ளம் இதில் படிந்துள்ள பனிநீர்ப்படிவு பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் படிந்திருக்க வேண்டும் என விஞ்ஞானிகளால் தீர்மானிக்க முடிகின்றது. அந்த குழியில் அதிகளவிலான ஐதரசன் வாயு இருப்பதனால் தான் நீர் உருவாக கூடும் என விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இலங்கைப் பாராளுமன்றம்
வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்தொகுதியில் உள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நல்ல உடலாரோக்கியமும் மற்றும் நல்லொழுக்கமும் உடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

1. வரவேற்பு உத்தியோகத்தர்
2. பாதுகாப்பு உத்தியோகத்தர்
3. மேசன்
4. தச்சன்
5. வர்ணம் தீட்டுநர்
6. குழாய்கள் சுத்தப்படுத்துநர்
7. குழாய் பொருத்துநர்

விண்ணப்பங்கள் அழைக்கப்படுவது தொடர்பான இந்த விளம்பரம் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி விளம்பரத்தில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு ஏற்ப தயாரித்த விண்ணப்பப் படிவங்கள் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடிய வகையில் ''பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர, கோட்டே" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். குறித்த வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தை www.parliament.lk எனும் இனையத் தளத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

பாராளுமன்ற செயலாளர் நாயகம்

இலங்கைப் பாராளுமன்றம்,
ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே,
2023 மார்ச் மாதம் 05 ஆம் திகதி.

அறிவியல் ஆராய்ச்சிக்கான சனாதிபதியின் விருதுகள்

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் விஞ்ஞானத்தில் புத்தாக்கமொன்றிற்காக சர்வதேச அல்லது தேசிய காப்புரிமையொன்றை பெற்றுக் கொண்ட இலங்கையின் நிறுவன ரீதியிலான இணைப்பொன்றையுடைய இலங்கை விஞ்ஞானிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகவுத்திறனின் பிரகாரம், அறிவியல் ஆராய்ச்சிக்கான சனாதிபதியின் விருதானது மேற்கூறப்பட்டுள்ள வருடங்களுக்கான சர்வதேச காப்புரிமை உரிமையாளர்களுக்கும் அறிவியல் ஆராய்ச்சி தேசிய ஆராய்ச்சி பேரவை தகுதி விருதானது மேற்கூறப்பட்டுள்ள வருடங்களுக்கான தேசிய காப்புரிமை உரிமையாளர்களுக்கும் வழங்கப்படும்.

உங்கள் விண்ணப்பத்தை தயவு செய்து விளக்கக் கடிதம் மற்றும் காப்புரிமை சான்றிதழின் பிரதியுடன் 2023 மார்ச் 26 ஆம் திகதியளவில் இந்த அலுவலகத்தை வந்தடையும் வகையில் அனுப்புங்கள்.

தலைவர்,
தேசிய ஆராய்ச்சி பேரவை,
120/7, வித்யா மாவத்தை,
கொழும்பு-07.

தொலைபேசி : 011 2675176/071 4533419
இணையதளம் : www.nrc.gov.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

வியாழக்கிழமை 2023.03.02
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5047
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 6 5 2 8 4 3

ராசி சுப மலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 356
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,756,410.00
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 03 11 35 39
விசேட இலக்கினம் கன்னி

மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1395
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 304,382,770.00
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 16 38 41 60
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1502
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,124,614.00
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள் 7 8 1 7 7 4

கொவிசத ගොවිසෙත Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் 3289
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 83,440,753.60
ஆங்கில எழுத்து S
வெற்றி இலக்கங்கள் 07 57 64 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1077
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 86,105,560.40
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 28 35 36 53

SLITA
இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்
(கைத்தொழில்கள் அமைச்சு)
பதவி வெற்றிடம்

பயிற்சி, பரிசோதித்தல், தொழில்நுட்ப சேவைகள் மற்றும தொழில்நுட்ப செயற்றிட்டம் மற்றும் உசாத்துணை ஆகியவற்றை புடவை மற்றும் ஆடை கைத்தொழிலுக்கு வழங்கும் அரசாங்க நியதிச்சட்ட அமைப்பொன்றாக இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகமானது விளங்குவதுடன் தற்போது பின்வரும் பதவி வெற்றிடமானது காலியாகவுள்ளது.

பணிப்பாளர் (செயற்பாடு)
தகைமைகள் மற்றும் அனுபவம்:

வெளியக விண்ணப்பதாரிகள்:
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம்/ மனித வள முகாமைத்துவம்/ சட்டம் அல்லது விஞ்ஞானத்தில் பெற்றவொரு இளமாணிப் பட்டம்.
அத்துடன்
உரித்தான துறையில் பட்டப்பின் தகைமைப்பட்டம் (முதுமாணி).
மற்றும்
கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை/நிறுவனம் அல்லது புகழ் வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்" ஆகக் குறைந்தது பதினைந்து (15) வருட அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரிகள்: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)
1. வெளியக விண்ணப்பதாரிகளுக்கு மேலேயுள்ளவாறு தேவைப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகத்தில் 1 ஆம் தரத்தில் முகாமையாளர் வகுதியிலுள்ள (எம்எம் 1-1) பதவியொன்றிற்கு உரித்தான துறையில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

வயது: 35 வயதிற்கு குறைவில்லாமலும் 55 வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகிக்கப்பட மாட்டாது.

சம்பள அளவுத் திட்டம்: ஏச்எம் 1-3-2016: 86,865 – 15x2,270- 120,915.

* அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் மற்றும் ஏனைய நியதிச்சட்ட நன்மைகளுமுண்டு.
* மேற்பட்ட தகைமைகள் சேர்க்கப்பட்ட தகைமையாகும்.

மேலேயுள்ளதில் உங்களுக்கு ஆர்வமிருந்தால், 2023 மார்ச் 15 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உங்கள் விண்ணப்பத்தை பதிவுத் தபாலில் விபரமான குறிப்புடனும் அத்துடன் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் தொடர்பு விபரங்களுடனும் பணிப்பாளர் நாயகத்திற்கு முகவரியிடப்பட்டு உங்கள் விண்ணப்பத்தை அனுப்பவும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை தயவு செய்து குறிப்பிடவும் (தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மாத்திரமே நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்களென்பதுடன் சபை ஆளுநர்களின் தீர்மானமே இறுதியானதாகும்)

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை புடவை மற்றும் ஆடை நிறுவகம்,
இல. 02, கந்தவல தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலான.
தொலைபேசி: 011 2632406. தொலைநகல்: 011 2636337. இணையம்: www.slita.lk

விசேட அறிவித்தல்

N8879923ஆம் இலக்க கடவுச்சீட்டுக்கு உரிமையாளரான காலஞ்சென்ற திலீப் இந்திகா குமார சீதையம்மா என்பவரின் மரணம் தொடர்பில் நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு அவரது தாயாரான 566903997V இலக்க அடையாள அட்டைக்கு உரிமையாளரான இல. 05, நவச்சோலை, கும்புறுப்பிட்டி கிழக்கு, குச்சவெளி எனும் முகவரியில் வசிக்கும் துரைசாமி நாயகம் என்பவர் முன்வந்துள்ளார்.

இந்த நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு சட்டபூர்வமான நபர்கள் இருந்தால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முன்னிலையாகுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

N6089837ஆம் இலக்க கடவுச்சீட்டுக்கு உரிமையாளரான காலஞ்சென்ற மாபா முதியன்சேலாகே சரோஜினி என்பவரின் மரணம் தொடர்பில் நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு அவரை தத்தெடுத்தவர் எனக் கூறும் 194683001431 இலக்க அடையாள அட்டைக்கு உரிமையாளரான கண்டி மாவட்டத்தில் கொடபொல, கெலிஓய தேசிய வீடமைப்பு, 09ஆம் இலக்கத்தில் வசிக்கும் கஹல்வே முதியன்சேலாகே மாலனி வீரசிங்க என்பவர் முன்வந்துள்ளார்.

1972 ஆகஸ்ட் மாதம் 08ஆம் திகதி அநுராதபுரம் பொது வைத்தியசாலையில் பிறந்த இந்த நபரின் முன்னைய பெயர் மாபா முதியன்சேலாகே பொடிமெனிகே என்பதாகும்.

இந்த நட்டஈட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு சட்டபூர்வமான நபர்கள் இருந்தால் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முன்னிலையாகுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலதிக விபரங்களுக்குத் தொடர்புகொள்ளவும்
முகாமையாளர் (நலன்புரி) - 0112 864 117

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்
அக்கரையில் மான்புற இக்கரையில் கைகோர்ப்போம்
இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, கொஸ்வத்த, பத்தரமுல்ல.
துரித தொடர்பு 1989

வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம்
பல்கலைக்கழக கல்லூரிகளுக்கு
2022 மாணவர்களை சேர்ப்பதற்கான விண்ணப்பக்கோரல்

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி
2023 மார்ச் 17 வரை நீடிக்கப்படும்.

NVQ 5 தரத்தில் தேசிய டிப்ளோமா மற்றும்
NVQ 6 தரத்தில் உயர் தேசிய டிப்ளோமா
மேலதிக விபரங்களுக்கு,

உதவி பதிவாளர்,
அனுராதபுர பல்கலைக்கழக கல்லூரி
பகுதி I, 328, வித்யாலய மாவத்தை, அனுராதபுர
தொலைபேசி: 025 2222010
www.uca.ac.lk

உதவி பதிவாளர்,
பட்டங்கல பல்கலைக்கழக கல்லூரி
பட்டங்கல, பனாவல, எஹேலியகொட
தொலைபேசி: 036 2235572
www.ucbatangala.lk

உதவி பதிவாளர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்லூரி
இல-29, புரவுன்ஸ் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 021 2217791
www.ucj.ac.lk

உதவி பதிவாளர்,
குளியாப்பிட்டிய பல்கலைக்கழக கல்லூரி
அசோக்கா மாவத்தை, பன்னல வீதி, குளியாப்பிட்டிய.
தொலைபேசி: 037 2059576
www.uck.ac.lk

உதவி பதிவாளர்,
மாத்தறை பல்கலைக்கழக கல்லூரி
இல-690, தங்கல்லை வீதி, மெதவத்த, மாத்தறை.
தொலைபேசி: 041 2222962/7
www.ucm.ac.lk

உதவி பதிவாளர்,
இரத்மலான பல்கலைக்கழக கல்லூரி
இல-01A, புகையிரத வீதி, இரத்மலான.
தொலைபேசி: 011 2626297
www.ucr.ac.lk

இலங்கை போக்குவரத்து...

(04 ஆம் பக்கத் தொடர்)

இந்த எண்ணக்கருவின் மற்றுமொரு செயற்பாடாக இலங்கையில் பொதுப் பயணிகள் போக்குவரத்தை வலுப்படுத்தும் வகையில் மின்சாரத்தில் இயங்கும் 1000 மின்சார பஸ்களை சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் முதல் கட்டமாக 200 பஸ்களை கொழும்பு மற்றும் அண்மித்த நகரங்களில் சேவையில் ஈடுபடுத்த உள்ளதாக இ.போ.சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.எம்.டி.எல்.கே.டி.அல்விஸ் கூறினார்.

"அரச பயணிகள் போக்குவரத்துச் சேவையாக இ.போ.சபையை பலப்படுத்துவதற்குரிய முறையான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 6000 இ.போ.ச பஸ் வண்டிகள் இருந்தாலும் பொதுவாக ஒரு பஸ் வண்டியை 15 வருடங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபடுத்த முடியாது. எவ்வாறாயினும், இந்த நிலைமைக்கு இ.போ.சபை போன்ற பாரியளவிலான போக்குவரத்துத் துறைக்குப் பொதுத் திட்டம் தேவைப்படுகிறது. எனவே மின்சாரத்தில் இயங்கும் 1000 பஸ்களை இ.போ.சபையுடன் இணைக்கும் வேலைத்திட்ட அறிக்கை தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் முதற் கட்டமாக 200 பஸ் வண்டிகள் இறக்குமதி செய்யப்படும். அதன் முதல் தொகுதியாக 50 பஸ்களும், இரண்டாம், மூன்றாம் தொகுதிகளாக 75 பஸ்கள் வீதம் இறக்குமதி செய்ய உள்ளோம். இந்த பஸ்களை 10 பிரதான வீதிகளில் சேவையில் ஈடுபடுத்தவே திட்டமிடப்பட்டுள்ளது. இதனடிப்படையில் கடவத்தை நிட்டம்புவ மற்றும் கடவத்தை கம்பஹா / நீர்கொழும்பு மற்றும் கொழும்புக்கும் இடையிலும், பாணந்துறையிலிருந்து நீர்கொழும்பு மற்றும் பிலியந்தலையிலிருந்து கடவத்தை வரையிலும் இந்த பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும்.

இதற்குப் புறம்பாக அத்துருகிரியவிலிருந்து மாலபே, கொழும்பு ஊடாக ஹைலெவல் வீதி ஊடாக அத்துருகிரிய வரையில் சுற்றுவட்ட வீதியாக பஸ் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்துவதற்கு தற்போதைக்கு திட்டமிடப்பட்டுள்ளது. அத்துடன் அதனோடு தொடர்புடைய மேலும் சில வீதிகளிலும் பஸ் போக்குவரத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காகக் குறைந்த பட்சம் 145 பஸ்கள் அளவில் தேவையாக உள்ளதோடு, 200 பஸ்களை சேவையில் ஈடுபடுத்தவுள்ளோம்.

இவ்வாறான ஒரு பஸ் வண்டியின் விலை சுமார் 70, 80 மில்லியன் ரூபாய் அளவில் இருப்பதால் இதனை அரச மற்றும் தனியார் கூட்டுத் திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதே போன்று மின்சார பஸ்களை சார்ஜ் செய்வதற்கான நிலையங்களை அமைப்பதும், இ.போ.சபையின் டிப்போக்களில் சூரிய சக்தி மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து அந்த மின்சாரத்தை மின்சார சபைக்கு வழங்குவதும் இந்த வேலைத் திட்டத்தின் ஒரு பகுதியாகச் செயற்படுத்தப்படும்" எனக் கூறினார்.

இதற்கு இணையான ஒரு திட்டமாக, முச்சக்கர வண்டிகளை மின்சார முச்சக்கர வண்டிகளாக மாற்றும் செயற்பாடு ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) கீழ் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் பிரதான முன்னோடியாக இருந்தது மேலதிக செயலாளர் (சுற்றுச்சூழல் அபிவிருத்தி) கலாநிதி சுனிமல் ஜயதுங்கவாகும்.

சுவட்டு எரிபொருட்களை எரிப்பதன் மூலம் சுற்றுச்சூழலில் வெளியிடப்படும் நச்சுப் புகைகள் குறைவடைவதும், சூழல் மாசடைதல் குறைந்தளவில் இருப்பதும் இதன் காரணமாகவேயாகும் என்று அவர் கூறுகிறார். அத்துடன் எரிபொருளுக்காகச் செலவிடப்படும் பெருமளவிலான அந்நியச் செலாவணியைக் குறைத்துக் கொள்ள முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார். உலகின் காலநிலை மாற்றத்திற்காக நாம் செயற்பட வேண்டியிருப்பது பசுமை எண்ணக்கருவாகவேயாகும் என்றும் குறிப்பிட்ட அவர், அதற்காகக் கண்டிப்பாக சுற்றாடல் சார்பான மாற்று எரிசக்தி தொடர்பில் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இந்த முயற்சிகள் அனைத்தும் இந்த நாட்டில் சுற்றுச்சூழலுக்கு உகந்த வாகனப் போக்குவரத்துக்காகவே மேற்கொள்ளப்படுகின்றன. இதில் இன்னும் ஒரு படி முன்னேறுவதற்கு கடந்த வெள்ளியன்று எங்களால் முடிந்தது. அது இந்நாட்டில் பொருத்தப்பட்ட முதலாவது மின்சார முச்சக்கர வண்டி மற்றும் முதலாவது காரினைப் பதிவு செய்யும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை காலை மேற்கொள்ளப்பட்டது. இந்நிகழ்வில் அமைச்சர் பந்துல குணவர்தன மற்றும் மோட்டார் வாகனப் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிசாந்த இந்திக்க அநுருத்த போன்றோரும் கலந்து கொண்டனர்.

Vega EVX வாகனம் இலங்கையின் முதலாவது முழு மின்சார சொகுசு காராக பதிவு செய்யப்பட்டது. அதற்கு ஒதுக்கப்பட்ட இலக்கம் WP CBO 2021 ஆகும். வாகனத்தின் பதிவுச் சான்றிதழ் இலக்கத்தகடு போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன முன்னிலையில் VEGA Innovations ல் ஹர்ஷ சுபசிங்கவிடம் வழங்கி வைக்கப்பட்டது.

Vega EVX என்பது இலங்கையினுள் முற்றுமுழுதாகவே உருவாக்கப்பட்ட மின்சார வாகனமாகும். இது வரலாற்றில் முதற்தடவையாக உருவாக்கப்பட்ட வாகனமுமாகும். இது 40 கிலோ மீற்றர் தூரம் பயணிக்கக்கூடிய பற்றரியைக் கொண்டுள்ளது. அத்துடன் உயர் குதிரை வலுவையும் கொண்டுள்ளது. இவ்வாறு போக்குவரத்துத் துறை மின்சாரத்திற்குத் திரும்பும் போது அதற்கு ஏற்ற வகையில் மின்சார சார்ஜ் செய்யும் கட்டமைப்பும் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறில்லாவிட்டால் மீண்டும் சுவட்டு எரிபொருட்கள் மீது மக்களின் கவனம் திரும்பும்.

மின்சார வாகனங்களின் பழுது பார்ப்புகள் மற்றும் பராமரிப்பு என்பன மிகவும் இலகுவானதாகும். எனினும் அதற்கான அனுபவமிக்க தொழில்நுட்பகவியலாளர்கள் அவசரமாக ஈடுபடுத்தப்பட வேண்டும். அப்போதுதான மின்சார கார்கள் உள்ளிட்ட மின்சார வாகனங்களின் உண்மையான பலன்களை எம்மால் பெற்றுக் கொள்ள முடியும்.

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

கல்வி அமைச்சு

கடனிலக்கம் மற்றும் தலைப்பு	3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம்
ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு	STHRD/SB-E04 A: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மின்னியல் ஆய்வுகூட உபகரணங்கள்-1 என்பதன் பெறுகை
விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி	2023.03.28ஆம் திகதியன்று 10:00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்)

1. இலங்கை சோசலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் STHRD/SB-E04 A இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மின்னியல் ஆய்வுகூட உபகரணங்கள்-1 வழங்குதல் மற்றும் விநியோகித்தல் (''பொருட்கள்'') பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு தொழில்நுட்பவியல் பீடத்தின் மின்னியல் ஆய்வுகூடத்திற்கான உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தக்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்

நிரல் - 1	நிரல் - 2	நிரல் - 3
லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்	**ஒவ்வொரு ஒப்பந்த்தினதும் பெறுமதி (இல. ரூபா)**	**வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)**
Lot 01: Mechatronics and Elevator Training Systems	9,856,000.00	24,640,000.00
Lot 02: Electrical Training Systems	3,520,000.00	8,800,000.00
Lot 03: Oscilloscopes and Function Generators	2,288,000.00	5,720,000.00

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய, இலங்கை.
   ZIP code: 70140
   தொலைபேசி: 045-2280081
   மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-03-10ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "STHRD/SB-E04 A: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்தின் மின்னியல் ஆய்வுகூட உபகரணங்கள்-1 இன் பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.03.07ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2023.03.28ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய, இலங்கை.

- பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுல்ஓய, இலங்கை.
ZIP code: 70140
திகதி: 2023-03-05.

விலைமனுக்களுக்கான அழைப்பு

இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்

கல்வி அமைச்சு

கடனிலக்கம் மற்றும் தலைப்பு	3698/3699-SRI: விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வளம் அபிவிருத்தி செயற்றிட்டம்
ஒப்பந்த இல. மற்றும் தலைப்பு	STHRD/SB-E04 B: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான இயந்திரவியல் ஆய்வுகூட உபகரணங்கள்-1 என்பதன் பெறுகை
விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி	2023.03.28ஆம் திகதியன்று 10:00 மணித்தியாலம் (உள்ளூர் நேரம்)

1. இலங்கை சோஷலிச குடியரசானது 145 மில்லியன் ஐ.அ. டொலருக்குச் சமமான நிதியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து (ADB) கல்வி அமைச்சின் கீழ் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட (STHRD செயற்றிட்டம்) அமுல்நடாத்தலின் கிரயச் செலவினத்திற்காக பெற்றுக் கொண்டுள்ளதுடன் இந்த நிதியின் பெறுகைகளின் பகுதியொன்றை மேலே பெயரிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக செலவழிப்பதற்கு உத்தேசித்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) வள நாடுகளின் தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இவ்விலைமனுவில் பங்கேற்கலாம்.
2. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்ட, பிரதி செயற்றிட்ட பணிப்பாளரின் (''கொள்வனவாளர்'') சார்பாக பல்கலைக்கழக பெறுகைக் குழுவின் தலைவர் STHRD/SB-E04 B இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்திற்கான மின்னியல் ஆய்வுகூட உபகரணங்கள்-1 என்பதன் (''பொருட்கள்'') பெறுகைக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். இந்த பெறுகையானது சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு தொழில்நுட்பவியல் பீடத்தின் இயந்திரவியல் ஆய்வுகூடத்திற்கான உபகரணங்களின் பெறுகை என்பதை அடக்குகின்றது. ஒப்பந்தம் கையொப்பமிடும் திகதியிலிருந்து பூர்த்தி செய்யும் காலப்பகுதியானது 12 வாரங்களாகும்.
3. இந்த விலைமனுக்கோரலில் பங்குபெறுவதற்காக பின்வரும் பிரதான தகைமைகளை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - கடந்த மூன்று வருடங்களில் ஒவ்வொரு ஒப்பந்தத்திற்கும் பின்வரும் அட்டவணையில் 2ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியையுடையதும் நிகரான தன்மை மற்றும் சிக்கல்தன்மை ஆகியவற்றைக் கொண்ட ஆகக் குறைந்தது இரண்டு ஒப்பந்தங்களை 6ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறான வழங்கலின் நோக்கத்திற்காக பிரதான வழங்குநராக வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.
   - கடந்த மூன்று வருடங்களில் பின்வரும் அட்டவணையில் 3ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பூர்த்தி செய்யப்பட்ட அல்லது முடிவுறாத ஒப்பந்தக்களுக்காக விலைமனுதாரரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த பணக்கொடுப்பனவுகளாக கணக்கிடப்பட்ட ஆகக் குறைந்த சராசரி வருடாந்த நிதிப்புரள்வு.

விலைக்கோரலில் பங்குபற்றுவதற்கான பிரதான தகைமைகள்

நிரல் - 1	நிரல் - 2	நிரல் - 3
லொட் இலக்கங்கள் மற்றும் விபரங்கள்	**ஒவ்வொரு ஒப்பந்த்தினதும் பெறுமதி (இல. ரூபா)**	**வருடாந்த சராசரி புரள்வின் பெறுமதி (இல. ரூபா)**
Lot 1 -Applied Mechanics Equipment	3,108,000.00	7,770,000.00
Lot 2- Power Transmission Equipment	3,256,000.00	8,140,000.00
Lot 3 – Material Testing Equipment	5,032,000.00	12,580,000.00
Lot 4 – Pneumatic/Hydraulic Trainer Unit	9,768,000.00	24,420,000.00
Lot 5 – Fluid and Mechanics Equipment	5,328,000.00	13,320,000.00

4. ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) பண்டங்களின் பெறுகை ஒற்றைக்கட்ட-ஒரு கடித உறை நடைமுறையில் பகிரங்க போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடாத்தப்படுவதுடன் விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு தகுதியுள்ள நாடுகளின் அனைத்து விலைமனுதாரர்களும் பங்கேற்கலாம்.
5. மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளவும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கவும், விலைமனுதாரர் பின்வருபவருடன் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

   சிரேஷ்ட பெறுகை அலுவலர்,
   செயற்றிட்ட அமுல்நடாத்தல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய,
   இலங்கை.
   ZIP code: 70140
   தொலைபேசி: 045-2280081
   மின்னஞ்சல்: sposb-sthrd@mohe.gov.lk

   - விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் 2023-03-10ஆம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் நிகழ்நிலை (online) ஊடாக இடம்பெறும்.
6. ஆங்கிலத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை கொள்வனவு செய்யவுள்ள தகுதியுள்ள விலைமனுதாரர்களால் "STHRD/SB-E04 B: இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம், தொழில்நுட்பவியல் பீடத்தின் இயந்திரவியல் ஆய்வுகூட உபகரணங்கள்-1 இன் பெறுகை" என்பதற்கான விலைமனுக்களை வேண்டி மேலேயுள்ள முகவரிக்கு எழுத்து / மின்னஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000.00 இ.ரூபாவை (ஐயாயிரம் இலங்கை ரூபா மாத்திரம்) ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி வரைவாக பிரதி செயற்றிட்ட பணிப்பாளர், STHRD செயற்றிட்டம், இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் அல்லது பெலிஹுல்ஓய இலங்கை வங்கியில் பேணப்படும் 0083695474 என்ற கணக்கிலக்கத்திற்கு (சகல லொட்களுக்குமான ஒரு ஆவணத்திற்கு) வரவு வைக்கப்படல் வேண்டும். ஆவணம்/ ஆவணங்கள் வங்கி வரவுத் துண்டைச் சமர்ப்பித்ததன் பின் 2023.03.07ஆம் திகதி முதல் மின்னஞ்சலின் ஊடாக மட்டும் அனுப்பப்படும். காணாமல் போன அல்லது தாமதமான ஒப்படைத்தலுக்கு பொறுப்பேற்கப்பட மாட்டாது.
7. 2023.03.28ஆம் திகதி 10:00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்னராக பின்வரும் முகவரிக்கு விலைமனுக்கோரல் ஆவணத்தில் விபரிக்கப்பட்டவாறு விலைமனுப்பிணையுடன் உங்கள் விலைமனுக்களை ஒப்படைக்கவும்.

   பிரதி செயற்றிட்ட பணிப்பாளர்,
   செயற்றிட்ட அமுலாக்கல் பணிமனை,
   விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் மனித வள அபிவிருத்தி செயற்றிட்டம்,
   தொழில்நுட்பவியல் பீடம்,
   இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம்,
   பெலிஹுல்ஓய, இலங்கை.

   - பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி ஆகியன தனித்தனியாக உள்ளிட்டு ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என முறையே அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். அதன் பின்னர், இந்த இரு தபாலுறைகளும் இன்னொரு தபாலுறையில் உள்ளிட்டு, முத்திரையிடப்பட்டு உரிய ஒப்பந்த அடையாளத்தை (ID) அதன் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதி நேரம் முடிவடைந்ததும் தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும்.

தலைவர்,
திணைக்கள பெறுகைக் குழு,
இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுல்ஓய, இலங்கை.
ZIP code: 70140
திகதி: 2023-03-05.

சர்வதேச சாதனையாளர்கள் அறக்கட்டளையின் கௌரவிப்பு நிகழ்வு

உலக மகளிர் தினத்தை முன்னிட்டு ஜெர்மனியை தலைமையகமாகக் கொண்ட சர்வதேச சாதனையாளர்கள் அறக்கட்டளை ஏற்பாடு செய்துள்ள பல்வேறு துறை சார்ந்த சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு எதிர்வரும் 14ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு கொழும்பு 14, கிரேண்ட்பாஸ் இலங்கைக் கிளைக் காரியாலயப் பணிமனையில் விமரிசையாக நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அறக்கட்டளையின் சர்வதேச தலைவர் பிரபல தென்னிந்தியப் பாடகர் "சங்கநாதச் செம்மல்" மறைந்த காயல் ஷேக் முஹம்மதுவின் புதல்வர் கலாநிதி எஸ். எம். ரஷ்மிரூமி தலைமையில் நடைபெறவுள்ளது. ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் பாடல் நிகழ்ச்சியும் இடம்பெறுவதோடு பாடசாலை மாணவ மாணவிகளுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்படவுள்ளன. சமூக சேவையிலும் இலக்கிய எழுத்துப் பணிகளிலும் ஈடுபாடுள்ள ஆளுமைமிக்க மகளிர் பலர் இதன்போது கௌரவிக்கப்படவுள்ளமை சிறப்பம்சமாகும்.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை அனைத்து ஊழியர்களும் கவனயீர்ப்பு போராட்டம்

ஹற்றன் சுழற்சி நிருபர்

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள், சிற்றூழியர்கள் என பலரும் இணைந்து பல்வேறு கோரிக்கைளை முன்வைத்து வைத்தியசாலை பிரதான நுழைவாயில் முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் உடனடியாக மக்களுக்கு கிடைக்க வழி செய்ய வேண்டும்', 'முறையற்ற நியமனத்தினை வழங்குவதை நிறுத்து', 'வாழ்வாதாரத்தினை அதிகரிக்கவும், வங்கியில் அதிகரித்த வட்டி வீதத்தினை குறைக்கவும், ஊழியர் பற்றாக்குறையினை உடன் நிவர்த்தி செய்', 'வான் உயரத்தில் பண வீக்கம் நடுவீதியில் உத்தியோகஸ்தர்கள்' போன்ற பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியும் தமது எதிர்ப்பினை வெளியிட்டனர்.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் இந்த போராட்டத்தினை அனைத்து சேவைகளையும் இடைநிறுத்தி பாரியளவில் முன்னெடுக்கப் போவதாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

'இப்போராட்டம் காரணமாக சுமார் ஒரு மணித்தியாலயம் வைத்தியசாலை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், நோயாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது .

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

விலைமனுக் கோரல்

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சார்பாக தலைவர், திணைக்கள பெறுகை குழு (பிரதானம்) அவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய தகுதிவாய்ந்த மற்றும் தகைமையுடைய மனுதாரர்களிடம் இருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை தற்போது அழைக்கின்றார்.

Item No	Contract File No	Name of the Contract	Estimate Cost (Rs.)	Bid Security Amount (Rs.)	Non-Refundable Tender Fees (Rs.)	Registration of CIDA (Minimum Requirement)
1	VV/20/1/2020/07	Renovation of Block-09 at Department of Botany, OUSL	14.5 million	145,000.00	3,500.00	C6 or above
2	VV/20/1/2022/29	Proposed Modification of Administration Building - First Floor (Phase 01)	24.7 million	247,000.00	6,000.00	C6 or above
3	VV/20/1/2022/30	Proposed Modification of Administration Building - First Floor (Phase 02)	21.9 million	219,000.00	6,000.00	C6 or above
4	VV/20/1/2022/31	Proposed Modification of Administration Building - First Floor (Phase 03)	7.1 million	71,000.00	2,500.00	C7 or above
5	VV/20/1/2022/32	Proposed Renovation at Student's Hostels at Kandy Regional Center at OUSL	9.4 million	94,000.00	3,000.00	C7 or above

01 தேசிய போட்டி விலை மனுக்கோரல் ஊடாக விலைமனுக்கோரல் இடம்பெறும். தகுதிவாய்ந்த கேள்விதாரர்கள் கருப்புபட்டியலில் உள்ளடக்கப்படாதவராகவும் கட்டுமானம் துறையில் CIDA பதிவுக்கு அமைய மேலே குறிப்பிட்ட தரத்தினை கொண்டிருப்பவராகவும் இருத்தல் வேண்டும்.

02 இதற்கான கேள்விப்பத்திரப் படிவத்தை, 2023.03.07 முதல் 2023.03.27 ஆம் திகதி வரை மு.ப 09.00 தொடக்கம் பி.ப 03.00 மணி வரையிலான காலப்பகுதியில், வேலை நாட்களில், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஆதன நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக, மேலே குறிப்பிட்ட மீளச் செலுத்தப்படாத தொகையினை இலங்கை திறந்த பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தப்பட்டுள்ளமைக்கான பற்றுச்சீட்டு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

03 முன்-விலைமனுக்கோரல் கூட்டமானது 2023.03.15 அன்று மு.ப.10.00 மணிக்கு இலங்கை திறந்த பல்கலைக்கழக பதிவாளர் அலுவலகத்தின் சபாமண்டபத்தில் இடம்பெறும்.

04 விலைமனுப்பத்திரங்கள் ஆங்கிலமொழியில் முழுமையாகப் பூத்திசெய்யப்பட்டு "மூலப் பிரதி" மற்றும் "நகல்பிரதி" என குறிப்பிட்டு இரு வெவ்வேறு கடித உறைகளில் இடப்பட்டு பின்னர் அவை ஒரே கடித உறைகளில் இடப்படல் வேண்டும். மூன்று கடித உறைகளிலும் முத்திரையிடப்பட்டு இடது பக்கமேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியன எழுதப்பட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு 2023.03.27 அன்று பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும் அல்லது இலங்கை திறந்த பல்கலைக்கழக ஆதன நடவடிக்கைப் பிரிவில் வைக்கப்பட்டிருக்கும் விலைமனுக்கோரல் பெட்டியில் இடப்படல்வேண்டும்.

05 விலைமனுக்கள் 2023.03.28 திகதி பி.ப. 2.00 மணிக்கு மூடப்படும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். கேள்விகள் 2023.03.28 அன்று பி.ப. 2.00 மணிக்கு பதிவாளர் அலுவலகத்தின் சபா மண்டபத்தில் திறக்கப்படும் என்பதுடன் மனுதாரர் அல்லது அவர்களுடைய அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விகள் திறக்கப்படும் போது சமுகமளிக்க முடியும்.

06 அனைத்து கேள்வி கோரல்களும் இலங்கை திறந்த பல்கலைக்கழக உப-வேந்தரின் சார்பில் மேலே குறிப்பிட்ட தொகைகளுக்கான கேள்விப் பிணை (இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் பெற்ற) வர்த்தக வங்கி ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டதாகவோ அல்லது குறிப்பிட்ட தொகைகளுக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழக காசாளரிடம் செலுத்தப்பட்டுள்ளமைக்கான பற்றுச்சீட்டு ஒன்று சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதோடு 119 நாட்கள் அல்லது 2022.07.25 ஆம் திகதி வரை அது செல்லுபடியாதல் வேண்டும்.

07 ஆர்வமுள்ள மனுதாரர்கள் அலுவலக நேரங்களில் வேலைகள் பொறியியலாளர்/பராமரிப்பு பிரிவு இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் (தொ.பே:011-2881247) இடம் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.மேலதிக தகவல்களை ஆதன நடவடிக்கைப் பிரிவின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரிடம் (தொலைபேசி 0112881286) பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்
திணைக்கள பெறுகை குழு (பிரதானம்)
ஆதன நடவடிக்கைப் பிரிவு
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
நாவல, நுகேகொட.
2022.03.05

பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெறுமையாகவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பதவி தொடர்பாக சிறந்த அனுபவமும் தேவையான தகைமைகளையும் கொண்டுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

பதவி: பணிப்பாளர் (செயலாக்கல் அபிவிருத்தி)

சேவை வகுதி – சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் - (ஏச்எம் 1-1)

சம்பள அளவுத்திட்டம்: மாதாந்தம் 80,295 ரூபா– 15x2,270 – 114,345 - ரூபா – ஏச்எம் 1-1 2016) + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்

கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:

வெளியக விண்ணப்பதாரிகளுக்கானது:

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து விஞ்ஞான துறையில் பெற்ற இளமாணிப் பட்டமொன்று (உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல், விவசாயம், உணவு விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடனானது) அல்லது பொறியியல்/ தொழில்நுட்பவியல் ஆகியவற்றில் முதலாம் பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

உரித்தான துறையில் பெற்ற பட்டப்பின் பெற்ற தகைமைப்பட்டமொன்று (முதுமாணி) அல்லது பதவியின் பாடப்பரப்பிற்கு உரித்தான அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றின் இணை அங்கத்துவம்

மற்றும்

அரசாங்க, அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

அல்லது

2. பதவிக்கான தொடர்புடைய துறையொன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவம்.

மற்றும்

அரசாங்க, அரச கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபை அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 15 வருட அனுபவம்.

உள்ளக விண்ணப்பதாரிகளுக்கானது

மேலே குறிப்பிட்டவாறு வெளியக விண்ணப்பதாரிகளினால் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.

அல்லது

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 1 ஆம் தரத்தில் முகாமைத்துவ மட்டத்தில் (எம்எம் 1-1) இல் தொடர்புடைய துறையில் 05 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

வயதெல்லை:

விண்ணப்பங்களை மூடும் திகதியன்று விண்ணப்பதாரிகள் 35 வயதிற்கு குறையாமலும் 55வயதிற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் நிரந்தர சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

தெரிவு செய்யும் முறைமை: கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக தெரிவு மேற்கொள்ளப்படும்.

ஏனையவை:

i. இலங்கை பிரஜையொன்றாகவிருத்தல் வேண்டும்.
ii. பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உளரீதியில் பொருத்தமாகவிருப்பதுடன் தீவின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்கும் ஆயத்தமாகவிருத்தல் வேண்டும்.
iii. மிகச்சிறந்த குணாதிசங்களையுடையவராகவிருத்தல் வேண்டும்.

அனுகூலங்கள்:

1. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழான பணிக்கொடை.
2. பதவிநிலை அலுவலர்களுக்கான மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம்.
3. ஊழியர் சேமலாப நிதியம் - ஊழியர் 10%, தொழில் வழங்குநர் 15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - தொழில் வழங்குநரினால் 3% பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய மேலதிக அனுகூலங்கள்.
5. பொது தொழில்முயற்சி சுற்றறிக்கைகளின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

விண்ணப்பதாரியின் தற்போதய தொழில், சம்பள விபரங்கள், காலப்பகுதியுடனான முன்னைய பதவிகள் உறவினரல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் விண்ணப்பதாரியின் ஏனைய அனைத்து விபரங்கள் அத்துடன் பிறப்பு சான்றிதழ், கல்விசார், தொழில்சார் மற்றும் சேவை சான்றிதழ்கள் 2023.03.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக வந்தடையும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது குறிப்பிடப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள்/ மாகாண அரசாங்க சேவை/ அரச கூட்டுத்தாபனங்கள்/ நியதிச்சட்ட சபைகள் ஆகியவற்றின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான நிறுவனங்களின் தலைமைகளூடாகவே அனுப்புதல் வேண்டுமென்பதுடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தரமாக ஏற்கனவே இருப்பவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை அதிகாரசபையின் உரித்தான பிரிவு தலைமைகளூடாகவே சமர்ப்பித்தல் வேண்டும்.

மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகள் அல்லது திணைக்களங்களின் /நிறுவனங்களின் தலைமையூடாக அனுப்பப்படாதவைகள் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரமானது தெஅஅ இன் **www.cda.gov.lk** என்ற இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தலைவர்,
தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை,
இல.: 54, நாவல வீதி, நாராஹேன்பிட்ட, கொழும்பு-05.

வாகனங்கள் விற்பனைக்கு

ANURADHAPURA VEHICLE YARD (0252052632)

THREE WHEEL

AAB-83XX	AAD-11XX	AAN-73XX	AAS-61XX	AAX-41XX	ABQ-11XX	QO-51XX	QT-27XX	QZ-50XX	YK-62XX	YP-12XX
AAB-84XX	AAE-08XX	AAO-39XX	AAU-63XX	AAX-80XX	QI-30XX	QO-81XX	QT-35XX	QZ-93XX	YL-32XX	YS-25XX
AAC-60XX	AAH-50XX	AAQ-36XX	AAW-24XX	ABB-22XX	QK-57XX	QP-09XX	QU-73XX	YG-16XX	YM-15XX	YT-02XX
AAC-72XX	AAJ-93XX	AAQ-82XX	AAW-28XX	ABE-49XX	QK-77XX	QQ-30XX	QX-97XX	YH-07XX	YO-42XX	YV-14XX
										YX-10XX

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
15-37XX	Nissan	MOTOR CAR	BIP-96XX	HERO	MOTOR CYCLE
18-70XX	DAEWOO	MOTOR CAR	BIW-10XX	SUZUKI	MOTOR CYCLE
CBH-03XX	SUZUKI	MOTOR CAR	LM-35XX	ISUZU	MOTOR LORRY
BHN-83XX	HERO	MOTOR CYCLE	PH-50XX	DFSK	MOTOR VAN
BHX-15XX	YAMAHA	MOTOR CYCLE			

HORANA EHICLE YARD (0342266244)

THREE WHEEL

AAA-44XX	AAH-06XX	AAQ-63XX	AAY-19XX	ABP-23XX	QL-10XX	QP-05XX	QT-10XX	QW-67XX	YB-60XX	YO-07XX
AAA-69XX	AAH-08XX	AAS-26XX	AAY-69XX	ABR-59XX	QL-23XX	QP-05XX	QT-11XX	QW-77XX	YB-60XX	YO-36XX
AAB-36XX	AAH-13XX	AAT-73XX	AAY-83XX	QB-02XX	QL-26XX	QQ-20XX	QT-57XX	QW-85XX	YC-11XX	YO-56XX
AAB-42XX	AAI-15XX	AAT-74XX	AAZ-52XX	QC-62XX	QL-36XX	QQ-26XX	QT-99XX	QW-86XX	YC-81XX	YO-91XX
AAB-69XX	AAI-49XX	AAU-13XX	AAZ-61XX	QD-19XX	QL-50XX	QQ-56XX	QU-84XX	QW-91XX	YD-51XX	YQ-00XX
AAB-70XX	AAJ-90XX	AAU-17XX	ABA-13XX	QD-79XX	QL-74XX	QQ-63XX	QU-92XX	QX-56XX	YD-76XX	YQ-20XX
AAB-71XX	AAL-98XX	AAU-26XX	ABB-41XX	QE-64XX	QL-83XX	QR-09XX	QV-14XX	QX-62XX	YG-08XX	YR-80XX
AAC-20XX	AAM-55XX	AAU-71XX	ABB-42XX	QE-97XX	QL-87XX	QR-33XX	QV-15XX	QX-81XX	YH-24XX	YV-34XX
AAD-39XX	AAM-96XX	AAU-88XX	ABC-39XX	QG-48XX	QL-93XX	QR-42XX	QV-19XX	QX-84XX	YH-59XX	YX-53XX
AAD-49XX	AAN-75XX	AAV-74XX	ABD-69XX	QH-32XX	QM-13XX	QR-82XX	QV-58XX	QX-94XX	YJ-20XX	YY-42XX
AAE-10XX	AAO-10XX	AAW-25XX	ABF-70XX	QI-93XX	QN-43XX	QS-09XX	QV-62XX	QZ-12XX	YJ-79XX	YY-57XX
AAF-17XX	AAO-82XX	AAW-51XX	ABG-42XX	QJ-17XX	QN-71XX	QS-52XX	QV-74XX	QZ-64XX	YL-21XX	YY-68XX
AAF-43XX	AAP-27XX	AAW-56XX	ABJ-26XX	QK-27XX	QN-92XX	QS-52XX	QV-75XX	QZ-75XX	YM-10XX	YY-90XX
AAF-83XX	AAP-34XX	AAX-11XX	ABJ-81XX	QK-47XX	QN-93XX	QS-62XX	QV-80XX	QZ-88XX	YM-68XX	YZ-01XX
AAG-19XX	AAP-47XX	AAX-22XX	ABK-16XX	QK-83XX	QN-96XX	QS-75XX	QW-49XX	QZ-96XX	YN-03XX	YZ-75XX
AAG-49XX	AAQ-09XX	AAX-44XX	ABN-87XX	QL-06XX	QO-16XX	QS-88XX	QW-54XX	YA-17XX	YN-69XX	YZ-82XX
AAG-77XX	AAQ-44XX	AAY-16XX	ABP-07XX							

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
DAB-28XX	MAHINDRA	MINI TRUCK	KS-48XX	TATA	MOTOR CAR
PQ-65XX	FOTON	MINI TRUCK	KX-74XX	MICRO	MOTOR CAR
17-29XX	TOYOTA	MOTOR CAR	BIU-94XX	TVS	MOTOR CYCLE
65-17XX	NISSAN	MOTOR CAR	51-17XX	TOYOTA	MOTOR VAN
CAG-81XX	SUZUKI	MOTOR CAR	54-88XX	TOYOTA	MOTOR VAN
HW-86XX	HONDA	MOTOR CAR	PI-52XX	SUZUKI	MOTOR VAN

KULIYAPITIYA VEHICLE YARD (0117711142)

THREE WHEEL

AAB-56XX	AAQ-63XX	ABG-77XX	QH-62XX	QN-40XX	QR-15XX	QU-78XX	QX-53XX	YF-55XX	YN-36XX	YS-56XX
AAC-91XX	AAR-31XX	ABH-57XX	QI-65XX	QN-55XX	QR-78XX	QU-91XX	QZ-13XX	YG-16XX	YN-72XX	YS-86XX
AAE-90XX	AAT-44XX	ABR-72XX	QJ-63XX	QN-67XX	QS-19XX	QU-94XX	QZ-29XX	YI-06XX	YO-31XX	YT-23XX
AAG-78XX	AAV-67XX	ABU-19XX	QJ-93XX	QN-75XX	QS-35XX	QV-37XX	QZ-30XX	YI-54XX	YP-08XX	YU-45XX
AAH-00XX	AAW-06XX	JZ-84XX	QK-02XX	QN-94XX	QS-96XX	QV-84XX	QZ-42XX	YJ-26XX	YP-15XX	YV-39XX
AAI-39XX	AAW-45XX	QA-88XX	QL-44XX	QO-05XX	QT-58XX	QW-52XX	QZ-53XX	YK-03XX	YP-50XX	YX-11XX
AAM-12XX	AAW-96XX	QC-52XX	QL-79XX	QO-66XX	QT-58XX	QW-55XX	YB-48XX	YL-55XX	YP-56XX	YX-41XX
AAP-39XX	AAX-34XX	QD-53XX	QL-93XX	QO-81XX	QU-31XX	QW-99XX	YD-21XX	YM-33XX	YP-88XX	YX-45XX
AAP-69XX	ABA-08XX	QD-59XX	QM-20XX	QP-41XX	QU-42XX	QX-13XX	YD-37XX	YM-47XX	YQ-00XX	YX-68XX
AAQ-20XX	ABB-72XX	QE-71XX	QM-35XX	QP-47XX	QU-45XX	QX-14XX	YE-00XX	YN-01XX	YQ-33XX	YY-15XX
AAQ-59XX	ABF-95XX	QH-36XX	QN-38XX	QP-78XX	QU-78XX	QX-20XX	YF-15XX	YN-11XX	YS-21XX	YY-37XX

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
JI-14XX	HYUNDAI	MOTOR CAR	58-32XX	NISSAN	MOTOR VAN
JY-83XX	MARUTI	MOTOR CAR	RE-56XX	SONALIKA	TRACTOR
KM-04XX	SUZUKI	MOTOR CAR	BIG-88XX	HERO	MOTOR CYCLE

MAHARA VEHICLE YARD (0112920665)

THREE WHEEL

AAA-30XX	QB-73XX	QJ-99XX	QM-14XX	QN-79XX	QR-17XX	QR-76XX	QZ-30XX	YA-88XX	YN-50XX	YW-92XX
AAH-54XX	QD-77XX	QL-24XX	QN-46XX	QO-59XX	BIA-54XX	QW-65XX				

MAHARA MIHUDHU MAWATHA VEHICLE YARD (0112925044)

THREE WHEEL

AAA-59XX	AAG-42XX	AAT-55XX	QC-41XX	QN-91XX	QW-59XX	YH-29XX	YK-88XX	YM-95XX	YO-52XX	YQ-20XX	YY-44XX
AAD-38XX	AAM-72XX	ABH-12XX	QD-81XX	QO-64XX	QX-29XX	YJ-12XX	YM-75XX	YN-27XX			
AAG-14XX	AAS-42XX	JX-79XX	QK-91XX								

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
GZ-68XX	NISSAN	MOTOR CAR	GU-00XX	ISUZU	MOTOR LORRY
GP-38XX	ISUZU	MOTOR LORRY	PA-23XX	MITSUBISHI	MOTOR VAN

NITTAMBUWA VEHICLE YARD (0332050958)

THREE WHEEL

AAA-16XX	AAJ-10XX	AAT-73XX	ABK-10XX	QH-01XX	QL-01XX	QP-30XX	QT-78XX	QW-69XX	YF-66XX	YS-60XX	YY-67XX
AAA-26XX	AAK-10XX	AAT-95XX	ABK-25XX	QH-03XX	QL-18XX	QP-55XX	QU-06XX	QW-84XX	YF-88XX	YT-47XX	YZ-57XX
AAA-31XX	AAL-60XX	AAU-07XX	ABL-01XX	QH-65XX	QL-24XX	QQ-42XX	QU-36XX	QX-47XX	YF-96XX	YT-67XX	
AAB-23XX	AAM-36XX	AAU-40XX	ABM-69XX	QI-67XX	QL-43XX	QQ-75XX	QU-68XX	QZ-18XX	YH-67XX	YU-20XX	
AAC-81XX	AAO-24XX	AAU-67XX	ABN-25XX	QI-70XX	QM-41XX	QR-00XX	QU-71XX	QZ-60XX	YK-87XX	YU-64XX	
AAD-45XX	AAP-67XX	AAU-75XX	ABO-19XX	QI-88XX	QN-00XX	QS-83XX	QU-73XX	YA-55XX	YM-07XX	YU-80XX	
AAD-98XX	AAQ-11XX	AAY-98XX	ABP-50XX	QJ-73XX	QN-65XX	QT-02XX	QW-45XX	YD-34XX	YN-64XX	YV-09XX	
AAF-92XX	AAQ-86XX	AAZ-70XX	JY-20XX	QK-11XX	QN-65XX	QT-16XX	QW-51XX	YD-47XX	YR-07XX	YW-09XX	
AAF-92XX	AAR-89XX	AAZ-90XX	QA-49XX	QK-39XX	QO-65XX	QT-67XX	QW-60XX	YF-17XX	YR-22XX	YW-84XX	
AAG-22XX	AAR-92XX	ABB-55XX	QE-45XX	QK-72XX	QO-86XX	QT-73XX	QW-65XX	YF-26XX	YR-92XX	YY-64XX	
AAG-90XX	AAS-28XX	ABB-91XX	QG-23XX	QK-90XX	QO-97XX	QT-75XX					
AAI-79XX	AAT-67XX	ABG-33XX									

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
14-69XX	TOYOTA	MOTOR CAR	DAC-35XX	MITSUBISHI	MINI TRUCK
CAI-35XX	MICRO	MOTOR CAR	DAE-55XX	MAHINDRA	MINI TRUCK
CAR-08XX	RENAULT	MOTOR CAR	LH-10XX	MITSUBISHI	MOTOR LORRY
CAU-94XX	TOYOTA	MOTOR CAR	252-06XX	NISSAN	MOTOR VAN
CBB-98XX	SUZUKI	MOTOR CAR	PA-12XX	HYUNDAI	MOTOR VAN
HQ-77XX	MARUTI	MOTOR CAR	PA-31XX	SUZUKI	MOTOR VAN
KT-85XX	MICRO	MOTOR CAR	PI-26XX	MITSUBISHI	MOTOR VAN
BIG-53XX	YAMAHA	MOTOR CYCLE			

THALAWATHUGODA VEHICLE YARD (0112744977)

THREE WHEEL

AAD-90XX	AAL-81XX	AAU-44XX	AAZ-77XX	ABP-33XX	QG-44XX	QO-96XX	QT-49XX	QX-12XX	QZ-90XX	YK-51XX	YU-82XX
AAD-97XX	AAM-15XX	AAU-62XX	ABA-66XX	ABQ-22XX	QH-17XX	QP-69XX	QU-34XX	QX-37XX	YA-59XX	YL-71XX	YV-49XX
AAE-61XX	AAM-36XX	AAW-44XX	ABB-07XX	ABQ-53XX	QH-88XX	QQ-11XX	QV-06XX	QX-57XX	YB-57XX	YO-74XX	YX-38XX
AAF-89XX	AAO-05XX	AAW-71XX	ABC-40XX	QA-70XX	QI-74XX	QQ-98XX	QV-57XX	QX-94XX	YF-30XX	YQ-24XX	YY-90XX
AAG-75XX	AAQ-61XX	AAW-96XX	ABC-73XX	QD-12XX	QJ-83XX	QR-60XX	QV-84XX	QZ-21XX	YF-34XX	YQ-45XX	
AAJ-86XX	AAR-69XX	AAY-02XX	ABE-67XX	QD-12XX	QM-48XX	QT-01XX	QV-89XX	QZ-39XX	YJ-83XX	YR-97XX	
AAJ-98XX	AAS-66XX	AAY-16XX	ABM-05XX	QD-87XX	QN-07XX	QT-10XX	QW-39XX	QZ-79XX	YK-39XX	YU-60XX	
AAK-76XX	AAT-79XX	AAY-19XX	ABO-99XX	QE-68XX	QN-21XX						

OTHER VEHICLES

VEHICLE NO	MODEL	MAKE	VEHICLE NO	MODEL	MAKE
PW-13XX	MAHINDRA	MOTOR CAB	KI-16XX	PERODUA	MOTOR CAR
19-64XX	MAZDA	MOTOR CAR	KQ-90XX	TATA	MOTOR CAR
19-86XX	DAEWOO	MOTOR CAR	KR-77XX	TATA	MOTOR CAR
CAB-27XX	TOYOTA	MOTOR CAR	KT-33XX	HONDA	MOTOR CAR
CAL-99XX	MITSUBISHI	MOTOR CAR	PD-12XX	NISSAN	MOTOR CAR
CAN-81XX	MITSUBISHI	MOTOR CAR	BHG-48XX	YAMAHA	MOTOR CYCLE
CAO-85XX	SUZUKI	MOTOR CAR	BIL-51XX	YAMAHA	MOTOR CYCLE
CAV-54XX	RENAULT	MOTOR CAR	BIN-65XX	YAMAHA	MOTOR CYCLE
CAX-03XX	TOYOTA	MOTOR CAR	LL-31XX	FAW	MOTOR LORRY
CAX-69XX	TOYOTA	MOTOR CAR	LO-32XX	TATA	MOTOR LORRY
CAX-99XX	MAZDA	MOTOR CAR	53-09XX	MAZDA	MOTOR VAN
CBA-96XX	SUZUKI	MOTOR CAR	PF-75XX	TOYOTA	MOTOR VAN
CBB-66XX	SUZUKI	MOTOR CAR	PJ-11XX	NISSAN	MOTOR VAN
CBC-24XX	SUZUKI	MOTOR CAR	PJ-47XX	DAIHATSU	MOTOR VAN
CBD-81XX	SUZUKI	MOTOR CAR			
KC-40XX	VOLVO	MOTOR CAR			



2023 மார்ச் மாதம் 07, 08, 09 மற்றும் 10 ஆகிய திகதிகளில் மு.ப. 9.30 தொடக்கம் பி.ப. 4.30 வரை மேலுள்ள முகவரிகளில் பரீட்சிக்க முடியும். மார்ச் மாதம் 10 ஆம் திகதி பி.ப. 4.30க்கு கேள்விமனுக்களை ஏற்பது நிறைவு செய்யப்படும். கேள்விமனு ஆவணங்களை மீளளிக்கப்படாத 250.00 ரூபாவை செலுத்தி ஹொரன, அநுராதபுரம், நிட்டம்புவ, குளியாப்பிட்டி, மஹர மற்றும் தலவத்துகொட கிளைகளில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தொலைபேசி மூலம் அறியத்தரப்படுவதோடு, அறிவிக்கப்பட்டு 7 நாட்களுக்குள் முழுப் பணத்தையும் செலுத்தி வாகனத்தை அகற்றிக்கொள்ள வேண்டும்.

தேர்வு செய்யப்பட்ட வாகனங்களில் சில வாகங்கள் லீசிங் வசதிகளின் கீழ் மாத்திரம் விற்கப்படும்.

விற்பதற்காக முன்வைக்கப்படும் வாகனங்களை காரணம் கூறாது அகற்றிக்கொள்ளும் உரிமை நிறுவனம் வசமானது.

விண்ணப்பிக்கும் வாகனங்களை இருக்கின்ற நிலையிலேயே ஏற்க வேண்டும் என்பதோடு, அனைத்து நிலுவை வருமான அனுமதிப்பத்திர கட்டணம் மற்றும் அரச வரிகள் கொள்வனவாளரினால் ஏற்றல்

வாகனபரி சோதனை

Mahara Vehicle Yard: No. 377/2, Mahara, Kadawatha
Mihindu Mawatha Yard : No: 15/20, Mihindu Mawatha, Mahara Kadawatha
Horana Vehicle Yard: No. 166, Aguruwathota Road, horana.
Anudharapura Vehicle Yard: Ala 05, Rathmale, Shrawasthipura.
Nittabmuwa Vehicle Yard: No. 655, Jayasuriya Mawatha, Nittabmuwa·
Kuliyapitiya Vehicle Yard: No. 259, Madampe Road, Kuliyapitiya.
Thalawathugoda Vehicle Yard: No. 175, School Lane, Thalawathugoda

* கேள்விமனு தொடர்பிலான இறுதி முடிவு முகாமைத்துவம் வசமானது.

CITIZENS DEVELOPMENT BUSINESS FINANCE PLC
No. 377/2, Mahara, Kadawatha
Tel(0112 920 665 / 034- 22 66 244 / 025-205 26 32

Best way to fulfil your Future Dreams
E-mail your advertisements to, classified@lakehouse.lk
Piyumi- 0112 429 383 0112 429 347 | Gayani - 0112 429 343 / 342
SUNDAY OBSERVER Marriage Proposals
Decades of Trusted Service

தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI தினகரன் வாரமஞ்சரி

சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

மோட்டார் வாகனங்கள்

121 வாகனங்கள் தேவை

தேவை

இரவு மற்றும் பகல் வாகனமோட்டுவதற்கு விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள். உடன்காசு செலுத்தப்படும். ஹெந்தலகெப்ஸ் 0778890001 014146

செயற்றிட்டம் ஒன்றிற்கு வாடகை அடிப்படையில் Double Cab மற்றும் Van சாரதிகள் எரிபொருள் இன்றி தேவை. வவுனியா, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை பிரதேசங்களுக்கு அருகில் விரும்பத்தக்கது. (P-இலக்க வாகனங்கள் மட்டும்) அழையுங்கள் 0762445952 014222

நிறுவனத்திற்கு 1985 2005 அல்லது P நம்பர் Caravan Double Cab சாரதியுடன் யாழ்ப்பாணம், திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார், அநுராதபுரம் பிரதேசங்களுக்கு நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் வாகனம் மாத்திரம் தேவை. அழையுங்கள் 0764516684 014218

வேலைவாய்ப்பு

317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

இலங்கையின் பிரபல கைத்தறி துணி உற்பத்தி நிறுவனத்திற்கு சிறந்த அனுபவமுள்ள ஆண்/ பெண் ஊழியர்கள் உடன் தேவை. மாதாந்த சம்பளம் ரூ. 50,000/ முதல் ரூ. 75,000/ வரை உழைக்க முடியும். தங்குமிட வசதி உண்டு. தொடர்பு 0777710742 014646

318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

சாரதிகள் தேவை. "ஏ" தர சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் சிறந்த பரிந்துரையுடன் சாரதிகள் 3 பேர் தேவை. அவர்களுக்கு மேர்சிடிஸ் பென்ஸ், லேண்ட் குருசர், பிராடோ போன்ற வாகனங்களை செலுத்தக்கூடிய அனுபவம் இருத்தல் வேண்டும். எலைட் இல. 301, பழைய சோனகத்தெரு, கொழும்பு 12. 077 2424013, 0117 397 777 014297

319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

பாணந்துறை சர்வதேச பாடசாலை ஒன்றில் தங்கியிருந்து வேலைகளை செய்யக்கூடிய 50 வயதுக்குட்பட்ட கணவன் மனைவியான தம்பதி தேவை. நல்ல சம்பளத்துடன் தங்குமிடம். தொடர்பு 0777558655 014841

320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

வேலைவாய்ப்பு ரூம் மற்றும் உணவகம் ஸ்டீவர்டு மற்றும் வரவேற்பாளர், காவலாளி மற்றும் தோட்டக்காரர். மின்னஞ்சல். valampuriresort@gmail.com தகவலுக்கு 07 78 85 41 44. 014198

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 250/- ரூபா
* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377 (லேக்ஹவுஸ் கிளை)
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

0777535303/ 0777561858 எமது முட்டை பண்ணைக்கு அனுபவமுள்ள குடும்பம் தேவை. 1400/ , 1100/ 013951

325 தொழில்துறை பொது

தங்கியிருந்து பால் வெட்டுவதற்கு குடும்பம் தேவை. பாலில் அரைவாசி வழங்கப்படும். வேறு வேலைகளும் உண்டு. 0714556699, 0777444719. 013369

காணி/தோட்டம்

616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கொட்டாவ, Highway Residence இல் 1 bed room, 1 kitchen, 1 Living Semi Furnished Fully A/ C பிரதான வீதிக்கு முகப்பாக Apart ment ஒன்றில் உடன் விற்பனைக்கு. 0702 804789 014406

கொள்ளுப்பிட்டி முஹந்திரம் வீதி 03 அறைகள் மற்றும் 02 குளியலறைகளுடன் இரு மாடி வீடு விற்பனைக்கு (பிரதமர் அலுவலகத்திற்கு பின்னால்) 0775262362 012364

பொரளை கோத்தமி வீதி, இருமாடி வீடு விற்பனைக்கு. 3.10 கோடி 0705364560 . 013576

மட்டக்குளியவில் 02 படுக்கையறைகள், மண்டபம், சமையலறை, இணைந்த குளியலறையுடன் வீட்டின் மாடி வாடகைக்கு. தொடர்பு 011 2 521398, 07774 8 1728. 013730

ராஜகிரிய பண்டாரநாயக்க வீதி 1850 சதுர அடி வீடு மற்றும் வியாபார ஸ்தலத்திற்கும் பொருத்தமான காணி வாடகைக்கு வாகன நிறுத்துமிட வசதியுண்டு. 0776532576. 013930

621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777282147 கண்டியில் வீடு ஹோட்டல், தோட்டம் வெற்றுக்காணி, வியாபார ஸ்தலம் கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் 0777438169, 0775486262. 013892

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 300/- ரூபா
* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377 (லேக்ஹவுஸ் கிளை)
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

0777282147 கண்டி வட்டதன்தென்ன 70 பேர்ச் வீடு, நொஹாகொட வீதி 23 பேர்ச் 3 மாடி வீடு, தொம்வல 14 பேர்ச் வீடு, 18 பேர்ச் வீடு, இந்த 4 வீடுகளும் 1525 மில்லியனுக்கு. வெளிநாடு செல்வதற்காக விற்பனைக்கு. சகல வசதிகளும் உண்டு. 0777438169. 009177

623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

பிரமிக்க வைக்கும் காட்சிகள் நிறைந்த குளிரான மலைநாட்டின் அழகை அனுபவிப்பதற்கு விருப்பமான உங்களுக்கு ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக, பெறுமதியான வியாபார மற்றும் வதிவிட 100 காணித்துண்டுகள். ஒரு பேர்ச் ரூபா 245,000/ தொடக்கம். விஷேட கழிவுடன் வட்டியில்லாத இலகுக் கொடுப்பனவு முறை. தொடர்பு கொள்ளவும், சிரிபெல லேண்ட்ஸ். 0702484848. 014060

ஹட்டன் கொழும்பு பிரதான வீதிக்கு முகப்பாக 10 பேர்ச் கொண்ட பெறுமதியான 100 காணித்துண்டுகள் விற்பனைக்கு உண்டு. குழாய் நீர் மற்றும் மூன்று பேஸ் மின்சாரம் கொண்டது. ஒரு பேர்ச் 2,45,000/ தொடக்கம். இலகு கொடுப்பனவு முறை மற்றும் விஷேட கழிவொன்று சகிதம் உங்கள் காணியை ஒன்றே ஒதுக்கி கொள்வதற்கு தொடர்பு கொள்ளுங்கள். சிரிபெல லேண்ட்ஸ் 0702484848. 014062

Marriage Proposals
Decades of Trusted Service
For 15 Words - Rs. 1,000/- For each additional word Rs. 25/-
SUNDAY OBSERVER For 15 Words - Rs. 800/- For each additional word Rs. 25/-
வீரமஞ்சரி For 15 Words - Rs. 300/- For each additional word Rs. 25/-
- ISLAND WIDE -
SABARAGAMUWA PROVINCE
KEGALLE. 035-5677210, 035-2222427 M.M. Salgado & Sons, Salgado Bakery & Hotel
KEGALLE. 035-4926489, 035-2231716 Red Rose Book Shop, Royal Shopping Complex, Main St,
RATNAPURA. 045-2223883, 0777-221939 Lake House Advertising Centre, No. 88, Main Street,
RATNAPURA. 045-2230730 G.G. Karunaratne, No. 16, Church Road
SOUTHERN PROVINCE
AMBALANGODA. 091-2255744 / 4382034 H.D. Mendis, 96 B 1/1, Galle Road,
AMBALANGODA. 091-2258483, 0779639214 "Royal Book Shop", No. 152, Main Street,
BADDEGAMA. 091 2292263, 091 3926084 Gamage Book Shop,
BENTOTA 034-2270090, 034 2270572 Sumudu News Papers, No. 117, Galle Rd,
ELPITIYA. 091-2290746, 077-2609456 Chandima Groceries,
GALLE. 091-2232733, 091-5627646 New Aradhana Traders, 81, Maha Veediya,
GALLE. 0914-385548/0914-924261 Paranagama Traders, No. 28, P & J City, Gamini Mw,
HAMBANTOTA. 047-2220808, 0716-370337 Misiriya Stores, No. 37, Mahajana Pola,
HIKKADUWA. 091-2277792, 091-2277285 Gallage News Agencies, No. 270A, Galle Rd,
classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

கைத்தொழில் அமைச்சு

கேள்வி இலக்கம் M1FIN/32/03/18

பாவிக்கப்பட்ட வாகனங்கள் 05ஐ விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

01. கைத்தொழில் அமைச்சின் செயலாளர் சார்பாக அமைச்சு பெறுகை/ கேள்விக் குழுத் தலைவரால் இவ் அமைச்சில் பாவனையில் இருந்து அகற்றப்பட்ட வாகனங்கள் 05ஐ விற்பனை செய்வதற்காக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. கீழ்க்காணும் பாவிக்கப்பட்ட வாகனங்களை 2023.03.07 முதல் 2023.03.27 வரை (அலுவலக நாட்களில்) மு.ப. 10.00 முதல் பி.ப. 3.00 வரை அமைச்சு வளாகத்தில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

இலக்கம்	வாகன பதிவு இலக்கம்	வகை	எரிபொருள் வகை	உற்பத்தி ஆண்டு
1	KH-2XXX	டாட்டா இன்டிகோ கார்	பெற்றோல்	2006
2	KW-8XXX	லேன்ட் ரோவர் டிஸ்கவரி ஜீப்	டீசல்	2013
3	KY-3XXX	லேன்ட் ரோவர் டிஸ்கவரி ஜீப்	டீசல்	2014
கழிக்கப்படாத பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்கள்				
4	18-2XXX	நிசான் சனி கார்	டீசல்	1992
5	WC-4XXX	கைநடிக் சபாரி மோட்டார் சைக்கிள்	பெற்றோல்	2008

03. இதற்காக கேள்விதாரர்களுக்கு மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் மற்றும் ஒவ்வொரு சகல வாகனத்திற்கும் மீளளிக்கப்படும் குறித்த வைப்புக் கட்டணத்தை கீழே குறிப்பிடுமாறு 2023.03.07 முதல் 2023.03.27 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 இற்கு இடைப்பட்ட காலத்தில் அமைச்சின் நிதிப் பிரிவு காசாளரிடம் செலுத்தி குறித்த பற்றுச் சீட்டை சமர்ப்பித்த பின்னர் பெறுகைப் பிரிவில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம் அவ்வாறே மீளளிக்கப்படும் வைப்புக் கட்டணத்தை குறித்தவாறு செலுத்தி, அதற்கான பற்றுச்சீட்டின் பிரதியொன்றை (பொது 172) உடன் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

தொடர் இலக்கம்	விபரம்	கேள்வி ஆவணங்களுக்கு மீளளிக்கப்படாத கட்டணம் ரூ.	மீளளிக்கப்படும் கேள்வி வைப்புக் கட்டணம் (ஒரு வாகனத்திற்காக) ரூ.
01	பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்கள்	2,000.00	30,000.00
02	கழிக்கப்பட்டதாக பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்கள்	1,000.00	1500.00

குறிப்பு:- பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்களுக்காக விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு ஒரு கேள்வி ஆவணம், கழிக்கப்பட்டதாக பயன்பாட்டிலிருந்து நீக்கப்படும் வாகனங்களுக்கு ஒரு கேள்வி ஆவணமாக வேறு வேறாக கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்தல் வேண்டும்.

04. பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட கேள்வி ஆவணங்களை 2023.03.28 மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு கொழும்பு-03, காலி வீதி, இல. 73/1 இல் அமைந்துள்ள கைத்தொழில் அமைச்சின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் வைப்புச் செய்வதுடன், கேள்விகள் அத்தினத்திலேயே மு.ப. 10.00 இற்கு அமைச்சு வளாகத்தில் திறக்கப்படும். கேள்விதாரருக்கு அல்லது அவர்களது பிரதிநிதி ஒருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.

05. பயன்பாட்டிலிருந்து நீக்கப்பட்ட வாகனங்களை அமைச்சு வளாகதத்திலிருந்து போக்குவரத்து செய்வதற்கு ஏற்படும் கட்டணங்களை விண்ணப்பதாரியே செலுத்துதல் வேண்டும்.

06. மேலே குறிக்கப்பட்டுள்ள வாகனங்களை பாவனையில் இருந்து நீக்கப்பட்ட பின்னர் அமைச்சினால் அவ்வாகனம் சம்பந்தமாக எந்தப் பொறுப்பும் கூறப்படமாட்டாது.

07 மேலதிக தகவல்களை கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதம கணக்காளர்:- 011-2327053 அல்லது 0711965912

தலைவர்,
அமைச்சு பெறுகை/ கேள்விக் குழு (MPC)
கைத்தொழில் அமைச்சு
இல. 73/1, காலி வீதி,
கொழும்பு-03

அமெரிக்க தூதரகம், கொழும்பு

வேலை கட்டுப்பாட்டு இலிகிதர் (ஆண்/பெண்)

இந்த பதவிக்கு விண்ணப்பிக்குமாறு நாம் ஆண்களையும் பெண்களையும் ஊக்குவிக்கின்றோம். இன, நிற, மத, பால் நிலை அல்லது தேசியம், அரசியல் தொடர்புகள், பால்நிலை மாற்றங்கள், திருணம உறவு என்பனவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டாது அனைவருக்கும் சமனான சந்தர்ப்பத்தை வழங்கும் வகையிலான பன்மைத்துவ தொழிற்படை ஒன்றை அமெரிக்க தூதரகம் எதிர்பார்க்கின்றது.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரக காரியாலயத்தினால் வசதிகள் முகாமைத்துவ காரியாலயத்தின் வேலை கட்டுப்பாட்டு இலிகிதர் பதவி நிலைக்கென தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் கோரப்படுகின்றனர். இந்த பதவியை வகிப்பவர் சிரேஷ்ட வசதிகள் முகாமைத்துவம் மற்றும் கட்டிட பொறியியல் கண்காணிப்புக்கு அறிக்கை சமர்ப்பிப்பதுடன் அவர்களின் கட்டளைகளுக்கமைய பணி முன்னுரிமையை தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு அவன்/அவள் அனைத்து நாளாந்த, அவசர மற்றும் தடுக்கக்கூடிய பராமரிப்புகளுக்கான கட்டளைகள் உட்பட சேவை நிமித்தம் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் தொடர்பில் முதன்மை அழைப்பு அதிகாரியாக கடமையாற்ற வேண்டும். பதவி நிலையை வகிப்பவர் வசதிகள் முகாமைத்துவ காரியாலயத்தின் வாடிக்கையாளர் சேவை பிரதிநிதியாக கடமையாற்றுவதுடன் தூதரக காரியாலயத்தின் பல்வேறு மட்டங்களிலுள்ள நபர்களுடன் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த பதவிக்கான வேலை நேரம் : முழுநேரம் - வாரத்திற்கு மொத்தம் 40 மணித்தியாலங்கள்

இந்த பதவிக்கான மாதாந்த மொத்த ஊதியம் 464.16 அமெரிக்க டொலர்களாகும்.

காரியாலய குழுவின் ஊதியம் அமெரிக்க டொலர் நாணய பெறுமதியில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் ஊதியம் வழங்கப்படும் காலவரையறையில் காணப்படும் நாணய மாற்று விகிதத்திற்கமைய இலங்கை ரூபாவில் ஊதிய கொடுப்பனவுகள் செலுத்தப்படும். 2023 பெப்ரவரி 13 அளவில் நாணய மாற்று விகிதம் அமெரிக்க டொலர் 1 = ரூபா. 361 ஆகும். இது தூதரக காரியாலயத்தின் தற்காலிக மறுசீரமைப்பு என்பதுடன் கட்டாய உரிமையாக கருதப்படமாட்டாது.

தேவையான தகுதிகள்:

1. **கல்வி:** இரண்டாம் நிலைக் கல்வியை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் (க.பொ. சாதாரண தரத்தை பூர்த்தி செய்திருத்தல். விண்ணப்பதாரி, கணித பாடம் உட்பட 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் இதில் குறைந்தபட்சம் 3 பாடங்களுக்கென விசேட அல்லது சாதாரண சித்தியைப் பெற்றிருக்க வேண்டும்.) **(உரிய கல்விச் சான்றிதழ்களின் பிரதியை இணைத்தல் வேண்டும்.)**

2. **வேலை முன் அனுபவம்:** வாடிக்கையாளர் சேவை விநியோக நிறுவனமொன்றில் காரியாலய நிர்வாக / இலிகிதர் சேவையில் குறைந்தபட்சம் 2 வருடகால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். **(உரிய சேவை / காரியாலய அனுபவம் தொடர்பிலான சான்றிதழ்களின் பிரதியை இணைத்தல் வேண்டும்.)**

3. **மொழித் திறன்:** மட்டம் IV (ஆகக்குறைந்த அறிவு) ஆங்கிலம் வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம். **(இவை பரிசோதிக்கப்படும்).** மட்டம் IV (சிறந்த தொழில் அறிவு) சிங்களம் மற்றும் / அல்லது தமிழ் மொழி வாசித்தல், எழுதுதல் மற்றும் பேசுதல் அவசியம்.

4. **திறன்கள் மற்றும் ஆற்றல்கள்:** நபர்களுக்கிடையிலான தொடர்புகளை கட்டியெழுப்புவதில் விசேட திறனைக் கொண்டிருப்பதுடன் ஒரே நேரத்தில் பல்வேறு வகையான வேலைகளை செய்யும் ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும். மென்பொருள் உள்ளடங்களாக கணனி பயன்பாடு குறித்தும் சிறந்த அறிவைப் பெற்றிருத்தல். அலுவலக பதிவுகளை எழுதுதல், புதுப்பித்தல், தரவுகளை உள்ளீடு செய்வதற்கு உயர் மட்டத்திலான தட்டச்சு திறனைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் தமது தாய்மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கும், ஆங்கிலத்திலிருந்து தாய்மொழிக்கும் ஆவணங்களை மொழிப்பெயர்ப்பு செய்வதற்கான திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை:

மேலதிக விபரங்களுக்கு **https://lk.usembassy.gov/embassy/jobs/** என்ற எமது இணையத்தளத்தை பார்வையிடவும், உங்கள் விண்ணப்பங்களை **இணையத்தளத்தின் ஊடாக மின்னணு ஆட்சேர்ப்பு விண்ணப்ப அமைப்பு [ERA]** மூலம் பூர்த்தி செய்து விண்ணப்பிக்க முடியும். நீங்கள் விண்ணப்பிப்பதற்கு முன்னர் எமது இணையத் தளத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசிக்கவும்.

தேவைப்படும் ஆவணங்கள்:

விண்ணப்பதாரி தனது விண்ணப்பத்தை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் ஆவணங்களை மின்னணு பிரதிகளுடன் இலத்திரனியல் ஆட்சேர்ப்பு விண்ணப்பப் பத்திரம் மூலமாக பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். அவ்விதம் சமர்ப்பிக்காத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

- பிரஜாவுரிமையை சான்றுப்படுத்தும் ஆவணங்கள். (அடையாள அட்டை /கடவுச்சீட்டு /வேறு ஆவணங்கள்).
- வாகன அனுமதிப் பத்திரம் (இரு பக்கங்களும்)
- சேவைகால அனுபவ சான்றிதழ்.

நீங்கள் அனுப்பும் கடிதங்கள் அல்லது மின்னஞ்சல் மூலமான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

உங்கள் விண்ணப்பம் **மார்ச் 16, 2023** ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் எங்களுக்குக்கிடைக்கப்பெற வேண்டும். தயவு செய்து கவனிக்கவும். தகுதியானவர்கள் மாத்திரம் தொடர்பு கொள்ளப்படுவார்கள்.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

மேஷம்

வேகத்தோடும் விவேகத்தோடும் செயல்படும் மேஷ ராசி நேயர்களே! மாசி 25ஆம் திகதி (09/03/2023) மீன ராசிக்கு செல்லும் புதன் அங்கு நீசம் பெறுகிறார். அதற்கு அதிபதியான புதன் 12ஆம் இடத்தில் நீசம் பெறுவது யோகம்தான். மேலும் குருவோடு புதன் சேர்வதால் நீசபங்க ராஜயோகம் ஏற்படுகிறது. அது மட்டுமின்றி விபரீத ராஜயோக அடிப்படையிலும் பல நல்ல சம்பவங்கள் நடைபெறும். பொருளாதார வசதி பெருகும். வாகனம் வாங்கும் யோகம் முதல் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து யோகமும் வந்து சேரும். வரன்கள் முடிவாகி மகிழ்ச்சியை வழங்கும்.

ரிஷபம்

விடாமுயற்சியால் வெற்றியை எட்டிப் பிடிக்கும் ரிஷப ராசி நேயர்களே ! மாசி 25ஆம் திகதி(09/03/2023) மீன ராசிக்கு செல்லும் புதன் அங்கு நீசம் பெறுகிறார். தன அதிபதி நீசம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. வருமானப் பற்றாக்குறை ஏற்படும். வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்படுகிறது. என்று கவலைப்படுவீர்கள். கொடுத்த வாக்கை காப்பாற்ற இயலாது. கொள்கைப் பிடிப்போடு செயல்பட முடியாது. புதிய வாய்ப்புகள் கதவை தட்டினாலும் அதை உபயோகப்படுத்திக் கொள்வதில் சிக்கல் உருவாகும் .

மிதுனம்

நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிக்கும் மிதுன ராசி நேயர்களே! மாசி 25ஆம் திகதி (09/03/2023) மீன ராசிக்கு செல்லும்போது நீசம் பெறுகிறார். உங்கள் ராசி நாதன் புதன் நீசம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. செய்யும் காரியங்களில் தடைகளும் தாமதங்களும் அதிகரிக்கும். ஆரோக்கியத் தொல்லை உண்டு. குடும்பத்தில் ஒருவர் மாறி ஒருவருக்கு மருத்துவச் செலவு ஏற்படக்கூடிய சூழ்நிலை உருவாகும். உறவினர் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

கடகம்

நல்லது செய்ய வேண்டும் என்று நினைக்கும் கடக ராசி நேயர்களே ! மார்ச் 25ஆம் திகதி (09/03/2023)மீன ராசிக்கு செல்லும் புதன் அங்கு நீசம் பெறுகிறார். 12க்கு அதிபதி நீசம் பெறுவது யோகம்தான். விரயத்திற்கு ஏற்ற லாபம் வந்து கொண்டே இருக்கும். வீடு மாற்றம் உறுதியாகலாம். வழக்குகள் சாதகமாக முடியும். வருங்கால நலன் கருதி புதிய திட்டங்களை தட்டி வெற்றி காண்பீர்கள் .

சிம்மம்

மனதில் நினைத்ததை மறுகணமே செய்து முடிக்கும் சிம்ம ராசி நேயர்களே! மாசி 25ம் திகதி(09/03/2023) மீன ராசிக்கு செல்லும் போது அங்கு நீசம் பெறுகிறார். தனாதிபதி நீசம் பெறும் போது தட்டுப்பாடுகள் அதிகரிக்கும். பொருளாதாரத்தில் பற்றாக்குறை ஏற்படுகிறது என்று கவலைப்படுவீர்கள். குடும்ப உறுப்பினர்கள் உங்கள் மீது குற்றம் சுமத்துவர். வெளிநாடு செல்லும் முயற்சியில் தாமதம் ஏற்படும். இளைய சகோதரரோடு இணக்கம் குறையும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது .

கன்னி

பொறுமையாக செயற்பட்டு பெருமை காணும் கன்னி ராசி நேயர்களே !மாசி 25ஆம் திகதி (09/03/2023) புதன் மீன ராசிக்கு செல்லும்போது அங்கு நீசம் பெறுகிறார். மேலும் அவருக்கு குருவோடு இணைந்து நீச பங்கும் அடைகின்றார். ராசிநாதன் நீசம் பெறுவதால் ஆரோக்கியத் தொல்லை உண்டு. என்றாலும் மாற்று மருத்துவத்தால் உடல்நிலை சீராக்கிக் கொள்ள இயலும். தொழில் மாற்றம் அல்லது புதிய பங்குதாரர்களின் சேர்க்கை ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகள் உங்கள் எண்ணங்களை பூர்த்தி செய்வார் .

துலாம்

நீதி நேர்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் துலாம் ராசி நேயர்களே! மார்ச் 25ஆம் திகதி (09/03/2023) மீன ராசிக்கு செல்லும் புதன் அங்கு நீசம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 10ம் இடத்திற்கு அதிபதி நீசம் பெறுவது நன்மைதான். கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்பதற்கு ஏற்ப நீங்கள் எதிர்பாராத விதத்தில் நற்பலன்கள் வந்து சேரும். உத்தியோகத்தில் முன்னேற்றம் ஏற்படும். ஒரு சிலருக்கு ஊதிய உயர்வு கிடைக்கும். குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். சுபகாரிய பேச்சு கைகூடும். தொழில் வளர்ச்சி திருப்தி தரும் .

விருச்சிகம்

எதிர்காலத்தை இனியதாக மாற்றும் விருச்சிக ராசி நேயர்களே !மார்ச் 25ஆம் திகதி (09/03/2023) மீன ராசிக்கு செல்லும் புதன் அங்கு நீசம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு 8ம் அதிபதியாக விளங்கும் புதன் நீசம் பெறுவது ஒருவகையில் நன்மைதான். அதே நேரத்தில் நீசம் பெற்ற புதன் குருவோடு இணைந்து நீசபங்கு ராஜ யோகத்தை உருவாக்குகின்றார். இதனால் சுபகாரிய பேச்சுக்கள் முடிவாகும். அரைகுறையாக நின்ற பணிகள் அனைத்தும் நடைபெறும். வெளிநாட்டில் இருந்து நண்பர்கள் மூலம் ஆதாயம் தரும் தகவல் கிடைக்கலாம் .

தனுசு

எதிலும் உண்மையை அறிந்து செயல்படும் தனுசு ராசி நேயர்களே ! மாசி 25ஆம் திகதி (09/03/2023) மீன ராசிக்கு செல்லும் புதன் அங்கு நீசம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு சப்தமாதிபதி நீசம் பெறும் பொழுது வாழ்க்கை துணையின் உடல்நலத்தில் கவனம் தேவை மருத்துவச் செலவுகள் கூடும். தொழில் மந்த நிலையில் இருக்கும். உதவி செய்வதாக சொல்பவர்கள் கடைசி நேரத்தில் கை விரிக்கலாம். உத்தியோகத்தில் உயர் அதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக்கொள்ள மறுப்பர். வேறு வேலைக்கு செல்லலாமா என்று சிந்திப்பீர்கள் .

மகரம்

முயன்றால் முடியாதது இல்லை என்று எடுத்து ரைக்கும் மகர ராசி நேயர்களே! மாசி 25ஆம் திகதி (09/03/2023) மீன ராசிக்கு செல்லும் புதன் அங்கு நீசம் பெறுகிறார். அதற்கு அதிபதி நீசம் பெறுவதை நன்மைதான். படித்து முடித்தும் வேலையில்லையே என்று கவலைப்பட்டவர்களுக்கு இப்பொழுது வேலை கிடைக்கும். நல்ல நிறுவனங்களில் இருந்து அழைப்புகள் வரலாம். குழப்பம் அகல நண்பர்கள் வழி காட்டுவர் .

கும்பம்

பிறர் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் கும்ப ராசி நேயர்களே !மாசி 25ஆம் திகதி (09/03/2023) மீன ராசிக்கு செல்லும்போது அங்கு நீசம் பெறுகிறார். அட்டமாதிபதி நீசம் பெறுவது ஒரு வழிக்கு நன்மைதான். என்றாலும் பஞ்சமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் பிள்ளைகளைப் பற்றிய கவலை அதிகரிக்கும். அவர்களை உங்கள் மேற்பார்வையில் வைத்து கொள்வது நல்லது. வீடு வாங்கும் முயற்சியில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் உழைப்புக்கு ஏற்ற பலன் கிடைக்காது .

மீனம்

செய்வதை திருந்தச் செய்ய வேண்டும். என்று நினைக்கும் மீன ராசி நேயர்களே! மாசி 25ஆம் திகதி (09/03/2023)மீன ராசிக்கு செல்லும் புதன் அங்கு நீசம் பெறுகிறார். உங்கள் ராசிக்கு கேந்திராதிபத்திய தோஷம் பெற்ற கிரகம் நீசம் பெறுவது யோகம் தான். எனவே கல்வி சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த புது முயற்சி வெற்றி கிடைக்கும். மங்கல நிகழ்சிகள் மனையில் நடைபெறும்.

கல்முனை ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகர் மகோற்சவமும் முத்துச்சப்பர பவனியும்

ழமணித்திருநாட்டின் கிழக்கே கல்விவளம், செல்வவளம், வீரவளம், விருந்தோம்பல், நற்குணம் மற்றும் ஒழுக்க விழுமியங்களை தலையாக மதிக்கும் நற்குடிகள் வாழ்கின்ற கல்முனை மாநகரில், வீற்றிருப்பவர் ஸ்ரீ தரவை சித்தி விநாயகர்.

கல்முனை மாநகரில் அமர்ந்து அருளாட்சி புரிகின்ற ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகப் பெருமானுடைய ஆலயத்தின் அமைவிடம் மிகவும் கீர்த்தி நிறைந்ததாக விளங்குகின்றது. ஆலயத்தின் கிழக்கே கடலும் கடல்சார்ந்த நெய்தலும், மேற்கே வயலும் வயல்சார்ந்த மருதமுமாய் அமைந்திருப்பது இறைவனுக்கு உகந்த இடமாக காட்சியளிக்கின்றது.

அவ்வழியால் பயணம் செய்யும் எவரும், மன்னர் காலம்தொட்டு இன்றுவரை கடந்த 487 ஆண்டுகளாக கல்முனைவாழ் தமிழ் மக்களால் பெரிதும் போற்றி வணங்கப்படுகின்ற ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகப் பெருமான் ஆலயத்தின் மூலவிக்கிரகமான ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகப் பெருமானை வணங்கி அருள் பெற்றுச் செல்வதனை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். அந்தவகையில் அம்பாறை மாவட்டத்தில் அமையப் பெற்றிருக்கின்ற பழம் பெரும் பிள்ளையார் ஆலயங்களில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கை அனர்த்தங்களாலும் இன முரண்பாடுகளாலும் எமது ஆலயம் அடிக்கடி பாதிப்புக்களுக்கு உட்பட்டிருந்த போதிலும், எமது சமூகத்தினரின் அயராத உழைப்பினாலும், விடாமுயற்சியினாலும் தற்பொழுது பிரமாண்டமான ஆலயமாக அது நிமிர்ந்து நிற்கின்றது. இதற்கு எமது சமூகத்திலுள்ள பலரின் தியாகங்களே காரணமாகும். மேற்படி எமது ஆலயம் இனமுரண்பாடு காரணமாக தரை மட்டமாக்கப்பட்ட போது அதனை புனர்நிர்மானம் செய்வதில் நிதிரீதியாக பலரின் பங்களிப்புக்கள் கிடைக்கப்பெற்ற போதிலும் அமரர் ஆறுமுகம் வீரபாகு (நிறைவேற்றுப்பணிப்பாளர், ஹிங்குறானை சீனித் தொழிற்சாலை அம்பாறை), யோகா அருள்நம்பி (பொறியியலாளர்) மற்றும் மறைந்த பொறியியலாளர் எஸ்.செந்தில்நாதன், (நீர்ப்பாசன திணைக்களம்) ஆகியோரின் பங்களிப்பும் அளப்பெரியது மாத்திரமல்ல, அவை காலத்தால் மறக்கமுடியாதவையும் கூட. எமது சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் குழுக்களாகச் செயற்பட்டு ஊர் ஊராகச் சென்று கட்டத்துக்காக நிதி சேகரித்தனர். கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த தொண்டர்களுக்கு ஒவ்வொரு வீட்டிலிருந்தும் உணவுப் பொதிகள் கொடுத்து உதவியமையும் ஆலய புனருத்தாரணப் பணிகளில் பெண்களின் பங்களிப்பு எத்தகையது என்பதனைப் பறைசாற்றி நிற்கின்றது. அதேபோன்று ஆலய கட்டுமானப்பணிக் காலத்தில் மிகச் சிறப்பாகச் செயற்பட்ட ஆலய பரிபாலன சபையினரையும், திருப்பணிச் சபையினரையும் எமது சமூகம் என்றும் நன்றியோடு நினைவு கூர்கின்றது.

கல்முனையில் குறிப்பாக எமது சாகியத்தினுள் தொன்று தொட்டே சிறந்த நாட்டுவைத்தியர்கள், நாடகக் கலைஞர்கள், ஓவியக்கலைஞர்கள், கவிஞர்கள் மற்றும் பல படைப்பாளிகள் இருந்து வருகின்றனர். அதனுடைய தொடர்ச்சியாக எமது ஆலயங்களின் பரிபாலனசபை உறுப்பினரும், நுண்கலை வித்தகருமான கதிரமலை நவமணி எமது ஸ்ரீ தரவைச் சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவத்துக்கான கொடியினை வடிவமைத்து வருகின்றார், இம்முறையும் அவர் தனது திருப்பணியை சிறப்பாக ஆற்றியிருக்கின்றார். அதே போன்று எமது ஆலய பரிபாலன சபை முன்னாள் உறுப்பினரும் இளங்கலைஞருமான தங்கராசா பிரபாகரனும் இராசதுரை ஜெயராமும் இணைந்து பார்வதி பரமேஸ்வரனுக்கான இடப வாகனமொன்றினை வடிவமைத்து சுவாமியினுடைய உற்சவகால உள்வீதி, வெளிவீதி உலாவருதலை சிறப்பித்திருக்கின்றனர்,

இம்முறை 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவத்தினை மஹோற்சவ கால பிரதம குருவாக களுவாஞ்சிக்குடி மாணிக்கப் பிள்ளையார் ஆலயம், புற்றடி நாகலிங்கேஸ்வரர் ஆலயம், சித்தாணைக்குட்டி சுவாமி ஆலயம், அற்புதப் பிள்ளையார் ஆலயம், திருமுருகன் ஆலயம், மருதை மாரியம்மன் ஆலயங்களின் பிரதம குருவாக இருக்கின்ற “வேதாகம குருமணி, கிரியாயோதி, சாமஸ்ரீ தேசமான்ய சிவஸ்ரீ சண்முகமயூரவதன குருக்கள் பொறுப்பெடுத்து சிறப்பாக பூசைகளை நிகழ்த்தி வருகின்றார். குருக்களுக்கு பக்கபலமாக ஆலயத்தின் பிரதமகுரு சிவானந்த அர்ச்சகர் இளஞ்சைவப் புலவர் விஸ்வபிரம்மஸ்ரீ சு.கரிகரன் ஐயா செயலாற்றி வருவது சிறப்பினைத் தருகின்றது.

ஆலயத்தின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த மஹோற்சவம் கடந்த 22.02.2023 அன்று மாலை 6.00 மணியளவில் பூர்வாங்க கிரியைகளுடனும் 23.02.2023 அன்று காலை 8.00-9.20 மணிவரையான தெய்வீக சுபவேளையில் நிகழ்ந்த திருக்கொடியேற்றத்துடனும் ஆரம்பமாகியது, தொடர்ச்சியாக பன்னிரண்டு தினங்கள் திருவிழா நடைபெறும், தரவைச் சித்திவிநாயகப் பெருமானின் அருளால் ஈர்க்கப்பட்டு கல்முனை நகரின் அயல் கிராமங்களான சேனைக்குடியிருப்பு, பெரியநீலாவணை, பாண்டிருப்பு, காரைதீவு மற்றும் அக்கரைப்பற்று போன்ற இடங்களிலிருந்தும் பக்த அடியார்கள் உற்சவகால பூஜைகளை உபயம் ஏற்று நடாத்துவது பெருமானுடைய அருளாட்சிக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டாகும். 12ம் நாளாகிய 06.03.2023 அன்று மாசிமக நட்சத்திரத்தில் தீர்த்தோற்சவம் நடைபெற்று அன்று மாலை திருக்கொடியிறக்க பூசை நடைபெறும். இறுதியாக 07.03.2023 அன்று நடைபெறும் வைரவர் பூசையுடன் மஹோற்சவத் திருவிழா இனிதே நிறைவு பெறும்.

வருடாந்த மஹோற்சவத்தின் சிறப்பு நிகழ்வாக 05.03.2023 அன்று, தேவார பாராயணங்களுடன் பக்த அடியவர்கள் புடைசூழ எம்பெருமான் சித்திரத்தேரில் ஆரோகித்து வீதி உலா வருவார். இந்த ஊர்வலம் பாண்டிருப்பு மாணிக்கப்பிள்ளையார் ஆலயம்வரை செல்லவுள்ளது. இந்த தேர் பவனியில் எம்பெருமானின் திருவுருவத்தைத் தாங்கிய பேழையைச் சுமந்து இரண்டு யானைகளும் பவனி வருவது சிறப்பு அம்சமாகும்.

ஆலய திருவிழாவில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருவாளர் வேதநாயகம் ஜெகதீசன் அவர்களும், கல்முனை வடக்கு பிரதேச செயலாளர் திருவாளர் அதியராஜ் அவர்களும், அம்பாறை மாவட்ட இராணுவ உயர் அதிகாரியும், கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரியும், பௌத்த துறவிகளும் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு.கிருஷ்ணபிள்ளை கிருபைராஜா
செயலாளர்
ஸ்ரீ தரவைச் சித்திவிநாயகர்,
ஸ்ரீ கடற்கரை கண்ணகி அம்மன்
ஆலயங்களின் பரிபாலன சபை

பாரியளவில் அதிகரித்துள்ள சிறுவர் துஷ்பிரயோக ஆவணங்கள்!



(கடந்தவாரத் தொடர்)

சிறுவர் பாலியல் துஷ்பிரயோக ஆவணங்கள் அனைத்து விதமான சிறுவர்களுக்கும் மேற்கொள்ளப்படலாம். இதற்கு பால்நிலை, வயது, இனம், மொழி போன்ற எவ்வித பாகுபாடுகளும் இல்லை. இது பணம் சம்பாதித்தல், பொருள் ஈட்டுதல் போன்ற வணிக நோக்கங்களுக்காகவும் நடைபெறலாம் அல்லது பழிவாங்குவதல், மிரட்டுவதல், அவமானப்படுத்துதல், கப்பம் கோரல் போன்ற வணிகமற்ற காரணங்களுக்காகவும் நடைபெறலாம். வளர்ந்த நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் இப் பிரச்சினை பாரியளவில் உருவெடுக்கிறது. ஏனெனில், கண் இமைக்கும் நேரத்தில் பல இடங்களுக்கு பல மக்களுக்கு சென்றடையக்கூடிய தன்மை இதற்கு உள்ளது. 2021ஆம் ஆண்டு உலகளாவிய ரீதியில் 29 மில்லியனுக்கும் அதிகமான சிறுவர் பாலியல் துஷ்பிரயோக ஆவணங்கள் அறிக்கைப்படுத்தப்பட்டுள்ளன என்று National Center for Missing and Exploited Children என்ற சர்வதேச நிறுவனம் குறிப்பிடுகின்றது. அதுமட்டுமல்லாமல், அந்த 29 மில்லியன் அறிக்கைகளில் 84.9 மில்லியன் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் உள்ளடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் காணப்படும் இப் பிரச்சினை நமது நாட்டிலும் தாக்கம் செலுத்தாமலில்லை. ஏனெனில், 2021ஆம் ஆண்டு 150,000 க்கும் அதிகமான சிறுவர் பாலியல் துஷ்பிரயோக ஆவணங்கள் இலங்கை IP முகவரிகளில் இருந்து இணையத்திற்கு பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் 1991 முதல் எல்லா வகையான சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டலை இல்லாதொழிக்க பணியாற்றி வரும் எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு (PEaCE/ ECPAT Sri Lanka) The Daily Morning பத்திரிகையில் தெரிவித்துள்ளது. இப் பிரச்சினையை கண்காணிப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கும் சிறுவர் மற்றும் மகளிர் துஷ்பிரயோக தடுப்பு பணியகம் விசேட பொலிஸ் பிரிவை அதே ஆண்டில் உருவாக்கியுள்ளதோடு 2021 ஜுன் 17ஆம் திகதியில் இருந்து ஜுலை 28 ஆம் திகதிக்குள் (கிட்டத்தட்ட 41 நாட்களில்) மட்டும் 17,629 சிறுவர் பாலியல் துஷ்பிரயோக காணொளிகள் ஏற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

இச் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக ஆவணங்கள் விஷமிகளின் நேரடி தலையீடுகளால் மாத்திரம் நடைபெறுவதில்லை. அவை சிறுவர்களின் தன்னிச்சை செயற்பாடுகளாலும் நடை பெறுகின்றன. இதற்கு சிறுவர்களை மிரட்டியோ அல்லது பயமுறுத்தியோ செயற்பட வைக்க வேண்டும் என்று அவசியமில்லை. சிறுவர்களின் நம்பிக்கையையும் அவர்களது அறியாமையையும் தவறாக பயன்படுத்திக் கொண்டு சில விஷமிகள் சிறுவர்களை பாலியல் வலையில் விழ வைக்கின்றார்கள். இணையத்தில் காணப்படும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோக ஆவணங்களில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு சிறுவர்களால் சுயமாக தயாரிக்கப்பட்ட ஆவணங்களாக உள்ளது. அதாவது அவர்களே அவர்களை பாலியல் ரீதியில் சித்தரித்து காணொளி, புகைப்படம் அல்லது வேறு வகையான ஆவணமாக பதிவிட்டு வருகின்றனர். Internet Watch Foundation (IWF) என்ற சர்வதேச நிறுவனத்தின் அறிக்கையின் படி 2021 இல் 147,188 அறிக்கைகளில் 11 தொடக்கம் 13 வயதுள்ள சிறுமிகளின் புகைப்படங்கள் மற்றும் காணொளிகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. அதிலும் அவ் ஆவணங்கள் அவர்களது படுக்கை அறை அல்லது வீட்டு சூழலில் காணப்படும் வேறு அறைகளில் இருந்து காட்சிப்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கின்றது.

சிறுவர்கள், இத் துஷ்பிரயோக ஆவணங்களில் சிக்கும் நிலை எல்லையை கடந்து சென்று கொண்டிருக்கின்றது. அதிலும் குறிப்பாக, 2023 ஜனவரி 27ஆம் திகதி Internet Watch Foundation (IWF) வெளியிட்ட அறிக்கையின் படி இன்றைய நிலவரத்தில் 7 தொடக்கம் 10 வயதிற்குட்பட்ட சிறுவர்களின் பாலியல் துஷ்பிரயோக புகைப்படங்கள், காணொளிகள் மற்றும் ஆவணங்களை காட்டும் வலைப் பக்கங்களின் எண்ணிக்கை 2019 ஐ காட்டிலும் 1058 வீதத்தால் அதிகரித்துள்ளது என்ற அதிர்ச்சி தகவலை வெளியிட்டுள்ளது.

அதிலும் COVID19 முடக்க நிலை காலப்பகுதியிலே குறிப்பிட்டளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

ஏனென்றால், இக் காலப்பகுதியில் பல்லாயிரக்கணக்கான சிறுவர்கள் சமூகத்தோடு ஒன்றிணைய, கல்வி கற்க, விளையாட என்று பல்வேறுபட்ட காரணங்களுக்காக இணையத்தை பாவித்தனர். இதை வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்ட காமுகர்கள், சிறுவர்களை நம்பவைத்து, வசப்படுத்தி அவர்களை தம் பக்கம் இழுத்து சில சமயங்களில் வற்புறுத்தியோ மிரட்டியோ பாலியல் ஆவணங்களை உருவாக்கம் செய்துள்ளனர். சில நேரங்களில் இணையத்தோடு இணைக்கப்பட்ட வெப் கேமராக்கள் மற்றும் திறன் பேசிகள் மூலம் அவர்களது நண்பர்கள் மற்றும் உடன் பிறந்தவர்களையும் உட்படுத்தி ஆவணங்கள் தயாரித்துள்ளனர். அவ் ஆவணங்கள் கண் இமைக்கும் நொடிகளில் உலகம் முழுவதும் பரந்து இன்று ஆயிரம் வீதத்தால் அதிகரித்த நிலையை எட்டியுள்ளது.

இன்றைய நவீன செயற்கை நுண்ணறிவின் (Artificial Intelligence) வளர்ச்சியானது கற்பனைக்கு அப்பாற்பட்டது. பல்வேறுபட்ட நவீன செயலிகள் நமது வேலையை இலகுவாக்கி கொண்டிருப்பது மட்டுமல்லாமல் இணைய வாழ்க்கைக்கு நம்மை இழுத்துக்கொண்டு இருக்கின்றது. தொழில்நுட்பத்தோடு ஒன்றிணைந்த வாழ்க்கையை நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் அதேவேளை அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை பற்றி மறவாதிருக்க வேண்டும். நமது நாளைய தலைவர்களது நிலை தலை கீழாக மாறி விடக் கூடாது என்பதை நினைவில் வைத்து அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். பாலியல் ரீதியான பிரச்சினைகள் நேரலையில் மட்டுமல்லாது நிஜ வாழ்க்கையிலும் நடைபெறக் கூடியவை. அதனால், சிறுவர்கள் மிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அத்தோடு நேரலையை பாவிக்கும் போது அதற்கு ஒரு இருண்ட பக்கமும் காணப்படுகின்றது என்பதை நினைவில் வைத்திருக்க வேண்டும். குறிப்பாக சிறுவர்களது யாராலும் நேரலையிலோ நிஜ வாழ்க்கையிலோ நெருங்க முடியாது என்பதை அவர்களுக்கு உணர்த்த வேண்டும். அதற்கான பாதுகாப்பு வழிமுறைகளை அவர்களது வீடு, பாடசாலை சூழலில் இருந்தே கற்றுக்கொடுக்க ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு செய்வதன் மூலம் எமது வருங்கால சந்ததியினருக்கு செழிப்பான எதிர்காலமொன்றை உருவாக்கி கொடுக்க முடியும்.

விவேதா குணரெட்னம்
திட்ட அலுவலர்
எங்குமுள்ள சிறுவர்களையும்
சூழலையும் பாதுகாக்கும் அமைப்பு

படித்ததும் பகர்வதும் 133

சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

நல்லதை சொல்கிறோம்

அவசர விவாகரத்துக்கள்?

அண்மை காலத்தில், சில திருமணங்கள், அவை நடந்து முடிந்து சில வாரங்களில் அல்லது சில மாதங்களிலேயே விவாகரத்தை நோக்கி செல்கின்ற சம்பவங்கள் சிலவற்றை அறிய முடிக்கிறது. மிகத் தடல் புடலாக, விமரிசையாக ஏற்பாடுகளை செய்து பெரும் எதிர்பார்ப்புகளுடன் நடந்து முடிகின்ற திருமணங்கள் இவ்வாறு எதிர்பாராத முறையில் விவாகரத்துக்களை நோக்கி செல்வது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

இவ்வாறு தடைபெறுவதற்கான காரணங்களை அறிய முயற்சித்தபோது கிடைத்த தகவல்கள் அதிர்ச்சி அளிப்பவையாக இருக்கின்றன. மணமகனுக்கு ஆண்மை இல்லை, மணமகன் போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளான், மணமகள் ஆண்பாலாக மாறி வருகிறாள், தம்மிடம் காட்டிய பெண் போலன்றி மணமகள் வேறு வகையில் காட்சியளிக்கிறார், நோய் இருப்பதை மறைத்துவிட்டார்கள், சொன்னபடி மணமகள் வீட்டார் நடந்து கொள்ளவில்லை என்று கூறப்படும் சில காரணங்கள் ஜீரணிக்க முடியாதவையாகவும், நம்ப முடியாதவையாகவும் இருப்பதைக் காணலாம். ஆனால் இவற்றை நம்பித் தான் ஆகவேண்டியுள்ளது.

இவற்றில் சிலவற்றை நோக்கும் போது, திருமணத்துக்கு முன்னர் தீர விசாரித்து அறிந்திருந்தால் இவற்றின் உண்மை நிலை தெரிந்திருக்கும். அத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் உண்மைகளை மறைக்காமல் உள்ளதை உள்ளபடி சொல்லி இருந்தாலும், மறுதரப்பினர் அதனை 'பரவாயில்லை' என ஏற்றுக் கொண்டு திருமணம் செய்திருந்தாலும், இத்தகைய அவசர, துரதிஷ்ட விவாகரத்துகளுக்கு இடமில்லாமல் போயிருக்கலாம்.

இலட்சக்கணக்கில் செலவழித்து 'தமது பிள்ளைகளின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும்' என்ற நோக்கில் விவாகங்களை நடாத்தும் பெற்றோர் தம் பிள்ளைகளுக்கான வாழ்க்கைத் துணைகளைத் தேடும் போது கூடிய கவனம் எடுப்பது அவசியமாகும். அவசரப்பட்டு, போதிய தகவல்களைப் பெறாமல், ஏனோ தானோ என முடிவெடுப்பதால் இத்தகைய விபரீத விளைவுகள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. இதே போன்று தமது பிள்ளைகளின் உண்மை நிலையை மறைத்து, எப்படியாவது திருமணத்தை நடாத்தி வைத்திட வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்களை கூறி, பிழையான தகவல்களை வழங்கி, வாழ்க்கைத் துணைகளைச் சேர்த்து வைக்கும் போது, அத்தகைய திருமணங்கள் நீடித்து நிலைப்பதற்கான வாய்ப்புகள் மிக குறைவாகவே இருப்பதைக் காண முடியும்.

பெற்றோர்கள் பேசித் தீர்மானிக்கின்ற விவாகங்களுக்கு விருப்பம் தெரிவித்து, பெற்றோருடன் இணங்கி நடக்கும் பிள்ளைகள், தமது பெற்றோருக்கு அதிக கௌரவம் அளிக்கின்றனர். அத்தகைய பிள்ளைகளுக்கு பொருத்தமான மிகச் சிறந்த வாழ்க்கைத் துணையை தேடிக் கொடுப்பது பெற்றோரின் கடமையாகும். எனவே அவர்கள் இவ்விடயத்தில் அதி கூடிய கவனம் எடுத்தல் வேண்டும்.

"ஆயிரம் பொய்களை சொல்லியேனும் ஒரு திருமணத்தை நடாத்த வேண்டும்" என்ற காலத்துக்கு பொருத்தமற்ற வசனங்களை நம்பி, செயல்பட்டு, உண்மைகளை மறைத்து, பொய்த் தகவல்களை கொடுத்து பிள்ளைகளின் திருமணங்களை நடத்தி, அவர்களது எதிர்காலத்தை வீணாக்கிவிடக் கூடாது. எனவே உண்மைகளை மறைக்காமலும், பொய்த் தகவல்களை வழங்காமலும், செயல்படுவதோடு மறுதரப்பைப்பற்றி தீர விசாரித்து அறிந்து, உண்மைகளை சரியாகப் புரிந்து கொண்டு, நன்மை தீமைகளை ஆராய்ந்து திருமணங்களை நடத்துவதே புத்திசாலித்தனம் என்பதோடு, அவசர விவாகரத்துக்களையும் தடுக்கும்.

நெஞ்சுக்கு நீதி

இரு மனங்களை இணைப்பதுதான் திருமணம்
இருக்கணுமே இரு சாரார்க்கும் நல்லெண்ணம்
விருப்பின்றி இணைப்பதனால் பிரிவு எண்ணம்
விரும்பிச் சேர்ந்தாலே வாழ்வினில் நறுமணம்

பிரிந்தார் பெருமை

இராமக்குட்டி அப்துல்லாஹ் அஸ்ஸாம்

பிரபல ஊடகவியலாளரும், எழுத்தாளரும், நூலாசிரியருமான அஷ் ஷெய்க் இராமக்குட்டி அப்துல்லாஹ் அஸ்ஸாம் (இஸ்லாஹி) கடந்த பெப்ரவரி 18ம் திகதியன்று (18.02.2023) தனது 53வது வயதில் இவ்வுலகைப் பிரிந்தார். பத்திரிகை துறையில் நீண்ட கால அனுபவம் பெற்றவரும், பல எழுத்தாளர்களை எழுத்துத் துறைக்கு கொண்டு வருவதற்கு பங்களிப்பு செய்தவரும், பன்முக ஆளுமைகள் கொண்டவருமான இவர், பணி செய்வதையே வழக்கமாக்கிக் கொண்ட சிறந்த பண்பாளர்.

கிழக்கிலங்கையின் அட்டாளைச்சேனையில் இராமக் குட்டி தம்பதிக்கு மகனாகப் பிறந்தார். இவரது சிறு வயதிலேயே இவர்களது குடும்பம் புத்தளத்தில் குடியேறியது. பாடசாலைக் கல்வியில் திறமை காட்டிய இவர் 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததோடு க. பொ. த. (சா/தர) பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடைந்து மாதம்பை இஸ்லாஹிய்யா அரபிக் கல்லூரியில் உயர்கல்வியைத் தொடர்ந்து, பட்டம் பெற்றார்.

இலங்கை ஜமாஅத்தே இஸ்லாமியின் உத்தியோகபூர்வ மாத இதழான 'அல்ஹஸனாத்' பத்திரிகையின் நிர்வாக ஆசிரியராகவும், ஜஸ்ட் மீடியா பவுன்டேஷன் நிறுவனத்தின் வெளியீடுகளான 'எங்கள் தேசம்', 'அகரம்', 'சிட்டு', 'த டிரன்ட்' (The Trend) ஆகிய வெளியீடுகளின் இணைப்பாளராகவும் கடமையாற்றி, பத்திரிகைத் துறையில் பெரும் பங்காற்றினார்.

சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் என இலக்கியத்தின் பல விடயங்களிலும் இவர் எழுதியதுடன், தமிழ் மொழியில் வெளிவந்த நூற்றுக்கும் மேற்பட்ட நூல்களின் பதிப்பாசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இவர் அவ்வப்போது எழுதிய ஆசிரியர் தலையங்கங்கள், பல்வேறு நூல்களுக்கு எழுதிய பதிப்புரைகள் என்பன இவரது தனித்துவமான எழுத்தாற்றலுக்கும், சிந்தனைக்கும் சிறந்த சான்றுகளாகும்.

'குர்ஆனியக் கலைகள்' தொடர்பில் இவர் எழுதிய "தஃவதுல் குர்ஆன்" என்ற தலைப்பிலான நூல் அல் குர்ஆனியக் கலைத் துறையில் தமிழ் மொழியில் உள்ள மிகச்சிறந்த ஒரு நூலாகப் போற்றப்படுகிறது. அரபு மதரசா பாடசாலை மாணவர்களுக்கு துணை நூலாகவும் கருதப்படுகிறது. இந்நூல் பல பதிப்புகளையும் கண்டுள்ளது.

இதழியலை தனது தொழிலாகக் கொண்ட அப்துல்லாஹ் அஸ்ஸாம், பதிப்புத் துறையின் சகல பிரிவுகளிலும் சிறப்பாகச் செயற்பட்டார். எழுதுதல், கணனியிடல், பதிப்பாக்கம் செய்தல், ஒப்பு நோக்குதல், வடிவமைத்தல் என்று எல்லா வேலைகளிலும் திறமை காட்டியதுடன், தனது சக ஊழியர்களையும் இத்துறைகளில் சிறப்பாகப் பயிற்றுவித்தார்.

இவரது இழப்பு இஸ்லாமிய இதழியல் துறையில் பாரிய இடைவெளியொன்றை ஏற்படுத்தியுள்ளது. வல்ல இறைவன் அவருக்கு 'ஜன்னதுல் பிர்தவ்ஸ்' எனும் உயர்ந்த சுவர்க்கத்தை வழங்கி, அவரது மறு உலக வாழ்வை சிறப்பாக்கி, அருள்வானாக!

கேட்டதில் கவர்ந்தது

"பாரம்பரியம்" நிகழ்ச்சியில் கலாபூஷணம் வி. முத்தழகு

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகி வருகின்ற ஜனரஞ்சகமான நிகழ்ச்சி "பாரம்பரியம்". முஸ்லிம் சேவையின் நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய, முஸ்லிம் சேவைக்கு பங்களிப்புகள் செய்த கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்களுடனான நேர்காணல் நிகழ்ச்சியாக இது ஒலிபரப்பாகிறது. முஸ்லிம் சேவையின் பணிப்பாளர் எம்.ஜே. பாத்திமா ரினூசியாவின் தயாரிப்பில், 'செந்தமிழ் செல்வன்' எம்.எஸ்.எம். ஜின்னாஹ்வின் நேர்காணலில் மாதமிருமுறை ஒலிபரப்பாகும் இந்நிகழ்ச்சியில் இப்போது முஸ்லிம் அல்லாத கலைஞர்களும் பங்குபற்றுகிறார்கள்.

பிரபல ஒலி/ஒளிபரப்பாளர்களான வி.என். மதியழகன், எஸ். விஸ்வநாதன், நடிகர் கே. சந்திரசேகரன் மற்றும் புஷ்பராணி போன்றோர் இந்நிகழ்ச்சியில் பங்குபற்றி ஏனைய முஸ்லிம் கலைஞர்கள் பற்றி கருத்துக்களை கூறினர். சில மாதங்களுக்கு முன்னர் பிரபல பாடகி சுஜாதா அத்தநாயக்கவின் நேர்காணல் இடம்பெற்று பலரதும் பாராட்டுக்களைப் பெற்றது. கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி இலங்கையின் மூத்த, பிரபல பாடகர் கலாபூஷணம் வி. முத்தழகு பங்குபற்றிய நிகழ்ச்சி ஒலிபரப்பானது.

இந்த நிகழ்ச்சியில் வி. முத்தழகு பாடிய இஸ்லாமிய கீதங்கள் ஒலிபரப்பானதோடு முஸ்லிம் சேவையில் இசைத்துறைக்கு பங்களிப்பு செய்த பலரைப் பற்றி மிக விரிவான கருத்துக்களை அவர் பகிர்ந்து கொண்டார். இவர் பட்டியலிட்ட முஸ்லிம் பாடகர்கள், இசையமைப்பாளர்கள், பாடலாசிரியர்களது பெயர் விவரங்களை கேட்ட போது ஆச்சரியமே ஏற்பட்டது. முஸ்லிம் சேவையின் இசைப் பாரம்பரியத்தில் இத்தனை பேர் பங்களிப்பு செய்துள்ளார்களே! என்ற வியப்பு எழுந்தது. உங்களையும் வியப்பில் ஆழ்த்தக்கூடிய, முத்தழகு வழங்கிய அந்தப் பெயர் விபரங்களை இங்கே தருகிறோம். ஒருசில விடுபட்டுமிருக்கலாம்.

இந்தப் பட்டியல் எந்த வித ஒரு ஒழுங்கு முறையிலும் தரப்படவில்லை என்பதையும், நிகழ்ச்சியில் அவர் குறிப்பிட்ட பெயர்கள் எழுந்தமானதாகவே தரப்பட்டிருக்கிறது என்பதையும், இவ்வளவு அதிகமானோர் இத்துறையில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதை பலரும் அறிந்துகொள்வதற்காகவே தரப்படுகிறது என்பதையும், வாசகர்கள் தயவு கூர்ந்து கவனத்தில் கொள்ள வேண்டுகிறோம்.

இலங்கை வானொலியில் முதலாவதாக இஸ்லாமிய கீதம் பாடிய பாடகர் வாழைத்தோட்டம் எம். ஏ. ஹசன் அலியார் (1946). தொடர்ந்து பிரபல பாடகர் இசைக்கோ என்.எம். நூர்தீன், அவரது சகோதர் எம். முஹம்மத் அலி, பி.எம். நியாஸ்தீன் (1949,) எச். எம். புஹாரி (1948), 1949 ஆம் ஆண்டு எம்.எம். குத்தூஸ் இஸ்லாமிய கீதம் பாடி இசைப் பரீட்சையில் தேர்வு பெற்று பாடகராகவே இலங்கை வானொலியில் சேர்ந்தவர், பின்னர் முஸ்லிம் சேவையின் பணிப்பாளரானார்.

கௌஸ் மாஸ்டர், அப்துல் லத்தீப் பாய், இப்ராஹீம் சாலி, முஹம்மத் அஹார் சாதீகீன் (பதுளை), மொஹிதீன் பேக், மொஹமட் மிஸ்பா (புத்தளம்), டி. பி. தீன், ஜெய்னுலாப்தீன், புஹாரி மாஸ்டர், கே. எம். ஸவாஹிர், பயாஸ் ஸவாஹிர், அயாஸ் ஸவாஹிர், துவான் லன்ஸா (கண்டி), ஏ.எம்.எம். மொஹிதீன்,

டோனி ஹசன், அருண்லந்த்ரா, நியாஸ்தீன், ஹிப்ஸி மௌலானா, அக்குரணை அஸீஸ், முயீன் சபூர்தீன், ராஸிக் சனூன், எம்.எம்.எம். ஸம்ஸ், எம்.எம். பீர் முஹம்மத், ஏ.எச். எம். மொஹிதீன், டி.எப். லத்திப், எம்.எஸ். முஹம்மத், எம்.எம். முஹம்மத் சாலி, முஹம்மத் பலீல், எம்.எம். பவுஸுல் அமீர், மொஹமத் நியாஸ், இம்தியாஸ் மாக்கார், முஹம்மத் சபீக், சிராஸ் மஃமூத், எம். ஐ. அமீன், எஸ்.எம். ஹசனலி, ஜெய்னுதீன் பாஷா, சாதிகீன் (பதுளை), பியாஸ் சாலி, நிஸாம் கரீம், ஏ.ஜே. கரீம் (சகோதரர்கள்), மஃதூம் ஏ. காதர், கே. எம். நிஸார், எம்.ஜே.எம். அன்ஸார், சைபுல்லாஹ் மஃதூம் உபைதுல்லாஹ் மஃதூம், கலைக்கமல் ஜமால்தீன், அஹமத் நஸீர், நியாஸ்தீன், மொஹமத் முதஸ்ஸிர்,

பாயிஸ் ஜிப்ரி (மாகோல), குர்ஷித் கௌஸ், ஜாவிதா லந்த்ரா, நயீமா அப்துல் காதர், விஸ்வா அப்துல் காதர் (சகோதரிகள்), மஸாஹிரா இல்யாஸ், குமாலா சௌஜா, ஸபீயா இஸ்மாயீல், பரீஸா ரஸ்மின், பௌசியா மரீனா, மொஹீனா பேகம், என்.ஜே. ரூபியா, நெய் ரஹீம் சஹீத், சொயானா காதர் (யாழ்ப்பாணம்), நூர்ஜஹான் மர்சூக், மொஹமட் லாஹிர் (புத்தளம்), எம். எஸ். முஹம்மத், ஏ.எம்.எம். பதுர்தீன் (கொழும்பு புதுக்கடை), எம். எஸ். ஜவுபர் (யாழ்ப்பாணம் நாச்சிகுடா), எம்.ஐ.எம். நயீம்,

இவர்களோடு, ரொக்சாமி, முத்து சாமி, மோகன், மகேந்திரன், சுஜாத்தா அத்தநாயக்க, கலாவதி சின்ன சாமி, ராணி ஜோசப், நிலுக்க்ஷி, சந்தியா, சரஸ்வதி, கே. ராணி, ஜமுனா, ஜானகி, சௌந்தர ராஜன், எஸ்.பி.பாலசுப்பரமணியம் போன்ற பல முஸ்லிம் அல்லாதோரும் இசை வழங்கியும், இஸ்லாமிய கீதம் பாடியும் பங்களிப்பு செய்துள்ளனர்.

இஸ்லாமிய இசைத்துறை பற்றி ஆய்வு செய்வோருக்கு கலாபூஷணம் வி. முத்தழகு தந்துள்ள இப்பெயர் விபரங்கள் பல்வேறு வழிகளிலும் பெருந்துணையாக அமையுமென எதிர்பார்க்கிறோம்.

நலமே வாழ்வோம்

சீனியைக் குறைப்போம்!

சோடாக்கள், சீனி சேர்க்கப்பட்ட பழச்சாறுகள், தேநீர், பால் போன்ற இனிப்புப் பானங்கள், இனிப்புப் பண்டங்கள் என்பன இன்று நமது வாழ்வில் பெரும் பகுதியை ஆக்கிரமித்திருக்கின்றன. உணவில் சேர்க்கப்படும் ஒவ்வொரு கரண்டி சீனியும் நமது தேகாரோக்கியத்துக்கு கேடு விளைவிக்கிறது என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

பல ஆய்வுகளின் படி, துரதிர்ஷ்டவசமாக, சர்க்கரை உணவுகள், இனிப்பு பானங்கள், இருதய நோய்களையும், 2ம் வகை நீரிழிவு நோய் அபாயத்தையும் அதிகரிக்கின்றன என்பது நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

சீனி, சர்க்கரை, இனிப்புப் பானங்கள் என்பன பெரியவர்களுக்கு மட்டுமல்ல, குழந்தைகளுக்கும் தீங்கு விளைவிக்கும். குழந்தைகளின் அதீத உடல் பருமனுக்கு முக்கிய காரணம் இந்த வகை உணவுகளே. அது போல, வாலிப வயதில் நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், கல்லீரலில் கொழுப்பு படிவு போன்ற நோய் உருவாகும் நிலைகளை இவை ஏற்படுத்துகின்றன.

நீங்கள் தினமும் உட்கொள்ளும் சீனியின் அளவை எப்படி குறைக்கலாம் என்பதை ஆராய்ந்து அமுல்படுத்துங்கள். ஒவ்வொரு நாளும் ஒரு கரண்டி சீனியையேனும் குறைப்பதை பழக்கமாக கொள்ளுங்கள்.

சீனி கலக்கப்பட்ட குடிபானங்களுக்குப் பதிலீடாக தண்ணீர், இளநீர், சீனி கலக்கப்படாத அல்லது குறைவாக சேர்க்கப்பட்ட பழச்சாறு, தேநீர், கோப்பி, பால் போன்றவற்றை அருந்துவதை பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். அது போல, உங்கள் குழந்தைகளுக்கு உணவூட்ட தொடங்கும் போதிருந்தே, சீனி சேர்க்கப்படாதவற்றை பழக்கி விடுங்கள்.

இனிப்பும், உப்பும் உணவில் குறைகின்ற அளவுக்கு, உடல் ஆரோக்கியம் அதிகரிக்கும் என்பதை ஒவ்வொருவரும் உணவு விடயத்தில் கூடிய கவனம் எடுப்போம். சீனியை குறைத்து சிறப்பாக வாழ்வோம்.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்ஸப் (WhatsApp): 0777314207

பாரிய அழிவுகளைத் தரும் புவிநடுக்கங்கள் ஏற்படாத வலயத்தில் இலங்கையின் அமைவிடம்

பேராசிரியர்
வை. நந்தகுமார்,
நந்தகுமார் தனஞ்ஜெயன்
BSc Eng, MSc. GIS&RS, MSc. Disast. Mang வளவாளர், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் வலயக்கல்வி பணிமனை கம்பளை.

கடந்த வாரத் தொடர்

7 குறைக்கோடுகளைத் தழுவிய புவிநடுக்கங்கள்

பாறைகளில் குறைகள் அதிகமாக உள்ள பகுதிகளிலும் புவிநடுக்கங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. அமெரிக்காவின் கலிபோர்ணியாவினூடாகச் செல்லும் சென் அன்றூஸ் குறை ஏற்பட்ட சில காலத்தினுள் 1906ஆம் ஆண்டில் சான்பிரான்ஸிக்கோவின் மிகப் பாரிய புவிநடுக்கம் ஏற்பட்டமையை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமுடையதாகும். உருமாற்றக் குறைகள் காணப்படும் பகுதிகளில் புவிநடுக்கங்கள் ஏற்படுகின்றன.

புவியோட்டின் எப்பகுதியிலும் குறைகள் காணப்படும். இவற்றின் நீளம் சில சந்தர்ப்பங்களில் சில கிலோமீற்றர்களிருந்து பல நூறு கிலோமீற்றர் வரை தூரமுடையதாக இருக்கும். குறைகள் சகல கண்டங்களிலும் காணப்படுவதுடன், விமான ஒளிப்படத்தில் இவை குறைக் கோடுகளாக் காணப்படுகின்றன. இக் குறைக் கோடுகளை தழுவிய பகுதிகளில் சிறிய அசைவுகள், அதிர்வுகள் ஏற்படுகின்றன. அழிவுகளை ஏற்படுத்தும் கண்ட விளிம்புகள், கீழ்நோக்கி இன்னொரு தகட்டின் கீழ் நகர்வதால் புவியோட்டில் ஏற்படும் தாக்கம் வேறொரு பகுதியில் பிரதிபலிக்கப்படலாம். எனவே இத்தகைய செய்முறைகளும் புவிநடுக்கத்தைத் தோற்றுவிக்கின்றன.

செய்மதிப் படங்களினதும், ஒளிப்படங்களினதும் அடிப்படையில் இலங்கையின் புவிச்சரிதவியற் தன்மைகளை நோக்குமிடத்து 1.25 கிலோமீற்றரிலிருந்து 100 கிலோமீற்றர் தூரமுடைய 4000க்கும் மேற்பட்ட குறைக்கோடுகளை அடையாளம் காணமுடிகின்றது. சில குறைகள் நன்கு குத்தாகவோ கிடையாகவோ விருத்தியடைந்துள்ளன. கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்டிய பகுதிகளிலும் இத்தகைய குறைகளை அவதானிக்க முடிகின்றது. பேராசிரியர் விதானகேயின் (1993) கருத்துப்படி, 1938ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் திகதி காலை இலங்கையில் ஏற்பட்ட புவிநடுக்கம் குறைக் கோடுகளைத் தழுவியதாக இடம்பெற்ற நுண் புவிநடுக்க அலைகளின் தொழிற்பாட்டினாலானதாகும். இதே போன்று இலங்கையில் ஏற்பட்ட பல புவிநடுக்கங்களும் இக் குறைக் கோடுகளுக்கும் தொடர்பு இருப்பதை அவதானிக்க முடிகின்றது.



கொத்மலை நீர்த்தேக்கத்தினை அண்மித்த பகுதிகளில், குறைக் கோடுகளைத் தழுவி ஏற்படக் கூடிய நுண்புவிநடுக்க அலைகளின் செயற்பாடுகள் பற்றி, 1982ஆம் ஆண்டு பேராசிரியர் டீர் தலைமையில் ஆராய்ந்த புவிநடுக்கவியற் குழுவினர்களும் கருத்து தெரிவித்துள்ளனர். இவர்களினது ஆய்வுகளின் போது இலங்கையில் நுண்புவிநடுக்கச் செயற்பாடுகள் ஏற்படக்கூடிய 6 குறைக் கோட்டுப் பகுதிகள் இனம் காணப்பட்டுள்ளன. விக்டோரியா அணைக்கட்டுப் பகுதிகளில் 15 கிலோமீற்றர் நீளமுள்ள குறைக்கோடு வத்தேகமவிலிருந்து கிம் புலாந்தோட்ட வரை வியாபித்திருப்பதாக பேராசிரியர் விதானகே (1993) விளக்கியுள்ளார். ரந்தனிகல நீர்த்தேக்கமும் மலை இடைவெளியை அடிப்படையாக வைத்தே அமைக்கப்பட்டுள்ளது. இந்நீர்த்தேக்கம் அமைக்கப்பட்ட காலத்தில், இப்பகுதிகளில் புவிநடுக்கங்களைப் பதிவுசெய்யும் கருவிகள் பொருத்தப்பட்டிருந்தன. எனினும், காலப்போக்கில் இக்கருவிகளை பராமரிப்பதற்குப் போதிய நிதிவசதி இல்லாமையால், பதிவுகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன. இதனால் நீர்த்தேக்கங்களில் ஏற்படும் நுண்புவிநடுக்க அலைகளின் தொழிற்பாடுகள் பற்றிய தரவுகளை சில காலத்திற்கு பெறமுடியாமலிருந்தது. எனினும், 2004 ஆம் ஆண்டில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தைத் தொடர்ந்து இவை மீள வடிவமைக்கப்பட்டுள்ளன.

8 நீர்த்தேக்கங்களின் உந்துகைகளினால் ஏற்படும் நுண் புவிநடுக்கங்கள்

இலங்கையில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்ட பகுதிகளில் இத்தகைய நுண் புவிநடுக்கத் தொழிற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ் அசைவின் காரணமாக நீரின் அமுக்கம் பாறைகளின் வெடிப்புக் குறைகளினூடாக கீழ்நோக்கி தள்ளப்படுகின்றன. இதனால் பாறைகள் ஒருவித சமநிலைத்தன்மையை அடைய முற்படும்போது ஒருவித விசை வெளியிடப்படுகின்றது. இதுவே நுண்புவிநடுக்கச் செயற்பாடாக அமைகின்றது. இவை சிறிய சிறியளவிலான அதிர்வுகளை ஏற்படுகின்றன. ஒரு பஸ்வண்டியில் அதிகளவு சனங்களை ஏற்றி வாகனம் ஓட ஆரம்பித்து சிறிது நேரத்தில் ஒவ்வொருவராக சிறிது சிறிதாக அசைந்து வசதியான முறையில் தம்மை அமைத்துக் கொள்ள முற்படுவார்கள். அல்லது அந்த நிலைமைக்கேற்ப ஒருவாறு தம்மை சரிசெய்து கொள்வார்கள். இவ்வாறே நீர்த்தேக்கங்களை அண்டிய பகுதிகளில், அமுக்க உதைப்புக்குட்படும் பாறைகளின் கனிமங்களின் தாக்கத்தினால் அவை தமது நிலையை சமநிலைப்படுத்த முற்படும் போது ஒரு விசை வெளிப்படுகின்றது. இவ்விசையே நுண்புவிநடுக்கங்களைத் தோற்றுவிக்கின்றன. சில சந்தர்ப்பங்களில் பாறைகளில் சமநிலை தோற்றுவிக்கப்பட சிறிதளவு காலம் எடுக்கலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் இந்தோனேஷியாவின் சேகுவின் அணைக்கட்டில் ஏற்படுவதைப் போன்று, நீண்ட காலத்திற்கு பல நுண்புவிநடுக்கத் தொழிற்பாடுகள் இடம்பெறலாம். இந்நிகழ்வுகள் ஆரம்பத்தில் செறிவாக இருந்தாலும் காலப்போக்கில் இதன் செயற்பாடுகள் குறைந்து சென்று இறுதியில் செயலிழந்த நிலையைப் பெறும்.

இலங்கையிலும் நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ள பகுதிகளில் இத்தகைய நுண் புவிநடுக்கத் தொழிற்பாடுகள் அதிகளவில் காணப்படுகின்றன. நீர்த்தேக்கங்களில் நீரின் அமுக்கம் பாறைகளை மேலும் அமுக்கத்திற்குட்படுத்துவதுடன், குறைகளினூடாக கீழிறங்கும் நீர் குறைகளில் இடம்பெறும் உராய்வினைக் குறைக்கின்றது. இதனால் குறைகளின் அமுக்க வெளியேற்றம் வழுக்குதல்களை ஏற்படுத்தி சிறிய நுண் அலைகளைத் தோற்றுவிக்கின்றன. நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரித்த சில வாரங்கள் அல்லது மாதங்களில் நுண் அலைகளின் தொழிற்பாடுகளும் அதிகரிக்கப் பெற்றமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன. எனினும் தொடர்ச்சியாக நீர்த்தேக்கங்களில் நீரை மீண்டும் மீண்டும் தேக்கி வர இவற்றின் தொழிற்பாடுகள் குறைந்து விடுகின்றன. நீர்த்தேக்கங்களில் நீண்ட காலத்திற்கு நீர்மட்டம் அதிகரித்த நிலையில் இருக்கையில், பாறைகளின் அமைப்பில் உறுதியான நிலைப்பாடு தோற்றுவிக்கப்பட நுண்அலைகளின் தொழிற்பாடுகளும் செயலிழந்து செல்கின்றன.

இந்திய – அவுஸ்ரேலியத் தகட்டினது நுண்வெடிப்பு

இலங்கையில் மத்திய மலைநாட்டின் பாறைகள் பல குறைகளையும் மூட்டுக்களையும் கொண்டிருப்பதுடன் இங்கு பல நீர்த்தேக்கங்கள் உருவாவதும் தவிர்க்க முடியாததாகும். எனவே மத்திய உயர்நிலத்தில் இத்தகைய நீர்த்தேக்கங்களை அமைப்பதனால் நுண்புவிநடுக்க அலைகளின் தொழிற்பாடுகள் ஏற்பட ஏதுவாகின்றன. நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுக்களின் பாதுகாப்பைக் கருதித்தானும் அணைக்கட்டுக்கள் இடம்பெறும் பகுதிகளில் ஆழமான துளையீடுகளின் மூலம் பாறைகளின் அமுக்க வேறுபாடுகள் மற்றும் நுண்புவிநடுக்க அலைகளின் தொழிற்பாடுகள் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளுதல் அவசியமானதாகும். இவ்வாறான ஆய்வுகள் இலங்கையின் ஆழமான பகுதியின் புவிச்சரிதவியல் தன்மைகளை அறிந்து கொள்வதற்கும் வழிவகுக்கும்.

9 இலங்கையில் ஏற்பட்ட புவிநடுக்க நிகழ்வுகள்.

இலங்கையில் 1923ஆம் ஆண்டிற்கும் 2023ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 70க்கும் மேற்பட்ட நுண்புவிநடுக்கங்கள் இடம் பெற்றிருப்பதை புவிநடுக்கம் பற்றிய பதிவுகள் மூலம் அறிய முடிகின்றது. இலங்கையில் 2023 ஆம் ஆண்டு பெப்வரி 10ஆம் திகதி 13:11 மணிக்கு 3.0 றிச்டர் அளவுகளில் வெல்லவாயா – புத்தல பெல்வத்த பகுதிகளில சிறு அளவிலான நில அதிர்வு பதிவாகி உள்ளது. இதனைத் தொடர்ந்து 11 திகதி 3 றிச்டர் அளவில் புவிநடுக்கம் ஏற்பட்டது. இதனால் பாரியசேதங்கள் எதுவும் பதிவாகவில்லை. இலங்கையின் கடந்த காலப் புவிநடுக்கத் தரவுகளை நோக்குமிடத்து, 1938ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் திகதி 22. 23 மணிக்கு 6 0 வட அகலக் கோடிற்கும் 77 0 04' கிழக்கு நெடுக் கோட்டுக்குமிடையில் மூன்று புவிநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன. மேலும் 1938ஆம் ஆண்டு செப்டம்பர் 10ஆம் திகதி ஏற்பட்ட புவிநடுக்கத்தின் மையம் இலங்கையின் மேற்குக் கரையோரத்திலிருந்து 75 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்து காணப்பட்டது. இதன் செறிவு 5.6 றிச்டர் அலகு என உணரப்பட்டது. 1615 ஆம் ஆண்டு ஏப்ரல் 14 ஆம் திகதி 19.00 மணிக்கு இலங்கையில் 6.5 றிச்டர் அலகைக் கொண்ட புவிநடுக்கம் இடம்பெற்றது. இதனால் கொழும்பு கோட்டையைச் சுற்றிய பகுதியில் 100 வீடுகள் பாதிக்கப்பட்டதுடன் 2000 பேர்வரை உயிரிழந்தனர் என்பதனையும் அறியமுடிகின்றது. எனினும், இதற்குப் பின்னர் ஏற்பட்ட புவிநடுக்கங்களினால் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டமைக்கான சான்றுகள் இல்லை.

இலங்கை, இந்திய உப தகட்டின் ஒரு பகுதியில் அமைந்திருப்பதுடன், தகட்டின் உறுதியான பாகத்தில் அமைந்திருப்பதாகவும் கருதப்படுகின்றது. கடந்த 500, 600 மில்லியன் வருட காலத்தில் இப்பகுதியில் சிறியளவிலான புவிநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளனவே தவிர, பாரிய சேதங்களை உண்டுபண்ணும் புவிநடுக்கங்கள் ஏற்படவில்லை, இந்தியாவின் மகாரா

சுகந்தி

குறுக்கெழுத்துப் போட்டி இல. 53

01	02	03	04	05	
06	07		08		09
	10	11	12		13
14	15				
16		17	18	19	20
21	22	23	24		25

பெயர் .....
வகுப்பு .....
தொலைபேசி இல .....
பாடசாலை பெயர் .....
வதிவிட முகவரி .....
.....
....
மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

இடமிருந்து வலம்

(1) மிக மோசமான பேரழிவுகளை விளைவிக்கும் இயற்கை அனர்த்தம். முன்கூட்டியே அனுமானிக்க முடியாத இயற்கை அனர்த்தம். சமீபத்தில் துருக்கி, சிரியா போன்ற நாடுகளில் பல்லாயிரக்கணக்கான மக்களைப் பலிகொண்ட அனர்த்தம்.
(6) நாம் குடியிருக்கின்ற இல்லத்தை இப்பெயரிலும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(10) இனிப்புச்சுவை கொண்ட தித்திக்கும் உணவுப்பண்டம்.
(14) வினாவொன்றுக்குப் பதிலளிக்கும் போது 'இல்லை' என்று மறுப்புச் சொல்வது போல, அவ்வினாவுக்கு உடன்பாடான பதிலளிக்கும் போது பயன்படுத்தப்படுகின்ற சொல்.
(17) அபாயம் என்ற பொருள் தருகின்ற சொல். நாம் எக்காரியத்தில் ஈடுபடுகின்ற போதிலும், இதனை எதிர்கொண்டு மிகவும் அவதானமாக செயற்படுவது அவசியம். இல்லையேல் விபத்தில் அகப்பட நேரிடலாம்.
(21) உலகிலேயே மிகவேகமாக ஓடக்கூடிய மிருகம் இது. இலங்கைக் காடுகளிலும் வாழ்கின்றது. வேட்டையாடி இரை பிடிக்கும் இம்மிருகம் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தது. (தலைகீழான சொல்)

மேலிருந்து கீழ்

(1) வீடுகளில் செல்லப்பிராணியாக வளர்க்கப்படுகின்ற மிருகங்களில் இதுவுமொன்று. இம்மிருகத்தைக் கண்டால் எலிக்கு நடுக்கம் உண்டாகி விடும்.
(2) நன்னீர்நிலைகளில் வளருகின்ற தாவரம். செந்நிறமும், வெண்ணிறமுமாக அழகிய பூக்கள் பூக்கும் இத்தாவரம் இலக்கியங்களில் அதிகம் இடம்பிடித்துக் கொண்டுள்ளது.
(4) இந்த நூலில் இருந்து விலையுயர்ந்த துணிகள் நெய்யப்படுகின்றன. பூச்சிவகையொன்றின் குடம்பிகளின் கவசத்தில் இருந்து பெறப்படுகின்ற இவ்வகை நூலில் இருந்து நெய்யப்படுகின்ற சேலைகள் மிகவும் விலையுயர்ந்தவையாகும்.
(9) மனிதனுடன் மிகவும் நெருங்கி அந்நியோன்யமாக வாழும் இயல்பு கொண்ட இம்மிருகம் வீட்டைக் காவல் காக்கின்றது.
(14) இரவில் இரை தேடும் பறவை இது. இரவில் எங்காவது மரங்களில் அமர்ந்து கொண்டு ஒலி எழுப்பிக் கொண்டேயிருக்கும். இதன் கண்களும் ஒலியும் அச்சம் தருவன.
(17) கிராமத்துக்கு வளமும் செழிப்பும் தருகின்ற நன்னீர்நிலை இது. கிராமங்களை ஊடறுத்துச் சென்று கடலுடன் சங்கமமாகின்றது.
(18) உணவு உட்கொண்டு விட்டால் தணிந்து விடும்.
(20) ஒலிகளை உணருகின்ற புலனங்கம். (தலைகீழான சொல்)

குறுக்கெழுத்துப் போட்டி இல. 51

விடைகள்

இடமிருந்து வலம்

01. புகையிரதம் 10. கைதி 12. வளை
17. பருந்து 22. பதுளை

மேலிருந்து கீழ்

01. புலி 03. கைகேயி 5. தவளை
10. பருத்தி 13. வலை 15. மாதுளை

குறுக்கெழுத்துப் போட்டி இல. 50

பாராட்டு பெறுவோர்

1. லுக்மான் மின்ஹாஜ்
தரம் 07B, மா/ சாஹிரா தேசிய பாடசாலை, வறக்காமுறை, உக்குவளை.

2. எம்.எம்.எம். அஜ்மல்
தரம் 06, மா/ சாஹிரா தேசிய கல்லூரி, மாத்தளை, இல. 37 கண்டி வீதி, வறக்காமுறை, உக்குவளை.

3. எம்.எச்.எம். ஸைட்
தரம் 03B, நீர்/ அல் ஹிலாஸ் தேசிய பாடசாலை, பெரியமுல்லை, நீர்கொழும்பு.

4. முஹம்மட் சப்ரி அயானா ஸஹீன்
தரம் 02, முனவ்வறா கனிஷ்ட கல்லூரி, இல. 02, புதுப்பள்ளியடி, அக்கரைப்பற்று 05.

6. அஸ்ஸாதிக் றுசா ஹனூப்
தரம் II, சது/ றோயல் கனிஷ்ட கல்லூரி, இறக்காமம், இல. 51, கதீப் லேன், இறக்காமம்.

7. அனீஸ் பாத்திமா அப்லா
தரம் 07, அல் - அமான் மு.ம.கல்லூரி, கல்லொலுவ, மினுவாங்கொடை.

8. பஹ்மா
தரம் 08A, பென்ஹில் கல்லூரி, கம்பளை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 53
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.
தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk

கல்வி: உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்

தெளிவுரை :
மகிழும் படியாகக் கூடிபழகி (இனி இவரை எப்போது காண்போம் என்று) வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் கற்று அறிந்தவரின் செயல்.

குழந்தைகளுக்கு சரியானதை சொல்லிக் கொடுங்கள்

மூங்கில் வெட்டுபவர் ஒருவர் ஒரு நாள் தனது பத்து வயது மகனையும் அழைத்துக் கொண்டு காட்டுக்கு மூங்கில் வெட்டச் சென்றார்.

பையனோ விடாமல் வழியெல்லாம் அவரைக் கேள்விகளால் துளைத்தெடுத்துக் கொண்டே வந்தான். அவரும் பொறுமையாகப் பதில் சொல்லிக் கொண்டே வந்தார். மூங்கிலை வெட்ட ஆரம்பித்தார். பையன் அப்போதும் கேள்விகள் கேட்டான். "நாம் பிறகு பேசிக் கொள்ளலாம். நீ நல்ல பையனாக, அப்பா வெட்டும் மூங்கிலை எல்லாம் எடுத்து அடுக்கி வைப்பியாம்" என்றார் அவர். பையனும் மகிழ்ச்சியுடன் தலையசைத்தான். அவர் மூங்கில் வெட்ட ஆரம்பித்தார். "அப்பா... அப்பா" என்றான் பையன். "என்னடா? கோபத்துடன் கேட்டார்" அப்பா. இந்தக் காட்டாறு எங்கே போகுது?" "நம்ம வீட்டுக்குத்தான்" என்றார். அதன் பிறகு பையன் கேள்விகள் எதுவும் கேட்கவில்லை.

மாலை நேரம் ஆனது, மூங்கில் வெட்டுபவர் பையனின் கையைப் பிடித்துக் கொண்டு "வா போகலாம். நான் வெட்டிய மூங்கிலையெல்லாம் எங்கே அடுக்கி வைச்சிருக்க? என்று கேட்டார். பையன் சொன்னான் "நீங்கள் வெட்டினதை எல்லாம் ஆற்றில் போட்டுவிட்டேன். இந்நேரம் அது நம் வீட்டுக்குப் போயிருக்கும்...! என்று பொறுமையாக பதில் சொன்னான் செல்ல மகன்.

இளம் வயது குழந்தைகளுக்கு சொல்லுவதை சரியாக திருந்தச் சொல்லுங்கள்.

இவ்வார மழலை

மதியழகன்/உதயபிரியா
கொழும்பு

அறிய வேண்டிய ஐந்து

பஞ்ச பூதங்கள்	நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
பஞ்சாங்கம்	வாரம், திதி, நட்சத்திரம், யோகம், கரணம்
பஞ்சலோகம்	இரும்பு, ஈயம், செம்பு, பொன், வெள்ளி
பஞ்சாமிர்தம்	சர்க்கரை, தயிர், தேன், பால், நெய்
பஞ்சாயுதம்	சக்கரம், தண்டு, தனு, சங்கு, வாள்

கே.எல். ஹில்மி
தேசிய பாடசாலை, சம்மாந்துறை 10

உலகின் மிகப்பெரிய செல்?

பொதுவாக முட்டை ஒரே ஒரு செல்லினால் ஆனது. உலகிலேயே மிகப்பெரிய செல் எது தெரியுமா? நெருப்புக்கோழி முட்டை தான். இது சராசரியாக 15 செ.மீ நீளமும், 13 செ.மீ அகலமும் கொண்டது. இதன் எடை 1.4 கிலோ கிராம் வரை இருக்கும். இது நாம் சாதாரணமாக பார்க்கும் ஒரு கோழி முட்டையின் எடையை விட 20 மடங்கு கனமானது.

நாடுகளின் சிறப்பு பெயர்கள்

- ★ நைல் நதியின் நன்கொடை - எகிப்து
- ★ வெள்ளை யானைகளின் நாடு - தாய்லாந்து
- ★ தங்க இரதங்களின் நாடு - மியன்மார்
- ★ கீழை நாடுகளின் முத்து - சிங்கப்பூர்
- ★ நள்ளிரவில் சூரியன் உதிக்கும் நாடு - நோர்வே
- ★ அதிகாலை அமைதி நாடு - கொரியா
- ★ புனித பூமி - பாலஸ்தீனம்
- ★ தென் உலக பிரிட்டன் - நியூசிலாந்து
- ★ முத்துக்களின் தீவு -பஹ்ரைன்
- ★ இடி மின்னல் நாடு - பூட்டான்
- ★ பொற்கோபுர நாடு - பர்மா
- ★ அராபிய இரவுகள் நகரம் - பாக்தாத்
- ★ ஆயிரம் ஏரிகள் கொண்ட நாடு - பின்லாந்து
- ★ கிராம்பு தீவு - சான்சிபார்

(SAARC) நாடுகளை எளிதில் நினைவில் வைத்துக் கொள்ள

பாடசாலை தேர்வுகளுக்கு அதிகமாக கேட்கப்படும் சார்க் (SAARC) நாடுகளை எளிதில் நினைவில் வைத்துக் கொள்ள, MBBS PAIN என்பதை ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள். இதில்

M - மாலைத்தீவு,
B - பங்களாதேஷ்,
B - பூடான்,
S - ஸ்ரீ லங்கா,
P - பாகிஸ்தான்,
A - ஆப்கானிஸ்தான்,
I - இந்தியா,
N - நேபாள்
ஆகிய நாடுகளை குறிக்கும்.

மின்மினிப் பூச்சியென்ன
கண் சிமிட்டும் கண்ணே
வவ் வவ்வென
வாய் உழரும் மழலையே
கல்லுருகும் வண்ணம்
காவியமாய் நீ ஆனாய்
உலகு தரும் அதிசயமாய்
உதயமான குழந்தையே
விண்ணும் மண்ணும் போற்றிட
வீரமுடன் நல்லவனாய்
என்றென்றும் ஏற்றம் பெறுவாய்
எல்லார் மனமும் வெல்வாய்

பாப்பா

மொழிவரதன்

எம்.எஸ்.எப். சம்ஹா
தரம் 09, துந்துவ முஸ்லிம் மகா வித்தியாலயம்.

நஷ்டா
தரம் 06, துந்துவ அஹதியா பாடசாலை,

வாரம் ஒரு பெரியார்

ஈழத்துத் தமிழறிஞர் புலவர்மணி சோ. இளமுருகனார்

புலவர்மணி சோ. இளமுருகனார் ஈழத்துத் தமிழறிஞரும், புலவரும் ஆவார். அரசியல் சார்பான தமிழுணர்ச்சி மிக்க ஆக்கங்களை உருவாக்கியவர். நாடகாசிரியர், கண்டன ஆசிரியர் எனப் பன்முகம் கொண்டவர்.

இளமுருகனாரின் இயற்பெயர் பாலசுப்பிரமணியம். இவர் 1908 ஜூன் மாதம் 11ஆம் திகதி அன்று யாழ்ப்பாணம், நவாலியூரில் சோமசுந்தரப் புலவருக்கும் சின்னம்மையாருக்கும் பிறந்தார். நவாலியில் இராமலிங்க உபத்தியாயரிடம் ஆரம்பக் கல்வியைக் கற்று, கிராமப் பள்ளியிலேயே தொடக்கக் கல்வியை முடித்தார். பின்னர் தந்தை ஆசிரியப் பணியாற்றிய வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் ஆங்கிலமும் தமிழும் கற்றார்.

தந்தையிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களையும், சோதிடக் கலையையும் கற்றுத் தேறினார். பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர் இருமொழி ஆசிரியராகப் பணியாற்றினார். பணியில் இருந்துகொண்டே தமிழ்ப் பண்டிதர் தேர்வை எடுத்து 'பண்டிதர்' பட்டம் பெற்றார். பின்னர் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயின்று பயிற்சி பெற்ற ஆசிரியரானார்.

அவர் செந்தமிழ் மரபு சிதைந்து போதல் கண்டு மனம் நொந்தார். இந்து சமயம் என்ற போர்வையின் கீழ் சைவ சமயம் வஞ்சிக்கப்படுவதாக உணர்ந்தார்.

தமிழ்ப் பாதுகாப்புக் குறித்து இவர் பல கட்டுரைகளையும், கண்டனவுரைகளும் ஈழகேசரி, தினகரன் முதலிய பத்திரிகைகளில் எழுதினார். இளமுருகனார் "தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்" என்ற பெயரில் ஓர் இயக்கத்தை ஆரம்பித்து அதன் தலைவராக 30 ஆண்டுகள் வரை பணியாற்றினார். இவ்வியக்கத்தின் மூலம் தூய தமிழ்ப் பயன்பாட்டை தனது வாழ்நாள் முழுவதும் பரப்பி வந்தார். தமிழ்க் கல்வி இலக்கணப் பாடம் இன்றி வரம்பழிந்து போதல் கண்டு அரசாங்கத்தை அணுகி இலக்கணப் பாடத்திட்டம் வரைந்து பாடநூல்களை எழுதினார்.

வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் ஈழத்தில் நிலைபெற்று நின்ற தமிழ் மொழியின் உரிமை பறிக்கப்பட்ட போது எதிர்த்துக் குரல் எழுப்பினார். தந்தை செல்வாவின் தலைமையில் இயங்கிவந்த "சமஷ்டிக் கட்சி"யின் பெயரைத் தமிழரசுக் கட்சி என மாற்றப் போராடி வெற்றிகண்டார். தமிழ் அரசியற் கட்சிகளுடன் இணைந்து அயராது பாடுபட்டார்.

அரசியல் மேடைகளில் இளமுருகனாரின் இயல்பான நகைச்சுவையோடு கூடிய அரசியற் பேச்சுக்களைக் கேட்கப் பொதுமக்கள் திரண்டனர். தமிழ் உரிமை வேட்கையை ஊட்டவல்ல பல எழுச்சி இலக்கியங்களைப் படைத்தார். இவர் எழுதிய "திருமலை யாத்திரை", "அறப்போர்க்கு அறைகூவல்", "இலங்கைமாதேவி திருப்பள்ளியெழுச்சி", "குயிற்பத்து" முதலியன புகழ் பெற்றன. தமிழின் தொன்மை, இனிமை, தெய்வத்தன்மை, இலக்கண இலக்கிய வளம், தமிழ்ப் பெருங்குடிகளின் தொன்மை போன்றவற்றை விளக்கிச் செந்தமிழ்ச்செல்வம் என்னும் உயரிய நூலை யாத்து அதன் பொருளை ஆங்கிலத்திலே சுருக்கித் தந்து அன்றைய பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவுக்கு அனுப்பி வைத்தார்.

இவரின் தமிழ்ப்பணிக்காகப் பல சபைகள் பொன்னாடை போர்த்திப் பொற்கிழி வழங்கியுள்ளன. அன்றியும் தமிழறிஞர்கள் இவரைப் புலவர்மணி எனப் போற்றினர். காஞ்சிபுரம் மெய்கண்டார் ஆதீன மகா சந்நிதானமாகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் 'கவிசிந்தாமணி' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்.

சோ. இளமுருகனார் 1975 டிசம்பர் மாதம் 12ஆம் திகதி தனது 67ஆவது அகவையில் காலமானார்.

விளையாட்டு

இலங்கை கிரிக்கெட்டை மாற்றும்

யாப்பு மாற்றம்

இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பு ஒன்றை கொண்டுவருவது என்பது பூனைக்கு மணி கட்டும் கதையாக நீண்டு செல்கிறது. காலம் காலமாக வருகின்ற அரசுகளும், விளையாட்டு அமைச்சர்களும் இலங்கை கிரிக்கெட்டை சீர்திருத்தப்போவதாகக் கூறுவது வழக்கமான ஒன்று. ஆனால், இலங்கை அரசியலமைப்பை மாற்றினாலும் கிரிக்கெட் யாப்பை மாற்றுவதென்பது இலகுவான ஒன்றாகத் தெரியவில்லை.

விளையாட்டு அமைச்சர் ரொஷான் ரணசிங்க முதல் முயற்சியாக கிரிக்கெட் யாப்பை மாற்றுவதற்கு முழுமையாகக் களமிறங்கி இருக்கிறார். இலங்கை கிரிக்கெட்டுக்கு புதிய யாப்பை அமைப்பதற்கு சுயாதீன நிபுணர் குழு ஒன்றை அமைப்பதாக கடந்த டிசம்பரில் மேன் முறையீட்டு நீதிமன்றத்திற்கு வாக்குறுதி அளித்திருந்தார்.

இலங்கை கிரிக்கெட் யாப்பை மாற்றுவது பற்றி முன்னாள் கிரிக்கெட் வீரர் முத்தையா முரளிதரன் உட்பட தரப்பினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவுக்கு பதிலளித்தபோது விளையாட்டு அமைச்சர் இந்த வாக்குறுதியை வழங்கி இருந்தார்.

அதாவது இலங்கை கிரிக்கெட் யாப்பை தற்காலத்திற்கு பொருத்தமான வகையில் இற்றைப்படுத்த வேண்டும் என்பது முத்தையா முரளிதரன் மற்றும் குழுவினரின் கோரிக்கையாக இருந்தது.

அளித்த வாக்குறுதியின்படி விளையாட்டு அமைச்சர் கடந்த வாரம் பத்துப் பேர் கொண்ட குழு ஒன்றை அமைத்தார். புதிய யாப்பு வரைவு ஒன்றை சமர்ப்பிப்பதற்காக அமைக்கப்பட்ட இந்தக் குழுவுக்கு ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர் கே.டீ சித்ரசிரி தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்தக் குழுவில் முன்னாள் கிரிக்கெட் வீரர்களான சரித் சேனநாயக்க மற்றும் பர்வீஸ் மஹ்ரூபும் இடம்பெற்றிருக்கின்றனர். தவிர, கலாநிதி துமின்த ஹுலங்கமுவ, கலாநிதி அரின் விக்ரமநாயக்க, ஜனாதிபதி சட்டத்தரணி ஹர்ஷ அமரசேகர, ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ரேனுக ரொபெல், தீப்திகா குலசேகர, கயால் கலட்டுவெவ, ஹரி குப்தா ரோஹனதீர ஆகியோர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

அதாவது, “460/2020 கொண்ட ரீட் மனுவுக்கு அமைய அதில் முன் வைக்கப்பட்டிருக்கும், நல்லாட்சி, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதி செய்யும், பொதுமக்களின் தேவைக்காக செயற்படும் இற்றைப்படுத்தப்பட்ட புதிய யாப்பு ஒன்றை தயாரிப்பது, கிரிக்கெட் விளையாட்டின் முக்கிய தேவையாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது” என்று இந்த நியமனத்தை விளையாட்டு அமைச்சு வெளியிட்ட ஊடக அறிக்கையில் நியாயப்படுத்தப்பட்டிருக்கிறது.

சர்வதேச அளவில் ஏனைய கிரிக்கெட் சபைகளின் குறித்த யாப்புகளுக்கு அமைவாக சர்வதேச கிரிக்கெட் கௌன்சிலின் வழிகாட்டல் மற்றும் நிபுணர்களின் ஆலோசனையை பெற தாம் முயற்சிப்பதாக விளையாட்டு அமைச்சர், நியமிக்கப்பட்ட யாப்புக் குழுவின் தலைவருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

முன்மொழியப்பட்ட புதிய யாப்பு வரைவை இந்தக் குழு இரண்டு மாதங்களுக்குள் தயாரிக்கும் என்று எதிர்பார்ப்பதாக அமைச்சார் ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டிருக்கிறார்.

என்றாலும் இந்த யாப்புக்குழு நியமித்த சில நாட்களுக்குள்ளேயே அதில் இருந்து விலகுவதாக பர்வீஸ் மஹ்ரூப் அறிவித்திருக்கிறார். அவரின் கூற்றுப்படி, “விளையாட்டின் யாப்பு தொடர்பில் அன்றி தொழிநுட்ப விடயத்திலேயே பிரதானமாக எனது நிபுணத்துவம் இருப்பதாக நான் கருதுகிறேன். அதனால் கொள்கை மற்றும் சட்டங்கள் அன்றி தொழில்நுட்ப விடயத்திலேயே என்னால் சிறந்த பங்களிப்பை வழங்க முடியும் என்று நான் நம்புகிறேன்” என்று ட்விட்டரில் குறிப்பிட்டிருக்கிறார்.

மஹ்ரூப்பின் முடிவு நியமிக்கப்பட்டிருக்கும் குழுவுக்கு ஆரம்பத்திலேயே பின்னடைவா இல்லை ஆரோக்கியமானதா என்று இப்போதே ஊகிக்க முடியாது. என்றாலும், இந்த நகர்வு என்பது இலகுவானதாக இருக்க முடியாது. இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தை தலைகீழாக புரட்டக் கூடிய ஒரு முயற்சி. எனவே, அதற்கான எதிர்வினைகளும் கடுமையாகவே இருக்கும்.

2015 ஆம் ஆண்டு முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர் பிரசன்ன ஜயவர்தன இலங்கை கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பு ஒன்றை கொண்டுவந்தார். அப்போது இருந்த சிதத் வெத்தமுனி தலைமையிலான இலங்கை கிரிக்கெட் இடைக்கால சபை அதனை அங்கீகரித்தது. அதற்கு ஐ.சி.சியும் பச்சைக்கொடி காட்டியது. பிரதமர் கூட ஆதரவு வெளியிட்டிருந்தார். ஆனால் அது கடைசி வரை செயற்பாட்டுக்கு வரவில்லை.

இலங்கை கிரிக்கெட் சபையில் மாற்றங்களை கொண்டுவர கடந்த 25 ஆண்டுகளில் வந்த பல விளையாட்டு அமைச்சர்களும் முயற்சி மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலப்பிரிவில் இலங்கை கிரிக்கெட்டுக்கு கிட்டத்தட்ட எட்டு இடைக்கால சபைகள் நியமிக்கப்பட்டிருக்கின்றன. என்றாலும் அந்த முயற்சி இன்றுவரை கைகூடவில்லை.

கடந்த கால முயற்சிகள் பார்க்க வெற்றிகரமானது போன்று தோன்றும், ஆனால் அடிப்படையில் இடைக்கால நிர்வாகம் என்பதால் அவை கொண்டுவரும் மாற்றங்கள் நிலையற்றவையாகவே இருக்கின்றன. வாக்கெடுப்பு மூலம் தெரிவாகும் நிர்வாகம் அந்த முயற்சிகளை இல்லாமலாக்கி விடுகிறது.

இப்போது கூட விளையாட்டு அமைச்சர் யாப்பை மாற்றுவதற்கு குழு ஒன்றை அமைத்த செய்தி வெளியான சில மணி நேரத்திற்கு முன்னரே இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்ட செய்தியில், 2022 ஆம் ஆண்டில் இலங்கை கிரிக்கெட் 6.3 பில்லியன் ரூபா நிகர இலாபத்தை பெற்றதாக குறிப்பிட்டது. இது சாதனை லாபம் என்றும் அது கூறியது. இந்த செய்தி யாப்பு மாற்ற முயற்சியின் தீவிரத்தை தணிப்பது போன்று இருக்கிறது. என்றாலும், இவைகளைத் தாண்டி கிரிக்கெட் சபையின் யாப்பை மாற்றுவதே இதற்கு சிறந்த வழி என்ற நம்பிக்கையே ஒரு தரப்பிடம் இப்போது வலுத்திருக்கிறது.

இந்த யாப்பை மாற்றும் முயற்சியின் அடிப்படைக் காரணம் கிரிக்கெட் நிர்வாகத்தை தேர்வு செய்யும் வாக்களிப்பு முறையில் உள்ள கோளாறுகளாகும். இந்த வாக்களிப்பு முறையில் வாக்குரிமை பெற்றிருக்கும் அதிகமானவர்களுக்கு கிரிக்கெட்டை முன்னேற்றும் நோக்கமே இல்லை என்பது சீர்திருத்தத்தை நாடும் தரப்பினரின் குற்றச்சாட்டு.

உலகின் ஏனைய கிரிக்கெட் சபைகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை கிரிக்கெட் சபையின் வாக்களிப்பு உரிமை பெற்றவர்களின் எண்ணிக்கை அதிகம். இது ஜனநாயக ரீதியில் சரியாகப்படலாம், ஆனால் விளையாட்டுக்கு அப்பால் வாக்காளர்களை திருப்திப்படுத்துவது கிரிக்கெட்டுக்கு நல்லதல்ல.

அதாவது இந்தத் தேர்தல் முறை பொருத்தமானவர்களை பதவியில் அமர்த்த உதவாது என்பது பிரதான குற்றச்சாட்டு. இலங்கைக்கு உலகக் கிண்ணத்தை வென்று தந்த அர்ஜுன ரணதுங்க 2016 கிரிக்கெட் சபை தேர்தலில் போட்டியிட்டபோது கூட அவரால் வெற்றி பெற முடியவில்லை.

இந்த சூழலில் இலங்கை கிரிக்கெட் சபை யாப்பை மாற்றும்படி கிட்டத்தட்ட இலங்கையின் முன்னாள் முன்னணி கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் போல் கோரும் ஒன்றாக மாறி இருக்கிறது. இலங்கை அணி மைதானத்தில் பலவீனப்பட்டு வரும் நிலையில் அந்தக் குரல் நாளுக்கு நாள் வலுத்து வருகிறது.

இலங்கை கிரிக்கெட் என்பது முழுக்க முழுக்க கொழும்பை மையப்படுத்தி இருக்கிறது. நாட்டின் உள்ளூர் கிரிக்கெட் என்பது கழகமட்டக் கிரிக்கெட்டை மையப்படுத்தியது. அதுவே 90 வீதமான இலங்கை கிரிக்கெட்டின் உயிர் நாடியாக இருக்கிறது. இதில் ஆதிக்கம் செலுத்தும் பிரதானமான கிரிக்கெட் கழகங்கள் எல்லாம் கொழும்பிலேயே உள்ளன. பாடசாலை கிரிக்கெட் என்பது 10 வீதமே செல்வாக்கு செலுத்துகிறது.

இதேநேரம் இலங்கை உள்ளூர் கிரிக்கெட் மற்றும் முன்னணி சர்வதேச கிரிக்கெட் இடையிலான இடைவெளி என்பது மிகப்பெரியது. இதனால் திறமையான வீரர்களை அடையாளம் காணும் நடைமுறையில் கோளாறுகள் இருக்கின்றன. இது கடைசியில் மைதானத்திலேயே பிரதிபலிக்கும்.

எனவே, இலங்கை கிரிக்கெட் சபை யாப்பை மாற்றும் தேவை இருந்த போதும் அது தன்னிச்சையாகச் செய்ய முடியாத ஒன்று. அடிப்படையில் தேர்தல் மூலம் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகத்திற்கே சர்வதேச கிரிக்கெட் கௌன்சில் ஒப்புதல் அளிக்கும். அவ்வாறான நிர்வாகத்தைக் கொண்டு யாப்பை மாற்றுவது சீர்திருத்தத்தை நாடுபவர்களுக்கு இதுவரை முடியாமல்போன ஒரு காரியம்.

எனவே, நியமிக்கப்பட்டிருக்கும் யாப்புக்குழு புதிய யாப்பு நகல் ஒன்றை தயாரித்தாலும் அதனை எவ்வாறு செயற்படுத்தப்போகிறது என்ற கேள்விக்கு முழுமையான பதில் இல்லை. என்ன செய்வதாக இருந்தாலும் ஐ.சி.சி அங்கீகாரம் தேவை. இல்லாவிட்டால், இலங்கை கால்பந்து சம்மேளனத்திற்கு ஏற்பட்ட தடை கிரிக்கெட்டுக்கு வந்தால் அதன் தாக்கம் பெரியது.

இந்த யாப்பை மாற்றும் முயற்சி காலத்தின் தேவை என்றாலும், காலத்துக்குப் பொருந்தி செய்ய வேண்டும். இல்லாவிட்டால் கடந்த காலங்கள் போன்று அந்த முயற்சி ஒன்றுமில்லாமல் போய்விடும்.

எஸ்.பிர்தௌஸ்...✍

Bazball theory தெரியுமா?

கிரிக்கெட்டில் புதிதாக உருவெடுத்திருக்கும் பாஸ்போல் கோட்பாடு (Bazball theory) கிரிக்கெட் உலகின் எதிர்காலத்தை எப்படித் தீர்மானிக்கப்போகிறது என்பதுதான் இன்றிருக்கும் பெரிய கேள்வி. உண்மையில் இந்த பாஸ்போல் கோட்பாடு என்றால் என்ன? கோட்பாடு என்பதற்காக ஐன்ஸ்டைன் கோட்பாடு அளவுக்கு சிந்திக்கத் தேவையில்லை. இது கிரிக்கெட்டில் புதிதாகத் தோன்றி இருக்கும் போட்டி உத்தி அல்லது போட்டித் தந்திரம் என்று குறிப்பிடலாம்.

இதனை உருவாக்கியவர் நியூசிலாந்து முன்னாள் அணித் தலைவரும் இப்போது இங்கிலாந்து பயிற்சியாளராகவும் இருக்கும் பிரன்டன் மெக்கலம். அதிரடியாக துடுப்பெடுத்தாடுவது, துணிச்சலான முடிவுகளை எடுப்பதில் பெயர்போன அவரை ‘பாஸ்’ என்றும் செல்லமாக அழைப்பார்கள். எனவே, அவரின் போட்டித் தந்திரத்தில் பாஸ்போல் கோட்பாடு என்று பெயர் வந்ததன் பின்னணி தெரிந்திருக்கும்.

வழக்கமாக டெஸ்ட் போட்டிகள் என்றால் பந்துகள் வீணாகிப்போனாலும் பரவாயில்லை, விக்கெட்டை காத்துக் கொண்டு ஓட்டங்களை சேர்த்து வெற்றி எப்படிப்போனாலும் ஆட்டத்தை சமநிலை செய்ய வேண்டும் என்று ஆடும் ஆட்டமாகவே தொன்று தொட்டு இருந்து வருகிறது.

இந்த பாஸ்போல் கோட்பாடு ஒட்டுமொத்த டெஸ்ட் பாரம்பரியத்துக்கே சவால் விடுப்பது போன்றது. அதாவது வேகமாக துடுப்பெடுத்தாடி ஓட்டங்களை எடுப்பது, அதிரடியாக பந்துவீச்சுகளை மேற்கொண்டு போட்டியை வெல்வதற்காக ஆடுவதே இந்தப் போட்டித் தந்திரமாகும்.

அடிப்படையில் ஒருநாள் போட்டிகளில் 300, 350 ஓட்டங்களை 50 ஓவர்களுக்குள் பெரும் அணிகள், டெஸ்ட் போட்டிகளில் 100 ஓவர்களுக்கு முகம்கொடுத்தாலும் அந்த 300, 400 ஓட்டங்களை பெறுவதற்குக் கூட தவழும். அதற்கு டெஸ்ட் போட்டிகளில் பந்துவீச்சு பாணி வித்தியாசமானது. பௌன்ஸர், வைட் பந்துகளின் அளவுகோல்கள் வித்தியாசப்பட்டது என்பதால் துடுப்பாட்ட வீரர்களுக்கு கண்டமேனிக்கு ஆட முடியாது என்ற தர்க்கத்தில் நியாயம் இருக்கிறது.

ஆனால், இங்கிலாந்து அணியின் இப்போதைய டெஸ்ட் அணித் தலைவர் பென் ஸ்டொக்ஸ் அடிப்படையில் ஒரு அதிரடித் துடுப்பாட்ட வீரர். பிரன்டன் மெக்கலமுக்கு கச்சிதமாகப் பொருந்துபவர். எனவே, இருவரும் இணைந்து இந்த பாஸ்போல் கோட்பாட்டை நடைமுறைச் சாத்தியமானது என்று உறுதி செய்திருக்கிறார்கள்.

இங்கிலாந்து அணி கடைசியாக ஆடிய 12 டெஸ்ட் போட்டிகளில் 10இல் வென்றது. இரண்டில் மாத்திரம்தான் தோற்றது. ஆனால் இந்த 12 போட்டிகளுக்கு முன்னர் இங்கிலாந்து ஆடிய 9 டெஸ்ட் போட்டிகளில் ஒன்றில் கூட வெல்லவில்லை.

குறிப்பாக டெஸ்ட் போட்டிகளில் நான்காவது இன்னிங்ஸில் வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடுவது சவாலானது. ஆனால் 2022 பருவத்தில் இவ்வாறு நான்கு இன்னிங்ஸ்களில் இங்கிலாந்து சவாலான வெற்றி இலக்கை துரத்தி வெற்றியீட்டியது. இது டெஸ்ட் கிரிக்கெட்டுக்கு புதியது.

அதாவது இங்கிலாந்து அணி நியூசிலாந்து மற்றும் இந்தியாவுக்கு எதிராக 277, 299, 296 மற்றும் 378 ஓட்ட வெற்றி இலக்குகளை நான்காவது இன்னிங்ஸில் வெற்றிகரமாக துரத்தி இருந்தது இந்த பாஸ்போல் கோட்பாட்டை பயன்டுத்தித் தான்.

2022 டிசம்பரில் ராவல்பிண்டியில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் இங்கிலாந்து அணி ஒரு நாளில் 506 ஓட்டங்களை விளாசியது. அதாவது சொந்த நாட்டுக்கு வெளியில் இங்கிலாந்து ஒருநாளில் பெற்ற அதிக ஓட்டங்களாக இது இருந்தது.

இந்த இன்னிங்ஸில் இங்கிலாந்து மொத்தம் 657 ஓட்டங்களை பெற்றதோடு ஓவர் ஒன்றுக்கு சராசரியாக 6.5 ஓட்டங்களை பெற்றிருந்தது. அதாவது முழுமை பெற்ற டெஸ்ட் இன்னிங்ஸ் ஒன்றில் பெறப்பட்ட அதிக ஓட்ட வேகமாக இது வரலாறு படைத்தது.

டெஸ்ட் போட்டிகளில் வேகமாக துடுப்பெடுத்தாடி போட்டியில் வெற்றி தோல்வி இரண்டில் ஒன்றை பெறுவதுதான் இந்த பாஸ்போல் கோட்பாட்டின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது.

சரியாக 1996இல் சனத் ஜனசூரிய மற்றும் ருமேஷ் களுவிதாரன ஆரம்ப ஓவர்களில் வேகமாக ஓட்டங்களை பெறும் உத்தியை அறிமுகப்படுத்தியதற்கு நிகரானது இந்த புதிய தந்திரம் என்று சிலர் கூற ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் வழக்கம்போல் இதனை விமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள்.

ஆனால் இங்கிலாந்து மாத்திரம் கடைப்பிடித்து வரும் இந்த போட்டி தந்திரத்தை மற்ற நாடுகளும் பின்பற்ற ஆரம்பித்தால் டெஸ்ட் கிரிக்கெட்டின் போக்கே மாறிவிடும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 மார்ச் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்

2023 மார்ச் 5 ஞாயிற்றுக்கிழமை

அவுஸ்திரேலியாவில் குப்பை கொட்டிய நாசா!

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசாவின் ஸ்கைலெப் செயற்கைக் கோள் 1979ஆம் ஆண்டு பூமியை நோக்கி விழுந்தது. அதன் மிகப்பெரிய துண்டு ஒன்று மேற்கு அவுஸ்திரேலியாவில் விழுந்தது. வளிமண்டலத்தை கடந்து இவ்வளவு பெரிய துண்டு எப்படி பூமியில் விழுந்தது என்பது நாசாவுக்கு பெரிய மர்மமாகவே இருந்தது.

ஆனால் அவுஸ்திரேலிய நிர்வாகத்திற்கு அது கவலை இல்லை. இந்த மிகப்பெரிய குப்பையை யார் கொட்டியது என்பதுதான் கவலை. எனவே குப்பை கொட்டியதற்காக நாசாவுக்கு 400 டொலர் அபராதம் விதித்தது. நாசா இந்த செயற்கைக்கோளை கட்ட 2.2 பில்லியன் டொலர் செலவிட்டது. ஆனால் அது இந்த அபராதத்தை கடைசி வரை செலுத்தவில்லை.

கடைசியில் 30 ஆண்டுகள் கழித்து 2009ஆம் ஆண்டு கலிபோர்னியாவில் உள்ள வானொலி அறிவிப்பாளர் ஸ்கொட் பார்லி என்பவர் தனது நேயர்களிடம் இருந்து பணம் சேகரித்து 400 டொலர் அபராதத்தையும் செலுத்தினார்.

பெயர் வைப்பதற்கு இத்தனை பிரச்சினையா?

சுவீடனில் பெயர் வைப்பதற்கு என்று தனிச் சட்டம் உண்டு. கண்டபடி பெயர் வைக்க முடியாது. வைக்கும் பெயர் அரச நிர்வாகத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும். முறையற்ற பெயர்களுக்கு அனுமதி இல்லை. குறிப்பாக அடல்ப் ஹிட்லர், அல்லாஹ் போன்ற பெயர்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

ஆரம்பத்தில் உயர் குடியைச் சேர்ந்தவர்களுக்கு பயன்படுத்தப்படும் பெயர்களை சாதாரணகுடிகள் வைப்பதை தடுக்கும் வகையிலேயே இந்தப் பெயர்ச் சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆனால் இப்போது அந்நாட்டு மக்களுக்கு இந்தப் பெயர் சட்டம் பெரும் தலையிடியாக மாறியிருக்கிறது.

2007ஆம் ஆண்டு பெற்றோர்கள் தமது பிள்ளைக்கு “மெடாலிகா” என்று பெயர் வைத்தார்கள். ஆனால் அந்தப் பெயர் இசைக்குழு ஒன்றுக்கு இருப்பதாகக் கூறி சுவீடனின் தேசிய வரி ஆணையம் அந்தப் பெயர் முறையற்றது என்று நிராகித்தது. கடைசியில் அந்தப் பிரச்சினை நீதி மன்றம் வரை சென்றது.

இப்படித்தான் 1991ஆம் பிறந்த பிள்ளைக்கு இந்த பெயர் சட்டம் குறுக்கிட கோபமடைந்த பெற்றோர் அந்தப் பிள்ளைக்கு, ‘Brfxxccxxmnpcccclllmmnprxvclmnckssqlbb11116’ என்று பெயர் வைத்தார்கள்.

செப்டெம்பர் 11இல்

நியூயோர்க்கில் இடம்பெற்ற ஒரே கொலை!

2001 செப்டெம்பர் 11, அதாவது நியூயோர்க் நகரில் இரட்டை கோபுரங்கள் மீது பயணிகள் விமானம் மோதி தாக்குதல் நடத்தப்பட்ட நாள். தாக்குதல்களில் 2600க்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டார்கள்.

ஆனால் அந்த நகர தரவுகளின்படி சரியாக அன்றைய தினத்தில் ஒரே ஒருவர்தான் கொல்லப்பட்டார். விசாரணைகளின் பின்னர்தான் இந்த மரண எண்ணிக்கை தரவுகளில் சேர்க்கப்பட்டது.

சரி, அன்று கொல்லப்பட்ட அந்த ஒரே ஒரு நபர் யார். அவரின் பெயர் ஹென்ரிக் சிவியக் என்ற 46 வயது ஆடவர். போலந்தில் இருந்து பிழைப்புத் தேடி அமெரிக்கா வந்திருந்தார். செப்டெம்பர் 11 நள்ளிரவுக்கு சற்று முன்னர் தனது வீட்டுக்கு அருகில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார். அதாவது செப்டெம்பர் 11 அன்று நியூயோர்க்கில் கொல்லப்பட்ட கடைசி நபர் இவர் தான்.

ஆனால் இந்தக் கொலை பற்றிய மர்மம் இன்றும் அவிழ்க்கப்படவில்லை. அவருக்கு யாருடனும் பகை இருப்பதாகத் தெரியவில்லை, திருட்டுகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை, அதாவது இந்தக் கொலையை யார் செய்திருப்பார் என்ற துப்பு எதுவும் கிடைக்கவில்லை.

ஆனால், சிவியக்குக்கு சரியாக ஆங்கிலம் பேச வராது. வார்த்தைகளை குழறியபடியே உச்சரிப்பார். அவர் வாயைத் திறந்தால் வெளி நாட்டுக்காரர் என்று கண்டுபிடித்து விடுவார்கள். போதாக்குறைக்கு இராணுவத்தினர் பாணியில் ஆடை அணிந்திருந்தார்.

நியூயோர்க் நகரமே பதற்றத்தில் இருந்த நேரம் அது. எனவே, யாராவது பயங்கரவாதி என்று அஞ்சியே சிவியக்கை சுட்டுக் கொன்றிருக்கலாம் என்பதுவே பொலிஸாரின் சந்தேகம். அதற்கு அப்பால் இந்த விசாரணை நகரவே இல்லை.

போரைத் தூண்டிய கால்பந்து மைதானம்

1960களில் அமெரிக்க உளவு விமானங்கள் கியூபாவில் ரகசியமாக புகைப்படங்களை எடுத்தன. அவைகளை ஆய்வு செய்தபோது விசித்திரமான புகைப்படம் இருந்தது. அதிலே ஒரு கால்பந்து மைதானம். அதாவது கால்பந்துக்கும் கியூபாவுக்கு சம்பந்தம் இல்லை. அங்கே பேஸ்போல் விளையாட்டுத்தான் பிரபலம். அப்படி இருக்க ஏன் கால்பந்து மைதானம் என்ற சந்தேகம் உறுத்தியது. ஏனென்றால் ரஷ்யாவில்தான் கால்பந்து பிரபலம்.

விசாரித்துப் பார்த்தபோதுதான் சோவியட் ஒன்றியம் அமெரிக்காவை இலக்கு வைத்து கியூபாவில் ஏவுகணைகளை நிறுவுவது தெரிந்தது. இது மிகப்பெரிய பதற்றத்தை ஏற்படுத்தியது. அமெரிக்காவும் சோவியட் ஒன்றியமும் நேரடியாக போருக்கு தயாராகும் மோசமான சூழல் ஏற்பட்டது. அது அணு ஆயுதப் போராக மாறும் அபாயமும் ஏற்பட்டது.

நல்லவேளை இரு தரப்புக்கும் இடையில் ஒப்பந்தம் எட்டப்பட்டு பிரச்சினை தணிந்தது. இல்லாவிட்டால் ஒரு கால்பந்து மைதானம் மூன்றாவது உலகப் போரையே உருவாக்கி இருக்கும்.

செல்ஃபி உலா

முஹம்மட் சர்பான் முஆத் ஷைட்
பாத்திமா சபானா, முஹம்மட் சர்பான்
2022.02.10
சாய்ந்தமருது 11

யாதனா வினோத்குமார்

Kamsica Mahadevan

லயன் சீலன்



Vasuki P.Vasu

ஷாருலதா பாலகிருஷ்ணன்

தமிழ்நாட்டுக் கவிஞர்களான
ப. பன்னீர்செல்வம் மற்றும் ரவி குருஜீயின்
துணைவியாருடன் கவிஞர் நடராஜா தாமரை

இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்

கொழும்புத் தமிழ்ச் சங்க
முன்னாள் தலைவரும்
தாயக ஒலி பிரதம ஆசிரியரும்
பன்னூலாசிரியரும்
மூத்த எழுத்தாளருமான
கலாபூஷணம் த.சிவசுப்ரமணியம்
(தம்புசிவா)
அண்மையில் தனது பிறந்த நாளை மிக எளிமையாக வெள்ளவத்தை நெல்சன் பிளேஸில் உள்ள அவரது இல்லத்தில் நினைவு கூர்ந்தார்.

மருத்துவர்களின் ஆலோசனையின்படி சிகிச்சை நிமித்தம் தேகாரோக்கியம் பேணல் ஓய்வு எடுத்துக் கொண்டிருக்கும் அவரை அவரது இல்லம் சென்று வாழ்த்தி அன்பளிப்புகள் வழங்கி கௌரவித்து மகிழ் வித்த தருணம். தம்பு சிவாவின் துணைவியார் பணி ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி தம்பு சிவாவும் அருகில் காணப்படுகிறார்.

தாஸிம் அகமது
'தாயக ஒலி'
மதியுரைக் குழு உறுப்பினர்.

தமிழ் மொழி

தமிழுக்கும் அமுதென்று
பேர் அந்தத் தமிழ்
இன்பத் தமிழ் எங்கள்
உயிருக்கும் நேர் என்று
பாரதிதாசன் தமிழின்
இனிமையைப் பாடினான் !
யாமறிந்த மொழிகளிலே
தமிழ் மொழி போல்
இனிதாவதெங்கும்
காணோம் இது
பாரதியார் தமிழின்
சிறப்பைப் பற்றி பாடினான் !
மூவேந்தர்கள் வளர்த்த
முத்தமிழ், இயல் தமிழ்,
இசைத் தமிழ்,
நாடகத் தமிழ் என்று தமிழ்
முப்பிரிவுகளுடையது !
இது முதன்மைத் தமிழ்,
முத்துத் தமிழ், கன்னித் தமிழ்,
கனி போல் இனிக்கும் தமிழ்,
இன்தமிழ், மென்தமிழ்
என்று தமிழின்
சிறப்பைப் பற்றி பலரும்
பலவாறு புகழ்ந்து கூறுகின்றனர்.
247 அட்சரங்களைக்
கொண்ட அருமை தமிழ்,
வன்கணம், மென்கணம்,
இடைக் கணம் என்று
மூவினங்களைக் கொண்ட
முதுமைத் தமிழ்
பழமையான தமிழ் என்றாலும்,
பெருமையான தமிழ்.
சங்கத் தமிழ், தங்கத் தமிழ்,
சிங்கத் தமிழ்
என்றெல்லாம் வாயாற
வாழ்த்தும் மொழி
தமிழ் மொழி
இலக்கியத் தமிழ் என்றும்,
இலக்கணத் தமிழ் என்றும்
பாகு படுத்தி,
பகுத்து, தொகுத்து,
வகுத்துக் கூறியுள்ளார்கள்.
வாழ்க தமிழ் !
வளர்க தமிழ் !
ஓங்குக தமிழ் !
உயர்க தமிழ் ..!!

இலங்கை
பொன்மனச் செம்மல்
கலைத்தங்கம்
எம்.எஸ்.தாஜ்மஹான்...

எவோட்ஸ்- 2023

கலை, இலக்கியத்துறையில் ஆர்வம் கொள்ளும் இளம் படைப்பாளிகளை ஊக்குவிக்கும் வகையில் புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் நடத்திவரும் எவோட்ஸ் கலை. கலாசாரப் போட்டித்தொடரின் 2023 ஆண்டுக்கான போட்டிகளின் முதல்அம்சமாக கவிதைப் போட்டியை நடத்த முன்வந்துள்ளது.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான நிபந்தனைகள் வருமாறு..

1) தமக்கு விருப்பமான கருப்பொருளில் கவிதைகளை எழுதலாம்.

2) ஒருவர் ஒரு பிரதியை மட்டுமே அனுப்ப முடியும். இக் கவிதை முன்னர் எத்தகைய ஊடகங்களிலும் வெளிவந்த வையாக இருக்கக் கூடாது.

3) கவிதை புதுக்கவிதை மற்றும் மரபுக்கவிதையாக இருக் கலாம்.

4) ஒவ்வொரு கவிதையும் 8 வரிகளுக்கு குறையாமலும் 24 வரிகளுக்கு மேற்படாமலும் இருத்தல்வேண்டும்.

5) அனுப்படும் கவிதைகள் கட்டாயமாக பாமினி பொன்டில் ரைப் செய்யப்பட்டுஅனுப்பி வைக்கப்படவேண்டும்

6) கவிதைகளை puthiyaalaikalaivaddam1980@ gmail. com. மற்றும் puthiyaalai வட்சப்குறுப் மூலமா கவும் அனுப் பலாம்

7 கவிதைகள் வரும் 25.03.2023 திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்

8) முடிவுகள் ஏப்ரல்; மாதம் முற்பகுதியில் அறிவிக்கப்படும்.

9) இம்முறை பரிசளிப்பு மூன்று போட்டிகளும் ஒன்றான தாக நடத்தப்படும்.

பரிசு விபரங்கள் வருமாறு
முதல்பரிசு ரூபா 10.000, சான்றிதழ்
இரண்டாம்பரிசு ரூபா 7.500,சான்றிதழ்
மூன்றாம்பரிசு ரூபா 5.000,சான்றிதழ்

இவர்களுக்கான விருது வரும் 30.012024 விருதுவிழா வில் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களைப்பெற... 076 2002701, 0776274099.0777412604 0777111905

பேசாலை சங்கவி திரையரங்கில் கலாபூஷணம் உலகத் தமிழர் விருது வழங்கல்

சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



எழுத்தாளர்களுக்கு அங்கீகார அந்தஸ்தை கொடுப்பது அவர்களின் நூல்கள்தான்

முறையூர் மங்கேஷ்வரன்

உங்களைப் பற்றிய அறிமுகத்தை எமது வாசகர்களுக்குக் கூறுங்கள்?

என்னைப் பற்றிக் கூறுவதென்றால் எனது பிறப்பிடம் மட்டக்களப்பு முறக்கொட்டாஞ்சேனை. எனது குடும்பம் சற்றுப் பெரிய குடும்பம். அம்மா அப்பா, இவர்களோடு ஆறு பெண் சகோதரிகள், (அக்காமார்) இரண்டு சகோதர்கள் (அண்ணாமார்) குடும்பத்தில் இளையவன் நானே. அப்பா ஓய்வு பெற்ற ஒர் அரசாங்க அதிபர். அவர் காலமாகி பல வருடங்களாகின்றது. பொதுவாக எங்களது குடும்பம் ஆசிரியர் குடும்பம். படிக்கின்ற காலங்களிலிருந்தே வானொலி, பத்திரிகைகளோடு நிறையவே தொடர்பினைப் பேணி வந்தேன். சிறுவயதிலிருந்தே இந்த எழுத்துத் துறையில் எனக்கு ஏற்பட்ட தாகம் அது இன்று வரை என்னோடு பயணிக்கிறது. படிக்கின்ற காலங்களில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இவற்றோடு மட்டுமன்றி இலங்கை வானொலி போன்ற ஊடகங்களில் முழு நிலா என்ற புனைப் பெயரோடு அந்தக் காலங்களிலிருந்தே எழுத ஆரம்பித்தேன். அதிகமாக ஓய்வு நேரங்களில் எழுதுகிறேன். என் எழுத்துக்களுக்கு முதல் ரசிகன் நானேதான்.

கால மாற்றத்தாலோ என்னவோ திடீரென புலம்பெயர்ந்து இலண்டன் மாநகரிலே பல வருடங்களாக மகன், மனைவி என்ற இணைபிரியாத பந்தங்களோடு வாழ்ந்து வருகிறேன். நட்பு மீது நல்ல நம்பிக்கை இருக்கிறது. இந்த நட்பு என்ற நந்தவனத்தில் நிறம் மாறாத பூக்களையே என்றும் நேசித்து அதன் வாசனையை சுவாசிக்கின்றேன். இயந்திரமயமான வாழ்வியலிலும், இதயத்தில் கருணையையும், காதலையும் தாங்கி கடன்கள் ஏதுமில்லாமலே கண்ணியமாக களிப்போடு நகர்கிறது எனக்கான நாழிகைகள்.

உங்கள் ஊர், பாடசாலை வாழ்வு மற்றும் தொழில் அனுபவம் பற்றியும் குறிப்பிடுங்கள்?

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பிலுள்ள முறக்கொட்டாஞ்சேனை எனது பிறப்பிடம். சாதாரண தரம் முறக்கொட்டாஞ்சேனை இராமகிருஷ்ணமிஷன் வித்தியாலயத்திலும், உயர் தரம் செங்கலடி மத்திய கல்லூரியிலும், வெளிவாரிப் பட்டப் படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கற்றேன். அதன் பின்னர் லண்டனிலுள்ள University of Sunderland இல் Bachelor of Arts Business Management பட்டப் படிப்பைக் கற்றேன்.

அதனைத் தொடர்ந்து, University of Northampton இல் Bachelor of Arts in Business & Management final year கற்றேன். தொடர்ந்து HND Diploma கற்கை நெறியினையும் கற்றேன்.

இலக்கியத் துறையில் ஆர்வம் ஏற்படக் காரணமாயமைந்த சூழலைக் குறிப்பிட முடியுமா?

இலக்கியத் துறை ஆர்வம் என்பது எனது பாடசாலைக் காலத்திலே உருவாக ஆரம்பித்தது. படிப்புத் தவிர்ந்த ஏனைய ஓய்வு நேரங்களை பத்திரிகை, சஞ்சிகைகள் வாசிப்பதிலும் மற்றும் இலங்கை வானொலி கேட்டலோடும் இணைத்துக் கொண்டேன். இதன் பிரதிபலிப்பே எனக்குள் எழுதுகின்ற ஆர்வமும், ஆற்றலும் உண்டானது. எழுத வேண்டும் என்கின்ற ஒரு சூழலை எனக்கு இலங்கை வானொலிதான் ஏற்படுத்தியது என்பதை இந்த இடத்தில் பெருமையோடும், நன்றியோடும் கூறிக்கொள்கிறேன்.

உங்களது முதற் படைப்பு எப்போது, எதில் வெளியானது?

எனது முதற் படைப்பு இலங்கை வானொலியிலேதான் முதன் முதலாக ஒலித்தது. அதனைத் தொடர்ந்தே ஏனைய ஊடகங்களில் உலா வரத் தொடங்கியது. இப்போது அது எந்த ஆண்டில் ஒலிபரப்பானது என்று சரியாக எனக்கு நினைவில் இல்லை. ஆனால் சிறுவர் மலர் என்ற நிகழ்ச்சியிலே எனது கவிதை நான் ஆண்டு 9 இல் கல்வி கற்கும்போது (1991, 1992 காலப் பகுதிகளில் என நினைக்கிறேன்) ஒலிபரப்பானது என்று தான் நினைவிலிருக்கிறது. அதன் பிறகே மித்திரன் வார மலர், தினமுரசு, ஜனனி.. முதலான அந்த நாட்களில் வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எனது சிறுகதைகளும், கட்டுரைகளும், கவிதைகளும் களம் கண்டன.

உங்களை கவிதை எழுதத் தூண்டியது எது?

பொதுவாகக் காதலில் தோற்றவர்களும், காதலிப்பவர்களுமே இந்தக் கவிதை எழுதுவார்கள் என்கின்ற ஒர் எண்ணம் எம்மில் இன்றுவரை பலருக்குண்டு. காலங்கள் மாறினாலும் அந்த மனநிலை மட்டும் எப்போதுமே மாறாத ஒன்றாகவே இன்றுவரை காணப்படுகிறது. என்னைப் பொறுத்தவரை கவிதை எழுதக் காரணம் காதலோ அல்லது கண்ணீரோ அல்ல. மாறாக இளவயதில் என்னில் காணப்பட்ட வாசிப்பும், வளமான சிந்தனையுமே கவிதை எழுதத் தூண்டியது என்று சொல்லலாம்.

உங்களை எழுத ஊக்கப்படுத்தியவர்கள் யார்?

ஊக்கம் அது எனக்குள்ளே ஊன்றி வளர்ந்த ஒன்றாக இருந்தது. அந்தக் காலங்களில் இலங்கை வானொலியில் இசையும் கதையும், தேர்ந்த இசை, விமர்சகர் விருப்பம், ஆடவர் அரங்கம், அந்தி நேரச் சிந்துகள் முதலான நிகழ்ச்சிகளில் எனது பிரதிகள் அதிகம் ஒலிபரப்பாகின. அப்போது இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் பலவிதமான கலையுலக நண்பர்கள் என்னுடன் இணைந்து கொண்டார்கள். அவர்களின் ஊக்கமும், பாராட்டுமே இன்று நான் வளர்ந்து கொண்டிருப்பதற்குக் காரணம் என்பேன். ஒலிபரப்பான ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் எங்கோ ஓர் மூலையிலிருந்து முகம் தெரியாமல் அவர்கள் கொடுத்த உற்சாகம்தான் இதற்கு ஊன்றுகோலாய் அமைந்தது.

(07 ஆம் பக்கம் பார்க்க)

அதுமட்டுமன்றி இலங்கை வானொலியில் கடமையாற்றிய பல அன்பு அறிவிப்பாளர்களின் ஊக்கமும் காரணம் என்பேன்.

நீங்கள் வாசித்த பல கவிதைகளில் அதிகமாக இரசித்து, வாசித்த கவிதை ஒன்றைப் பற்றிச் சொல்ல முடியுமா?

பல கவிஞர்களுடைய பல கவிதைகளையும் படிப்பேன். ஒவ்வொரு கவிஞர்களினதும் ஒவ்வொரு கவிதை வரிகளும் ஏதோ ஒரு காரணத்திற்காக என் மனதில் இடம்பிடித்திருக்கும். பல கவிதை வரிகள் மனதை ஆசுவாசப்படுத்தி, ஆழ்மனதிலே சில அதிர்வுகளை உண்டாக்கும். அப்படிப்பட்ட பல கவிஞர்களின் கவிதை வரிகளால் கட்டுண்டு போயிருக்கிறேன். இதில் எந்தக் கவிதையை, எப்படிச் சொல்வது? குறிப்பாக இந்தக் கவிஞரின் கவிதை வரிகள்தான் என்றில்லை. பல கவிஞர்களின் பலநூறு கவிவரிகள் என் ஆழ்மனதில் ஆலோலமிசைக்கின்ற ஆரோகணங்களே. குறிப்பிட்டுச் சொல்வதற்கு ஒன்று இரண்டல்ல, பலநூறு கவிஞர்களின் கவிதை வரிகள் உள்ளன.

இதுவரை வெளிவந்த உங்களது நூல்கள் பற்றிச் சொல்லுங்கள்?

பொதுவாக எழுத்தாளர்களுக்கு அங்கீகாரம் என்கின்ற அந்தஸ்தினைக் கொடுப்பது அவர்கள் வெளியீடு செய்கின்ற நூல்கள்தான். அது அவர்களுக்கு ஒருவித மன ஆனந்தத்தைக் கொடுத்து, சமூகத்தில் ஒரு அந்தஸ்த்தையும் கொடுத்துவிடுகிறது. அந்தவகையில் எனது இரு கன்னி நூல்களை அண்மையில்தான் இலங்கையிலே வெளியீடு செய்திருந்தேன். "மனதோடு பேசும் மௌனங்கள்" என்கின்ற புதுக்கவிதை நூலையும் மற்றும் "மகிழும் பூக்கள்" என்ற ஹைக்கூ கவி நூலையும் அண்மையில் வெளியீடு செய்திருந்தேன். இவை இரண்டும் எனது கன்னிக்கவி நூல்கள் ஆகும்.

உங்களது முதலாவது கவிதைத் தொகுதியான 'மனதோடு பேசும் மௌனங்கள் குறித்துக் கூற வருவது?

நாம் ஏதோவொன்றைச் செய்கின்ற போதோ அல்லது செயற்படுத்துகின்ற போதோ அதிலிருந்து மற்றவர்கள் ஏதாவது ஒன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அப்படிப் பெற்றுக் கொள்வதால் நமக்கு மரியாதையும் மதிப்பும் கிடைக்கின்றதோ இல்லையோ மனமகிழ்ச்சி நிச்சயமாக உண்டாகும்.

இந்த மனதோடு பேசும் மௌனங்கள் என்கின்ற எனது கவிதைத் தொகுதியானது காதலை மட்டுமன்றி பல இன்னோரன்ன விடயங்களைச் சொல்கின்றன. அதேவேளை இலகுவான மொழி நடையில் அனைவரும் புரிந்துகொள்ளக்கூடிய வார்த்தைக் கோர்ப்புக்களால் வளம் சேர்ந்திருக்கும் ஒரு கவிதைத் தொகுதியாக அமைந்துள்ளது.

கவிதை என்றால் என்ன என்று புரியாத, அறியாத எவருக்கும் இதில் இணைக்கப்பட்டிருக்கும் எனது கவிதைகள் இலகுவில் அவர்களின் இதயத்திற்குள் புகுந்து இன்னிசையை மீட்டும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை. இலகுவான வார்த்தைகள், உவமான உவமேயங்கள் படிப்பவர் மனங்களில் பதிந்திடக் கூடியனவாகவே உள்ளன. இலகுவான மொழிநடையோடு எல்லோருக்கும் புரியும் படியான கவிதைகளே மனதோடு பேசும் மௌனங்களில் மலர்ந்த கவி மலர்கள். அகராதி எடுத்து எவரும் அரும் பதங்களைத் தேட வேண்டிய அவசியம் எனது கவிதை நூலில் கிடையாது. அத்தனை கவிதைகளும் யதார்த்தமான வார்த்தைகளால் வண்ணங்களாகியிருக்கிறது. இது எனது கவிதை தொகுதியைப் படித்த அனைவருக்கும் தெரிந்திருக்கும் என்று எண்ணுகிறேன்.

உங்களது கவிதைத் தொகுதிக்கு 'மனதோடு பேசும் மௌனங்கள் என்ற நாமத்தினை ஏன் வைத்தீர்கள்?

நல்லதொரு கேள்வி. எனது கவிதை நூல் எனது பெயரின் முதலெழுத்தோடு ஆரம்பமானால் நன்றாய் இருக்கும் என்று எண்ணினேன். அதனால் ம| என்று ஆரம்பிக்கும் எல்லா விதமான தலைப்புகளையும் ஆர்வத்தோடு ஆராய ஆரம்பித்தேன். அந்த ஆராய்விலே எனக்கு லண்டனில் வானொலி ஒன்றில் நான் அறிவிப்பாளராய் கடமையாற்றிய வேளை, மனதோடு பேசுங்கள் என்ற ஒரு இரவு நேரக் கவிதை நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கியிருந்தேன். அந்த நிகழ்ச்சி அந்த வானொலியில் அதிக வரவேற்பையும் அபிமானத்தையும் வென்ற நிகழ்ச்சியாக இருந்தது. சற்று சிந்தித்தேன்.. ஏன் இந்த நிகழ்ச்சியின் தலைப்போடு இணைந்த மாதிரியான ஒரு பெயரை எனது கவிதை நூலுக்கு வைக்கக்கூடாது என்று என் மனம் நினைத்தபோதுதான், இந்த மனதோடு பேசும் மௌனங்கள் என்ற தலைப்பு என் மனதோடும் பேசியது. அத்துடன் நான் விரும்பி ரசித்து வழங்கிய அந்த வானொலி நிகழ்ச்சியை மறக்கக் கூடாது என்பதற்காகவும் எனது கவிதைத் தொகுப்பிற்கு இந்தப் பெயர் சூட்டினேன். இத்தலைப்பை எனது கவிதை நூலுக்குச் சூட்டியதில் மனம் முழுவதும் நிரம்பிய ஒரு ஆத்ம திருப்தி; எனக்குக் கிடைத்தது.

உங்களது கவிதைகளுக்கு கிடைத்த ஆதரவுகள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

உண்மையில் இவ்வளவு ஆதரவு எனது கவிதைகளுக்குக் கிடைக்குமா என்று நான் எண்ணவில்லை. வெறுமனே பெயருக்கு புகழ்ந்து பேசுபவர்கள் பெருகிக்கொண்டுவரும் இந்தக் காலகட்டத்திலும், வாசிக்கின்ற பழக்கமும், வழக்கமும் அருகிக்கொண்டுவரும் இந்தக் காலத்திலும் கவிதைகளைப் படித்து அதனை உள்வாங்கி உணர்விலே உலாவரவிட்டு தங்கள் உணர்வுகளை உண்மையாகச் சொல்கின்ற பலர் எனது கவிதைகளால் கட்டுப்பட்டு கதை கதையாய்ச் சொன்ன நாட்களும் உண்டு. அவர்களின் வார்த்தைகளைக் கேட்ட எனக்கு, அட நமது எழுத்துக்களிலும் வாசம் மட்டுமல்ல வர்ணமும் உண்டு என்பதை உண்மையாய் என்னால் உணர முடிந்தது. வயது வேறுபாடின்றி வாசித்தவர்கள் அனேகரும் அவ்வப்போது தங்கள் கருத்துக்களை எனக்குப் பாராட்டாகவும், பாமாலையாகவும் புகழ் சேர்த்தது, எனக்குப் பூரிப்பையே ஏற்படுத்தியது. அது எனக்கு மனம் நிறைந்த மகிழ்வினையும் தந்தது. என்றும் மறக்க முடியாத ஒரு மகிழ்வான தருணமாக அமைந்தது.

உங்கள் கவிதைகள் மூலம் சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்தலாம் என்று நம்புகின்றீர்களா?

மாற்றம் ஒன்றே மாறாதது என்பார்கள். எதுவானாலும் எழுத்துக்களுக்கு எப்போதும் வலிமையும் வேகமும் அதிகம். ஆனால் இந்தக் காலச் சமூகம் என்பது சற்று வித்தியாசமானது. காலங்கள் மாற மாற சமூகத்திலுள்ள சடங்குகள் மட்டுமல்ல சம்பிரதாயங்களும் மாறிக்கொண்டே போகின்றன.

சமூகத்தில் மாற்றம் வர எனது எழுத்துக்கள் அப்படி எதையுமே போதிக்கவில்லை. மாற்றம் ஏற்படவேண்டுமாயின் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை முதலில் உணர வேண்டும். மாற்றம் என்பதை அவர்களிடத்திலிருந்தே ஆரம்பிக்க வேண்டும். ஒரு தனி மனிதனில் மாற்றம் வருவதே மாயமானதாக இருக்கும் போது சமூகத்தில் மாற்றத்தை எவ்வாறு ஏற்படுத்த முடியும். சமூகத்தில் மாற்றங்கள் வரவேண்டும்தான் அதற்கு ஒவ்வொரு தனிமனிதனும் நிச்சயம் பலவகைகளிலும் போராடினாலே சமூகத்தில் மாற்றம் ஏற்படும். எனது எழுத்துக்கள் சமூகம் சார்ந்த கருத்துக்களை ஆங்காங்கே கூறியிருந்தாலும் நிச்சயம் அவற்றால் சமூகத்தில் மாற்றம் ஏற்பட மாட்டாது என்பதுதான் உண்மை.

உங்களது "மகிழும் பூக்கள்" ஹைக்கூ நூல் பற்றி என்ன குறிப்பிடுவீர்கள்?

முன்பு இருந்த காலம் போலல்ல இன்றைய காலம். விஞ்ஞானத்தின் விந்தைகளால் விஸ்தீரணமாக்கப்பட்டு வரும் இந்தக் காலத்தில் எழுத்துக்களுக்கான அங்கீகாரம் இலகுவில் கிடைத்துவிடுகிறது. இன்று பலராலும் கவிதைகள் எழுதப்பட்டு வந்தாலும், இந்த ஹைக்கூ என்கின்ற கவிதைகளை எழுதுகின்ற கவிஞர்கள் நம் நாட்டிலே அவ்வளவாக இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எனக்கு ஹைக்கூ கவிதைகள் எழுதுவதிலும் அவற்றைப் படிப்பதிலும் அலாதிப் பிரியம் உண்டு. அதனாலே ஹைக்கூ கவிதைகள் அடங்கிய தொகுதியை வெளியிட நினைத்து அதனை வெளியீடு செய்தேன். புதுக் கவிதை, மரபுக் கவிதை வகைகளிலிருந்து மொத்தமாக மாறுபட்ட இந்த ஹைக்கூ கவிதைகள் சமூகத்தில் இடம்பெறுகின்ற அத்தனை அம்சங்களையும் உள்ளடக்கியதோடு, இயற்கை சார்ந்த இயல்பு நிலைகளையும் சொல்லி இருக்கிறது. ஏற்கனவே கூறியதைப்போல் சமூகத்தில் இடம் பெறுகின்ற சம்பிரதாயங்கள், விழாக்கள், பண்டிகைகள், குடும்பங்களில் நிகழ்கின்ற சம்பவங்கள், சமூகம் சார்ந்த விடயங்கள் ,இயற்கை அதனோடு இணைந்த பல இன்னொரன்ன விடயங்கள் எனப் பலவற்றை இந்த மகிழும் பூக்கள் ஹைக்கூக்கள் பேசி நிற்கின்றன.

ஹைக்கூ எழுதுபவர்களுக்கு விசேடமாகக் கூற விரும்புவது என்ன?

ஹைக்கூ என்பது இப்படித்தான் இருக்க வேண்டும் என்கின்ற வரையறைகளையும், விதிமுறைகளையும் தாண்டி இன்று பலரும் பலவாறு எழுதிவருகிறார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பாணியில் எழுதி வந்தாலும் ஒருசிலருடைய ஹைக்கூக்களே கண்ணில்பட்டு அவை கருத்தையும் கவர்ந்து கொள்கிறது. ஹைக்கூ கவிதைகளில் நான் ஒன்றும் கரை காணவில்லை. இப்போதுதான் எழுதிக்கொண்டு வருகின்ற இளையவன். எழுத்துத் துறையைப் பொறுத்தவரையில் நான் இன்னும் தவழ்கின்ற குழந்தைதான். ஆகவே கண்டவற்றை கண்டவாறு எழுதிவிட்டு அதற்கு ஹைக்கூ கவிதை என்று நாமம் சூட்டுபவர்களும் நம்மிடையே இல்லாமலும் இல்லை. வரையறைகளையும், வரம்புகளையும் மீறாத எதுவும் வாகை சூடும். ஆகவே அவற்றைக் கடைப்பிடித்தாலே போதுமானதுதான்.

இதுவரை வெளிவந்த உங்களது படைப்புகள் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட அனுபவங்கள்?

அனுபவமே ஆசான் என்னைப் பொறுத்தமட்டில் நல்ல ஆக்கபூர்வமான அனுபவங்களைத் தான் பெற்றுக் கொண்டுள்ளேன். என்னை மட்டுமல்ல என் எழுத்துக்களையும் மேம்படுத்தவும், மெருகேற்றவும் அவை எனக்கு ஆணிவேராக அமைந்தது கண்டு ஆனந்தம் கொள்கிறேன். மீண்டும் மீண்டும் எழுத வேண்டும் என்கின்ற ஆவலையும், ஆர்வத்தையுமே அவை என்னில் விதைத்தன. சாதிக்க வேண்டும் என்கின்ற எண்ணம் இல்லாவிட்டாலும் சகித்துக்கொண்டு சகலரையும் வெற்றிகொள்ள வேண்டும் என்கின்ற வேட்கையினை அவை எனக்குத் தந்தன.

ஊடகங்களில் இதுவரை வெளிவந்துள்ள உங்களின் படைப்புகள் பற்றிப் பொதுவாகக் குறிப்பிடுங்கள்?

கண்டங்கள் தாண்டி வந்த பிற்பாடு ஊடகங்கள் என்ற வகையில் இலங்கை வானொலியே அன்றுதொட்டு இன்றுவரை என்னோடு இணைந்திருப்பது. எழுத வேண்டும் என்ற ஆதங்கம் இருந்தாலும் நேரம் என்பது பெரும் பிரச்சனையாகவே இருக்கிறது. கிடைக்கின்ற நேரங்களில் எழுதியவைகள் பல மின்னிதழ்களிலும், முகநூல் பக்கங்களிலும் பகிரப்பட்டுள்ளன.

கவிதைத் துறை தவிர வேறு எந்தெந்த இலக்கியத் துறைகளில் இயங்கி வருகிறீர்கள்?

கவிதை எழுதுவதோடு, சிறுகதைகளையும், பல ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளேன். எனது பல சிறுகதைகள், கட்டுரைகள் பல பத்திரிகைகள், சஞ்சிகைகளிலில் வெளியாகியுள்ளன. இதைவிட வானொலி அறிவிப்பிலும் எனக்கு மிகுந்த ஆர்வமுண்டு.

உங்களது எழுத்துகளின் படிநிலை வளர்ச்சி பற்றிக் கூறுங்–கள்?

ஆரம்ப காலங்களில் இருந்த எழுத்துக்களோடு இப்போது ஒப்பிட்டுப் பார்க்குமளவிற்கு பெரிதாக வித்தியாசங்கள் இல்லை. ஆம் பத்தில் தவறுகளோடு தவழ்ந்த எழுத்துக்கள் இன்று வீறுநடையோடு வித்தியாசப்படுகிறது. ஆரம்பத்தில் எழுதிய சாயல்களே இன்றும் சாயம் போகாமல் இருக்கிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போல இன்று சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் அதிகம் இருப்பதால் பலபேருடைய பார்வை பலமாக இருக்கிறது. படிநிலைகள் என்று எனக்கு வித்தியாங்கள் ஏதுமில்லை ஆனால் படிநிலை வளர்ச்சியையும் மீறிய ஒரு வனப்பு எனது எழுத்துக்களில் மிளிர்வதை என்னால் இனங்கான முடிகிறது. இது எழுதுகின்ற, என் எழுத்துக்களை நேசிக்கின்ற எனக்கே இனங்காண முடிகிறது.

புலம் பெயர்ந்து வாழும் நீங்கள் அங்கிருந்து எவ்வகையான, யாருடைய படைப்புகளை ஓய்வு நேரங்களில் அதிகமாக வாசிக்கிறீர்கள்?

குடும்பம், வேலை என்ற வட்டத்துக்குள் இருப்பதனாலோ என்னவோ ஓய்வு நேரம் என்பது இங்கு கிடைப்பதென்பது அரிதிலும் அரிது. இயந்திரமயமாகிப் போன இந்த இலண்டன் வாழ்வியலில் ஓய்வு நேரத்தை என்னால் ஒதுக்க முடிவதில்லை என்பதுதான் உண்மையான விடயம்.

நேர்கண்டவர்:
வெலிகம ரிம்ஸா முஹம்மத்

Senthooram செந்தூரம்

பேபிக்கு வாங்கின டிரெஸ்ஸில் லாஸ்லியா

பிக் பாஸ் நிகழ்ச்சியின் மூலம் தமிழ் ரசிகர்களிடம் பரீட்சையுமானவர் நடிகை லாஸ்லியா. இவர் இலங்கையில் செய்தி வாசிப்பாளராக பணிபுரிந்து, அதன் பின் பிக் பாஸ் சீசன் 3ல் கலந்து கொண்ட பிறகு தற்போது படங்களிலும் அடுத்தடுத்து நடித்துக் கொண்டிருக்கிறார்.

அதிலும் லாஸ்லியா இப்போது செம ஸ்லிம்மா ஆளே அடையாளம் தெரியாத அளவுக்கு மாறி இருக்கிறார். இவர் சிறு வயதில் படிக்கும் போது போட்ட ஸ்கூல் டிரஸ்ஸில் கிறங்கடிக்கும் வகையில் போட்டோஷூட் நடத்தி, அந்த புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

ரொம்பவே குட்டியாக இருக்கும் இந்த டிரஸ்ஸில் அவருடைய கால் அழகை முழுமையாக காண்பித்திருப்பதால், இதை பார்க்கும் இளசுகள் திணறுகின்றனர். அது மட்டுமல்ல சமீபகாலமாகவே இவர் நடிக்கும் படத்திற்கு பெரிய அளவு வரவேற்பு கிடைக்காததால், டாப் ஹீரோக்களின் பட வாய்ப்பை தட்டித் தூக்க வேண்டும் என்று பிளான் போட்டிருக்கிறார்

இதற்காக குட்டியோண்டு உடைகளை அணிந்து விதவிதமான போஸ் கொடுத்து, தன்னுடைய கியூட்டான மற்றும் கிளாமர் புகைப்படங்களை அள்ளி வீசி வருகிறார். இந்த புகைப்படங்கள் அனைத்தும் சோசியல் மீடியாவில் ட்ரெண்டாகி கொண்டிருக்கிறது.

அது மட்டுமல்ல இதையெல்லாம் பார்க்கும் ரசிகர்கள், 'பட வாய்ப்புக்காக என்னென்னவெல்லாம் பண்றீங்க' என கமெண்ட் செய்கின்றனர். சிலர், 'உங்க பேபிக்கு வாங்கின டிரெஸ்ஸ நீங்க போட்டு செக் பண்றீங்களா!' என்றும் கேலி கிண்டல் செய்கின்றனர்.

நடிகைகளை எல்லைமீறி புகைப்படம் எடுப்பதா?

நடிகைகளை எல்லைமீறி புகைப்படம் எடுப்பதா? என நடிகை ராஷி கன்னாவும் சாடி உள்ளார். இந்தி நடிகை அலியாபட் சமீபத்தில் வீட்டுக்குள் ஒரு அறையில் இருந்ததை எதிர் வீட்டு மாடியில் நின்று இருவர் கேமரா மூலம் ரகசியமாக படம்பிடித்தது பரபரப்பை ஏற்படுத்தியது. அவர்கள் மீது அலியாபட் போலீசில் புகார் அளித்துள்ளார். இந்த சம்பவம் நடிகர்டிகைகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. பலரும் இதனை கண்டித்து வருகிறார்கள். தமிழில் அடங்க மறு, இமைக்கா நொடிகள், சங்கத்தமிழன், துக்ளக் தர்பார், அரண்மனை3 உள்ளிட்ட படங்களில் நடித்துள்ள நடிகை ராஷிகன்னாவும் சாடி உள்ளார். இதுகுறித்து ராஷிகன்னா கூறும்போது, "ஒவ்வொரு மனிதருக்கும் சொந்த வாழ்க்கை உள்ளது. சில விஷயங்களை பகிரங்கப்படுத்த விரும்பமாட்டார்கள். அதை அனைவரும் கவுரவப்படுத்த வேண்டும். பிரபலங்களை பார்க்கும்போது அவர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக் கொள்ளலாம். அலியாபட் போன்ற நடிகைகளை பார்த்தால் நிச்சயம் படங்கள் எடுத்துக்கொள்ள தோன்றும். அதை யாரும் எதிர்க்க மாட்டார்கள். ஆனால் அதற்கும் ஒரு எல்லை இருக்கிறது. அந்த எல்லை மீறி நடந்து கொள்ளக்கூடாது. எல்லை மீறினால் அது தாக்குதலுக்கு சமம் என்பது என் கருத்து. இப்படி நடந்தது அலியா பட்டுக்கா மற்றவருக்கா என்று நான் சொல்லவில்லை. இந்த விஷயத்தில் யாராக இருந்தாலும் ஒன்றுதான். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கு புதிய சட்டங்களை கொண்டுவர வேண்டிய அவசியம் இருக்கிறது" என்றார்.

துணிச்சலான நடிகை

ரித்திகா சிங்

இறுதிச்சுற்று படத்தின் மூலம் ரசிகர்களின் மனதில் இடம் பிடித்தவர் ரித்திகா சிங். இந்த படத்துக்காக இவர் பல்வேறு விருதுகள் வாங்கிய நிலையில் மீண்டும் ஒரு துணிச்சலான கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். ஹரிஷ் வர்தன் இயக்கத்தில் உருவாகியுள்ள இன் கார் என்ற படத்தில் முதன்மை கதாபாத்திரத்தில் ரித்திகா நடித்துள்ளார்.

இந்த படத்தின் டிரைலர் அண்மையில் வெளியாகி ரசிகர்களை பதைப்பதைக்க வைத்துள்ளது. அதாவது சமீப காலமாக பெண்களுக்கு பல அநீதிகள் நடந்து வருவதை செயித்தாள்கள், சமூக வலைத்தளங்களில் பார்த்து வருகிறோம். அப்படி ஒரு சம்பவம் தான் இன்கார் படத்தின் கதை.

சில மோசமான ஆட்களால் ரித்திகா காரில் சித்ரவதை அனுபவிக்கிறார். இது போன்று நடக்குமா என ரசிகர்களுக்கு பயமுறுத்திய இயக்குனர், தன் உறவினர் ஒருவருக்கு நடந்த சம்பவத்தை தான் படமாக எடுத்துள்ளேன் என்று கூறியுள்ளார். அவர் சொன்ன பிறகு எல்லோருக்குமே பயத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது.

மேலும் பெண்கள் மட்டுமின்றி ஆண்களும் கட்டாயம் பார்க்க வேண்டிய படமாக இன் கார் படம் இருக்கும் என்று கூறப்படுகிறது. இப்படம் மார்ச் மூன்றாம் தேதி தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாள மொழிகளில் வெளியாக உள்ளது. மேலும் ஸ்டுடியோ கிரீன் சார்பில் ஞானவேல் ராஜா இப்படத்தை தமிழில் வெளியிடுகிறார்.

இறுதிச்சுற்று படத்தை போல் இந்த படமும் ரித்திகா சிங்குக்கு மிகப்பெரிய பெயரை வாங்கிக் கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏனென்றால் டிரைலரை வைத்து பார்க்கும் போதே அவருடைய நடிப்பு ரசிகர்களை கண்கலங்க வைக்கிறது. மேலும் இன்கார் ரிலீஸாக ரித்திகா ரசிகர்கள் ஆர்வமாக காத்திருக்கிறார்கள்.

சினி மஞ்சரி

திருமண வதந்திகளுக்கு ரகுல்பிரீத் சிங் விளக்கம்

தமிழில் 'தீரன் அதிகாரம் ஒன்று' படம் மூலம் பிரபலமாகி முன்னணி நடிகையாக உயர்ந்துள்ள ரகுல் பிரீத் சிங், தனது திருமணம் குறித்து வெளியாகும் வதந்திகளுக்கு விளக்கம் அளித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறும்போது,

"எனது திருமணம் குறித்து தொடர்ந்து வதந்திகள் பரவி வருகின்றன. எனக்கு திருமணம் முடிந்து விட்டதாகவும் பேசுகிறார்கள். எப்போது திருமணம் நடந்தது என்று யாரேனும் சொல்ல முடியுமா? ஒவ்வொரு வாரமும் என்னைப்பற்றி புதிது புதிதாக தகவல்கள் வந்து கொண்டே இருக்கின்றன. கூகுள் அலர்ட்ஸ் மூலம் அவை எனக்கு வந்து சேருகின்றன.

கடந்த ஆண்டு நவம்பரில் என் திருமணம் நடந்து விட்டதாக தகவல் பரப்பினார்கள். அது எப்படி நடந்தது என்று அவர்களையே கேட்கவேண்டும் என நினைக்கிறேன். எதுவும் உண்மை இல்லை" என்றார்.

இந்தி நடிகர் ஜாக்கி பக்னானியை காதலிப்பதாக ரகுல் பிரீத் சிங் கடந்த 2021ல் அறிவித்தார். அப்போது இருந்தே இவர்கள் திருமணம் குறித்த தகவல் வலைத்தளத்தில் வந்து கொண்டே இருக்கிறது.

தற்போது தமிழில் இந்தியன் 2, அயலான் படங்கள் ரகுல் பிரீத் சிங் கைவசம் உள்ளன.

லிங்கா, யாத்திராவுடனான புகைப்படம்

அப்பனுக்கு பிள்ளை தப்பாமல் பிறந்திருக்கு..

கோலிவுட்டில் மட்டுமல்ல பாலிவுட், ஹாலிவுட் என வெரைட்டி காட்டிக் கொண்டிருக்கும் தனுஷின் வாத்தி திரைப்படம் சமீபத்தில் வெளியாகி திரையரங்கில் சக்கை போடு போட்டுக் கொண்டிருக்கிறது. மேலும் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் தனுஷ் இருவரும் கடந்த 2004 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டு பின்பு 18 ஆண்டு கால திருமண வாழ்க்கையில் இருந்து விலகுவதாக கடந்த ஆண்டு இருவரும் அறிவித்தனர்.

இவர்களுக்கு லிங்கா, யாத்ரா என இரண்டு மகன்கள் இருக்கின்றனர். இவர்களுடன் இருவருமே அதிக நேரம் செலவிடுவார்கள். சமயத்தில் வாத்தி படத்தின் ஆடியோ லான்ச்சுக்கு கூட தனுஷ் தனது இரண்டு வாரிசுகளையும் அழைத்து வந்திருந்தார். தற்போது ஐஸ்வர்யா ரஜினிகாந்த் இரண்டு மகன்களும் படிக்கும் பள்ளிக்கு சென்று ஸ்போர்ட்ஸ் டேவில் கலந்து கொண்டு அவர்களுடன் சுட்டெரிக்கும் வெயிலில் எடுத்துக்கொண்ட புகைப்படத்தை வெளியிட்டுள்ளார்.

அப்பனுக்கு பிள்ளை தப்பாம பொறந்திருக்கு என ஐஸ்வர்யா நினைக்கும் அளவுக்கு தனுஷின் இரண்டு மகன்களும் வெயிலில் ஸ்போர்ட்ஸ் டே அன்று ரணகளம் செய்து கொண்டிருக்கின்றனர். அங்கு ஐஸ்வர்யா ரஜினிகாந்த் வெயிலுக்கு பயந்து லிங்காவின் நிழலில் ஒளிந்து கொள்வது போல் செம க்யூட்டான போட்டோ ஒன்றை பதிவிட்டுள்ளார்.

மேலும் பள்ளியில் மகன்கள் விளையாட்டில் பதக்கம் வென்றதை தனது ட்விட்டர் பக்கத்தில் நெகிழ்ச்சியாக பதிவிட்டுள்ளார். 'வெயில் வாட்டி வதைத்தாலும் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் விளையாடும் பிள்ளைகளின் ஆர்வத்தை நிறுத்த முடியாது. லிங்கா மற்றும் யாத்ரா இருவரும் வெயிலில் குளிப்பதையும் ஒளிர்வதையும் பார்க்க முடிந்தது' என்று புகைப்படத்துடன் கருத்து பதிவிட்டுள்ளார்.

மேலும் ஐஸ்வர்யா ரஜினிகாந்த் நீண்ட நாட்களுக்குப் பிறகு மறுபடியும் லால் சலாம் என்ற படத்தை இயக்கி வருகிறார். இதில் ரஜினி சிறப்பு தோற்றத்தில் நடிக்க உள்ளார். கிரிக்கெட்டை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் இந்த படத்தில், முக்கிய கதாபாத்திரத்தில் விஷ்ணு விஷால், விக்ராந்த் இருவரும் நடிக்கின்றனர்.

அதே சமயம் தனுஷ் தற்போது அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் கேப்டன் மில்லர் என்ற படத்தில் நடித்து வருகிறார். இதற்கிடையில் லிங்கா மற்றும் யாத்ரா இருவரை பற்றிய தகவலும் சமீப காலமாகவே வெளிவந்து கொண்டிருக்கிறது. ஆகையால் இவர்களும் விரைவில் சினிமாவில் என்ட்ரி கொடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

சேதுபதிக்கு தூண்டில் போட்ட நயன்

விஜய் சேதுபதி தற்போது தமிழ் தெலுங்கு ஹிந்தி என படு பிஸியாக நடித்து வருகிறார். சமீபத்தில் இவர் நடிப்பில் வெளிவந்த வெப் சீரிஸ் பல சர்ச்சைகளை சந்தித்து இருந்தாலும் இவருக்கு பாலிவுட்டில் மவுசு ஏறிக்கொண்டு தான் இருக்கிறது. அதனாலேயே தற்போது இவர் கைவசம் பல ஹிந்தி திரைப்படங்களை வைத்திருக்கிறார்.

இந்நிலையில் இவர் நயன்தாராவின் பேச்சை கேட்டு ஒரு படத்தில் நடிக்காமல் விலகி இருப்பது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

அதாவது அரண்மனை திரைப்படத்தின் அடுத்தடுத்த பாகங்களை இயக்கிய சுந்தர் சி நான்காவது பாகத்தில் நடிக்க விஜய் சேதுபதியை கேட்டிருக்கிறார். அதற்கு அவரும் சம்மதம் தெரிவித்திருக்கிறார். ஆனால் தற்போது அவர் அந்த படத்தில் இருந்து விலகி உள்ளார்.

இதற்கு சம்பள பிரச்சனை, கதை பிடிக்கவில்லை என்று பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் பின்னணியில் நயன்தாரா தான் இருக்கிறார் என்ற விஷயம் அம்பலமாகியுள்ளது. ஏனென்றால் அவர் தற்போது அஜித் மீது உச்சகட்ட கோபத்தில் இருக்கிறாராம். இதற்கு முக்கிய காரணம் விக்னேஷ் சிவன் ஏகே 62 திரைப்படத்திலிருந்து நீக்கப்பட்டது தான்.

இது பெரும் சர்ச்சையை கிளப்பிய நிலையில் தற்போது அஜித்துக்காக தயார் செய்திருந்த அந்த கதையை விஜய் சேதுபதியை வைத்து எடுக்கலாம் என்று விக்னேஷ் சிவன் முடிவு செய்துள்ளார். ஒரு வகையில் இப்படி ஒரு ஐடியாவை கொடுத்ததும் லேடி சூப்பர் ஸ்டார் தான். ஏனென்றால் விக்னேஷ் சிவனின் முந்தைய படங்களில் விஜய் சேதுபதி நடித்திருக்கிறார். அதனால் அவர்களுக்குள் ஒரு நல்ல நட்பும் இருக்கிறது.

அது மட்டுமல்லாமல் நயன்தாராவுடன் இணைந்தும் அவர் பல படங்களில் நடித்திருக்கிறார். தற்போது ஹிந்தி பத்திலும் இவர்கள் இருவரும் நடித்து வருகின்றனர். அதனால் தான் நயன்தாரா சுந்தர் சி பத்தில் நடிக்க வேண்டாம் என்றும் தன் கணவருக்கு கால்ஷீட் கொடுங்கள் என்றும் கேட்டு இருக்கிறார். அதற்கு விஜய் சேதுபதியும் சம்மதித்து தற்போது சுந்தர் சிக்கு பெரிய ஆப்பை வைத்திருக்கிறார்.

இந்த விவகாரம்தான் தற்போது திரையுலகில் பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. எல்லா விஷயத்தையும் பிசினஸ் மூளையோடு செய்யும் நயன்தாரா நாசுக்காக தூண்டில் போட்டு விஜய் சேதுபதியை தன் பக்கம் இழுத்துள்ளார். இந்த விஷயத்தால் பாவம் சுந்தர் சிதான் கடும் அப்செட்டில் இருக்கிறாராம். மேலும் அந்த பத்தில் தானே ஹீரோவாக களமிறங்கவும் அவர் முடிவு செய்திருக்கிறார்.

டீன் ஏஜ் பெண்கள் அதிகம் விரும்பும் ஷேப்வியர்!

நவீனமான உடைகள் எவ்வளவோ வந்தாலும், நம் பாரம்பரிய உடையான புடவைக்கு ஈடு இணையாகாது. பேஷன் டிரெண்டிற்கு ஏற்ப பட்டுப் புடவைகளும், ஜாக்கெட் வகைகளும் நவீனமாகிக் கொண்டே இருக்கிறது. அந்தவகையில், 'ஷேப்வியர்' துணிகள், புடவை பிரியர்களின் சௌகரியத்தை இன்னும் அதிகமாக்கியிருக்கிறது, புடவை அணிபவர்களை கூடுதல் அழகாக்கி இருக்கிறது. அது என்ன ஷேப்வியர், இதன் பயன்கள் என்ன என்பதை பார்ப்போம்.

மார்டன் உடைகளை அணியும்போது, உடலை கட்டுக்கோப்பாக காட்டவும், உடலுக்கு ஒரு வடிவம் கொடுக்கவும் வெளிநாடுகளில் 'பாடிவியர்' என்ற உள்ளாடை பயன்படுத்தப்படும். இது கச்சிதமான தோற்றத்தையும்,சௌகரியமான உணர்வையும் கொடுக்கும். அதே கான்செப்டில்தான், இந்த 'சாரி ஷேப்வியர்' உருவாக்கப்பட்டிருக்கிறது.

இது புடவை அணிபவர்களுக்கு, சிறப்பானதாக இருக்கும். புடவை மட்டுமல்ல, லெஹங்கா போன்ற நவீன உடைகளுக்கும் பொருத்தமாக இருக்கும்.

'புடவை அணியும்போது, உள்பாவாடை அணிவது வழக்கம். அப்படி அணியும்போது, உடல் வழக்கத்தைவிட கொஞ்சம் 'புஸ்ஸென' பருமனாக தோன்றும். அந்த அசௌகரியத்தை போக்கும் நோக்கில்தான், இந்த ஷேப்வியர் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதை அணிந்து புடவை கட்டும்போது, உடலும் புடவையும் பிட்டாக காட்சிதரும். நடப்பதற்கும், உட்காருவதற்கும் சௌகரியமாக இருக்கும். குறிப்பாக, இடுப்பில் கச்சிதமாக பொருந்திவிடும்.

முன்பெல்லாம், திருமண பெண்கள் மட்டுமே பட்டு புடவை அணியும்போது, இதை பயன்படுத்தினர். ஆனால் இப்போது அலுவலகத்திற்கு புடவை அணிந்து செல்லும் பெண்களும், இதை வழக்கமாக்கிக் கொண்டனர். இவை, மிக குறைந்த விலையில் இருந்தே ஆரம்பிப்பதால், பெரும்பாலான பெண்களின் விருப்பமான உடையாக மாறிவிட்டது.

ஷேப்வியர், நிறைய துணிகளில் தயாரிக்கப்படுகிறது. காற்றோட்டம் இல்லாத நைலான் கலந்த ஜெர்ஸி துணிகளிலும் இவை தயாரிக்கப்படுவதால், இதன் தேர்வில் கவனமாக இருக்க வேண்டும்.

முடிந்தவரை, காற்றோட்டமான 'ஸ்பாண்டெக்ஸ்' துணிவகைகளை தேர்வு செய்வது நல்லது. அதேபோல, உங்களது தேவைக்கு ஏற்ப, இதில் சில வடிவ அமைப்புகளும் உண்டு.

அதில் 'மெர்மைட் கட்' சிறப்பானதாக இருக்கும். மெர்மைட் கட் என்பது, மீன் வடிவத்தை கொண்டது. இடுப்பு பகுதியில் குறுகியும், தொடை பகுதியில் விரிவாகவும், மீண்டும் முட்டிப்பகுதியில் குறுகியும் இருக்கும். இதை பயன்படுத்தும்போது, எந்த அசௌரியமும் இல்லாமல் நடக்கலாம். மேலும் இடுப்பு பகுதியில், பிடிமானத்திற்கு ஏதுவாக நாடா இருக்கிறதா என்பதை பரிசோதித்து வாங்கிப் பயன்படுத்துங்கள். இது புடவைக்கு பயனுள்ளதாக இருந்தாலும், ஒருசில நவநாகரிக மார்டன் உடைகளுக்கும் பயன்படுத்த முடியும் என்கிறார்.

இந்த ஷேப்வியர் ஆடையில், முட்டி வரையில் மட்டுமே இருக்கக்கூடிய வகைகளும் உண்டு. அதை, மார்டன் உடைகளுக்குள்ளும் பயன்படுத்தலாம். ஆரம்பத்தில் நகர்புறங்களில் மட்டுமே பெரிதாக வரவேற்கப்பட்ட இவை, இப்போது கிராமப்புறங்களிலும் சிறப்பான வரவேற்பை பெற்றுள்ளன. ஒருகாலத்தில் லெக்கிங்ஸ் ரக ஆடைகள் பிரபலமானதை போல, இப்போது ஷேப்வியர் ரகங்களும், டீன் ஏஜ் பெண்கள் மத்தியில் படுஜோராக பரவி வருகிறது.

உடை மட்டுமல்ல, இந்த உடை சார்பான வர்த்தகமும் பெருகிவிட்டது. கல்லூரி பெண்கள் மற்றும் இல்லத்தரிசிகளும், இதை சமூக வலைத்தளங்கள் வாயிலாக விற்பனை செய்கிறார்கள்.

வெஜ் மோமோஸ்

தேவையான பொருட்கள்

மைதா மாவு 1 கப்
பெரிய வெங்காயம் 1
குடை மிளகாய் 1
கேரட் 2
பீன்ஸ் 6
முட்டைகோஸ் (சின்னது) 1/2 பூண்டு பல் 3 இஞ்சி
1 துண்டு மிளகு தூள்
1 மேஜைக்கரண்டி வினிகர்
1 மேஜைக்கரண்டி சோயா சாஸ்
1 மேஜைக்கரண்டி கொத்தமல்லி
சிறிதளவு உப்பு,
எண்ணெய் தேவையான அளவு

செய்முறை

* வெங்காயம், குடை மிளகாய், கேரட், பீன்ஸ், முட்டைகோஸ், பூண்டு, இஞ்சி, மற்றும் கொத்தமல்லி பொடியாக நறுக்கிகொள்–ளவும்.
* ஒரு பாத்திரத்தில் மைதா மாவு, உப்பு, 2 மேஜைக்கரண்டி எண்ணெய், மற்றும் தேவையான அளவு தண்ணீர் ஊற்றி மாவை சப்பாத்தி மாவு பதத்திற்கு பிசைந்து மூடி போட்டு மூடி 40 லிருந்து ஒரு மணி நேரம் வரை ஊற விடவும்.
* அடுப்பில் கடாய் வைத்து எண்ணெய் ஊற்றி சூடானதும் வெங்–காயத்தை போட்டு வதக்கவும்.
* வெங்காயம் கண்ணாடி பதம் வந்ததும் இஞ்சி மற்றும் பூண்டை சேர்த்து அதனின் பச்சை வாசம் போகும் வரை அதை வதக்கவும்.
* இஞ்சி பூண்டின் பச்சை வாசம் போனதும் குடை மிளகாய், கேரட், முட்டைகோஸ், மற்றும் பீன்ஸை போட்டு அதை நன்கு கலந்து விட்டு சுமார் 2 நிமிடம் வரை அதை வதக்கவும்.
* பின்பு அதில் மிளகாய் தூள், வினிகர், சோயா சாஸ், மற்றும் ஒரு மேஜைக்கரண்டி அளவு உப்பு சேர்த்து அதை நன்கு கிளறி விட்டு வேக விடவும்.
* கடைசியாக கொத்தமல்லியை தூவி ஒரு கிளறு கிளறி அடுப்பிலிருந்து இறக்கி சிறிது நேரம் ஆற விடவும்.
* மாவை சிறு சிறு உருண்டைகளாக உருட்டி வைக்–கவும்.
* உருண்டையை சப்பாத்திக்கு தேய்ப்பது போல் தேய்த்து அதில் ஒரு மேஜைக்கரண்டி அளவு நாம் செய்து வைத்திருக்கும் ஸ்டப்பிங்கை வைக்கவும்.
* ஸ்டப்பிங்கை வைத்த பின் அவரவருக்கு பிடித்தமான வடிவில் மோமோஸ்ஸை மடித்து ஒரு தட்டில் வைத்து கொள்ளவும்.
* இட்லி தட்டை எடுத்து அதில் எண்ணெய்யை தடவி இந்த மோமோஸ்ஸை வைத்து 10 நிமிடம் வரை அதை வேக விடவும்.

வாழ்க்கையில் நன்றியுணர்வின் முக்கியத்துவம்

எந்த நாள் வேண்டுமானாலும் உங்கள் கடைசி நாளாக இருக்கலாம். எனவே நன்மைகளால் சூழப்பட்ட இந்த அழகான வாழ்க்கையில் நன்றியுடன் இருங்கள். நேர்மறையான உளவியலைப் பற்றிய ஆராய்ச்சியின்போது நன்றியுணர்வு, மகிழ்ச்சியான மனநிலையோடு வலுவான தொடர்பு கொண்டது என்று கண்டறியப்பட்டது. வாழ்க்கையில் துன்பங்களை கடந்து செல்வதற்கும், வலுவான உறவுகளை உருவாக்குவதற்கும், நேர்மறையான உணர்வுகளைப் பெறுவதற்கும், ஆரோக்கியமாக இருப்பதற்கும் நன்றியுணர்வு உதவும். ஆனால் நாம் பல நேரங்களில், வாழ்க்கையில் நமக்கு கிடைத்த விஷயங்களுக்கு நன்றி சொல்ல மறந்து விடுகிறோம். மற்றவருக்குக் கிடைக்காத பல நன்மைகள் நமக்கு கிடைத்திருக்கும். அதை நன்றியோடு நினைத்துப் பார்ப்பதற்கு தவறி இருப்போம். வாழ்க்கையில் நமக்கு கிடைத்த சின்னச் சின்ன நன்மைகளுக்கும், உதவி செய்த நபர்களுக்கும், கிடைத்த பொருட்களுக்கும் நன்றியுணர்வுடன் இருந்தால், நேர்மறை ஆற்றல் அதிகரிக்கும். நன்றி உணர்வானது தூக்கம், மனநிலை மற்றும் நோய் எதிர்ப்பு சக்தியை மேம்படுத்தும். மனச்சோர்வு, பதற்றம், நாள்பட்ட வலியால் ஏற்படும் சிரமங்கள் மற்றும் நோய்களின் அபாயத்தைக் குறைக்கும்.

நம்மில் பலர், நம்மைச் சுற்றி உள்ளவர்களிடம் இருந்து அன்பு, அங்கீகாரம், பாராட்டு மற்றும் பாசத்தைக் கொடுப்பதிலும், கேட்பதிலும் மும்முரமாக இருக்கிறோம். ஆனால், இவை அனைத்தையும் நமக்கு நாமே வழங்கிக் கொள்வதைப் பற்றி சிந்தித்து இருக்கிறோமா? முதலில் உங்களுக்கு நீங்களே நன்றி சொல்லுங்கள். மற்றவர்கள் உங்களுக்காக செய்த நன்மைகளுக்கு மட்டும் தான், நன்றி செலுத்த வேண்டும் என்ற அவசியமில்லை. உங்கள் சொந்த வாழ்க்கையில் நீங்கள் வளர்த்துக் கொண்ட ஆரோக்கியமான பழக்கவழக்கங்களுக்காக, உங்களுக்காக நீங்கள் செய்த நல்ல விஷயங்களுக்காக, போதுமான நேரத்தை ஒதுக்கி உங்களுக்கு நீங்களே நன்றி தெரிவியுங்கள். உங்கள் படுக்கைக்கு அருகில் ஒரு நாட்குறிப்பை வைத்துக்கொள்ளுங்கள். உங்களுடைய அன்றைய தினத்தை தொடங்கும் போது அல்லது இரவில் தூங்கச் செல்வதற்கு முன்பு, நீங்கள் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டிய விஷயங்கள் குறித்து அதில் எழுதுங்கள். குறைந்தது ஒரு மாதமாவது இதைத் தொடர்ந்து செய்து வரும்போது, உங்கள் மனநிலையிலும், வாழ்க்கையிலும் உண்டாகும் நேர்மறையான மாற்றங்களை நீங்களே உணர முடியும். கடந்த காலத்தில் உங்களை காயப்படுத்திய ஒருவருக்கு நன்றி தெரிவித்து கடிதம் எழுதுங்கள். அவரது செய்கையால் நீங்கள் எந்த அளவுக்கு பக்குவப்பட்டு இருக்கிறீர்கள்? அதில் இருந்து மீண்டு வந்து, உங்கள் வாழ்க்கையை எவ்வாறு மாற்றி அமைத்துக் கொண்டீர்கள்? என்று எழுதுங்கள். இதை நீங்கள் அவர்களுக்கு அனுப்ப வேண்டும் என்று நினைத்தால் அனுப்பலாம் அல்லது நீங்களே வைத்துக் கொள்ளலாம். எந்தவொரு கசப்பான சூழ்நிலையில் இருந்தும் வெளிவந்து, அதனால் கிடைக்கும் நன்மைகளை மட்டுமே சிந்தித்து முன்னேறுவதற்கு இது உதவும்.

ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் 57வது 'கீத் ராத்'

நாடறிந்த ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் 57வது 'கீத் ராத்' மாபெரும் இசை நிகழ்ச்சி கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை கொழும்பு 7 ஜே.ஆர். ஜயவர்த்தன மண்டபத்தில் அக்கரைப்பற்று ஏ. பி. அப்துல் கையூம் தலைமையிலும் அவுஸ்திரேலியா வானொலி 'வளர்பிறை' நிகழ்ச்சி தயாரிப்பாளர் முகமது எஸ். முஹ்சீன் முன்னிலையிலும் கோலாகலமாக நடைபெற்றது.

தினகரன் தினகரன் வாரமஞ்சரி, சக்தி தொலைக்காட்சி ஊடக அனுசரணையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தலைநகர ரசிகர்களுடன் கல்ஹின்னை, எருக்கலம்பிட்டி, மாவனல்லை, நாம்புளுவ பசியாலை, நுவரெலிய பிரதேச அதிதிகளும் கலந்து சிறப்பித்தமை விசேடமாகும். இன, மத பேதம் இன்றி சமூக தொண்டாற்றி வரும் பிரபல சமூக சேவகி சம்சுன் ஸீனியா, தமிழக திரைப்படங்களுக்கு பாடல் வரிகளை எழுதி தமிழகமெங்கும் பிரபலமாகி வரும் கவிஞர் பாடலாசிரியை ரமீஸா பரீட், கலைப் புரவலர் கலைக்காவலர் ஸைட் சிவாஜி மௌலானா, அவுஸ்திரேலியா வானொலி நிகழ்ச்சித் தயாரிப்பாளர் முகமது எஸ். முஹிசீன், கல்ஹின்னை கல்லூட்டுக் கவிராயர் புதல்வர் கவிஞர் பாடலாசிரியர் பௌமி ஹலீம், நுவரெலிய மாவட்ட ஐ தே க இணைப்பாளர் சமூக சேவையாளர் சண்முகம் திருச்செல்வம் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

கலைக்கமலுடன் இணைந்து பிரபல பாடகிகள் மொரீன் ஜெனட், பவானி ஆகியோரும் பாடினார்கள். உபைத் மஹ்தூம், ஸைட் சிவாஜி மௌலானாவும் பாடி சபையோரை மகிழ்வித்தார்கள். இலங்கையின் முன்னணி தமிழிசைக் குழுவினரான செந்தூரன், அயாஸ் சவாஹிர், கண்ணா, ஜெகன் ஆகியோர் மிகப் பிரமாதமாக பாடல்களுக்கான இசையை வழங்கினார்கள். நிகழ்ச்சியை கலை நிலா எஸ். எம்.உவைஸ் ஷெரீப் தொகுத்து வழங்கினார்.

ஷாரா பானு சனூன்
குமார வீதி, கொழும்பு

கவிதாயினி மேகா மிர்சா எழுதிய "புல் ஏந்தா பனித்துளிகள்" கவிதை நூல் வெளியீடு!

தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் (நுஜா) ஏற்பாட்டில் அட்டாளைச்சேனை கவிதாயினி மேகா மிர்சா எழுதிய "புல் ஏந்தா பனித்துளிகள்" கவிதை நூல் வெளியீட்டு விழா (26) அட்டாளைச்சேனை பலநோக்கு கூட்டுறவுச்சங்க கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது. தேசிய ஐக்கிய ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் சிரேஸ்ட ஊடகவியலாளர் எஸ்.எம்.அறூஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக பொத்துவில் பிரதேச சபை தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம், அட்டாளைச்சேனை உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி நஹீஜா முஸாபிர், முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சிரேஸ்ட சட்டத்தரணி எஸ்.எம்.ஏ.கபூர், பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.எம்.நழில் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

நிறம் தீட்டுங்கள்



வழிகாட்டுங்கள்

கூட்டுங்கள்

05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்

விடுகதைகள்

1. இவனும் ஒரு பேப்பர் தான்; ஆனால், மதிப்போடு இருப்பான். அது என்ன? **விடை: பணம்**
2. டாக்டர் வந்தாரு, ஊசி போட்டாரு, காசு வாங்காமல் போனாரு. **விடை: கொசு**
3. கன்று நிற்க கயிறு மேயுது அது என்ன? **விடை: பூசணிக்கொடி**
4. எப்போதும் மழையில் நனைவான் ஆனால் ஜுரம் வராது. எப்போதும் வெயிலில் காய்வான் ஆனால் ஏதும் ஆகாது. அவன் யார்? **விடை: குடை**
5. தொடாமல் அழுவான், தொட்டால் பேசுவான். அவன் யார்? **விடை: தொலைபேசி**
6. பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது. அது என்ன? **விடை: தேங்காய்**
7. தன் மேனி முழுவதும் கண்ணுடையாள் தன்னிடம் சிக்கியபேரைச் சீரழிப்பாள் அவள் யார்? **விடை: மீன் வலை**

30 வருடங்களுக்கு மேல் மாணவர்களின்

அறிவுக் கண்ணை திறக்க பாடுபட்டு ஓய்வு பெற்ற ஆசிரியை மக்ஸுரா

தென் மாகாணத்தின் திக்குவல்லையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆசிரியை எம் .மக்ஸுரா, மர்ஹூம் எம்.எச். மொஹமட் (கமர் மாஸ்டர்) மர்ஹூமா நூர் நுபூஸா தம்பதிகளின் புதல்வி ஆவார்.

தனது ஆரம்பக் கல்வியை யக்கஸ்முல்வை முஸ்லிம் வித்தியாலயத்திலும் தரம் பதினொன்று வரையில் கிரிந்தை முஸ்லிம் வித்தியாலயத்திலும் உயர் கல்வியை திக்குவல்லை மின்ஹாத் மகா வித்தியாலயம், ஹேனமுல்ல பாணந்துறை ஜீலான் மத்திய கல்லூரியிலும் கற்றார்.

தனது மாணவப் பருவத்தில் ஆர்வத்துடன் கற்று கல்வித்துறையில் திறமை செலுத்திய இவர் விளையாட்டுத்துறை ,சமய. கலாச்சார போட்டிகளிலும், மீலாத் விழா,தமிழ்த் தினவிழா சித்திரம் என பல் வேறு போட்டிகளிலும் பங்கு பற்றி சாதனைகள் படைத்திருந்தார்.

1990.01.01 திகதி ஆசிரியர் நியமனம் கிடைக்கப்பெற்று பாணந்துறை அம்பலந்துவ முஸ்லிம் வித்தியாலயத்தில் ஆசிரியராக தன் முதல் பணியை ஆரம்பித்தார். அப்பாடசாவையின் முன்னேற்றத்திற்கும் தரம் ஐந்திற்கும் மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், சிறந்த பெறுபேற்றை பெற்றுக் கொடுக்க அயராது பாடுபட்டார். மாணவர்களின் திறமைகளை வெளிக் கொணரும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் முன் நின்று செயல்பட்டு மாணவச் செல்வங்களின்

திறமைகளை வளர்த்தார். இன்னும் அம்மாணவர்களினதும் பெற்றோர்களினதும் அன்பையும் ஆசிர்வாதத்தையும் குறையாமல் பெற்றுக்கொண்டார். 1997. 01.30 ஆம் திகதி வரை அம்பலந்துவ முஸ்லிம் வித்தியாலயத்தில் ஏழு வருடப் பணியை மேற்கொண்டு பின் குருநாகல் மாவட்டத்தில் பொக்க ஹவெல அல் அக்ஸா மகவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார். அன்றிலிருந்து அல் அக்ஸாவின் முன்னேற்றத்திற்கு மாணவர்களின் சிறந்த பெறுபேற்றிற்கும் கல்வி முன்னேற்றத்திற்கும் அயராது பாடுபட்ட ஆசிரியராவார். அல் அக்ஸா மகா வித்தியாலயத்திலும், அம்பலத்துவ முஸ்லிம் வித்தியாவயத்திலும் க.பொ.த சாதாரண தர வகுப்புகளுக்கு 32 வருடங்கள் இஸ்லாம்,சித்திரம், வணிகமும் கணக்கியலும், சமூகக்கல்வி போன்ற பாடங்களை கற்பித்து மாணவர்களின் சிறந்த பெறுபேற்றிற்கும், முன்னேற்றத்திற்கு உழைத்தார்.

மாணவர்களினது இணைப் பாடவிதானச் செயற்பாடுகளான தமிழ் தின கலாச்சார இலக்கியப் போட்டி, சித்திரப்போட்டி, மீலாதுன் நபிவிழா,விளையாட்டுப் போட்டி, போன்றவைகளில் மாணவர்களை பங்குபறச் செய்து அகில இவங்கை ரீதியில் பல வெற்றிகளைப் பெற வழி அமைத்தார்.

அல் அக்ஸா வித்தியாலயம் 2012 ஆண்டு தனது ஐம்பதாண்டை பொன் விழாவாக கொண்டாடிய போது வெளியிடப்பட்ட பொன் விழா மலரின் இத ழாசிரியராக கடமையாற்றி பொன் விழா வெற்றிக்கு பங்களித்தார்.

2015ஆம் ஆண்டு உபஅதிபராக கடமையேற்று அதிபருக்கு ஒத்துழைப்பாக சீரான பணிகளை மேற் கொண்டார். அவ்வேளையிலும் கற்பிப்பதை நிறுத்தாது மாணவர்களுக்கு பணியாற்றுவதில் ஆர்வம் காட்டினார்.

பாடசாலையில் அதிகம் விடுமுறை எடுக்காத ஆசிரியர் என்ற பெருமையையும் பெற்ற இவர் 2015 ம் ஆண்டு வடமேல் மாகாணத்தில் சிறந்த ஆசிரியருக்கான 2018 இல் அகில இலங்கை ரீதியான சிறந்த ஆசிரியருக்கான விருதான பிரதீபா பிரபா விருதையும் பெற்றதோடு, பாடசாலையிலும் கௌவிக்கப்பட்டார். வடமேல் மாகாண கலை இலக்கிய விழாவில் 2018 ம் ஆண்டு சிறந்த கவிதைக்கான விருதான 'கவி சிலுமின' விருதையும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

2009 ஆம் ஆண்டு முதல் அல் அக்ஸா அஹதிய்யா அதிபராக கடமையாற்றியதோடு அஹதிய்யா வகுப்புகள் தடையின்றி தொடர உறுதியான ஓர் தூணாகச் செயல்பட்டு மாணவர்களின் இஸ்லாமிய அறிவை வளர்க்க அரும்பாடுபட்டார்.

2022ஆம் ஆண்டு பொல்க ஹவெல அன்பாஸ் அமால்தீன் பௌன்டேஷனினால் இவர் ஆசியத் துறைக்காற்றிய சேவையை பாராட்டி நல்லாசிரியருக்கான விசேட விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

1962ஆம் ஆண்டு அல் அக்ஸா மகா வித்தியாலயத்தின் திறப்பு விழாவின் போது பாடசாலையின் முதல் பதிவை (லொக் அன்றி) அன்று குருநாகல் மாவட் டத்தில் கல்வி அதிகாரியாக இருந்த தனது பெரியப்பா மர்ஹூம் மொஹமட் எழுதியுள்ளார் என்றும் அல் அக்ஸாவின் முதல் இருபத்தைந்து மாணவர்களுள் தனது கணவன் மொஹமட் நஸார் மூன்றாவது மாணவன் என்றும் தனது பிள்ளைகளும் இதே பாடசாலையில் கல்வி கற்று தற்போது அரசதுறையில் பணியாற்றுவதாகவும் பெருமையுடன் தெரிவித்துள்ளார். தனது இருபத்தைந்து வருட ஆசிரியர் பணியை அல் அக்ஸாவில் சேவையாற்றக் கிடைத்தற்கு அல்லாஹ்விடத்தில் நன்றி கூறுகிறார்.

2022.12.31 ஆம் திகதி தனது ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்ற இவருக்கு அதிபர், ஆசிரியர் குழாம்,

மாணவர்கள், பழைய மாணவர் சங்கம், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் அனைவரும் பரிசு வழங்கி ஆசிரியரை பாராட்டி கௌரவித்தார்கள்.

கல்விக்கு உயிர்கொடுத்தவர்கள் மரணிக்க மாட்டார்கள் என்ற கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் முன்மாதிரியாக செயற்பட்டு அனைவர் மனங்களிலும் இடம்பிடித்துள்ள ஆசிரியை மக்ஸுராவை நாமும் வாழ்த்துவோம். அவரின் ஓய்வு காலம் நிம்மதியாக அமைய பிரார்த்திப்போம்.

தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181

சிங்கார நினைவு 01

எண்பதுகளின் பதின்மபருவம்; இலக்கியத் தேடலின் தகிப்பு மிகுந்திருந்தது. பாடசாலையில் மாணவர் மன்றத்தின் செயலர் நான். ஏறாவூர் யூவன்னா சேர் இலக்கியத் துளிர்ப்பை ஏற்படுத்தியிருந்த தண்ணீரூற்று முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் முன்றில் அவரது இடமாற்றத்துக்குப் பின் தூர்த்திடுமோ என்ற ஐயம் மேலிட்ட நாட்களில்தான் அவர் எங்கள் வகுப்பறைக்கு முதன் முதலில் வந்திருந்தார். அவர் ஸ்ரீறி சேர். அழகர்;ளூ திடகாத்திரம்ளூ வடிவான கேசம்ளூ நிறமும் அழகுதான். இந்தப் புறத்தோற்றத்துக்குள் இருந்த அகத்தோற்றந்தான் எனக்குப் பிடித்து விட்டது. அது இலக்கிய அகம்.

என் தாகத்துக்கு நீர் வார்க்கும் வாய்க்கால்ளூ என் தேடலுக்கு வழி காட்டும் கால்நடைப் பாதை. ஸ்ரீறி சேர் மாணவர் மன்றம் கலை லாவண்யமுற ஆற்றுப்படுத்தினார். இலக்கிய நட்பின் கொடி நமக்குள் படர்ந்தது.

ஒரு நாள் ஒரு புத்தகத்துடன் வந்திருந்தார். அது முல்லையூரானின் புத்தகம். முல்லையூரான் முல்லைத்தீவின் நவீன கவிதை சொல்லி. எண்பதுகளில் அவரை எனக்குள் கவிதைகளால் நிரப்ப முடிந்தது.

இன்னொரு நாள் ஓர் அழைப்பிதழோடு வந்திருந்தார். அது முல்லை ஸ்ரீறியின் புத்தக வெளியீட்டுக்கான அழைப்பிதழ்.

என்னை அழைத்தார்;. வெளியீட்டுக்குப் போனேன். புதிய அனுபவம். அந்த நூல் ஒரு கவிதை நூல். நூலின் பின்னட்டையில் 'அப்பாவால் தெரிந்த இப்பா'' என்ற தலைப்பில் முல்லை ஸ்ரீறி பற்றிய அறிமுகக் குறிப்பு இருந்தது. அந்தக் குறிப்பில் இப்பா சிறி சேர்;. அப்பா யார்?

அப்பா, சிங்காரவேலன். முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச உதவி அரசாங்க அதிபராக 1980களின் ஆரம்ப கட்டத்தில் பணியாற்றியவர். சமூகப்பற்றுக் கொண்டவர்;. பேச்சுத்திறன் மிக்கவர்;ளூ கலைஞர்.

உதவி அரசாங்க அதிபராகக் கடமையில் இருந்த போதே மரணமடைந்து விட்டார். அவரது இறுதிச்சடங்கு முல்லைத்தீவு மைதானத்தில் பெருந்திரளான மக்கள் கூட்டத்துடன் நிகழ்வுற்றது. மாவட்டத்தின் பல ஊர்களிலிருந்தும் மக்கள் வெள்ளமெனத் திரண்டனர். நானும் ரெக்டர் பெட்டியில் தொற்றிக்கொண்டு முல்லைத்தீவுக்குப் போனேன். கூடியிருந்த மக்கள் சமுத்திரத்தைப் பார்த்தே அவரது அகன்ற மனிதத்தைப் புரிந்து கொண்டேன்.

சிங்காரவேலரின் நெருங்கிய நட்பில் நமது ஸ்ரீறி சேர் இருந்தார். அந்த நெருக்கமே கவிதை நூலாக வெளிப்பட்டது. சிங்காரவேலரின் இறப்புக்குப் பின்னான நாளொன்றில் 'சிங்காரநினைவு'' கவிதை நூல் வெளியிடப்பட்டது. கவிமனம் கொண்டவன். வாழ்வின் அனுபவங்களை அல்லது நெருங்கிய நேசங்களுடனான உறவை இலக்கியமாக்கிவிடுவான். ஸ்ரீறி சேரும் கலையுள்ளம் கொண்ட சிங்காரவேலனின் இதயத்தில் இடம்பிடித்தார். அதனால் அவரது இதயத்தில் சிங்கார நினைவை கவிதையாக்கினார்.

அப்போது அவரது இறப்பின் வலி எப்படி சிங்கார நினைவாகும்? என்கிற விமர்சனம் இருந்தது. அவரது இறப்புக்கு முன்னரான உறவும் நட்பும் அது தந்த மகிழ்வும்தான் சிங்கார நினைவு என்றார் முல்லை ஸ்ரீறி.

பிறகு சிங்காரவேலர் பற்றித் தேடினேன். அவர் சமூகப் பற்றும் உதவும் மனமும் கொண்டவர். அதனால் மக்கள் மனங்களில் இடம்பிடித்தார். மஹா கவியின் கோடை பா நாடகத்தில் பாத்திரமேற்ற மேடைக்கலைஞர் அவர்.

முல்லை ஸ்ரீறியுடனான நட்பு எனக்கு நீண்டகாலம் வாய்க்கவில்லை. நான் உயர்தரத்துக்காக வித்தியானந்தாவில் நுழைந்துவிட்டேன். இடையிடை முல்லைத்தீவு நகர் போகிறபோது பஸ் ஸ்டாண்ட் அருகிலிருக்கும் அவரது கடையிலும் சந்தித்திருக்கிறேன். பிறகு நாடெரிந்த காலத்தில் புலம் பெயர்ந்தார். அவருடனான இலக்கியப் பகிர்வும் தூர்த்துப்போனது. அதன் பின்னர் அவருடனான உறவும் தடையாகி விட்டது.

எனினும் ஸ்ரீறி சேருடனான எனது நட்பும் சிங்கார நினைவுதான்.

தமிழ் வழி சிங்களக்கவிதை அடையாளம்ளூ இப்னு அஸ்மத்

ஈழத்துக் கவிதைப் பரப்பில் மொழிபெயர்ப்புக் கவிதைக்கும் தனித்த இடமுண்டு. இரு சமூகப் பண்பாட்டின் புரிதலுக்கும், இலக்கிய அனுபவத்துக்கும், இருமொழி தேசத்தின் மொழிப்பண்பாட்டு வழி மாற்றங்களுக்குமென இந்த மொழிபெயர்ப்பு இரட்டை வழி பிரதானமானது.

தமிழில் வெளிவரும் படைப்புகள் யாவும் சிங்கள வாசகரைச் சென்றடைகிறதா அல்லது சிங்களத்தில் உருவாகும் புனைவுகள் தமிழ் வாசகப்பரப்பை எட்டுகிறதா என்கிற கேள்விகளுக்கிடையில் அவ்வப்போது அது சாத்தியமாகிறது என்கிற பதிலுண்டு. இந்தச் சாதக பதிலை உருவாக்குபவர்களில் இப்னு அஸ்மத் குறிப்பிடும் படியானவர்.

மூன்று தசாப்தத்துக்கு மேலாக இயங்கும் இப்னுவின் முதல் பனுவல் இது. சிங்களக் கவிதைகளைத் தமிழுக்கும் தமிழ்க் கவிதைகளைச் சிங்களத்துக்குமென மாற்றீடு செய்கிற இப்னு அஸ்மத் கவிதைப் பாலமாகி நிற்கிறார். அவர் நிற்கும் முதல் மைல்கல் நீ கூறுகிறாய் இறந்து விட்டாயாம் நீ.

வகவம் பதிப்பகம் பதிப்பித்த இப் பனுவலில் ராமநாதன் எங்கே முதல் மகளுக்கு வரையான நாற்பத்துரெண்டு கவிதைகளை இப்னு அஸ்மத் மொழிபெயர்த்துத் தந்திருக்கிறார்.

தொடரும்.....

சினத்தை முக்கி அணிந்தவன்

சென்ற வார தொடர்...

ஆறுமுகம் எளிமையானவன். உண்மையானவன். அந்த எளிமைக்குள் கொதிப்பு, சினம், சீற்றம், எல்லாம் அவ்வப்போது வந்து முகத்தில் குமுமி விடுகிறது. ஆறுமுகம் முகங்களை அணிபவன்.

அவனியங்கும் அறைக்குள் வாசலில், யன்னலில், முகட்டில், சுவரில், அலுமாரிக்குள் என முகங்கள் தொங்குகின்றன. அவனென்ன முக யாவாரியா? இல்லை கனவு மனிதனா?

இல்லை அவன் சாந்த மனிதன். எப்போதும் சாந்த முகத்தோடுதான் பறப்படுவான்.

மனைவிக்கு ஒரு புன்னகையைப் பரிசளித்து விட்டு அல்லது மௌனத்தை ஈய்ந்துவிட்டு. என் அப்பாவின் அப்பாவின் காலத்தில் பழைய நூற்றாண்டின் பழக்கங்கள் நிறைந்திருக்கும். அவர்கள் ஒற்றை முகக்காரர்கள்.

அந்த முகங்களில் மனிதம் பூத்திருக்கும், காருண்யம் மிகுந்திருக்கும், அன்பு பொங்குமொரு வாழ்விருந்தது. நூற்றாண்டின் விஞ்ஞான ஆச்சரியங்கள் நெஞ்சறையையும் ஆட்கொண்டு விட்டது. அவனது அறையில் விதவிதமான முகங்கள் வந்தன.

ஆறுமுகம் அடிக்குறிப்பெழுதிய பல பனுவல்களை வாசித்திருக்கிறேன். என் சோம்பேறி முகம் வாசிக்கும் தருணங்களில் உற்சாகம் பெற்றுத் துள்ளுவதை உள்ளுணர்ந்திருக்கிறேன் நான்.

ஆறுமுகத்தின் எழுத்துக்களுக்கு நான் விசிறியான பிறகு, அவனை அதிகமாக வாசித்தும் நேசித்தும் வருகிறேன். அவனொரு ஆய்வெழுத்தாளன். அவனது பனுவில்களில் வரும் அதே பாத்திரம் அவன்தான் என்பது இப்போது புரிந்து விடுகிறது.

இப்போது சற்றைக்குள் எனக்கு முன்னால் இருக்கும்போதே அவன் முகம் உருமாறியதைக் கண்டேன். அது மகிழ்ச்சி முகம். ஆனந்தம் முகத்தில் தெறித்தது. நான் புன்னகைத்தேன். அவனது கையிலிருந்து என் கைக்கு மாறிய பனுவலின் பதினாறாவது பக்கத்தை மேலோட்டமாக வாசித்தேன். வாசித்தேனென்ன அதற்குள் வாசிக்கத் தொடங்கினேன். நான் தேர்ந்த வாசகன்;. அவனது பனுவலை வாசித்த போது அவன் என்னை வாசித்தான்.

அருமைநாயகம் ஆறுமுகம் நெஞ்சில் முகங்களைக் கொண்டு அலைவதில்லை. தோளில் ஒரு பையில் போட்டிருப்பதாக நீங்கள் எண்ணலாம். அப்படியுமில்லை. அவை அரூப முகங்கள். அவ்வப்போது தோன்றிவிடுபவை அவனுக்கு மட்டும் தெரிபவை. அப்படியென்றால் மற்றவர்களிற்கு அவனது முகம் தெரிவதில்லையா?

நேற்று நிகழ்ந்த சம்பவமொன்றின் சூழ்ச்சியை அவன் அறிந்து விட்டான். மகா சூழ்ச்சி அது. அந்த ஏமாற்றுப் பொறியில் அவன் வீழ்ந்திடவுமில்லை. சூழ்ச்சிக்குக் காரணம் முன்னாலிருக்கும் நீங்கள்தான் என்பது அவனது ஆய்வுத்தேடல் குறிப்பு. ஏனெனில் நீங்கள் ஏமாளிகளாக அல்லது அடிமைகளாக அல்லது என்னைப்போல் இலக்கற்றவர்களாக இருக்கிறீர்களாம். அதனால் சூழ்ச்சிக்கெதிரான முகம் அணிந்து கொண்டான் அருமைநாயகம் ஆறுமுகம்.

மணவையின் மருத்துவ குறிப்பு

இதய தமனி பைபாஸ் மாற்று (CABG) அறுவை சிகிச்சை என்பது இதய தமனி வழியாக இதயத்திற்குச் செல்லும் இரத்த ஓட்டத்தை மேம்படுத்தும் ஒரு அறுவைச் சிகிச்சையாகும். இதய தமனி நோய் எனப்படும் கடுமையான இதய நோயால் (CHD) பாதிக்கப்பட்டவர்களை இது குறிப்பிடுகிறது.

CHD என்பது இதய தமனியின் உட்புறம் கொழுப்பு படிவு எனப்படும் ஒரு பொருள் உருவாவதனால் ஏற்படும் ஒரு கோளாறாகும். இந்த தமனிகள் உங்கள் இதயத்திற்கு ஒட்சிசன் நிறைந்த இரத்தத்தை விநியோகிக்கின்றன. கொழுப்பு படிவானது கொழுப்பு, கொலஸ்ட்ரால், கல்சியம் மற்றும் இரத்தத்தில் காணப்படும் பிற பொருட்களால் ஆனதாகும். கொழுப்பு படிவானது இதயத் தமனிகளை சுருங்கச் செய்யும் அல்லது அடைப்பை ஏற்படுத்தும் மற்றும் இதய தசையில் இரத்த ஓட்டத்தைக் குறைக்கும். அடைப்பு கடுமையானதாக இருந்தால், நெஞ்சு வலி, மூச்சுத் திணறல் மற்றும் சில

கடுமையான நெஞ்சு வலி ஏற்படுகிறது, லேசான உடற்பயிற்சியின் போது அல்லது ஓய்வாக இருக்கும் போது கூட தசையில் இரத்தம் குறைகிறது. சில நேரங்களில் அஞ்சியோபிளாஸ்டி மற்றும் ஸ்டென்டிங் உதவும். ஆனால் சில வகையான அடைப்புகளுக்கு, இதய பைபாஸ் அறுவை சிகிச்சை சிறந்த தேர்வாக இருக்கும்.

உங்களிடம் ஒன்றுக்கும் அதிகமான நோயுற்ற இதய தமனி உள்ளது மற்றும் இடது வென்ட்ரிக்கிளான இதயத்தின் முக்கிய பம்பிங் அறை சரியாக செயல்படவில்லை.

உங்கள் இடதுபக்க முக்கிய இதய தமனி கடுமையாக சுருங்குகிறது அல்லது அடைக்கப்படுகிறது. இந்த தமனி பெரும்பாலான இரத்தத்தை இடது வென்ட்ரிக்கிளுக்கு அனுப்புகிறது.

அஞ்சியோபிளாஸ்டி செய்வது பொருத்தமற்றதாக இருக்கும் அடைப்பு உங்களுக்கு இருக்கிறது, நீங்கள் முன்பே அஞ்சியோபிளாஸ்டி அல்லது ஸ்டென்ட் வைத்திருக்கிறீர்கள் – இது வெற்றி பெறவில்லை அல்லது உங்களுக்கு ஸ்டென்ட் வைக்கப்பட்டது, ஆனால் தமனி மீண்டும் சுருங்கிவிட்டது (ரெஸ்டெனோசிஸ்).

வேறு சிகிச்சைகள் உங்களுக்கு பலனளிக்கவில்லை என்பதை உங்கள் மருத்துவர் கண்டறிந்தால், மாரடைப்பு போன்ற அவசரகால சூழ்நிலைகளிலும் இதய பைபாஸ் அறுவை சிகிச்சையை செய்யலாம். அறுவை சிகிச்சையானது எடுத்த உடனேயே அடைப்புகளை உருவாக்கிய முக்கிய இதய நோய்க்கு சிகிச்சையளிக்காது. எனவே, நீங்கள் இதய பைபாஸ் அறுவை சிகிச்சை செய்தாலும், அறுவை சிகிச்சைக்குப் பிறகு கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு வாழ்க்கை முறையின் மாற்றங்கள் அவசியமான பகுதியாக இருக்கின்றன.

உங்கள் இரத்தத்தில் கொழுப்பைக் குறைப்பதற்கும், இரத்த உறைவு ஏற்படுவதற்கான ஆபத்தைக் குறைப்பதற்கும், உங்கள் இதயத்தின் செயல்பாட்டிற்கு முடிந்தவரை உதவுவதற்கும் அறுவை சிகிச்சைக்குப் பிறகு மருந்துகளை வழக்கமாக எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் மருத்துவ சிகிச்சைகளை பெற விரும்புவோருக்கு வழிகாட்டி உதவ தயார்.

மணவை அசோகன்
(0778978792)

பிரபல பட்டிமன்ற நடுவர் "பத்மஸ்ரீ" சொலமன் பாப்பையா

சொலமன் பாப்பையா 1936ஆம் ஆண்டு பெப்ரவரி 22ஆம் திகதி பிறந்தார். இவர் மதுரையைச் சேர்ந்த புகழ் பெற்ற பட்டிமன்ற பேச்சாளர் ஆவார். இவர் மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ்த்துறைப் பேராசிரியாகப் பணிபுரிந்தவர். இனிய தமிழில் நகைச்சுவையாக உரையாற்றும் திறமை வாய்ந்த பேச்சாளர். சமூகத்திலும் இல்லங்களிலும் அன்றாடம் நிகழும் நிகழ்வுகளை மையமாகக் கொண்டு பட்டிமன்றங்களை நடத்துபவர். இவற்றின் மூலம் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். சன் தொலைக்காட்சியில் தினமும் காலையில் திருக்குறளுக்கும், சங்க இலக்கியப் பாடல்களுக்கும் விளக்கம் கூறி அவற்றில் உள்ள சுவைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

இவர் ரஜினிகாந்த்தின் சிவாஜி படத்தில் அங்கவை சங்கவை என்ற இருமகள்களுக்கு தந்தையாக தொண்டைமான் என்ற பாத்திரத்தில் நடித்தார். போய்ஸ் படத்தில் நீதிபதியாக நடித்தார். பொங்கல், தீபாவளி போன்ற பண்டிகை நாட்கள் மற்றும் இந்திய தேசிய விடுதலை தினங்களில் பல பட்டிமன்றங்களுக்கு பல வருடங்களாக நடுவராக தலைமை ஏற்று சன் தொலைக்காட்சியில் பங்களிப்பு செய்து கொண்டிருப்பவர் பாப்பையா.

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...✍
கம்பளை

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்

சினிமாவில் இருந்தவரை, முந்த எவரும் இல்லாதவரும், முதல் வரான பிறகு உயிருடன் இருந்தவரை, எந்த தேர்தலிலும் எவராலும் தோற்கடிக்க முடியாதவராகவும் இருந்தவர்தான் எம்.ஜி.ஆர். ஆவார்.

வெள்ளாளர் இனத்தைச் சேர்ந்த கோபாலமேனன் – சத்தியபாமா ஆகிய தம்பதியினருக்கு 1917 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 11.36 இற்கு ஐந்தாவது குழந்தையாக இலங்கையில் கண்டி மாநகரின் அருகிலுள்ள நாவலப்பிட்டியில் எம்.ஜி.ஆர். பிறந்தார்.

எம்.ஜி.ஆரின் தந்தை கோபாலமேனன் அவர்கள் கேரளா மாவட்டம், பாலக்காடு, வடவனூர் என்ற ஊரில் மருதூர் என்ற இடத்தில் வசித்து வந்தவர். எம்.ஜி.ஆரின் தாயார் சத்தியபாமா அவர்கள் கேரளா மாவட்டம், பாலக்காடு, வடவனூருக்கு அடுத்துள்ள குழல் அந்தம் எனும் ஊரில் வசித்தவர்.

எம்.ஜி.ஆரின் தந்தை கோபாலமேனன் அவர்கள் பட்டப்படிப்பு வரை படித்தவர். எம்.ஜி.ஆரின் தந்தை கோபாலமேனன் அவர்கள் எந்த விடயத்திலும் கோபப்பட மாட்டார். மேலும் அவர் மனிதாபிமானத்தோடு, நேர்மையோடு நடந்து கொள்வார்.

எம்.ஜி.ஆரின் தாய், தந்தை கேரளா மாவட்டம்,பாலக்காடு, வடவனூரில் வாழ்ந்து கொண்டிருந்த காலத்தில் இரண்டு பெண் குழந்தைகளும் இரண்டு ஆண் குழந்தைகளும் பிறந்தனர். இதில் நான்காவது குழந்தைதான் எம்.ஜி. சக்கரபாணி ஆவார்.

எம்.ஜி.ஆரின் தந்தை கோபாலமேனன் அவர்கள் பாலக்காட்டில் சில வருடங்கள் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் மாவட்ட நீதிமன்றத்தில் துணை நீதிபதியாக பணியாற்றினார். துணை நீதிபதியாக பணியாற்றிய காலத்தில் வடவனூரை சேர்ந்த ஒரு வழக்கில் நியாயமில்லாத ஒருவருக்கு சாதகமாக தீர்ப்பளிக்க வேண்டுமென்று உறவினர்கள் வற்புறுத்தினார்கள். தனது உறவினர்களின் நியாயமில்லாத வேண்டுகோளை ஏற்றுக் கொள்ளாத துணை நீதிபதியான எம்.ஜி.ஆரின் தந்தை கோபாலமேனன் அவர்கள் "உங்கள் பக்கத்தில் கொஞ்சம் கூட நியாயமில்லை. எனவே உங்களுக்கு நான் உதவ முடியாது" என்று சொன்னதால் ஏற்பட்ட எதிர்ப்புக் காரணமாகவே வடவனூரில் இருந்து ஊரையும் உறவினர்களையும் பிரிந்து இலங்கைக்கு வர வேண்டிய சூழல் ஏற்பட்டது.

1913 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கோபாலமேனன் அவர்கள் மனைவியுடனும் நான்கு குழந்தைகளுடனும் இலங்கை வந்துள்ளார். கோபாலமேனன் அவர்கள் குடும்பத்துடன் இலங்கைக்கு வந்ததும் கண்டிக்கு வந்துள்ளார். கண்டியில் கோபாலமேனன் குடும்பத்தினருக்கு ராமுபிள்ளை,வேலுப்பிள்ளை ஆகியோர் சகல வசதிகளையும் செய்து கொடுத்துள்ளார்கள். இக்காலகட்டத்தில்தான் கோபாலமேனன் சத்தியபாமா ஆகிய தம்பதியினருக்கு எம்.ஜி.ஆர். அவர்கள் ஐந்தாவது குழந்தையாக பிறந்தார். தனது நான்கு குழந்தைகளும் ஐந்தாவது குழந்தையை ராமச்சந்திரா என அழைத்து கொஞ்சி விளையாடுவதை கோபாலமேனன் ரசித்தார். எந்நாளும் கோபாலமேனன் அவர்கள் வேலை விட்டு வீடு திரும்பியதும் குழந்தை எம்.ஜி.ஆரை கட்டிப்பிடித்து கொஞ்சுவார்.

இக்காலகட்டத்தில் எம்.ஜி.ஆரின் தந்தை கோபாலமேனன் அவர்கள் கண்டியில் ஒரு கல்லூரியில் பேராசிரியராக பணி புரிந்துள்ளார். சில வருடங்கள் கழித்து கோபாலமேனன் அவர்கள் கண்டியின் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் பணியாற்றி வந்துள்ளார். ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் கோபாலமேனன் அவர்கள் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்த காலத்தில் உடல் நலம் பாதிக்கப்பட்டு மாரடைப்பால் 1920 ஆம் ஆண்டு இறந்தார். தந்தை கோபாலமேனன் இறக்கும்போது எம்.ஜி.ஆருக்கு மூன்று வயதாகும்.

தொடரும்...

கலாபூஷணம்
பரீட் இக்பால்...✍
யாழ்ப்பாணம்

ஈழத்தின் பல்கலை வேந்தன் ஸ்ரீதர் பிச்சையப்பா

ஈழத்தின் பல்கலை வேந்தனாகிய ஸ்ரீதர் பிச்சையப்பா 1962 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20ஆம் திகதி பிறந்தார். 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 20ஆம் திகதி அமரரானார். இவர் இலங்கையின் பிரபலமான நாடகக் கலைஞர். ஏராளமான வானொலி, மேடை நாடகங்களில் நகைச்சுவைப் பாத்திரங்களில் தோன்றி நடித்தவர். அத்துடன் பின்னணிப் பாடகர், பாடலாசிரியர், இயக்குனர், எழுத்தாளர், 'மிமிக்ரி', மற்றும் ஓவியம் எனப் பல கலைத்துறைகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர்.

நாடகக் கலைஞரான டி. வி. பிச்சையப்பாவின் மகனான ஸ்ரீதர் 1962ம் ஆண்டு கொழும்பு கொட்டாஞ்சேனை கதிரேசன் வீதி இல்லத்தில் பிறந்தார். கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் கல்வி கற்றவர். தமது சிறுவயதில் இலங்கை வானொலியில்

"சிறுவர் மலர்" நிகழ்ச்சி மூலம் சிறுவர் நாடகங்களில் பிரபலமாகிப் பின்னர் பாடகராக கலையுலகிற்கு பிரவேசித்தார். அப்சராஸ், ரங்கீலாஸ் போன்ற இலங்கையின் பிரபல இன்னிசைக்குழுக்களின் பிரதானமான பாடகராகவும் ஒரு மேடை அறிவிப்பாளராகவும் திகழ்ந்திருக்கின்றார்.

நவீன ஓவியம் வரைவதில் கொழும்பு மாவட்டத்தில் அவர் முன்னோடியாகவும் திகழ்ந்துள்ளார். அத்துடன் கவிதை எழுதுவதிலும் திறமை படைத்தவர். வானொலி நாடகங்கள், தொலைக்காட்சி நாடகங்கள் என்று தனது நடிப்புத்திறனை பல வழிகளில் இவர் பல்லூடகங்களூடாக வெளிப்படுத்தினார்.

சிங்கள தொலைக்காட்சி நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்து வழங்கினார். இலங்கையின் ஈழத்தவர் கலையம்சத்தை தென்னிந்திய கலைத்துறையுடன் ஒப்பிட்டுக் கூறும் அளவுக்கு தொண்ணூறுகளில் தென்னிந்திய திரையுலகின் பின்னணியில் ஈழத்துப் பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார்.

பல்கலைத் தென்றல் என அழைக்கப்பட்ட ஸ்ரீதர் கிழக்கு மாகாணக் கலைநிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டிருந்த போது குண்டு வெடிப்பில் சிக்கி ஒரு கண்ணை இழந்தார்.

"இலங்கை கலை வரலாற்றில் ஸ்ரீதரின் பங்களிப்பு மகத்தானது"

எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ் ...✍
கம்பளை

கொழுந்து பறிக்கும் போட்டியில் முதலிடம் பெற்ற தலவாக்கலை சீதையம்மா

20 நிமிடங்களுக்குள் 10½ கிலோ கொழுந்து பறித்து சாதனை

ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தின்கீழ் பணியாற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுள், சிறந்த கொழுந்து பறிப்பாளரை தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டி நானுஓயா ரதல்ல, தேயிலை மலையில் கடந்த 25ஆம் திகதி நடைபெற்றது.

ஹொரண, தலவாக்கலை மற்றும் கெலனிவெலி பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழ் உள்ள 60 தோட்டங்களில் ஆரம்பக்கட்ட போட்டிகள் நடைபெற்று, அவற்றில் வெற்றிபெற்றவர்களில் இருந்து 42 பெண் தொழிலாளர்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

20 நிமிடங்கள் வழங்கப்பட்டு, இக்காலப்பகுதிக்குள் கூடுதல் கொழுந்து பறிப்பவர் வெற்றியாளராக தெரிவு செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டது.

இப்போட்டியில் தலவாக்கலை, பெருந்தோட்ட நிறுவனத்தின் சமர்செட் பிரிவைச் சேர்ந்த ஆர்.சீதையம்மா முதலிடம் பிடித்தார்.

20 நிமிடங்களுக்குள் 10 கிலோ, 450 கிராம் கொழுந்தை அவர் பறித்திருந்தார்.

37 வயதான மூன்று பிள்ளைகளின் தாயான அவருக்கு 3 இலட்சம் ரூபா பணப்பரிசும், தங்கப்பதக்கமும் வழங்கப்பட்டது.

இந்த போட்டி நிகழ்விற்கு பிரதம அதிதியாக ஹேலிஸ் நிறுவனத்தின் தலைவர் மொகான் பண்டித்தகே, ஹேலிஸ் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் ரொஷான் ராஜதுரை உட்பட நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் தோட்ட முகாமையாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

ஹற்றன் சுழற்சி நிருபர்

இலங்கை அலைவரிசையிட்ட ட்ரீஸ் பேபார்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட கம்பனியாரால் வெளியிடும் இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு 2 இல் 2023 மார்ச் மாதம் 5ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிடும் பிரசுரிக்கப்பட்டது.